# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 30
பக்கங்கள்: 56

சுடர் 33 கதிர் 07 கார்த்திகை 17ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 03 டிசெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048






கூட்டு அறிவிக்கப்பட்டு 21 நாள்களிலேயே

# சுரேஷ் க.குமார் பிரிவு

யாழ்ப்பாணம், டிசெம்பர் 3

சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ்வும், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸும் இணைந்து பொது அணியை உருவாக்க எடுத்த முயற்சிகள் பிசுபிசுத்துள்ளதாகத் தெரியவருகின்றது. இருவரும் பிரிந்தே தேர்தலை எதிர்கொள்ளப் போவதாக அறியமுடிகின்றது.

இந்தப் பிரிவையடுத்து, சுரேஷ் பிரேமச்சந்திரன் தலைமையிலான ஈ.பி.ஆர்.எல்.எவ். அணியினர், தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து போட்டியிடவுள்ளனர். இவர்களுடன் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியினால் ஒழுக்காற்று நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்ட சிலரும் இணைந்துகொள்ளவுள்ளனர். » 53

## 2020 இல் கோத்தாவே அரச தலைவராவாராம்!

### பல்கலைக்கழக கருத்துக் கணிப்பில் தகவல்

கொழும்பு, டிசெ. 3

2020ஆம் ஆண்டு அரச தலைவராகத் தெரிவு செய்யப்படப்போவது யார்? என்று தற்போது நாட்டில் பிரபல்யமாக உள்ள ஐந்து பேரின் பெயர்களை முன்னிலைப்படுத்திய கொழும்பு பல்கலைக்கழகத்தின் ஊடகப்பிரிவு நடத்திய கருத்துக்கணிப்பில் முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்சவே அரச தலைவராகத் தெரிவு செய்யப்படுவார் என்று அதிகமானவர்கள் கூறியுள்ளனர்.

18 தொடக்கம் 35 வயதுவரையான 505 பேரிடம் நடத்திய இந்தக் கருத்துக்கணிப்பில் கோத்தபாய ராஜபக்ச, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சர் சஜித் பிரேமதாச, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க உள்ளிட்ட ஐவரின்



பெயர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டன.

இதில் 39.18 வீதமானவர்கள் கோத்தபாய ராஜபக்சவுக்கும், 28.64 வீதமானவர்கள் சஜித் பிரேமதாஸ வுக்கும், 9.18 வீதமானவர் கள் மைத் திரிபால சிறிசேனவுக்கும், 8.64 வீதமானவர்கள் ரணில் விக்கிரம சிங்கவுக்கும் வாக்களித்துள்ளனர். நாட்டில் செப்ரெம்பர் முதல் நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற அரசியல் நிலமைகளை அடிப்படையாக கொண்டே இந்தக் கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5)

## 'மீலாத்' விழாவில் பங்குபற்ற யாழ். வருகிறார் மைத்திரி

யாழ்ப்பாணம், டிசெ. 3

முஸ்லிம்கள் கொண்டாடும் மீலாத் விழாவின் தேசிய நிகழ்வு முதன்முதலாக இந்தமுறை யாழ்ப்பாணத்தில் இடம்பெறவுள்ளது. அதில் கலந்துகொள்ள அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் 18ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு வரவுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. » 53



ஒதியமலைப் படுகொலையின் 33ஆவது நினைவேந்தல் நேற்று

(விரிவு பக்கம் 2)

## யாழில் 3 சபைகளின் தவிசாளர் பதவிகளைக் கோருகிறது புளொட்

யாழ்ப்பாணம், டிசெ. 3

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில், யாழ்ப்பாண மாவட்டத்தில் 3 உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர் பதவியையும், ஏனைய மாவட்டங்களில் தலா ஓர் உள்ளூராட்சி மன்றத்தின் தவிசாளர் பதவியையும் கோரவுள்ளதாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுள் ஒன்றான புளொட் அமைப்புத் தெரிவித்துள்ளது.

ஆசனப் பங்கீடு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையில் இன்று கலந்துரையாடல் நடைபெறவுள்ள நிலையிலேயே, அந்தக் கட்சியின் தலைவர் த.சித்தார்த்தன் மேற்கண்டவாறு கூறி » 53

## 50 ஆயிரம் கல்வீடு நிர்மாணம்: கேள்வி கோரல் நாளை திறப்பு

### பல ஒப்பந்தகாரர்களுக்கு வழங்குவதற்கும் அமைச்சு ஆலோசனை

யாழ்ப்பாணம், டிசெ. 3

வடக்கு - கிழக்கில் 50 ஆயிரம் வீடுகளை அமைப்பதற்கு, கோரப்பட்ட கேள்விக்கு சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள் நாளை திங்கட்கிழமை திறக்கப்படவுள்ளது. மேலும், இந்த ஒப் » 53

## தேர்தல் முடிவின் பின்னரே தவிசாளர் யார் என்பது அறிவிப்பு

### கூட்டமைப்புத் தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெ. 3

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் பின்னரே ஒவ்வொரு சபைகளுக்குமான தவிசாளர்கள் யார் என்பதைப் பகிரங்கமாக அறிவிப்பது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளதாக அறிய முடிகின்றது. » 53

### 'ஒகி'யின் தாண்டவத்தால்

## உயிரிழப்பு 15 ஆக அதிகரிப்பு 106, 076 பேர் நேரடியாகப் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 3

'ஒகி' புயலின் தாண்டவத்தால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 15ஆக அதிகரித்துள்ளது. பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கையும் ஒரு லட்சத்து 6 ஆயிரமாகக் கூடியுள்ளது.

'ஒகி' புயல், இலங்கையின் தென்பகுதிக் கடலின் ஊடாக கடந்த 29ஆம் திகதி கடந்தது. இந்தப் புயலினால் நாட்டில் 16 மாவட்டங்கள் பாதிப்பை எதிர்கொண்டன.

இந்த மாவட்டங்களைச் சேர்ந்த 31 ஆயிரத்து 165 குடும்பங்கள்ளைச் சேர்ந்த ஒரு லட்சத்து 6 ஆயிரத்து 76 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 13பேர் உயிரிழந்துள்ளனர். 61பேர் காயமடைந்துள்ளனர். ஒருவர் காணாமற் போயுள்ளார். » 53



## கிளிநொச்சியில் நேற்று கனமழை பொழிந்தது

» 53

முச்சந்தி முரளி



தாடி ஐயா இப்ப எந்தப் பக்கம் நிப்பார்...


SDB வங்கியிடமிருந்து இவ்விழாக்காலத்தில் நிலையான வைப்புக்களுக்கு கவர்ச்சிகரமான வட்டி

ரூ. 250,000/- இற்கு மேற்பட்ட வைப்புக்களுக்கு

12.60% வ.தே.வ. 13.10%

04 மாதங்கள்

அழையுங்கள்: 011 - 5 411 411

011 5 411 411

60 வயதுக்கு மேற்பட்ட சிரேஷ்ட பிரஜைகளுக்கு ரூ 1.5 மில்லியன் வரை 15% வருட வட்டியும், 55 வயதுக்கு மேற்பட்ட சகல பிரஜைகளுக்கும் கவர்ச்சிகரமான வட்டியும் உரித்தாகும்.

SDB வங்கி

சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விஷேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg No: PB62PQ



# ஒதியமலைப் படுகொலை 33ஆவது நினைவேந்தல்

முல்லைத்தீவு, டிசெ.3

ஒதியமலையில் படுகொலை செய்யப்பட்ட மக்களின் 33 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

1984 ஆம் ஆண்டு முல்லைத்தீவு மாவட்டத்தின் எல்லைக்கிராமமான ஒதியமலைப்பகுதியில் மக்கள் படுகொலைசெய்யப்பட்ட இடத்தில் நடைபெற்றது.

கிராம அபிவிருத்தி சங்க தலைவர் க.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உயிரிழந்த 32 பேருக்கும் சுடரேற்றி மலர் தூவி நினைவு கூரப்பட்டது.

ஒதிய மலை வவுனியா மாவட்டத்தின் எல்லைப் பகுதியில் உள்ள சுமார் 3ஆயிரம் ஏக்கர் காணிகளை அபகரித்து சிங்களக்குடியேற்றங்களை உருவாக்கத் திட்டமிடப்பட்டது.

1984ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 12ஆம் திகதி அதிகாலை வேளை இராணுவம் சந்திப்புக்கென அழைக்கப்பட்ட 32 அப்பாவி மக்கள் வெட்டியும், சுட்டும் படுகொலை செய்யப்பட்டனர்.

நினைவேந்தல் நிகழ்வில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா,வடமாகாண பிரதிஅவைத் தலைவர் வ.கமலேஸ்வரன், முன்னாள் வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் உள்ளிட்ட கிராம சேவகர்,பொலிஸார் என பலர் கலந்து கொண்டு நினைவுரை நிகழ்த்தினர்.

நினைவு நிகழ்வைத் தொடர்ந்து ஒதிய மலை பிள்ளையார் ஆலயத்தில் ஆத்மாசாந்தி வழிபாடு ஒன்றும் இடம்பெற்றது.

(ற-ரி5)









தியாகி அறக்கொடை நிறுவன நிறுவுநர் வாமதேவா தியாகேந்திரனின் 66 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு பல்வேறு உதவித்திட்டங்கள் நேற்று வழங்கப் பட்டன.

## மொரஹறந்த நீர்த்தேக்கத்தில் பரீட்சார்த்த மின் உற்பத்தி

கொழும்பு, நவ.3

மொரகஹகந்த நீர்த்தேக்கத்தை மின் உற்பத்திக்கு பயன்படுத்திக்கொள்ளும் பரீட்சார்த்த நடவடிக்கைக்காக நீரை வெளியேற்றும் நிகழ்வு நேற்று நடைபெற்றது. அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன நிகழ்வை ஆரம்பித்து வைத்தார் என்று அவரது ஊடகப் பிரிவு அனுப்பியுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் உள்ளதாவது

மொரகஹகந்த நீர்ப்பாசனத் திட்டத்தில் மின் உற்பத்திக்கு 178 மீற்றர் நீர்மட்டம் தேவை. தற்போது நிலவும் மழைக் காலநிலையைத் தொடர்ந்து அந்த நீர் மட்டத்தை நேற்றுமுன்தினம் அடையப்பெற்றது. மொரகஹகந்த நீர்த்தேக்க வளாகத்திற்கு சென்ற அரச தலைவர் அங்கு மேற்கொள்ளப்பட்டுவரும் பணிகளைப் பார்வையிட்டார். மின் உற்பத்தி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான பரீட்சார்த்த நடவடிக்கைக்காக நீரை

வெளியிடும் நிகழ்வை ஆரம்பித்தார்.

இது ரஜரட்ட மக்களுக்காக தான் நீண்டகாலமாக கண்ட கனவு எனக் குறிப்பிட்ட அரச தலைவர் அந்தக் கனவு நனவாகும் மற்றுமொரு முக்கிய தினத்தை தாம் எதிர்பார்த்திருந்தேன் என்றும் அவர் தெரிவித்தார்.

மொரகஹகந்த நீர்த்தேக்கத்தின் மூலம் விவசாய சமூகத்திற்குத் தேவையான நீர் கிடைக்கவுள்ள அதேநேரம் தேசிய மின் கட்டமைப்புக்கு 25 வோட் மின்சாரம் கிடைக்கவுள்ளது.

நேற்று முதல் நான்கு நாள்களுக்கு மேற்கொள்ளப்படும் பரீட்சார்த்த நடவடிக்கையைத் தொடர்ந்து 72 மணித்தியாலங்களுக்கு தொடர்ச்சியாக மின் பிறப்பாக்கி இயந்திரம் செயற்படுத்தப்பட்டு மின்சார உற்பத்தி பரீட்சிக்கப்படும். அதனைத் தொடர்ந்து தேசிய மின்கட்டமைப்புக்கு 25 வோட் மின்சாரத்தை சேர்க்கும் மின் உற்பத்தி நடவடிக்கை ஆரம்பிக்கப்படும்.


நீரின் அழுத்தத்துடன் செயற்படும் நான்கு டர்பைன் இயந்திரங்களுடன் இங்கு மின் உற்பத்தி மேற்கொள்ளப்படவுள்ளது. அவற்றில் இரண்டு 7.5 மெகாவோட் டர்பைன்களையும் இரண்டு 5 மெகா வோட் டர்பைன்களையும் கொண்டதாகும்.

மொரகஹகந்த நீர்த்தேக்கம் கடல் மட்டத்திலிருந்து 132 மீற்றர் உயரத்தில் அமைந்துள்ளது. நீர்த்தேக்கத்தின் நீர் கடல் மட்டத்திலிருந்து 165 மீற்றர் வரை

அதிகரித்ததும் நீர் மின்சார நிலையம் செயற்படுவதுடன், கடல் மட்டத்திலிருந்து 185 மீற்றர் வரை உச்சளவு மின்சாரத்தை உற்பத்தி செய்யும் வாய்ப்புள்ளது. இதன் மூலம் வருடாந்தம் சுமார் 336 மில்லியன் ரூபா எரிபொருள் செலவை மீதப்படுத்த முடியும்.

நிகழ்வில் பிரதி அமைச்சர் அநுராத ஜயரத்ன, மத்திய மாகாண ஆளுநர் நிலுகா ஏகநாயக, மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹினி கவிரத்ன, கண்டி மாவட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைப்பாளர் எச்.சீ.எம். புர்கான் மற்றும் நேற்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொண்ட கம்பளை முன்னாள் நகர சபை தலைவர் சரத் ஹெட்டியாரச்சி ஆகியோர் கலந்துகொண்டனர். என்றுள்ளது.

(ற)







திருக்கார்த்திகை விளக்கீட்டை முன்னிட்டு மக்கள் சிட்டி விளக்குகளை நேற்று ஆர்வத்துடன் கொள்வனவு செய்தனர்.

(ந,ரி4)

## கண்டி அமைப்பாளரானார் காமினி ஹெட்டியாராச்சி

கொழும்பு, நவ.3

கம்பளை நகர சபையின் முன்னாள் நகர சபை தலைவர் சரத் காமினி ஹெட்டியாராச்சி நேற்று சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொண்டார். அவருக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கண்டி மாவட்ட அமைப்பாளர் பதவி அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் வழங்கப்பட்டது. இந்த நியமனம் வழங்கும் இந்த நிகழ்வு அரச தலைவர் இல்லத்தில் நடைபெற்றது.

சரத் காமினி ஹெட்டியாரச்சி கடந்த சில வருடங்களாக கூட்டு எதிரணியுடன் இணைந்து செயற்பட்டுவந்த நிலையில் தற்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கொண்டுள்ளார்.

அதேவேளை சிறி லங்கா சுதந்திரக் கட்சியின் 19 புதிய அமைப்பாளர்கள் நேற்று முற்பகல் அரச தலைவரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் அரச தலைவரிடம் இருந்து நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர். (ற)



ஒட்டுசுட்டான், கற்சிலைமடுவில் நேற்றுக் கடும் மழை பெய்தது. வீதிகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. வர்த்தக நிலையங்களுக்குள் வெள்ளம் புகுந்ததால் பொருள்கள் சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

(ற)

# கிடைத்த வாய்ப்பைப் பெண்கள் உரியவாறு பயன்படுத்த வேண்டும்



யாழ்ப்பாணம்.டிசெ.3
கிடைத்த வாய்ப்பை நாம் உரிய முறையில் பயன் படுத்த வேண்டும் எதிர் காலத்தில் பெண்களுக் கான சரியான ஒரு கட்ட மைப்பை உருவாக்கி கொடுக்க வேண்டியது சமூகத்தின் கடப்பாடு.

இவ்வாறு தெரிவித்தார் பருத்தித்துறை முன் னாள் நகரசபை உறுப்பி னர் மதினி நெல்சன்.

"அவளை தேர்ந்தெடுப் போம் வன்முறையை இல்லாதொழிப்போம்" என்ற தொனிப்பொருளில், பால்நிலை வன்முறைகளுக்கு எதிரான பரப்புரை நிகழ்வு யாழ்ப்பாணம் மையப் பேருந்து நிலையத்தில் நேற்று நடை பெற்றது. அதில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தெரிவித்ததாவது:

குடும்பத்தில் வன்முறையை ஒழிக்க முடியா விட்டால் எப்படி நாட்டில் இடம் பெறும் வன்முறையை ஒழிக்க முடி யும். பெண்களுக்கான 25 சத வீத ஒதுக்கீட்டை வழங்க வேண்டும். தேர்தலில் போட்டியிடக்கூடாது என்ற சட்டம் இல்லை. 25 வீத ஒதுக்கீடு பெண்களுக்கு உள்ளூராட்சித் மன் றங்களில் கட்டாயம் வழங்கப்பட வேண்டும் அப்படி வழங்கப்படாவிட் டால் அனைத்துக் கட்சிகளின் வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்படும்.

அதற்காக அவர்கள் தாம் விரும்பிய பெண்களை இந்த முறை வேட்பாளர் நியமனங்களில் நியமிக்க முடியாது. கட்சிகளோ சுயேச்சைக் குழுக்களோ பயந்த பெண்களைத் தெரிவு செய்து விட்டு அவர்களைத் தமக்குச் சார்பாக நடத்துவதை அனுமதிக்க முடியாது. மிகவும் ஆளுமை மிக்க பெண்கள், எதிர்நீச்சல் போட்டு சமூகத்தோடு போராடும் பெண்களை அரசியலில் நிறுத்த வேண்டும்.

அனைத்துத் துறைகளிலும் பெண்கள் இருக்கிறார்கள், பல தீர்மானங்களை எடுக்கும் மட்டங்களில் பெண்கள் இருக்கிறார்கள். அரசியலில் பெண்கள் இல்லை. நாடாளுமன்றத்தில் 225 ஆசனங்களில் 11 ஆசனங்களில் பெண் கள் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

பெண்களுக்கெதிரான வன்முறைக ளில் நாம் மிகவும் கவனத்துடன் இருக்க வேண்டும். பெண்களை அர சியலுக்குள் கொண்டு வாருங்கள் வன்முறை ஒழிக்கப்படுகின்றதா இல் லையா பார்ப்போம். சந்தர்ப்பத்தைக் கையிலெடுக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். அதற்கு ஆணை வழங்க வேண்டியதும் அதற்கு ஆவன செய்ய வேண்டியதும் அனை வரதும் கடமை - என்றார்.

யாழ். சமூகசெயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் இந்த பரப்புரை நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த செயற்றிட்டத்துக்கான நிதியை கனே டிய அரசு வழங்கியது எனத் தெரிவிக் கப்பட்டது.

யாழ் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் ரி.அகிலன், பருத்தித் துறை முன்னாள் நகரசபை உறுப்பி னர் மதினி நெல்சன்,பால்நிலை மற் றும் ஊடகத் துறை சார் பயிற்றுவிப்பா ளர் கிருத்திகா தர்மராஜா,தேசிய சிறு வர் பாதுகாப்பு அதிகாரசபையின் யாழ் மாவட்ட இணைப்பாளர் கௌதமன் ஆகியோர் கருத்துரைகளை வழங்கி னர்.

பொதுமக்களிடம் கையெழுத்துக்க ளும் சேகரிக்கப்பட்டன. (ற-ரி2)



## ஓய்வுபெற்ற ஆசிரியருக்கு மணிவிழா நிகழ்வு

சாவகச்சேரி டிசெ.3
சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் ஆசிரியையாகக் கடமையாற்றி த்னது 33 வருட ஆசிரிய சேவைப் பணியிலிருந்து ஓய்வுபெற்ற திருமதி சாரதபவானி சுந் தரலிங்கத்தின் மணிவிழா நிகழ்வுகள் நேற்று இடம் பெற்றன.

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் ந.ஜெயக்குமா ரன் தலைமையில் மணிவிழாக் குழுவினரின் ஏற்பாட் டில் கலைமன்ற கலாசார மண்டபத்தில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

மணிவிழா நாயகியை மாணவர்கள் பாடசாலை சமூ கத்தினர் மற்றும் பழைய மாணவர்கள் அயல் பாடசா லைகளின் அதிபர்கள் ஆசிரியர்கள் உட்பட பலர் மதிப்பளித்தனர். (ரி2.9)



## மாற்றுத் திறனாளிகள் தின நிகழ்வுகள் நேற்று

யாழ்ப்பாணம், டிசெ.3
பன்னாட்டு மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு யாழ்ப்பாண விழிப்புலனற்றோர் சங்கம் ஏற்பாடு செய்தி ருந்த நிகழ்வுகள் யாழ்ப்பாணத்திலுள்ள விடுதியொன்றில் நேற்று நடைபெற்றன.

யாழ்ப்பாண விழிப்புலனற்றோர் சங்கத் தலைவரும் சட்டத்தரணியுமான ஏ.எஸ்.அற்புதராஜ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சிறுவர் மற்றும் மகளிர் விவ கார அமைச்சர் அனந்தி சசிதரனும் வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வனஜா செல்வ ரட்ணம் மற்றும் யாழ்ப்பாண மாநகர ஆணையாளர், சேகர் மோட்டோஸ் உரிமையாளர் வே.நடராசா ஆகி யோர் கலந்துகொண்டனர். (ற-ரி4)

## புதிய கட்டடத்தில் பால் காய்ச்சும் நிகழ்வு



தென்மராட்சி டிசெம்.3
தென்மராட்சி, அல்லாரைக் கிராமத்தில் அமைக்கப்பட்ட கிராம செயலக கட்டட வேலைகள் பூர்த்தி செய்யப் பட்டு பால் காய்ச்சும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

அல்லாரை கிராம அலுவலர் பிரிவுக்கு ஒதுக்கப்பட்ட நிதி யில் அந்தப் பகுதிப் பொது அமைப்புகளும் இளைஞர் களும் இணைந்து இரவு ப்கலாகப் பணியாற்றி கட்டட வேலைகளை நிறைவு செய்த நிலையில் நேற்று இந்த நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த கட்டடம் நாளை பிர தேச செயலகத்திடம் கைய ளிக்கப்பட்டு விரைவில் அலு வலர்களின் பாவனைக்கு விடப்படுமெனவும் தெரிவிக் கப்பட்டது.

தென்மராட்சி பிரதேசத்தில் நான்கு கிராமச்செயலகங்கள் அமைப்பதற்கான நிதி ஒதுக் கப்பட்டு கடந்த ஓகஸ்ட் மாதம் கட்டடத்துக்கான அடிக்கல் நடப்பட்டது. (ரி2,9)

## நில்வள ஆற்றின் நீரை வேகப்படுத்த கடல் டைவிங் குழு

நில்வள ஆற்றின் குறுக்காக கட்டப்பட்ட மணல் தடையை நீக்கவும், வடிகால் வேகத்தை அதிகரிக்கவும் குழு ஒன்று அனுப்பி வைக்கப்பட்டது.

கடந்த சில நாள்களில் நிலவும் பாதகமான வானிலை கார ணமாக நில்வாலாவில் நீரின் அளவு விரைவாக அதிகரித் துள்ளது. ஆற்றின் குறுக்கே தற்காலிக மணல் தடையால், சுற்றியுள்ள பகுதிகளுக்கு வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது. மணல் தடையை துரிதமாக நீக்குவதற்காக தெற்கு கடற் படை கட்டளைக்கு இணைக்கப்பட்டுள்ள ஒரு டைவிங் குழுவினர் அனுப்பப்பட்டுள்ளனர். என்று தெரிவிக்கப்படு கிறது. (ரி2)



## நீராடச் சென்றவர் சடலமாக மீட்பு

கொழும்பு.டிசெ.3
கடலில் நீராடச் சென்ற வெளிநாட்டுக் குடிமகன் ஒருவ ரின் சடலம் நேற்றுக் காலை மீட்கப்பட்டது.

உக்ரைன் நாட்டுக் குடிமகன் ஒருவரே தூவேமோதர பகுதியில் சடலமாக மீட்கப்பட்டார். என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் அம்பலாங்கொட, பலப்பிட்டிய பகுதி கடலில் குறித்த நபர் நீராடச் சென்று காணாமற் போயி ருந்தார். நேற்று சடலமாக மீட்கப்பட்டார். (ரி-2)

உங்கள்
பிரதேசங்களில்
நடக்கும்
நிகழ்வுகளை
உலகறியச் செய்ய
எமக்கு அனுப்புங்கள்



உதயன்
DIGITAL newuthayan.com
newuthayan.com
Leading Tamil News website in Sri Lanka
(+) 94 77 316 5555



## தமிழர் – முஸ்லிம்கள் இடையே பிளவை ஏற்படுத்த சிலர் முயற்சி

வவுனியா,டிசெ.3

தமிழர் - முஸ்லீம்கள் மத்தியில் இனக்கலவரத்தைத் தூண்டும் வகையில் ஒரு சிலர் செயற்படுகின்றனர். அவர்களை இனங்கண்டு விழிப்புடன் செயற்பட வேண்டும் என வவுனியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மகிந்த வில்வோராச்சி தெரிவித்தார்.

வவுனியா பிரதேச சிவில் அமைப்புக்களுடனான கலந்துரையாடல் வவுனியா கிராம சேவையாளர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

வவுனியாவில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவரும் சில அசம்பாவித சம்பவங்களை வைத்து ஒரு சிலர் தமிழ், முஸ்லிம் மக்களுக்கிடையில் இனக்கலவரம் ஒன்றைத் தூண்டுவதற்கு முயற்சித்துள்ளனர். அவர்களை இனம் கண்டு விழிப்புடன் செயற்பட வேண்டும். வேப்பங்குளம் பகுதியிலுள்ள வியாபார நிலையத்தில் தீ விபத்து ஏற்பட்டது தொடர்பாக சிலர் வதந்திகளைப் பரப்பிவருகின்றனர்.

எதிர்வரும் காலங்கள் பண்டிகைக் காலங்களாக இருப்பதால் மது போதையில் மோட்டார் சைக்கிள்களை வேகமாகச் செலுத்துவோர் மீதும், கூட்டமாக குழுக்களாக நின்று பொதுமக்களுக்கு இடையூறு விளைவிப்போர் மீதும் கடும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். உங்களின் பிள்ளைகளை நீங்களே திருத்திக்கொள்ள வேண்டும் - என்றார். (ற.ரி4)

## 40 அடி பள்ளத்தில் பாய்ந்தது வான்; 6 பேர் படுகாயம்

பதுளை, டிச.3

பதுளை - களுகஹகந்துர பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் 6 பேர் காயமடைந்தனர்.

வீதியில் பயணித்த வான், திடீரென வீதியை விட்டு விலகி 40 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானது. அதில் பயணம் செய்த 6 பேர் படுகாயமடைந்த நிலையில் மீகஹகி வுல மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். பிட்டமாருவ என்ற பிரதேசத்தில் இடம்பெற்ற விருந்துபசாரத்தில் கலந்துகொண்டு வீடு திரும்பும் வழியிலேயே இந்த விபத்து இடம்பெற்றது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை கந்தகெட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ற)

## வேலைதேடும் பட்டதாரிகள் வவுனியாவில் கவனவீர்ப்பு

வவுனியா,டிசெ.3

வடக்குமாகாண அரச வேலைதேடும் பட்டதாரிகளால் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று நடத்தப்பட்டது. வவுனியா பேருந்து நிலையத்துக்கு முன்பாக இந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

அரசால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நீண்டகாலமாக நிறைவேற்றப்படாததைக் கண்டித்தே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.




போராட்டத்தில் ஈடுபட்டவர்களால் துண்டறிக்கைகள் விநியோகிக் கப்பட்டன.

சந்திரிக்கா ஆட்சியில் 65 ஆயிரம், மகிந்த ஆட்சியில் 20 ஆயிரம், நல்லாட்சியில்? நியமனம் வழங்குவதை துரிதப்படுத்து, அரசே வழங்கப்பட்ட வாக்குறுதிகள் எங்கே போன்ற பதாகைகளை ஏந்தியவாறு கோசங்களை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் எழுப்பினர். இதன் பின்னரும் தமக்கான நியாயமான தீர்வு வழங்கப்படாதவிடத்து தொடர் போராட்டங்களை முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாக அரச வேலைதேடும் பட்டதாரிகள் தெரிவித்தனர். (ற.ரி4)



## சிவனொளிபாதமலை யாத்திரை காலம் நேற்று ஆரம்பமானது

கொழும்பு, டிசெ.3


சிவனொளிபாத மலைக்கான யாத்திரை காலம் நேற்று ஆரம்பமாகியது.

பெல்மதுளை, கல்பொத்தாவல ஸ்ரீபாத ரஜமஹா விகாரையில் உள்ள சமன் ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் சுமன சமன் தெய்வத்தின் உருவச்சிலை, தேவ ஆபரணங்கள் சிவனொளிபாத மலைக்கு ஊர்வலமாக எடுத்துச் சென்ற பின்னர் யாத்திரை ஆரம்பமாகியது.

ஊர்வலம் மூன்று வழிகளில் சிவனொளிபாத மலையை சென்றடையும். ஒரு ஊர்வலம் பலாங்கொடை, பொகவந்தலாவ ஊடாக நல்லத்தண்ணியை வந்தடையும்.

மற்றுமொரு ஊர்வலம் அவிசாவளை, இரத்தினபுரி, ஹற்றன் ஊடாக நல்லத்தண்ணியை வந்தடையும்.

அடுத்த ஊர்வலம் இரத்தினபுரி, பலாபெத்த ஊடாக வந்தடையும். ஊர்வலங்கள் நல்லத்தண்ணியை வந்தடைந்த பின்னர், நாளை அதிகாலை சிவனொளிபாத மலையில் உள்ள ஆலயத்தில் பூஜை வழிபாடுகளின்



பின்னர் சிவனொளிபாத மலைக்கான யாத்திரை தொடங்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)





## தாழிறக்கத்தால் பெரும் பாதிப்பு

நுவரெலியா.டிசெ.3

நுவரெலியா மாவட்ட சாமிமலை பகுதியைச் சேர்ந்த மக்களின் வீடுகள் தாழிறக்கத்தால் வெடிப்புற்றுள்ளதன் காரணமாக நேற்று இடம்பெயர்ந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது. 25 குடும்பங்களை சேர்ந்த 110 க்கும் மேற்பட்டோர் இடம்பெயர்ந்து கலாசார மண்டபம், சன சமூக நிலையம் சிறுவர் பராமரிப்பு நிலையம் ஆகிய இடங்களில் தங்கியுள்ளனர்.


தற்காலிகமாக தங்கியுள்ள மக்களுக்கு, தோட்ட நிர்வாகம் மற்றும் அம்பகமுவ பிரதேச செயலகத்தின் ஊடாக கிராம சேவகரின் மூலம் உலர், உணவு பொருள்களும் உதவித் தொகையும் நேற்று வழங்கப்பட்டன என உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்தது. (ற.ரி4)

## அம்பிலாந்துறையிலுள்ள அரங்கை தேசியமட்டக்குழு பார்வையிட்டது

மட்டக்களப்பு, டிசெ.3

துருணு சிரம சக்தி வேலைத்திட்டத்தின் கீழ் மண்முனை தென்மேற்கு பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட அம்பிலாந்துறையில் அமைக்கப்பட்ட அரங்கை தேசியமட்டக் குழு நேற்றுப் பார்வையிட்டனர்.

அம்பிலாந்துறை பாரதி இளைஞர் கழகத்தால், பிரதேச இளைஞர் சேவை உத்தியோகத்தர் அ.தயாசீலன் வழிகாட்டலில் மேற்கொள்ளப்பட்ட, விளையாட்டு மைதானத்துக்கு அரங்கு அமைத்தல் வேலைத்திட்டம் மட்டக்களப்பு மாவட்டத்தில் முதலிடத்தைப் பெற்று தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளது. தேசிய மட்டத்திற்கான இடத்தை தெரிவு செய்யும் பொருட்டே தேசிய இளைஞர் சேவை மன்ற பணிப்பாளர் ஜெகத் அதிகாரி, மாகாண பணிப்பாளர் சிசிர குமார, மாவட்ட உதவிப்பணிப்பாளர் எஸ்.அமீர் உள்ளிட்ட குழுவினர் அரங்கைப் பார்வையிட்டதுடன், இது தொடர்பான ஆவணங்களையும் பரிசீலனை செய்தனர். (ற-ரி5)





## மீனவர் வலைகளில் பாம்பு: மக்கள் மத்தியில் அச்சம்

மட்டக்களப்பு, டிசெ.3

மட்டக்களப்பு நாவலடியில் நேற்றுக்காலை கரை வலை தொழிலில் ஈடுபட்ட அனைத்து மீனவர்களின் வலைகளிலும் பாம்புகள் பிடிபட்டதால் மக்கள் மத்தியில் பெரும் அச்சம் நிலவுகிறது.

அண்மைக் காலமாக கடல் கொந்தளிப்பு காரணமாக மீனவர்கள் கஷ்டத்துக்கு மத்தியில் தங்களது வாழ்க்கையைக் கொண்டு செல்கின்ற நிலையில் வலையில் பாம்புகள் சிக்கியுள்ளது பெரும் ஏமாற்றத்தைத் தந்துள்ளது.

இதனால் காலநிலை மாற்றங்கள் ஏற்பட சாத்தியக்கூறுகள் உள்ளதாவென மக்கள் மத்தியில் அச்சநிலையொன்று ஏற்பட்டுள்ளது. பாம்புகள் ஏன் பிடிபடுகின்றன என்பது தொடார்பாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதுபோன்று கடந்த சுனாமி பேரலை ஏற்பட்ட காலத்திலும் பெருமளவான பாம்புகள் மட்டக்களப்பு பகுதிக்கு படையெடுத்தன என்றும் மக்கள் கூறினர். (ற-ரி5)



# வீட்டுக்காரர் வெளிநாடு செல்ல பொருள்கள் திருட்டுப்போயின

வரணியில் வீட்டில் ஆள்கள் இல்லாதநேரம் வீட்டுக் கதவு உடைத்து உட்புகுந்த திருடர்கள் 30 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.


வீட்டின் உரிமையாளர்கள் வெளிநாடு சென்றிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் இரவு திருட்டு இடம்பெற்றுள்ளது.


அயல் வீடுகளில் உள்ளவர்கள் குறித்த வீட்டின் கதவுகள் உடைக்கப்பட்டுள்ளமையைக் கண்டு பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர். சம்பவ இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். திருட்டுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் இருந்த மின் அழுத்தி, மின்விசிறி, தொலைக்காட்சி போன்ற இலத்திரனியல் பொருள்கள் திருடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (4-8)

இளவாலை சாந்தபுரம் ஆரம்பப் பாடசாலையில் மாணவர்களுக்குப் போதைப் பொருள் பற்றி விழிப்பூட்டும் நிகழ்வு பாடசாலை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. இளவாலைப் பொலிஸாரின் ஏற்பாட்டில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வில் இளவாலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சேனநாயக்க கலந்துகொண்டு மாணவர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்கினார். (4)








# 'ராஜபுர பஞ்சபல அமிர்த பானம்'

## கெஸ்ட்ரைடிஸ் நோய் பற்றிய கவலை வேண்டாம்



மொனராகலை சிரிகல ராஜபுர மருந்தகத்தின் ஆயுர்வேத வைத்தியர் **சுமித் ராஜபுர அவர்கள்**

நாம் பயன்படுத்தியுள்ள இம்மூலிகையானது நூற்றுக்கு நூறு வீதம் ஆயுர்வேத திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து பயன்படுத்துவதனால் எவ்வித பக்கவிளைவுகளும் ஏற்படமாட்டாது. சிங்கள ஆயுர்வேத ஔடதங்களின் ஔறிணைப்பாலே இவ்வரிய மூலிகைப் பானம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அரச தொழிற்சாலை தொழில்நுட்ப நிறுவனத்தினால் ஆய்வு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டதாகும். இதுவொரு அரிஸ்ட பானம் கிடையாது. சீனியுள்ளடக்கப்படாத மூலிகைப் (கசாயம்) பானமாகையால் நீரிழிவு நோயுள்ளோரும் எவ்வித அச்சமுமின்றி கெஸ்ட்ரைட்டிஸ்க்கு பருகலாம். முக்கியமான விடயம் என்னவென்றால், ராஜபுர பஞ்சபல அமிர்த பானத்தை ஒத்ததான போலியான உற்பத்திகள் இப்பொழுது சந்தைகளில் நிறைந்துள்ளதால் கொள்வனவுகளின் போது சற்று நிதானமாக இருக்கவும்.

**த**ற்கால இலங்கையர்கள் நான்கில் மூன்று பங்கினர் பாதிக்கப்பட்டிருக்கும் ஒரு நோயாக கெஸ்ட்ரைட்டிஸ் இனை குறிப்பிடலாம். அதாவது உடலில் அதிகளவு அமிலம் சுரப்பதனையே இவ்வாறு அழைக்கின்றனர். சிறியோர் முதல் பெரியோர் வரையில் அனைவருக்கும் எவ்வித வயதெல்லைகளும் கிடையாமல் உருவாகும் கெஸ்ட்ரைட்டிஸ் நோயிற்கு இதுவரையில் எவ்வித தீர்வுகளும் கிடைக்கவில்லை. முதன் முறையாக இதற்கு நிரந்தர தீர்வாக இயற்கையான சிகிச்சை முறைகளை வழங்குகிறார் மொனராகலை சிரிகல, ராஜபுர மருந்தகத்தின் வைத்தியர் சுமித் ராஜபுர அவர்கள்.

கெஸ்ட்ரைட்டிஸ் என்றழைக்கப்படும், உடலில் அதிகளவில் அமிலம் சுரக்கப்படும் இந்நோயின் அறிகுறிகள் என்ன?

இன்றைய காலகட்டத்தில் பெரும்பாலான இலங்கையர்கள் பாதிக்கப்பட்டிருக்கும் ஒரு நோயாக இதனைக் குறிப்பிடலாம். இந்நோய் தோன்றுவதற்கு ஏராளமான காரணிகளைச் சுட்டிக்காட்டலாம். உரிய நேரத்தில் உணவு உட்கொள்ளாமை, தேவையானளவு குடிநீர் பருகாமை, நீண்ட காலமாக மேற்கத்திய மருந்துகளை உபயோகித்தல், மன உளைச்சல், நீண்ட நாட்களாக துரித உணவுகள் (Fast Foods) உட்கொள்ளல், மதுபானம் அருந்துதல், அதிகளவு மசாலா கலந்த உணவுகள் உட்கொள்ளல், அதிகளவு எண்ணெய் மற்றும் இனிப்பு கலந்த உணவுகள், பானங்களை உட்கொள்ளல் போன்ற காரணிகளினாலே இந்நோய் ஏற்படுகின்றது.

இந்நோயின் பிரதான அறிகுறிகள் பற்றியும் குறிப்பிடுவோம்.

நெஞ்செரிச்சல், எப்பொழுதும் வயிறு நிரம்பியது போன்ற உணர்வு, தலைவலி, உணவின் மீது நாட்டமின்மை, வாந்தியெடுத்தல், காலை வேளைகளில் மஞ்சள் நிறத்தில் வாந்தியெடுத்தல் என்பன கெஸ்ட்ரைடின் பிரதான அறிகுறிகளாகும்.





இவ்வறிகுறிகள் தவிர கெஸ்ட்ரைட்டிஸ் நோயாளரின் உடலில் ஏற்படும் வேறு மாற்றங்கள்?

அதிகளவில் அமிலம் சுரக்கும் இந்நோயானது அதியுயர் உடற்வெப்பத்தை உடையோருக்கே ஏற்படும். அதுபோன்ற உடலமைப்பினையுடையோருக்கு சருமம் உலர்தல், பாதம் வெடித்தல், தலைவலி, சருமத்தில் வெண்ணிறத்திலான படலங்கள் தோன்றல், வயிறு வெப்பமடைதல், அடிக்கடி சிறுநீர் கழித்தல் போன்ற அறிகுறிகளை பிரதானமாகக் குறிப்பிடலாம். இது தவிர, அக்குள் மற்றும் அடிபாதங்களில் வியர்த்தல், எப்பொழுதும் உடலில் ஏற்படும் ஒருவித எரிச்சல் மிகு தன்மை என்பன பொதுவாக காணக்கூடிய நோய் அறிகுறிகள் ஆகும்.

பஞ்சபல அமிர்த பானத்தினால் இந்நோயினை முற்றாக குணப்படுத்த முடியுமா?

கெஸ்ட்ரைட்டிசை முற்று முழுதாக குணப்படுத்தக் கூடிய வல்லமை பஞ்சபல அமிர்த பானத்திற்கு உள்ளது. இம்மூலிகைப் பானத்தினை முறையாக பருகி வருவதன் மூலம் சிறந்த பலனை பெற்றுக்கொள்ள முடியும். இப்பானத்தினைப் பருகி வரும் நாட்களில் உடலின் சூடு தணிக்கப்படுவதோடு, பசியின்மை என்கிற நிலை மாறி சாதாரண நிலையை அடைவர். ஒரு சிலருக்கு நிமிடத்திற்கு ஒரு தடவை பசியெடுக்கும். இந்நிலையினை பஞ்சபல அமிர்த பானம் முற்றாக சீர்படுத்தும். அத்தோடு வயிறு உலர்தல், சிறுநீர் கழிக்கும்போது எரிச்சல், அடிபாதம் வெடித்தல், தலைவலி மற்றும் பெண்களுக்கு ஏற்படும் சீரற்ற மாதவிடாய் என்கிற நோய்களை குணமாக்குவதில் முன்னோடியாக இம்மூலிகைப் பானம் சிறந்து விளங்குகிறது.

இச் அதிசிறந்த மூலிகைப் பானத்தின் பயனையடைய, எவ்வளவு காலம் உபயோகிக்க வேண்டும்?


கெஸ்ட்ரைட்டிஸ் உடம்பில் தோன்றிய காலத்தைப் பொருத்து நபருக்கு நபர் இது வேறுபடும். உதாரணமாக பல வருட காலமாக இந்நோயினால் அவதியுற்ற ஒருத்தர், இப்பானத்தினைக் குறைந்தது மூன்று மாதங்களாவது பயன்படுத்த வேண்டும். ஒரு சிலருக்கு ஒன்றிரண்டு போத்தல்கள் பருக நேரிடும். அதனால் பூரண நலத்தையும் பெறலாம். ஆகவே நோயாளியின் உடல் நிலையைப் பொறுத்தே அவர் பருக வேண்டிய மூலிகைப் பானத்தின் அளவு, அதற்கு எடுக்கும் காலம் என்பன நிர்ணயிக்கப்படும்.

இம்மூலிகைப் பானத்தினைத் தொடர்ந்து பருகுவதனால் ஏதேனும் பக்கவிளைவுகள் உள்ளனவா? இது தொடர்பில் சமூகத்தில் பல முரணான கருத்துகள் நிலவுகின்றன. அது பற்றி கூறினால்?

நாம் பயன்படுத்தியுள்ள இம்மூலிகையானது நூற்றுக்கு நூறு வீதம் ஆயுர்வேத திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து பயன்படுத்துவதனால் எவ்வித பக்கவிளைவுகளும் ஏற்படமாட்டாது. சிங்கள ஆயுர்வேத ஔடதங்களின் ஒன்றிணைப்பாலே இவ்வரிய மூலிகைப் பானம் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அரச தொழிற்சாலை தொழில்நுட்ப நிறுவனத்தினால் ஆய்வு செய்யப்பட்டு பரிந்துரைக்கப்பட்டதாகும். இதுவொரு அரிஸ்ட பானம் கிடையாது. சீனியுள்ளடக்கப்படாத மூலிகைப் (கசாயம்) பானமாகையால் நீரிழிவு நோயுள்ளோரும் எவ்வித அச்சமுமின்றி கெஸ்ட்ரைட்டிஸ்க்கு பருகலாம். முக்கியமான விடயம் என்னவென்றால், ராஜபுர பஞ்சபல அமிர்த பானத்தை ஒத்ததான போலியான உற்பத்திகள் இப்பொழுது சந்தைகளில் நிறைந்துள்ளதால் கொள்வனவுகளின் போது சற்று நிதானமாக இருக்கவும்.

பஞ்சபல அமிர்த பானத்தினை கொள்வனவு செய்யும் விதம் பற்றி குறிப்பிடுவோம்

நாடு முழுதும் உள்ள அனைத்து ஆயுர்வேத மருந்தகங்களிலும் கார்கீல்ஸ், ஆர்பிக்கோ, லாஃப் மற்றும் கீல்ஸ் போன்ற சுப்பர் மார்க்கட்டுகளிலும் உள்ள பாமசிகளில் கொள்வனவு செய்ய முடியும். நபரொருவருக்கு என்னை சந்தித்து சிகிச்சைகளைப் பெற விரும்பினால் 0115 727 519 அல்லது 0716 000 250 என்கிற தொலைபேசி இலக்கங்களினூடாக என்னைத் தொடர்பு கொள்ள முடியும். அதுமாத்திரமன்றி www.asthmarajapura.com என்கிற இணையதள முகவரியிலும், youtube இலும், முகப்புத்தகத்தின் மூலமாகவும் ராஜபுர என்கிற பெயரினை வகிர செய்து மேலதிக தகவல்களைப் பெற்றுத் தெரிந்துக்கொள்ள முடியும்.






## தேவை

யாழில் உள்ள பிரபல உயர்கல்வி நிறுவனம் ஒன்றுக்கு பெண் Centre Head தேவை.

- சம்பளம் : 15000 - 25000
- தகைமை : பட்டதாரி
- வயது : 20 - 30

Graphic designing தெரிந்திருத்தலும், Motorbike வைத்திருத்தலும் விரும்பத்தக்கது.

**021 722 3444, 077 669 3432**

## கண்ணீர் அஞ்சலி




தென்மராட்சி பிரதேச செயலர்
**திருமதி தேவந்தினி பாபு**
அவர்களின் அன்பு மாமியார்

**அமரர்**
# கணபதிப்பிள்ளை சிதம்பரம்

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

**உத்தியோகத்தர்கள்,**
**பிரதேச செயலகம், தென்மராட்சி.**

## 3ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம்
14.04.1934

மறைவு
05.12.2014

**அமரர்**
# கிருஸ்ணபிள்ளை தங்கவடிவேல் (J.P.)

கார்த்திகை தீபத் திருநாளில்
எம் குடும்ப தீபத்தினை இழந்து
இன்றுடன் ஆண்டுகள் மூன்று
எத்தனை ஆண்டுகளானாலும்
ஆறாத வடுக்களுடன் உங்கள் நினைவில்...

இருபாலை கிழக்கு,
கோப்பாய்.

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

# Dr. திருமதி சசிரேகை நந்தகுமார்

*MBBS (SL), GP (LONDON)*

**(நிறுவுனர் தாயகம் மருத்துவ சிகிச்சை நிலையம் கோண்டாவில் கிழக்கு)**



யாழ். கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட Dr. திருமதி சசிரேகை நந்தகுமார் கடந்த (01.12.2017) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் இடைக்காடர் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஞானசம்பந்தர் - லக்ஷ்மி தம்பதியரின் அன்பு மருமகளும் நந்தகுமாரின் அருமை மனைவியும் யோகினி (லண்டன்), ஆரணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் ரெறி பிளேக் (லண்டன்) இன் அன்பு மாமியும் தயாபரன் (லண்டன்), கலாமணி (அமெரிக்கா), நித்தியா (ஆஸ்திரேலியா), மீரா (கனடா), மாலினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தமயந்தி (லண்டன்), ஸ்ரீரங்கநாதன் (அமெரிக்கா), அசோகமூர்த்தி (கனடா), காலஞ்சென்ற சிவகுமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (06.12.2017) புதன்கிழமை கோண்டாவில் கிழக்கிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் கிழக்கு, கட்டையாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: கணவர் - ஞா.நந்தகுமார் +9478 310 6314**

## பரீட்சை எழுதியோர் இன்று ஒன்றுகூடவும்

இலங்கை கணக்காளர் சேவை தரம் 3க்கான பரீட்சைக்குக் கடந்த ஏப்ரல் மாதம் வடக்கில் தோற்றிய அனைத்துப் பரீட்சார்த்திகளையும் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அண்மையில் உள்ள டி.சி.எம் தனியார் கல்லூரி மண்டபத்தில் இன்று பிற்பகல் 3 மணிக்கு ஒன்று கூடுமாறு அழைக்கப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணக் கல்வியியலாளர் ஒன்றியத்தின் தலைவர் இ.ரட்ணம் இவ்வாறு அழைத்துள்ளார். (4-8)

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமக

## 32 ஆம் நாள் நினைவஞ்சலி



கடந்த 02.11.2017 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த
எமது குடும்பத்தலைவர்

**அமரர்**
# கிருஷ்ணபிள்ளை சற்குணராசா (ஆசாரி)




அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் அதனைத் தொடர்ந்து மதிய போசன நிகழ்வும் இன்று (03.12.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கொக்குவில் மஞ்சவனப்பதி மண்டபத்தில் நடைபெற இருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
(இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

வராகி அம்மன் கோயில் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்
077 912 0685

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

# கிருஸ்ணக்குட்டி தவக்குமார்



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் அச்சுவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஸ்ணக்குட்டி தவக்குமார் 28.11.2017 திங்கட்கிழமை நமக்கல் பலோபெரா தென் ஆபிரிக்காவில் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் தவரஞ்சினியின் (வலி. கிழக்கு, வடபகுதி ப.நோ.கூ.சங்கம்) அன்புக் கணவரும் சாகித்தியா, அஷ்மிதா (யாழ். புனித திரேசா மகளிர் கல்லூரி மாணவிகள்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான கிருஸ்ணக்குட்டி அக்கினேஸ் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் நாகபூசணியம்மா தம்பதியரின் மருமகனும் உதயகுமார் (ஓய்வுபெற்ற மேல் நீதிமன்ற பதிவாளர்), சூரியகுமாரி (பிரான்ஸ்), சந்திரகுமாரன், ஜெயக்குமார், விஜயகுமாரி, பிறேம்குமார் (ஜேர்மனி), சுகுமார், கிருஸ்ணகுமாரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் தயாபரன் நளினி (லண்டன்), அனுஷா (ஆசிரியை, கனகராயன்குளம் மகா வித்தியாலயம்), சத்தியபவன் (உபதபால் அதிபர், சாம்பல் தீவு), வேலுநாதன் (பிரான்ஸ்), ரவீந்திரன், விவேகானந்தன், பார்வதி, வளர்மதி, புஸ்பராணி, பவானி (ஜேர்மன்), இந்துமதி ஆகியோரின் மைத்துனரும் ராஜா (மலேசியா), ராணி (மாவட்ட நீதிமன்றம், வவுனியா), ரஜீவ், ரஞ்சித் (Computer Instructor, VTS, Kaithady), தருஷா (ஆசிரியை, இந்துக் கல்லூரி, கொழும்பு 04), பிரியதர்ஷன், டயான் (HNB), காயத்திரி (செலான் வங்கி), காலஞ்சென்ற ஜெயதீஸ்வரன் மற்றும் ஜெயத்திரி, ரம்மியா, ரமணியா ஆகியோரின் சித்தப்பாவும் பிரவீனா, துசாந்தன், துசிக்கா, ரிஷா (ஜேர்மன்), சுயாமதி (Software Engineer), சுரேனுஜன், மதுனுஜன், நேருஜன் ஆகியோரின் பெரியப்பாவும் காலஞ்சென்ற சர்மிளா மற்றும் ரஞ்சித் ரஜித்திரி (லண்டன்), ரஜீந்திரன் கிருபாஞ்சலி (லண்டன்), வேனிலன், கிர்ஷானி ஆகியோரின் மாமனும் றாகன்யாவின் (லண்டன்) பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.12.2017) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பி.ப. 1.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தீர்த்தாங்குள இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

**சன்னதி வீதி, வருணன், அச்சுவேலி. (077 622 2492, 077 661 8111)**

## மரண அறிவித்தல்

# ஆறுமுகம் மார்க்கண்டு



மீசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மார்க்கண்டு நேற்று (02.12.2017) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் செங்கமலம் தம்பதியரின் இளையமகனும் கந்தையா செல்லம்மா தம்பதியரின் அன்புமருமகனும் கதிராசிப்பிள்ளையின் (சின்னக்கோன்) அன்புக்கணவரும் காலஞ்சென்ற தெய்வானைப்பிள்ளை மற்றும் வைரமுத்து ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு, வீரசிங்கம் மற்றும் தங்கராசா (தாத்தா) ஆகியோரின் அன்புமைத்துனரும் காலஞ்சென்றவர்களான இறஞ்சனாதேவி, ஸ்ரீரவிகுலன் (ரவி) மற்றும் கலைவாணன் (வாணன், லண்டன்) ஆகியோரின் அன்புத்தந்தையும் விமலகுமாரி (ஆசிரியர், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி), சாரதாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்புமாமனாரும் கிரிபரன், ஜனார்த்தனன், ஸ்ரீபிரணவன், சயந்தன், சாரங்கன் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (2017.12.04) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**021 2050 427**

## வடக்கு – கிழக்கு இணைந்த
# ஒரு தேசமாகவே நாங்கள் இருக்கின்றோம் எங்களுக்குள் பிரிவுகள், பிளவுகள் இல்லை
### வடக்கு அமைச்சர் அனந்தி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், டிசெ.3
இலங்கை அரசு ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், ஏற்றுக்கொண்டாலும் நாங்கள் வடக்கு-கிழக்கு இணைந்த ஒரு தேசமாகவே இருக்கின்றோம். எங்களுக்குள் பிரிவுகளும், பிளவுகளும் இல்லை. அந்தக் கொள்கை அடிப்படையில் பெண்கள் அரசியலுக்கு வரவேண்டும் என வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சர் அனந்தி சசிதரன் தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கடந்த புதன்கிழமை ரப்லெட்களை வழங்கி வைத்து உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார் என அவரது ஊடகப் பிரிவினர் அனுப்பி வைத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் உள்ளதாவது; கிழக்குடன் ஒப்பிடும்போது பெண்களுக்கு எதிரான வன்முறைகளும், துன்புறுத்தல்களும் வடக்கில் அதிகரித்த நிலையிலிருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது. இதனைச் சரி செய்ய வேண்டுமாயின் கொள்கையின் அடிப்படையில் பெண்கள் அரசியலுக்கு வரவேண்டும். இதனையே நான் தொடர்ந்தும் வலியுறுத்திவருகின்றேன். பெண்கள்தான் பெண்களின் பிரச்சினைகள் குறித்துப்பேச வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஆனால் அரசியலில் பெண்களின் வகிபாகம் மிகமிகச் சொற்பமாகவே இருந்து வருகின்றது. இந்த நாட்டில் நூற்றுக்கு 52 வீதமான பெண்கள் இருக்கின்றபோதிலும் பெண்களின் அரசியல் பங்கேற்பென்பது சொற்பமாகவே இருக்கின்றது. உள்ளூராட்சித் தேர்தல்க் களத்தைப் பார்த்தோமானால் வெறும் 1.8 சதவீதமே பெண்கள் இருக்கிறார்கள். நாடாளுமன்றத்தில் 2.8 சதவீதமான பெண்களே இருக்கின்றார்கள். வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் 38 உறுப்பினர்களில் ஒரேயொரு பெண் பிரதிநிதியாக நான் மட்டுமே இருக்கிறேன். ஆகவேதான் கொள்கையடிப்படையில் பெண்கள் அரசியலுக்கு வரவேண்டும் என்பதை வலியுறுத்திக் கூறிவருகின்றேன்.

தமிழர்களாகிய நாம் போர் காரணமாகக் கல்வியையும், பொருளாதாரத்தையும் இழந்துள்ளோம். பொருளாதாரத்தை வளர்த்தெடுக்கும் அதேநேரம் கல்வியிலும் அக்கறை செலுத்த வேண்டிய தேவையும் இருக்கின்றது. பல்கலைக் கழகக் கற்கையைத் தொடர்வதற்காக ஒரு மாகாணத்தில் இருந்து இன்னொரு மாகாணத்துக்குச் செல்லும்போது அவர்களின் தேவை அதிகரித்து வாழ்க்கைச் செலவுக்கு ஈடுகொடுக்கமுடியாத நிலையில் மாணவர்கள் இருக்கின்றார்கள். கடந்த காலத்தில் இந்த விடயம் தெரியப்படுத்தப்படாத காரணத்தினால் பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் உதவிகளைச் செய்ய முடியாதிருந்தது.

இருந்தபோதிலும் எம்மால் முடிந்தளவுக்கு நாங்கள் பதவியில் இருக்கும்வரை உதவிகளை வழங்குவோம். இவ்வாறு கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த மாணவர்களுக்கு உதவிகளைச் செய்ய கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகள் முன்வர வேண்டும். பெண்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்குக்காக நாங்கள் நீதி கோரும் பயணத்தினை மேற்கொண்டிருக்கும் நிலையிலும் நாங்கள் அபிவிருத்தியையும் கல்வி மேம்பாட்டினையும் கவனத்திற் கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது - என்றுள்ளது. (21)

## இந்திய மீனவர்கள் 20 பேர் கடற்படையினரால் கைது
### இலங்கைக் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள்

யாழ்ப்பாணம் டிசெ.3
இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் இந்திய மீனவர்கள் 20 பேர் நேற்று முன்தினம் இரவு இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

இந்தியாவின் நாகை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் அவர்கள். இரண்டு இழுவைப் படகுகளில் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து தொழிலில் ஈடுபட்டுள்ளனர். பருத்தித்துறைக் கடற்பரப்பில் வைத்து அவர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்களின் படகும் கைப்பற்றப்பட்டது.

காங்கேசன்துறைக் கடற்படை முகாமில் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன. நேற்று அவர்கள் யாழ்ப்பாணம் கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர் எனக் கடற்படையினர் தெரிவித்தனர். அந்த 20 மீனவர்களையும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என யாழ்ப்பாணம் கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களம் தெரிவித்தது.

கடந்த மாதம் 16ஆம் திகதியும் இந்திய மீனவர்கள் 10 பேர் பருத்தித்துறைக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்டனர். அவர்கள் கடந்த மாதம் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். 30ஆம் திகதி இடம்பெற்ற வழக்கு விசாரணைகளின் பின்னர் எதிர்வரும் 14ஆம் திகதி வரை அவர்களின் விளக்கமறியல் நீடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (21,8)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், டிசெ.3
வலி.வடக்குப் பிரதேச சபையின் தேசிய வாசிப்பு மாதத்துக்கான பரிசளிப்பு விழா இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 5 ஆம் திகதி மு.ப 10 மணிக்கு அளவெட்டிப் பிரதேச கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மல்லாகம், உப அலுவலகம் வலி. வடக்குப் பிரதேச சபை பொறுப்பதிகாரி தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தலைமை நூலகர் அ.ஸ்ரீகாந்த லஷ்மி மற்றும் சிறப்பு விருந்தினர்களாக காங்கேசன்துறை வலி. வடக்கு பிரதேச சபை செயலர் இ.பகீரதன், வலி. வடக்கு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் சோ.சுகிர்தன், அளவெட்டி அருணோதயக் கல்லூரி அதிபர் என்.கேதீஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (4)

## இலவசக் கருத்தரங்கும் சட்ட உதவிகளும்

ஆரோக்கியமான வேலைச் சூழல் மற்றும், வேலைத் தளங்களில் பால் நிலைச் சமத்துவம் எனும் தொனிப் பொருளிலான இலவசக் கருத்தரங்கும், சட்ட உதவியும் இன்று யாழ்ப்பாணம் வணிகர் கழகத்தில் இடம் பெறும்.

காலை 9 மணி முதல் பி.ப ஒரு மணி வரை இடம்பெறும் இந்த நிகழ்வை யாழ்ப்பாண மாவட்டச் செயலகமும், சொலிட்டறி நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்துள்ளன. யாழ்ப்பாணத்தில் உள்ள கடைகளில், நிறுவனங்களில் பணிபுரியும் இருபாலரும் கலந்து கொள்ளலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (21)

## டெங்கு ஒழிப்பு செயற்திட்டம் இன்று

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் இன்று முழுக் கிராமத்துக்குமான டெங்கு ஒழிப்புச் செயற்திட்டம் முன்னெடுக்கப்படும்.

அந்தவகையில் கிராமத்தவர்கள் அனைவரும் தங்கள் வீடுகள்தோறும் உள்ள டெங்கு நுளம்பு பெருக ஏதுவான பொருள்களைச் சேகரித்து பொதிசெய்து வைக்குமாறு அறிவிக்கப்பட்டிருப்பதுடன் அவற்றை வீடுகளில் சென்று சேகரித்து உரிய முறையில் அப்புறப்படுத்தும் நடவடிக்கையில் சங்க உறுப்பினர்கள் ஈடுபடவுள்ளனர். இந்தச் செயற்திட்டத்துக்கு இளவாலைப் பொலிஸார், வலிவடக்குப் பிரதேச சபையினர், மற்றும் இளவாலை J/155 இளைஞர் கழகத்தினர், டொன்பொஸ்கோ இளைஞர் கழகத்தினர் சங்கத்துடன் இணைந்து செயற்படவுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (21)

# அவளைத் தேர்ந்தெடுப்போம் வன்முறையை ஒழிப்போம்
### உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு முல்லையில் அரங்க நிகழ்வு

அரசியலில் வினைத்திறனான பங்களிப்புக்கான வளமான வாய்ப்புக்கள் பெண்களுக்குக் கிடைப்பதற்காகத் தேர்தல்களில் இடம்பெறும் பெண்களுக்கு எதிரான வன்முறையை ஒழித்தல் என்ற தொனிப்பொருளில் ஆற்றுகை அரங்க நிகழ்வு ஒன்று முல்லைத்தீவு நகர்ப் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம் பெற்றது.

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உள்ளூராட்சித் தேர்தலை முன்னிட்டு இலங்கை தேர்தலில் இடம்பெறும் பெண்களுக்கு எதிரான வன்முறையினை ஒழித்தல் என்ற கருப்பொருளின் கீழ்ப் பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான தேசியக் குழுமம் ஏற்பாடு செய்த நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து பெருமளவான பெண்கள் மற்றும் ஆண்கள் கலந்துகொண்டனர். இலங்கையின் சனத்தொகையில் 52 வீதம் பெண்களாகக் காணப்படுகின்றது. நாடாளுமன்றில் பெண்களின் பிரதிநிதித்துவம் 5.3 வீதமாகக் காணப்படுகின்றது. பால்நிலை அடிப்படையிலான சமூகக் கலாசார வழக்கங்கள் மற்றும் பாகுபாடுகள் காரணமாக அரசியலில் நுழைந்து வினைத்திறனாக அதில் ஈடுபடுவதற்குப் பெண்களுக்குப் பல தடைகள் உள்ளன.

வாக்களிப்போராகவும், போட்டியாளராகவும் தேர்தலில் பெண்களின் அரசியல் பங்களிப்பைப் பாதிக்கும் முதன்மைக் காரணி யாகப் பொதுத்தேர்தல் வன்முறை விளங்குகின் றது. இலங்கையில் தேர்தலில் பங்குகொள்ளும் பெண்கள் துன்புறுத்தல்கள், பாலியல் இலஞ்சம், மிரட்டல், உடல் ரீதியான தாக்குதல், நீதி ரீதியான அழுத்தங்கள், பெண் போட்டியாளர்களைச் சிறுமைப்படுத்தும் விதமான பண்பற்ற ஊடகக் காட்சிப்படுத்தல், சமூக வலைத்தளங்களில் நற்பெயருக்குக் களங்கம் விளைவித்தல் போன்ற பல வகையான வன்முறைகளை எதிர்கொண்டுள்ளனர்." இவை அனைத்தும் இந்த அரங்கில் பேசப்பட்டன.

இந்த நிகழ்வில் மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன், உதவித் தேர்தல் ஆணையாளர் கே.காந்தீபன், பெண்கள் ஆய்வாளரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளருமான கோசலை மதன் ஆகியோர் கலந்து கொண்டு கருத்துக்களைத் தெரிவித்தனர். (21,ரி3)

## 'நீதியின்மை அப்போதும் இப்போதும்' ஆவணக் காப்பகத்தின் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம், டிசெ.3
சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகத்தின் 52ஆவது நிகழ்வு 'நீதியின்மை அப்போதும் இப்போதும்' எனும் தலைப்பில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி தொடக்கம் நண்பகல் 12.00 மணி வரை சமகாலக் கலை, கட்டடக்கலை மற்றும் வடிவமைப்புக்கான ஆவணக் காப்பகம், 199, கோவில் வீதி, நல்லூரில் இடம்பெறவுள்ளது.

இலங்கையின் கலையூடான வெளிப்பாடு என்பது பயம் மற்றும் மௌனச்சூழலில் ஓர் எதிர்ப்பின் வடிவமே என்ற தொனிப்பொருளில் எண்மியப் படைப்பாளியும் ஒளிப்படவியலாளரும் புலம்பெயர் ஈழத் தமிழருமான 'நந்தா கந்தசாமி' இதனை எடுத்து விளக்கவுள்ளார். (21)

# நான்கு ஆண்டுகளில் 16 முன்பள்ளிகளுக்கு பான்ட் வாத்தியக் கருவிகள் வழங்கிவைப்பு
### ரூ.20 இலட்சத்து 65ஆயிரம் நிதி ஒதுக்கீட்டில் வழங்கினார் மாகாண உறுப்பினர் ரவிகரன்



முல்லைத்தீவைச் சேர்ந்த 16 முன்பள்ளிகளுக்கு வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரன் இன்னியம் இசைக்கருவிகளை வழங்கியுள்ளார். இதற்காக அவர் தனது பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் 20 இலட்சத்து 65 ஆயிரம் ரூபாவைச் செலவு செய்தார்.

முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் ஆதிகணபதி முன்பள்ளிக்கு வடக்கு மாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் இன்னியம் இசைக்கருவிகளை வழங்கினார். இந்த நிகழ்வு கடந்த 24ஆம் திகதி ஆதிகணபதி முன்பள்ளியில் இடம்பெற்றது. ரவிகரனின் நடப்பாண்டின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டில் இருந்து 70 ஆயிரம் ரூபா செலவில் இசைக்கருவிகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் துணுக்காய் கல்வி வலயத்தின் முன்பள்ளிகளுக்கான உதவிக் கல்விப்பணிப்பாளர் ஆறுமுகம் சுந்தரமூர்த்தி, ஒட்டுசுட்டான் கோட்டத்தின் முன்பள்ளிகளின் இணைப்பாளர் கந்தையா - யோகேசுவரி, ஆதிகணபதி முன்பள்ளி ஆசிரியர்களான சந்திரகுமார் சத்தியவாணி, கலிக்ரசுநிக்சன் மனோரஞ்சனி ஆகியோர் கலந்துகொண்டனர். அவர்களுடன் முன்பள்ளிச் சிறார்கள், பெற்றோர்கள் நலன்விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். நிகழ்வில் உரையாற்றும் போதே ரவிகரன் மேற்குறித்த தகவலை தெரிவித்தார்.

"2014ஆம் ஆண்டு 5 பாடசாலைகளுக்கும் 2015ஆம் ஆண்டு 2 பாடசாலைகளுக்கும் 2016ஆம் ஆண்டு 7 பாடசாலைகளுக்கும் (இரண்டு பாடசாலைகள் 2015 இலும் உள்வாங்கப்பட்டு மேம்படுத்தப்பட்டவை) 2017 ஆம் ஆண்டு 4 பாடசாலைகளுக்குமாக 16 பாடசாலைகளுக்கு இன்னியம் இசைக் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்த உதவிகள் தொடர்ந்தும் முன்பள்ளிகளுக்கு வழங்கப்படும்" என ரவிகரன் தனது உரையில் மேலும் தெரிவித்தார். (21,ரி3)

## இ.போ.ச. பேருந்து மீது தாக்குதல் நடத்தியதாக ஐவர் பொலிஸாரல் கைது

யாழ்ப்பாணத்திலிருந்து கண்டி நோக்கிப் பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து மீது கல்வீசித் தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் 5 பேரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கனகராயன் குளம் பகுதியில் வைத்து நேற்றுமுன்தினம் கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. அது தொடர்பில் பேருந்து நடத்துநரும், சாரதியும் கனகராஜன் குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர். "இது தொடர்பில் விசாரணை மேற்கொண்டு சந்தேகத்தில் 5 பேரைக் கைது செய்துள்ளோம். அவர்கள் 25 வயதுக்கு உட்பட்டவர்கள். விசாரணைகளின் பின்னர் அவர்கள் குற்றத்துடன் தொடர்புடையவர்கள் என்பது தெரியவரின் வழக்குப் பதிவு செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்படுவர்" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வெளி மாவட்டங்களுக்கு இடையில் பணியில் ஈடுபடும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் மீது கல்வீசித் தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் சில மாதங்களாகத் தொடர்ந்து கொண்டிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (4-8)

## வறியோரின் பிணக்கைத் தீர்க்கும் உயரிய சபையே இணக்க சபை

### மாவட்டச் செயலர் வேதநாயகன் புகழாரம்



யாழ்ப்பாண மாவட்ட (காணி) சிறப்பு இணக்க சபை வறிய மக்களின் பிணக்குகளைத் தீர்க்கும் உயரிய சபையாகவே என்னால் உணரப்படுகின்றது.


எனவே மாவட்ட மட்டத்தில் பல்வேறு பிரதேசங்களில் இருந்து வரும் அனைத்துப் பிணக்குகளையும் ஒருமித்த அடிப்படையில் தீர்ப்பதற்கு இணக்க சபை உறுப்பினர்கள் முன்வரவேண்டும் என யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட காணி சம்பந்தமான இணக்க சபை உறுப்பினர்களுக்குக் காணி சம்பந்தமான சிறப்புக் கருத்தமர்வு இணக்கசபை ஆலோசகர் சட்டத்தரணி எம்.நாவுக்கரசு தலைமையில் யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்றது.

அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்ட போதே மாவட்டச்செயலர் இவ்வாறு தெரிவித்தார். (எ.50)

## 37 நாள்களாகக் காணாமற் போயிருந்தவரே நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டார்

### மடுப் பொலிஸார் தெரிவிப்பு



மன்னார், டிசெ.3

மன்னார் மடுவில் நேற்று முன்தினம் சடலமாக மீட்கப்பட்டவர், ஆண்டான் குளம் பகுதியில் காணாமற்போய் 37 நாள்கள் ஆன குடும்பத்தலைவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மன்னார் மடுவில் ஆண் ஒருவர் சடலமாக நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டிருந்தார். மன்னார் மடு முதன்மை வீதியில் 5ஆம் கட்டைப் பகுதியில் உள்ள இராணுவ முகாமை அண்மித்த பகுதியில் இருந்து மாலை 6 மணியளவில் சடலம் மீட்கப்பட்டது. "சடலம் உருக்குலைந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. எவருடையது என்பது இனம் காணப்படவில்லை, விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன" என நேற்றுமுன்தினம் இரவு பொலிஸார் தெரிவித்திருந்தனர். இந்த நிலையிலேயே சடலம் நேற்று இனம் காணப்பட்டது.

சடலமாக மீட்கப்பட்டவர் மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட ஆண்டாங்குளம் கிராமத்தைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை சன் நீக்கிலாஸ் (வயது - 56) என அடையாளம் காணப்பட்டார். ஆண்டாங்குளம் சந்தியில் அழககம் (சலூன்) நடத்தி வரும் சன் நீக்கிலாஸ் கடந்த ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி மாலை 4 மணியளவில் காணாமற்போயுள்ளார்.

இது தொடர்பில் அவரது மனைவி பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்திருந்தார். இந்த நிலையிலேயே அவர் சடலாமாக அடையாளம் காணப்பட்டார். மடு பொலிஸார் , கிராம அலுவலர் மற்றும் சிறப்புத் தடயவியில் நிபுணத்துவப் பொலிஸார் ஆகியோர் சடலம் மீட்கப்பட்ட இடத்துக்குச் சென்றனர். சடலத்தைப் பார்வையிட்ட அவர்கள் அது தொடர்பான விசாரணைகளிலும் ஈடுபட்டனர். (21,56)

## தமது உயிரைப் பாராது பணியை மதிப்பவர்கள் தீ அணைப்புப் படையினர்

### வவு. நகரசபைச் செயலர் பாராட்டு



வவுனியா, டிசெ.3

உயிரைச் துச்சமென மதித்துப் பணியாற்றும் தீ அணைப்புப் பிரிவனரின் சேவை மிகவும் பாராட்டத்தக்கது, இதை அறியாத ஒரு சிலருடைய கருத்து கவலை அளிக்கின்றது. இவ்வாறு வவுனியா நகரசபைச் செயலாளர் ஆர். தயாபரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தீ விபத்தைக் கட்டுப்படுத்தத் தீயணைப்புப்படையினர் வரவழைக்கப்பட்டிருந்தனர். அவர்கள் கொண்டுவந்த தண்ணீர் பவுசரில் முழுமையாகத் தண்ணீர் இருக்கவில்லை. அப்படி இருந்திருந்தால் தீ பரவுவதை வேகமாகத் தவித்திருக்கலாம் என விபத்துச் சம்பவத்தின் போது இருந்த சிலர் தெரிவித்தனர். இந்த விடயம் தொடர்பாகவும், "பவுசரில் தண்ணீர் இல்லாமலா தீயணைப்புப் படையினர் சம்பவ இடத்துக்கு வருகை தந்தனர்" எனவும் நகர சபைச் செயலரிடம் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது; தீ அணைப்புப் பவுசரில் தண்ணீர் போதியளவு நிரப்பியே வைக்கப்பட்டுள்ளது. இதை எவர் வேண்டுமானாலும் வந்து பார்வையிட்டு உறுதிப்படுத்திக்கொள்ள முடியும். அதே போல அடிக்கடி தண்ணீர் மாற்றி வைக்கப்பட்டும் வருகின்றது. எமது தீ அணைக்கும் பவுசரில் 4ஆயிரம் லீற்றர் தண்ணீரையே சேகரிக்க முடியும். ஒரு தீ விபத்துச் சம்பவம் இடம்பெற்றால் உடனடியாக அங்கு சென்று தண்ணீரைப் பீச்சி அடிக்கும் போது 10 நிமிடத்தில் 4ஆயிரம் லீற்றர் தண்ணீரும் முடிந்துவிடும். திரும்பி மீண்டும் சென்று தண்ணீர் நிரப்பிக்கொண்டு வரவேண்டிய நிலை ஏற்படும். எம்மிடம் ஒரே ஒரு தீ அணைக்கும் பவுசரே உள்ளது அதை வைத்துக்கொண்டே நாங்கள் பணியாற்றி வருகின்றோம். நேற்று (நேற்றுமுன்தினம்) இடம் பெற்ற தீ விபத்தை நான் நேரில் சென்று அவதானித்தபோது எமது பணியாளர்கள் கிட்டத்தட்ட 15க்கும் மேற்பட்டவர்கள் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர். அங்கு ரின்னர், வர்ணப் பொருள்கள் என்பன காணப்பட்டது. இதன் காரணமாகத் தீயைக்கட்டுப்படுத்தப் பெரும் சிரமம் ஏற்பட்டுள்ளது.

வியாபார நிலையத்துக்குள் எவரும் செல்ல முடியாத நிலையில், தீ அணைக்கும் பிரிவினர் தீயைக்கட்டுப்படுத்தப் பெரிய முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். தீயை நோக்கித் தமது உயிரையும் துச்சமென மதித்துச் சேவை மேற்கொண்டு வருவதை நான் அவதானித்துள்ளேன். அவர்கள் அவ்வாறு செயற்படும்போது பொதுமக்களின் கருத்துக்கள், குற்றச்சாட்டுக்கள் எமக்கு கவலையளிக்கின்றன - என்றார். (21)

## கனமழை, காற்றால் கிளாலியில் படகுகள் சேதம்

கிளிநொச்சி, டிசெ.3

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கனத்த மழை, கடும் காற்றுக் காரணமாகக் கிளாலிக் கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மூன்று படகுகள் சேதமடைந்துள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கடற்கரைக் கிராமமான கிளாலிக் கடற்கரையில் நேற்றுமுன்தினம் காலை நிறத்தி வைக்கப்பட்டிருந்த மூன்று படகுகள் கடும் மழை மற்றும் பலத்த காற்றுக் காரணமாக ஒன்றுடன் ஒன்று மோதி விபத்துக்குள்ளாகின.

இதனால் மூன்று படகுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன எனக் கடற்தொழிலாளர் சங்கத் தலைவர் இராஜ இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

அந்தப் படகுகளைச் சீரமைப்பதற்கான ஏற்பாடுகளைப் படகின் உரிமையாளர்கள் தற்போது மேற்கொண்டுள்ளனர்.

இது போன்ற சம்பவங்கள் முன்னரும் இடம்பெற்றுள்ளன எனச் சங்கத் தலைவர் மேலும் தெரிவித்தார். (21,6)

## வவு. வர்த்தக நிலையத் தீக்கான காரணம் கண்டறியப்படவில்லை



தீ விபத்து ஏற்பட்ட கட்டடப் பொருள் விற்பனை நிலையத்துக்குள் எவரையும் செல்ல அனுமதிக்கவில்லை, இதனால் விபத்து ஏற்பட்டதற்கான காரணம் கண்டறியப்படவில்லை, எனினும் விசாரணைகள் இடம்பெறுகின்றன என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியாவில் உள்ள கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையம் ஒன்றில் தீ பற்றி எரிந்ததால் அதிலிருந்த ஒரு கோடி ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியான பொருள்கள் தீயில் எரிந்து நாசமாகின. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் வவுனியா மன்னார் வீதி, வேப்பம்குளம் பகுதியில் இடம்பெற்றது. கட்டடப் பொருள்கள் விற்பனை நிலையத்தில் திடீரென தீ விபத்து இடம்பெற்றது.

தீ அணைக்கும் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற அவர்கள் தீயை அணைக்கக் கடும் முயற்சிகள் மேற்கொண்டனர்.

அதேவேளை பொதுமக்களின் உதவியுடன் குறித்த வியாபார நிலையத்திலிருந்த பொருள்கள் சில அங்கிருந்து அகற்றப்பட்டன. எரிவாயு வைக்கப்பட்ட பகுதிக்குத் தீ பரவாது கடும் முயற்சிகள் எடுக்கப்பட்டன. எரிவாயு டாங்கிகள் பாதுகாப்பான இடங்களுக்கு அகற்றப்பட்டன. இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

நேற்றுக் காலை தடயப் பரிசோதனைகள் மேற்கொள்வதற்கும் உட்செல்ல எவரையும் அனுமதியளிக்கப்படவில்லை எனினும் தீ விபத்துக்கான காரணம் கண்டறியப்படவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர். (21)

# மத்திய வங்கிப் பிணைமுறி மோசடியாளர்களை தூக்கிலிட வேண்டும்

## ரஞ்சன் ராமநாயக்கவின் எதிர்பார்ப்பு



கொழும்பு, டிசெ. 3
மத்திய வங்கிப் பிணைமுறிக் கொள்ளையர்களைத் தூக்கிலிட வேண்டுமெனப் பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்தார்.
கொழும்புப் பத்திரிகையொன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மத்திய வங்கிப் பிணைமுறி மோசடிகளில் ஈடுபட்ட நபர்கள் தராதரம் பாராது தண்டிக்கப்படவேண்டும்.
ஊழல் மோசடி செய்யப்பட்ட பல கோடி ரூபா பணம் மீளவும் அரசுக்குச் செலுத்தப்பட வேண்டும். பிணை முறி மோசடிகளில் ஈடுபட்டவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படுவதை மக்கள் ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.
கள்வர்களுக்குத் தண்டனை விதிப்பதாகத் தெரிவித்தே நல்லாட்சி அரசு ஆட்சி அமைத்தது.
நல்லாட்சி அரசிலும் இவ்வாறான மோசடிகள் இடம்பெற்றால் அது பாரதூரமான ஓர் நிலைமையாகும்.
பிணை முறி மோசடிக் கொள்ளையர்களுக்குத் தண்டனை விதிக்கப்பட வேண்டியது அரச தலைவர் மைத்திரி மற்றும் தலைமை அமைச்சர் ரணில் ஆகியோரின் பொறுப்பாகும் - என்றார். (5)

# சரிந்தது இலங்கை ரூபாவின் மதிப்பு!

கொழும்பு, டிசெ. 3
கடந்த 11 மாத காலப் பகுதியில் இலங்கை ரூபாவின் பெறுமதி பெரிய வீழ்ச்சியைச் சந்தித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்தது. அமெரிக்க டொலருடன் ஒப்பிடும்போது 2.5 வீதம் இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியைச் சந்தித்துள்ளதாக மத்திய வங்கி குறிப்பிட்டது.
யூரோவுடன் ஒப்பிடும் போது 13.3 வீதம் ரூபா வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளதாக மத்திய வங்கி அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. (5)






# சிறுமி மீது துர்நடத்தை: குற்றவாளிகளுக்குக் கடூழியச் சிறை

அம்பாறை, டிசெ. 3

14 வயதுச் சிறுமியைக் கடத்தி வீட்டில் வைத்து துர்நடத்தைக்கு உட்படுத்திய இருவருக்கு 18 மற்றும் 27 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை கல்முனை மேல்நீதிமன்ற நீதிபதியால் வழங்கப்பட்டது.

திருக்கோவில் பிரதேசத்தைச் சேர்ந்த சிறுமியை 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் மோட்டார் சைக்கிளில் கடத்திச் சென்று வீடொன்றில் அடைத்து வைத்து இருவர் துர்நடத்தைக்கு உட்படுத்தினர்.

விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சந்தேக நபர்களான இருவரையும் கைது செய்தனர். அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டது. அதன் பின்னர் சட்டமா அதிபரால் கடந்த பெப்ரவரி மாதம் கல்முனை மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டு, கடந்த ஜூலை மாதம் 17 ஆம் திகதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது.

குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரிகளில் முதலாம் எதிரிக்கு 18 வருட கடூழியச் சிறைத் தண்டனையும் 20 ஆயிரம் ரூபா தண்டப் பணமும், இரண்டாம் எதிரிக்கு 27 வருடக் கடூழியச் சிறைத்தண்டனையும் 40 ஆயிரம் ரூபா தண்டப் பணமும் 4 இலட்சம் ரூபா இழப்பீடும் வழங்குமாறும் நீதிபதி உத்தரவிட்டார். (5)

ஆர்வமும், துடிப்பும், தேடலும் இருந்தால்......

பயிற்சிச் செய்தியாளராக வாய்ப்பு!

வயதெல்லை இல்லை.
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
முழுநேர, பகுதிநேர பணி வாய்ப்பு.

உங்கள் சுயவிவரக் கோவையை (அலைபேசி இலக்கத்துடன்) தபாலிலோ, வைபர் மூலமோ, உதயன் முகநூல் பக்க தனித் தகவல் ஊடாகவோ, மின்னஞ்சல் ஊடாகவோ அனுப்பலாம்.

361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
077 316 5555
UthayanPrint
uthayanprint@gmail.com

விண்ணப்ப இறுதித் திகதி:
15.12.2017



## 30 ஆவது நெஞ்சை நெருடும் நினைவலைகள்



தோற்றம்
18 . 11 . 1936

மறைவு
04 . 12 . 1987

பெருங்குளம் சாவகச்சேரியை வதிவிடமாகக் கொண்ட

### அமரர் இராசதுரை பஞ்சாட்சரம்

(ஸ்தாபகர் – அருள் முருகன் நகைமாடம்
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்)
திதி: பூரணை (3.12.2017 ஞாயிற்றுக்கிழமை)



கண்கவரும் கம்பீரத் தோற்றமும்
கனிரென்ற கனிவான பேச்சுரையும்
அன்பே உருவான வட்ட முகம்தனிலே
இன்பமாய் உதிர்க்கும் உதட்டோர சிரிப்பும்
இன்றும் மறக்க முடியவில்லை அப்பா
ஆண்டுகள் முப்பது ஓடிமறைந்தாலும்
என்றும் உங்கள் நினைவலைகள்
எம்முடனே வாழ்ந்திருக்கும்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

என்றும் உங்கள் நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரி

சாரங்கா நகைமாடம்
157, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6972/ 021 222 8869

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் உயர்திரு.

### செல்லையா தில்லைநாதன் (J.P)

(முன்னாள் பிரபல வர்த்தகர் - நீர்கொழும்பு, அகில இலங்கை சமாதான நீதவான், நீர்கொழும்பு சைவத்திருமுறை அடியார் சங்கம மூத்த உறுப்பினர்)

யாழ்.புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 11 ஆம் வட்டாரம், நீர்கொழும்பு
ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட
அமரர் உயர்திரு.செல்லையா தில்லைநாதன்
அவர்களுக்கு எமது ஈர விழிகளுடன் கூடிய முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



திதி: 03.12.2017

தோற்றம் 09.09.1929
மறைவு 13.12.2016

எங்கள் அன்புத் தெய்வமே!
எங்களை அன்பு மழை பொழிந்து
பாசமாய் வளர்த்தெடுத்த ஐயாவே!
குருநாதன் யோகர்சுவாமிகள்
காட்டிய வழியில் நின்று
பார்போற்ற எங்களை வாழ்வித்த
ஐயாவே!
ஆலம் விழுதுகள் போல் ஆயிரம்
உறவுகள் இருந்தும் என்ன
ஆணிவேராக நீங்கள் இருந்ததனால் தான்
நாங்கள் வீழ்ந்து விடாது இருந்தோம்
ஐயா!
விழுதுகள் நாம் விம்முகின்றோம் –
இன்று.
நீங்கள் தில்லைக்கூத்தனின்
திருவடியில் ஐக்கியமாகி
ஆண்டொன்று ஆனாலும் ஆறவில்லை
விழிகளில் கண்ணீர் இன்னும்
காயவில்லை ஐயா!
உங்களை இழந்த துயரத்தைப்
பல ஆயிரம் ஆண்டு ஆனாலும்
எங்களால் ஈடுசெய்ய முடியாது
தவியாய் தவிக்கின்றோம் ஐயா!
காலங்கள் கடந்தாலும் மாறாது
என்றென்றும் உங்கள் நினைவலைகள்

உங்கள் ஆன்மா எல்லாம் வல்ல
சிவகாமி சமேத தில்லைநடராஜப்
பெருமானின் பாதாரவிந்தங்களில்
நித்திய சாந்தி பெற
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
"ஆன்மா என்றென்றும் அழியாது"
ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

11 ஆம் வட்டாரம், புங்குடுதீவு.
இல.11, சூரியா வீதி,
நீர்கொழும்பு.

உங்கள் அன்பு முகம் தேடும் உதிரங்கள்
மனைவி மற்றும் குடும்பத்தினர்.

## 11 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
05.10.1947

உதிர்வு
03.12.2006

### அமரர் மார்க்கண்டு அரியரட்ணம்

(உரிமையாளர் –சிற்றி வைன் ஸ்ரோர்ஸ், றோயல் வைன் ஸ்ரோர்ஸ், நிருத்திகா ஜ்வல்லர்ஸ்)



தந்தையின்றி தரணியிலே
தவித்துக் கொள்கின்றோம் –எம்
சிந்தை நொந்து கண்ணீரும்
வடித்துக் கொள்கின்றோம்...


அன்னையோடு பிள்ளைகள் மூன்றும்
துடித்துக் கொள்கின்றோம் – அப்பா
அருகில் இல்லை என்று நெஞ்சில்
அடித்துக் கொள்கின்றோம்

ஆண்டவரைப் போலிருந்து
ஆண்ட தெய்வமே – நீங்கள்
மறைந்ததினால் மண்ணுலகில்
என்ன செய்வோமோ இனி
ஏது செய்வோமோ?

399, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
22 . 04 . 1934

உதிர்வு
02 . 11 . 2017

காரைநகர் களபூமியை பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் பிறவுண்வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் பொன்னம்பலம் கதிரவேலு

(உரிமையாளர் – லலிதாரெக்ஸ்– யாழ்ப்பாணம், நியூ லலிதா ரெக்ஸ் – வவுனியா)

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து எல்லா வழிகளிலும் எம்மை நெறிப்படுத்தி 02.11.2017 இல் இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டவர்களுக்கும், தொலைபேசி வாயிலாகத் துயரைப் பகிர்ந்துகொண்டவர்களுக்கும் பத்திரிகைகள் வாயிலாகவும், பதாகைகள் மூலமாகவும், துண்டுப்பிரசுரமாகவும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டும், மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்திய வர்த்தகப் பெருமக்கள், நண்பர்கள், உறவினர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த வியாழக்கிழமை காரைநகர் ஆலங்கன்று வைரவர் கோயிலடி அந்தியேட்டி மடத்தில் நடைபெற்றன.

வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (03.12.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

194/3, பிறவுண்றோட்,
யாழ்ப்பாணம்.
021 222 9832

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

**தேவை**
பட்டா ரக வாகனம் விலைக்குத் தேவை.
076 857 8500

**காணி வீடு விற்பனைக்கு**
மல்லாகம் பழம்பிள்ளையார் பின் வீதியில் 6 பரப்புக்காணி, வீடு சகல வசதிகளுடன் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு - 076 357 6593, 077 694 0767

**வீடு விற்பனைக்கு**
தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயத்திற்கு பின்புறமாக ஆறு பரப்புக் காணியுடன் சகல வசதிகளுடனும்வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு - 077 9111685, 076 8510 459

**உதவியாளர் தேவை**
யாழ் நகரில் வயதான இருவர் அடங்கிய ஒரு குடும்பத்திற்கு பெண் உதவியாளர் தேவை.
T.P 021 221 7074

**விற்பனைக்கு**
திருநெல்வேலி சந்தியில் உள்ள சாப்பாட்டு கடைக்கு உரிய கதிரை மேசை கொத்து ரொட்டி தயாரிப்பதற்கு தேவையான பொருள்கள் கண்ணாடி அலுமாரியும் விற்பனைக்கு உண்டு.
077 622 8783

**பணிப்பெண் தேவை**
மல்லாகம் துர்க்கை அம்மன் கோயில் அருகில் இருக்கும் வீட்டுக்கு பணிப் பெண் தேவை. தங்குமிடம் மற்றும் உதவிகள் செய்து தரப்படும். சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
T.P:-077 502 7708

**வீடு காணி விற்பனைக்குண்டு**
ஆனைக்கோட்டை ஆஸ்பத்திரி வீதியில் (பாடசாலை, கோயில், ஆஸ்பத்திரி ஆகியன அருகில்) ஒரு பரப்பில் அமைந்துள்ள சுற்றுமதில் கட்டப்பட்ட வீடும் காணியும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 967 6783

**கடை வாடகைக்கு தேவை**
யாழ் நகர் பகுதி, பருத்தித்துறை, நெல்லியடி, சுன்னாகம் ஆகிய பகுதிகளில் 1000 சதுர அடிக்கு குறையாத கடை வாடகைக்கு தேவை.
தொ.பே.: 077 477 3481

**காணி விற்பனைக்கு**
கைதடியில் வடமாகாண சபைக்கு எதிராக A-9 (கண்டி) வீதியில் இருந்து இரண்டாவது காணித்துண்டு 12 அடி அகல பாதையுடன் 14 பரப்பு விற்பனைக்குண்டு.
077 470 7965, 076 333 1365

**English Classes**
Group Class and Personal Class
O/L, A/L மாணவர்கள் மற்றும் தொழில் புரிவோர், வெளிநாடு செல்வோர் அனைவருக்குமான நவீன முறையிலான ஆங்கில கற்கை நெறிகள்
077 448 1790

**மணமகள் தேவை**
யாழ் இந்து, 1986, கேட்டை 4ஆம் பாதம், கிரகபாவம் 20½ செவிப்புலனற்ற புகைப்பட கலையில் தேர்ச்சி (இந்தியா) பெற்ற மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை.
077 973 8802

**பணிப்பெண் தேவை**
நெல்லியடியிலுள்ள வீடு ஒன்றுக்கு வீட்டு வேலைகள் செய்யக்கூடிய பணிப்பெண் தேவை. சாப்பாட்டுடன் தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும்.
077 252 1507

**வீடு வாடகைக்குண்டு**
நல்லூர் 31 வைமன் வீதியில் 5 அறைகள், A/c.NoN A/c இணைந்த குளியலறை, டொய்லட், சமையல் அறை, சாப்பாட்டு அறை, ஹோல், கராச் போன்ற வசதி கொண்ட மாடி வீடு வாடகைக்குண்டு. மாதவாடகை 35 000 வைப்புப்பணம் 3இலட்சம் பார்வையிடும் நேரம் பிற்பகல் 4.00 - 6.00 மணிவரை
தொடர்பு: - 021 373 7036, 077 694 0340
021 221 6719

**வீடு தேவை**
மன்னார் நகரத்தில் வீடு வாடகைக்குத் தேவை.
077 347 2022

**விற்பனைக்கு**
HERO NUNK - 2016 பதிவு
15000 KM, White Colour.
071 489 3055

**மணமகன் தேவை**
யாழ்.கிறிஸ்தவம் (RC), 26 வயது, சிவந்த நிறம், அரச வங்கியில் லிகிதராகக் கடமையாற்றும் மணமகளுக்குப் பொருத்தமான மணமகன் தேவை
071 539 9523

**பணிப்பெண் தேவை**
வீட்டில் தங்கி இருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை. (13)
077 327 6502/076 396 9720

**காணி கட்டடம் விற்பனைக்கு**
மானிப்பாய் சந்தைக்கு அருகில் உள்ள காணியும் மேல்மாடி கட்டடமும் (முன்னர் இலங்கை வங்கி இயங்கிய கட்டடம்) விற்பனைக்குண்டு.
076 661 4101

**மணமகள் தேவை**
யாழ்.இந்துகௌரவ குடும்பம் கொழும்பில் வசிக்கும் சொந்த வியாபாரம் செய்யும் எமது மகனுக்கு மணமகளைத் தேடுகின்றோம். (ஆண்டு 1979), நட்சத்திரம் சதயம், உயரம் 5'5" செவ்வாய்க்குற்றம் அற்ற பாவம் குறைந்த ஜாதகம்
வீடு - 0112 436 669 கடை - 0112 431 835

**தேவை**
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எமது கட்டட ஒப்பந்த நிறுவனத்திற்கு அனுபவமிக்க தொழில் நுட்ப உத்தியோகத்தர்(T.O)தொழில்நுட்ப பயிலுனர் (Traine) தேவை.(ஆண்கள் மட்டும்)
E-mail:- careers@decon.lk (13)
077 592 5371, 076 316 5730

**காணி விற்பனைக்கு**
ஏ9 வீதியிலிருந்து நூறு யார் தூரத்தில் புங்கன்குளம் வீதியிலுள்ள 2¾ பரப்பு கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு.
தரகர் தேவையில்லை.
077 515 0345

**காணி விற்பனைக்கு**
A9 வீதியில் நாவற்குழி சந்திக்கும் பனம்பொருள் சபைக் கட்டடத்திற்கும் இடையில், கோகிலம் வீதி அருகில் உள்ள 4 பரப்புக்காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. (13)
077 050 5776

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்










விசாரணை ☏ 021- 2227712
facebook. MajesticCineplexSL
www.ceylontheatres.lk

# சிங்கள பௌத்த நாடு என்றழைக்கப்படுவதை எவரும் எதிர்க்க முடியாது

## கர்ஜிக்கிறார் வீரசேகர



கொழும்பு, டிசெ. 3
எமது நாடானது சிங்கள பௌத்த நாடு என்று அழைக்கப்படுவதை எவரும் எதிர்க்க முடியாது. இந்த நாட்டில் 74 சத வீதமான சிங்களவர்களாகவும் இவர்களில் 85 சதவீதமானவர்கள் பௌத்தர்களாகவும் உள்ளனர். இதுவே உண்மையான நிலைப்பாடாகும்.

இவ்வாறு மகிந்த ராஜபக்ச ஆட்சிக் காலத்தில் பிரதியமைச்சராக இருந்த றியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

லும் கண்டிய சாசனம் எழுதப்பட்டது. எமது நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் சிங்கலே என்ற பெயரைத் தொடர்ந்தும் நாம் பயன்படுத்தியிருந்தால் இந்த நாட்டிலுள்ள அனைவரும் சிங்களவர்களாகவே இருந்திருப்பார்கள்.

உலகிலுள்ள அனைத்து நாடுகளும் பல்லினங்களைக் கொண்ட நாடுகளாகவே உள்ளன. ஆனால் பொதுவாக நாடுகளில் உள்ள பெரும்பான்மை சமூகத்தினர் மற்றும் பெரும்பான்மை மதங்களை அடிப்படையாகக் கொண்டே அந்தந்த நாடுகள் அடையாளம் காணப்படுகின்றன.

எமது நாடானது சிங்கள பௌத்த நாடு என்று அழைக்கப்படுவதை எவரும் எதிர்க்க முடியாது. ஏனெனில் இந்த நாட்டில் 74 சதவீதமான சிங்களவர்களாவும் இவர்களில் 85 சதவீதமானவர்கள் பௌத்தர்களாகவும் உள்ளனர். இதுவே உண்மையான நிலைப்பாடாகும்.

சிங்களவர்கள் வடக்கில் குடியேறுவதை வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் விரும்பவில்லை. யாழ்ப்பாணத்திலுள்ள புத்தர் சிலைகளை அகற்றுமாறும் முதலமைச்சர் கோரிக்கை விடுத்தார். ஆனால் கொழும்பிலுள்ள சிங்களவர்கள் மத்தியில் தமிழர்கள் மிகவும் மகிழ்ச்சியாக வாழ்கின்றனர். ஏனெனில் இது சிங்கள பௌத்த நாடாகும்.

முஸ்லிம் நாடொன்றில் வாழும் முல்லாக்களை முதலமைச்சர் விக்னேஸ்வரன் இவ்வாறு துன்பப்படுத்தினால், அவரது தலை துண்டிக்கப்படும்.

இது சிங்கள பௌத்த நாடு என்பதை விக்னேஸ்வரன் அறிந்துள்ளதால்தான் அவர் தனது அதிருப்திகளை வெளியிட்டு வருகிறார்.

பௌத்தர்கள் ஏனைய மதங்களை மதிக்கின்றனர்.

இதன் காரணமாகவே இந்த நாட்டில் பல ஆயிரக்கணக்கான கோயில்கள், தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் போன்றன அமைக்கப்பட்டுள்ளன.

வெசாக் போயா தினத்தைப் பன்னாட்டு விடுமுறை தினமாக அறிவிக்குமாறு ஜெனிவாவில் வைத்து லக்ஸ்மன் கதிர்காமர் பரிந்துரைசெய்திருந்தார். இதுவே உண்மையான நல்லிணக்கமாகக் காணப்பட்டது.

ஆனால் இன்று இந்த நல்லிணக்கத்தை விக்னேஸ்வரன் போன்றவர்கள் அழிக்க முயற்சிக்கிறார்கள் - என்றார். (5)

**விற்பனைக்கு**
NPKD XXXX இலக்கமுடைய நிசான் சனி 15 (Ex saloon) கார் விற்பனைக்கு உண்டு. (121960 km ஓடியது)
தொடர்பு - 077 737 4925

**கார் உடன் விற்பனைக்கு**
நல்ல நிலையிலுள்ள
Daihatsu Car, Original Paint, Japan, 1st Owner (13)
077 030 3834

**வாடகைக்கு**
கல்வியங்காட்டில் வீடு வாடகைக்கு உண்டு. (13)
072 482 0761

**முகாமையாளர் தேவை**
யாழ் நகரில் இயங்கும் பிரபல பல்பொருள் அங்காடிக்கு (SUPER MARKET) அனுபவமுள்ள முாகமையாளர் தேவை. அனுபவதிற்கு ஏற்ப சம்பளம் வழங்கப்படும்.
தொ.பே.: 077 477 3481

**பாராட்டி வாழ்த்தி எங்கள் நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்**




இன்று (03.12.2017) ஞாயிற்றுக்கிழமை ருத்திர ஏகாதசினி சஹித ஷஷ்டிதம அப்த்த பூர்த்தி சாந்திவிழாக் காணும் எங்கள் அன்புக்கும் மதிப்புக்குமுரிய தமிழ்நாடு மைலாப்பூர் வேதவாத்தியார் (அருள்மிகு கபாலீஸ்வரர் கோயில்)
**Dr.A.G.ஸ்ரீநிவாச சாஸ்திரிகள்,**
**ஸ்ரீமதி ஸ்ரீரமா**
தம்பதிகள் இன்னும் பல்லாண்டுகாலம் சகல சௌபாக்கியங்களுடனும் நீண்ட ஆயுளுடனும் வாழ வாழ்த்தி நல்லாசிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.
**இவ்வண்ணமே நல்லாசி வேண்டி நிற்கும்**
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**
Best Wishes
**ச.மஹேஸ்வரக்குருக்கள் தம்பதிகள்**
**நயினை, சுதுமலை அம்மன் கோயில்கள்**
**பிரம்மஸ்ரீ ஐம்புகேஸ்வர மகேஸ்வர சிவாச்சாரியார்**
**சர்வதேச இந்துமத குருபீடாதிபதி**

## பரிசில் நாள் நிகழ்வு

மீசாலை கமலாம்பிகை வித்தியாலய பரிசில் நாள் நிகழ்வு எதிர்வரும் ஆறாம் திகதி புதன்கிழமை பி.ப. 1.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும். அதிபர் திருமதி வ. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தனும் சிறப்பு விருந்தினர்களாகத் தென்மராட்சி கல்வி வலய கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் நா.கந்ததாசன், கிராம அலுவலர் ப.நிரஞ்சன் ஆகியோரும் கலந்து கொள்வர் என்று அறிவிக்கப்பட்டது. (5.9)

**விற்பனைக்கு**

நல்ல நிலையில் உள்ள
JCB - 21 Model 2009 வாகனம்
விற்பனைக்கு உண்டு (13)
077 314 4756

**தங்கம்மா முதியோர் இல்லமும் இலவச கல்விச் சேவையும்**

இலக்கம் (1), புதுக்குளம் வீதி, கனகராயன்குளம், வவுனியா வடக்கு

மேற்படி புதிதாக ஆரம்பிக்கப்பட்ட முதியோர் இல்லத்துக்கு இலவசமாக முதியோர்களை இணைத்துக் கொள்ளலும் இலவச கல்விச் சேவையும்

**01) முதியோருக்கான தகுதி:-**

60 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்.
யாவராலும் கைவிடப்பட்டவராக இருக்க வேண்டும்.
உடல் ஊனமுற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
ஆண், பெண் இருபாலாரும் இணைந்து கொள்ளலாம்.

**02) கல்விச்சேவை**

தரம் 1-12 வரையான மாணவர்களுக்கான கல்வி வழங்கல். மிக தகுதி வாய்ந்த ஆசிரியர்களால் ஆங்கிலம், தமிழ், கணிதம், சமயம், விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் கற்பிக்கப்படும்.

**தொடர்புகளுக்கு:- 024 493 1455**

**ஆசிரியர்கள் தேவை**

தகுதி:- ஓய்வுபெற்ற தகுதி வாய்ந்த பட்டதாரிகள் விண்ணப்பிக்கலாம். (விண்ணப்ப முடிவு திகதி 07.12.2017). உரிய வேதனமும் இலவச உணவு, தங்குமிடமும் வழங்கப்படும். தெரிவு செய்யப்படும் ஆசிரியர் நிர்வாக வேலைகளும் செய்ய வேண்டும்.

Dr.மு.குணசிங்கம்
தலைவர்.
077 886 5559, 077 449 9619,
077 026 1141

**FLORENCE NIGHHTINGAALE**
**School of nursing**
**புளோரன்ஸ் நைற்றிங்கேல்**
**தாதியர் பயிற்சிப் பாடசாலை**



- ஒரு வடருகால பயிற்சிப் பாடநெறி
- மூன்று மாதகால தனியார் வைத்தியசாலையில் பயிற்சிகள்
- பின்நிரந்தர வேலைவாய்ப்புகள்

தகைமைகள்:
- O/L 6 பாடம் சித்தி
- வயது 18 - 35 வரை

அலுவலகநேரம் - 8.30 - 4.00 மணிவரை

- அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்
- வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் பெற்றுத்தரப்படும் (13)

முகவரி: கே.கே.எஸ். றோட், மருதனார்மடம் (ஆஞ்சனேயர் கோயில் முன்பாக)
K.K.S.Road, Maruthanarmadam. 077 718 6438 / 021 492 8916

**யமஹா வழங்கும்**
**மாபெரும் வாகன சந்தை 2017**

பழையதை கொடுத்து புதியதை எடுத்துச் செல்லுங்கள் உங்களிடம் உள்ள அனைத்து விதமான (Yamaha, Honda, Hero, TVS, Bajaj) பழைய மோட்டார் சைக்கிளைக் கொடுத்து புதிய "யமஹா" மோட்டார் சைக்கிள் ஒன்றுப்பு உரிமையாளராகுங்கள்.



இடம்:- நல்லூர் பின் வீதி,
(றியோ ஐஸ்கிறீம் அருகில்)
**டிசம்பர் 08ம், 9ம் திகதிகளில்**

அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

மாபெரும் விலைக்கழிவு
ரூபா 50000/= வரை
நிபந்தனைகளுக்கு உட்பட்டது

உடனடி லீசிங் வசதி

தொடர்புகளுக்கு:
077 6623824 / 021 2224040

அங்கீகரிக்கப்பட்ட விற்பனை முகவர்:
**டிஜிட்டல் எலக்ரோனிக்ஸ்**
62/16, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**Daily Food City**

வருட இறுதி அதிரடி விலைக்கழிவு


upto 58% off

**10% off for HNB,NDB Credit cards on the total Bill**


HNB
NDB

273,ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு.
0212224600 fb.com/dailyfoodcity
info@dailyfoodcity.com www.dfc.lk
*Conditions Applied

களங்கமற்ற உங்கள் புன்னகையை
நாம் பாதுகாப்போம்...



ROYAL MEDICAL CENTRE
**றோயல் மெடிக்கல் சென்ரர்**
**பற்சிகிச்சை நிலையம்**






அனைத்து விதமான சிகிச்சைகளையும் உயர்ந்த தரத்தில் நவீன வசதிகளுடன் பெற்றுக்கொள்ளலாம்.
விசேட பல் வைத்திய நிபுணர்களும் வருகை தருகின்றனர்.


தொலைபேசி எண்
021 561 7035

இல.458, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
யாழ் போதனா வைத்தியசாலை பழைய OPD அருகில்

**உங்கள் வாகனத்தின் நடமாட்டங்களை தொலைபேசி ஊடாக அவதானியுங்கள். 22 மேலதிக வசதிகள் உண்டு.** 077 888 7051

**உங்கள் வீட்டு மின் கட்டணம் 3000.00 இலும் அதிகமா? இலகுவாக 250.00 ஆக குறையுங்கள். சூரிய சக்தியின் ஆற்றலை அனுபவியுங்கள்.** 077 888 7051

# கண்ணீர் அஞ்சலி



பிறப்பு 19 . 03 . 1939

இறப்பு 26 . 11 . 2017

## வே.சுப்பிரமணியம் கோபாலபிள்ளை

(பிரபல வர்த்தகர், புங்குடுதீவு மேற்கு – குறிகாட்டுவான்
ஸ்ரீ மனோன்மணி அம்மன் (பேச்சி அம்மன்) அன்னதான சபைத் தலைவர்)

நெஞ்சம் பொறுக்குதில்லையே
நினைவுகளை நினைக்கையிலே
அள்ளி அள்ளிக் கொடுத்த உள்ளம்
அடங்கிக் கிடக்கையிலே

தானங்கள் பல செய்ய
தரணியிலே வந்துதித்தீர்
அன்னதானத்தின் தந்தையாய்
எம்மிடையே நீர் திகழ்ந்தீர்

நீதிக்குப் புறம்பான காரியங்கள்
நினைத்ததில்லை
நியாயத்தின் வழி தவறி நீர்
நடக்க முயன்றதில்லை
நேர்மைக்கு குந்தகமாய்
என்றும் நடந்ததில்லை

கடமைகளை மறவாமல்
கச்சிதமாய் நீர் முடித்தீர்
கண்ணியமாய் நாம் நடக்க
நீர் கற்றும் கொடுத்தீர்
கட்டுப்பாட்டுக்கு இலக்கணமாய்
கம்பீரமாய் நீர் நடந்தீர்


பேச்சி அம்மன் அன்னதானம்
பற்றித்தான் உம் பேச்சு
புங்கையூர் வாழ்வும் வளமும்
தான் உம் மூச்சு

ஐந்து தசாப்தங்கள் அன்னதானப்
பணிசெய்து நிலையான
அன்னதானம் நித்தம் வழங்க
வழிசெய்து எம் தலைவன்
உதித்த தினம் எம்மை விட்டு
நீர் பிரிந்து என்றும் மறவாத
எம் தலைவனாய் நீர் திகழ்வீர்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பிரான்சில் இடம்பெறும். அன்னாரது புங்குடுதீவு இல்லத்தில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் இன்று (03.12.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.00 மணி முதல் மாலை 6.00 மணிவரை இடம் பெறும்.

**புங்குடுதீவு மேற்கு - குறிகாட்டுவான்
ஸ்ரீ மனோன்மணி அம்பாள் அன்னதான சபை
நிர்வாக சபையினர் மற்றும் தொண்டர்கள்.**

# மரண அறிவித்தல்



தோற்றம் 07 . 04 . 1940

மறைவு 29 . 11 . 2017

## இமானுவேல் இராஜா ஜோசப்

*(இலங்கை வர்த்தகர்களின் முன்னாள் நிர்வாக முகாமையாளர், யாழ்ப்பாணம் லங்கா டிரேட்ஸ், பிரைவேட் லிமிடெட் கொழும்பு, அறங்காவலர் லயன்ஸ் கழகத்தின் தலைவர்)*


யாழ். அச்சுவேலியைப் 'பிறப்பிடமாகவும், கொழும்பு பம்பலபிட்டியை வதிவிடமாகவும் கொண்ட இமானுவேல் ஃராஜா ஜோசப் 29.11.2017 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஸ்ரியாம்பிள்ளை சின்னப்பு ஜோசப் ஜோசப்பின் அன்பு ஜோசப் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான எட்வர்ட் அரசரட்ணம் ஆனல்ட் எமிலி பவளம் ஆனலீட் தம்பதிகளின் அன்பு மருமகனும்,சறோஜினியின் பாசமிகு கணவரும், தனுஷா(ஆஸ்திரேலியா), அனுஷா(லண்டன்), நிரோஷா (லண்டன்), அபர்ணா(துபாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும், Willson Varghese(அவுஸ்திரேலியா), Przemek Wegorek(லண்டன்), Jeyarajah suppiah(லண்டன்), Adel Hewson(துபாய்) ஆகியோரின் அன்பு மாமனாரும், சீயோன்(Zion), சியென்னா(Sienna), அவா(Ava),அலெக்(Alec), கேலன்(Kaylan), கீரன்(Kieran), ரேயா (Rhea), சோபியா(Sofia), எலெனா(Elena) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக A.F.Raymond இல் வைக்கப்பட்டு இறுதிக்கிரியைகள் நாளை (04.12.2017) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் பொறளை பொது மண்ட பத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

# 2ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

## கந்தையா தில்லையம்பலம்

திதி: 03.12.2017

எங்கள் குடும்பத்தின்
அன்புத் தெய்வமே!
உங்கள் அன்பு நினைவுகள்
என்றும் மறையாது

தோற்றம் 24.07.1924

மறைவு 25.11.2015

என்றும் நினைவில்,
குடும்பத்தினர்.
அரச வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.

# மரண அறிவித்தல்கள்



தோற்றம் 27 . 06 . 2000

மறைவு 29 . 11 . 2017

செல்வன்

## அடம்ஸ் நீல்சன் லியனாடோ அடம்ஸ் அலோசியஸ் (லியான்)

உடுவில் கிழக்கு, உதயசூரியன் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் அடம்ஸ் நீல்சன் லியனாடோ அடம்ஸ் அலோசியஸ் (லியான்) (உயர்தர உயிரியல் பிரிவு மாணவன், ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை, மானிப்பாய்) கடந்த (29.11.2017) புதன்கிழமை அகாலமரணமடைந்தார்.


அன்னார் அடம்ஸ் நீல்சன் தனுஜா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும் கஷினோவின் பாசமிகு சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (03.12.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத் தில் நடைபெற்று மல்வம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உதயசூரியன் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.**

**தகவல்:
குடும்பத்தினர்.**



## நாகேசு தில்லைவாசகர்

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகேசு தில்லைவாசகர் 01.12.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வர்களான நாகேசு அன்ன பூரணம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற இராசரத்தினம் மற்றும் பரமேஸ்வரி தம்பதியரின் அன்புமருமகனும் காலஞ் சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் மனோன்மணி காலஞ்சென்ற தவராசா மற்றும் தங்கராசா ஆகியோரின் சகோதரரும் கணபதிப்பிள்ளை , பரமேஸ்வரி, சரோஜா, சிவகுமார், செல்வகுமார் ஆகியோரின் மைத்துனரும் ரமேஷ்கண்ணா, தவதர்சினி, பிரியதர்ஷனி, ராஜீவ்குமார், ஜெயதாரணி ஆகியோரின் அன்புத்தந்தையும் விஜிமிலா, பாஸ்கரன், சிவாநுஷன், தயாரூபி , ஸ்ரீதரன், காலஞ்சென்றவர்களான தயாபரன், கிருபாகரன் மற்றும் யோகீஸ்வரன், சந்திரா, பாஸ்கரன், ஜெகதீஸ்வரன், கேதீஸ்வரன் ஆகியோரின் மாமனாரும் அபிலாஸ் ,கிருஸ்ணவி, டனுஜன், கிருசாளினி, சப்தனா, சங்கீத், ஹரிவர்மன், யானுகேசிகன், ஜெரூஸா ஆகியோரின் பேரனும், கோகுலன், இராகுலன், ஷாமிலன், டக்ஷிகா ஆகியோரின் பெரிய தந்தையும், காலஞ்சென்ற தேவராஜாவின் சிறிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 12.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**புதிய செம்மணி வீதி,
நல்லூர் வடக்கு, கல்வியங்காடு.**

**தகவல்
குடும்பத்தினர்**

## கிழக்கில் ஹசன் அலி-ரிசாத் கட்சிகள் கூட்டு

கொழும்பு, டிசெ. 3

உள்ளூராட்சித் தேர்தலில் ரிசாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், கிழக்கு மாகாணத்தில், ஹசன் அலி தலைமையிலான ஐக்கிய சமாதான கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட முடிவு செய்துள்ளது.

அதேவேளை, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசில் இருந்து பிரிந்து, ஐக்கிய சமாதான கூட்டமைப்பை உருவாக்கியுள்ள ஹசன் அலி, கிழக்கு மாகாணத்தில் அனைத்து மாவட்டங்களிலும் தமது கட்சி போட்டியிடவுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இணைந்து போட்டியிடுவது குறித்து, சில கட்சிகளுடன் பேச்சுக்களை நடத்தி வருவதாகவும், வரும் நாள்களில் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்படும் என்றும், அவர் கூறியுள்ளார். (5)

## 20 கட்சிகளுடன் பொதுமக்கள் முன்னணி உருவாக்கம்

உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுவதற்காக மகிந்த ராஜபக்சவின் தலைமையில் கூட்டுப் பொது மக்கள் முன்னணி என்றபெயரில், புதிய கூட்டணி ஒன்றை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

மகிந்த ராஜபக்சவின் தலைமையில் செயற்படும் கூட்டு எதிரணியை கூட்டுப் பொது மக்கள் முன்னணி என்ற புதிய அரசியல் கூட்டணியாக உருவாக்க, சிறிலங்கா பொது மக்கள் முன்னணி முடிவு செய்தது.


20 அரசியற் கட்சிகள் அடங்கிய இந்தக் கூட்டணி, மலர் மொட்டுச் சின்னத்தில், வடக்கு - கிழக்கு உள்ளிட்ட அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் போட்டியிடவுள்ளது.

(5)


சொவ்ட்லொஜிக் சகிதம் நத்தார்
50% வரை விலைக்கழிவு
நம்பமுடியாத வெகுமதிகள் மற்றும் வழங்கல்
வட்டியற்ற இலகு கொடுப்பனவுத் திட்டங்கள்
36 மாதங்கள் வரை வட்டியற்ற திட்டம் + 35% வரை விலைக்கழிவு
Sampath
HSBC
HNB
softlogic PRIZM LED TV | SFT32E200
32"
SMART READY
ரூ.46,999/-
விசேட பண விலை ரூ.37,999/-
மாதந்தம் ரூ.2,500/- மேலாக
18 மாதங்களில் வட்டி இன்றி செலுத்துக
இலவசம்
SR-W18GS
Dialog TELEVISION + Rice Cooker + Gift Pack
softlogic PRIZM LED TV | SFT40E200D
40"
SMART READY
இலவசம்
Dialog TELEVISION + Rice Cooker
SR-W18GS
ரூ.89,999/- | விசேட பண விலை ரூ.69,999/-
மாதந்தம் ரூ.5,400/- மேலாக
15 மாதங்களில் வட்டி இன்றி செலுத்துக
softlogic PRIZM LED TV | SLE50E200D
50"
SMART READY
இலவசம்
Dialog TELEVISION
ரூ.109,999/- | விசேட பண விலை ரூ.99,999/-
மாதந்தம் ரூ.6,600/- மேலாக
15 மாதங்களில் வட்டி இன்றி செலுத்துக
32"
இலவசம்
Dialog TELEVISION + DVD Player DVD-S500 + ரூ.5,000/- பெறுமதிமிக்க வவுச்சர் + Gift Pack
Panasonic LED TV | TH-32E403
• my Home Screen | • Adaptive Backlight Dimming | • In-House TV Streaming
ரூ.56,999/- | விசேட பண விலை ரூ.38,999/-
மாதந்தம் ரூ.3,056/- மேலாக
18 மாதங்களில் வட்டி இன்றி செலுத்துக
43"
இலவசம்
Dialog TELEVISION + ஏயார் கூலர்
AIRATK20
Panasonic LED TV | TH-43E403
• my Home Screen | • Adaptive Backlight Dimming | • In-House TV Streaming
ரூ.109,999/- | விசேட பண விலை ரூ.94,999/-
மாதந்தம் ரூ.6,600/- மேலாக
15 மாதங்களில் வட்டி இன்றி செலுத்துக
உத்தரவாதம் பெற்ற விநியோகஸ்தர்
0% வட்டி திட்டம்
விசேட சேவை
011 5 541 900
011 5 705 705
சொவ்ட்லொஜிக் உத்தரவாதம் சகிதம்
WESTERN UNION WU moving money for better
சொவ்ட்லொஜிக் மெக்ஸ் ஸ்டோர் - யாழ்ப்பாணம் - 021 5678989
சொவ்ட்லொஜிக் ஸ்டோர் - யாழ்ப்பாணம் - 021 5671108
softlogic

# ரணில் சாட்சிக் கூண்டில் ஏறியது தவறு

## இப்படிச் சொல்கிறார் மகிந்த ராஜபக்ச



கொழும்பு டிசெ. 3
நான் அரச தலைவராக இருந்திருந்தால், பிணைமுறி மோசடி விசாரணை ஆணைக்குழுவின் சாட்சிக் கூண்டில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவை ஏறுவதற்கு அனுமதித்திருக்கமாட்டேன். இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

பேருவளையில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை கூட்டு எதிரணி நாடாளுமன்ற உறுப்பினர் பியல் நிசாந்தவின் நாடாளுமன்ற அரசியல் வாழ்க்கையில் 20ஆண்டுகளை நிறைவு செய்தமையை முன்னிட்டு ஏற்பாடு செய்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
மத்திய வங்கியின் பிணைமுறி மோசடி சம்பந்தமான விசாரணைக் குழுவின் விசாரணைகள் நிறைவுக்கு வந்துவிட்டன. தற்போது அந்த அறிக்கை வெளியாகவுள்ளது. கடந்த காலத்தில் இடம்பெற்ற பிணைமுறிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் ஆராயவுள்ளதாக இப்போது கூறுகின்றார்கள். நாங்கள் ஆணைக்குழுவின் அறிக்கையில் என்ன வெளியாகவுள்ளது என்று பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

நான் அரச தலைவராக இருந்திருந்தால் எனது தலைமை அமைச்சரை ஆணைக்குழுவுக்குச் சென்று சாட்சிக்கூண்டில் நின்று சாட்சியமளிப்பதற்கு இடமளித்திருக்க மாட்டேன். உலகிலேயே முதற்தடவையாகத் தலைமை அமைச்சர் ஒருவர் சாட்சிக் கூண்டில் ஏறிச் சாட்சியமளித்திருப்பது இந்த நாட்டில் தான் நடைபெற்றிருக்கிறது. இரண்டாவது குடிமகன் என்ற வகையில் இது பொருத்தமற்றதொரு செயற்பாடாகும். இது வெட்கப்படவேண்டிய விடயம்.

அவர் தலைமை அமைச்சர் பதவியிலிருந்து விலகிச் சென்று சாட்சியமளித்திருக்க வேண்டும். தற்போது வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வருகை தருவதற்கு அச்சமடைகின்றனர். தலைமை அமைச்சராக இருப்பவர் இப்படியிருந்தால் எமது முதலீடுகள் ஆபத்தை எதிர்கொள்ளும் என்றுதான் அவர்கள் அஞ்சுகின்றனர். அவ்வாறான நிலையில் நாட்டுக்கு அச்சமான நிலைமையே ஏற்படும். பயமில்லாத தலைமை அமைச்சர் என்று கூறினாலும் அவரைப் பார்த்து அனைவரும் பயப்படுகின்றனர் என்பது இவர்களுக்குத் தெரியாதுள்ளது.

சிறிலாங்கா சுதந்திரக்கட்சியுடன் இணைந்து கொள்வதில் எமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. நாளைக்கு வேண்டுமானாலும் இணைந்து கொள்ள முடியும். ஒருவர் செல்வதற்காக எம்மால் கூட்டு அரசிலிருந்து வெளியேறி விட முடியாது என்று சிலர் கூறுகின்றனர்.

வெவ்வேறானவர்கள் கூறுவதைக் கேட்டுப் பதவிகளைத் துறந்து கூட்டுஅரசிலிருந்து வெளியேற முடியாது விட்டால் எங்களாலும் ஒன்றுபட முடியாது - என்றார். (5,31)



## இலங்கைப் படையினருக்கு மதிப்பளித்தது ஐ.நா.சபை

கொழும்பு, டிசெ. 3
தென் சூடானில் ஐ.நாவின் அமைதிகாப்புப் படையில் அங்கத்துவம் வகிக்கும் 16 பாதுகாப்புப் படை அதிகாரிகள் மற்றும் 50 பாதுகாப்புப் படையினர், இரண்டாம் நிலை மருத்துவமனையில் 6 மாத கால சேவையை வெற்றிகரமாக நிறைவு செய்தமைக்காக மதிப்பளிக்கும் வகையில் அவர்களுக்கான உத்தியோகபூர்வப் பதக்கம் வழங்கி வைக்கும் நிகழ்வு கடந்த வாரம் தென் சூடானில் இடம்பெற்றது.

இராணுவத் தளபதியின் பணிப்புரைக்கமைய அவரது பிரதிநிதியாக இராணுவ மருத்துவ சேவையின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் கே.பி. சுமனபால, ஐ.நாவின் அழைப்பை ஏற்றுத் தலைமை அதிதியாக இந்த நிகழ்வில் பங்கேற்றார்.

ஐ.நா. சபையால் அமைதிப் படையிலுள்ள இலங்கை இராணுவத்தினர் இந்த நிகழ்வில் வைத்து மதிப்பளிக்கப்பட்டனர். (5)






# ஐ.தே.க. - மகிந்த அணி இடையே 'டீல்'

## மகிந்த அமரவீரவின் கண்டுபிடிப்பு

சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்துவதற்காக, மகிந்த அணியுடன் ஐக்கிய தேசியக் கட்சி 'டீல்' மேற்கொண்டது. அதனைத் தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றார்கள். இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் செயலரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சிறிலாங்கா சுதந்திரக்கட்சியை ஒன்றாக இணைத்து வலுவாகத் தேர்தலுக்கு முகம் கொடுக்கும் எதிர்பார்ப்புடனேயே நாம் மகிந்த அணியுடன் பேச்சு நடத்தியிருந்தோம்.

அந்த அணியினரின் கடுமையான நிபந்தனைகள் காரணமாக ஒன்றிணைவது குறித்த பேச்சுக்கள் முறிவடைந்துள்ளன. எமக்கும் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கும் இடையே எந்த விதமான 'டீலும்' இல்லை.

மகிந்த அணிக்கே ஐக்கிய தேசியக் கட்சியுடன் 'டீல்' உள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்பார்ப்பு, சிறிலங்கா சுதந்திரக் கட்சியை இரண்டாகப்பிளவுபடுத்துவதாகும். அந்த எதிர்பார்ப்பை நிறைவேற்ற உதவியதுயார்? மகிந்த அணியே அந்த எதிர்பார்ப்பை நடைமுறைச் சாத்தியமாக்கியுள்ளது - என்றார். (5,31)

## போலி நாணயத்துடன் இரண்டு பேர் கைது!

திருகோணமலை இறக்கக்கண்டிப் பகுதியில் ஆயிரம் ரூபா போலி நாணயத் தாள்களுடன் இரண்டு பேரை நேற்றுமுன்தினம் மாலை கைது செய்துள்ளதாகத் திருகோணமலைப் பிராந்தியப் போதைப்பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி எஸ்.ஐ.ஜனுஷன் தெரிவித்தார்.

நிலாவெளிக் கடற்படையினர் வழங்கிய இரகசியத் தகவலையடுத்து இறக்கக்கண்டியில் சந்தேக நபரைச் சோதனையிட்டபோது ஆயிரம் ரூபா போலி நாணயத் தாள்கள் கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இறக்கக்கண்டி வாழையூற்றுப் பகுதியைச் சேர்ந்த எம்.பீ.றிஷாத் (வயது-29) மற்றும் ஏ.எச்.றிஸ்வான் (வயது-29) எனவும் தெரியவருகின்றது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இரண்டு பேரையும் குச்சவெளிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக ஜனுஷன் தெரிவித்தார். (5,45)






உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## கூட்டமைப்பின் கடமை

உள்ளூராட்சித்தேர்தலைநடத்துவதில்இருந்தபிரச்சினைகள் எல்லாம் தீர்க்கப்பட்டுவிட்டன. எல்லாச்சபைகளுக்கும் ஒரேநாளில்தேர்தல்நடத்தப்படும்என்பதுஉறுதியாகிவிட்டது. மாசி மாதம் இலங்கையின் சுதந்திர தினத்தை அடுத்துவரும் முதல் சனிக்கிழமையில் தேர்தல் நடத்தப்படலாம் என்கிற எதிர்பார்ப்பு உள்ளது. எனினும் எதிர்வரும் 27ஆம் திகதிதான் அது தொடர்பான உறுதியான அறிவிப்பு வெளியாகும். எப்படியிருந்தாலும் மாசி மாதத்தில் தேர்தல் நடப்பது உறுதி என்பதால் கட்சிகளும் அதற்கான பணிகளில் மும்முரம் காட்டுகின்றன.

அண்மையில் உருவாகிய மகிந்த ஆதரவுக் கட்சி உட்பட வடக்கில் பல கட்சிகளும் இந்த உள்ளூராட்சித் தேர்தலில் அக்கறை காட்டுகின்றன. எனினும், கூட்டமைப்புக்குப் பலத்த போட்டியைவழங்கக்கூடிய எந்தவொருஅணியும்களத்தில் இல்லை. தமிழ் மக்கள்பேரவையைக்களத்தி ல் இறக்கிவிடுவதற்கு அதிலிருந்த சிலர் எடுத்த முயற்சிகளும் பிசுபிசுத்துப்போன நிலையாலும் தமிழ்க் காங்கிரஸ் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கும் ஈபிஆர்எல்எவ் சுரேஸ்பிரேமச்சந்திரனுக்கும் இடையிலான கூட்டு இன்னமும் சரிவர ஒழுங்கமைக்கப்படாத நிலையாலும் கூட்டமைப்பின் ஏகபோகத்தனத்திற்கு அச்சுறுத்தல் ஏதும் தற்போது களத்தில் இல்லை.

உள்ளூராட்சித் தேர்தல்கள் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபைகள் தேர்தலைப் போன்றதல்ல. இங்கு வெற்றி தோல்விகள் வெறும் அரசியல் கொள்கைகளின் பாற்பட்டுத் தீர்மானிக்கப்படுபவையல்ல. அதையும் தாண்டி உள்ளூரில் நிறுத்தப்படும் வேட்பாளரின் செல்வாக்கும் தீர்மானகரமான பங்களிப்பைவழங்கும். அதிலும் இம்முறை தொகுதி ரீதியான போட்டியில் வேட்பாளரின் பங்களிப்பு இன்னும் கணிசமானதாக இருக்கும்.

அதற்காகக் கட்சிகளின் கொள்கை நிலைப்பாடுகளைப் புறக்கணித்துவிட்டு மக்கள் வாக்களித்துவிடுவார்கள் என்று எண்ணிவிட முடியாது. எனவே இந்தமுறை தேர்தல் பரப்புரையை புதிய அரசமைப்பு தொடர்பான விடயங்கள் ஆக்கிரமித்து நிற்கும்என்பதில்சந்தேகமில்லை. அதிலும் குறிப்பாக, ஒற்றையாட்சி, பௌத்த மதத்துக்கு முக்கியத்துவம், வடக்கு கிழக்கு மாகாணங்களின் இணைப்பு என்பவை அதிகம் கவனம் பெறப்போகும் விடயங்களாக இருக்கும்.

புதிய அரசமைப்பு உருவாக்கத்தில் இந்தவிடயங்களில்தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விட்டுக்கொடுத்துவிட்டது என்கிற பலத்த குற்றச்சாட்டு அதன் மீது உண்டு. தமிழ் மக்களின் அடிப்படைகளையேவிட்டுக்கொடுத்துவிட்டு அரைகுறைத்தீர்வைக் கூட்டமைப்பின் தலைவர்கள் ஏற்கப்போகிறார்கள் என்கின்ற விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன. எனவே தேர்தல் பரப்புரையில் கூட்டமைப்புக்கு எதிரான தரப்புகளின் முக்கிய ஆயுதமாக இந்தவிடயமே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

கூட்டமைப்புக்குவாக்களித்துவிட்டால்தமிழர்கள்ஒற்றையாட்சியை அங்கீகரித்துவிட்டார்கள் என்றும், பௌத்த மதத்துக்கு முன்னுரிமை வழங்குவதற்கு இணங்கிவிட்டார்கள் என்றும், வடக்கு கிழக்கு இணைப்புத் தேவையில்லை அல்லது அதனைப் பின்னர் பார்த்துக் கொள்ளலாம் என்று அங்கீகரித்துவிட்டார்கள் எனவும், கூட்டமைப்பு பின்னர் இவற்றையெல்லாம் திரிபுபடுத்திவிடும்என்றும்அதனால்தமிழ்மக்கள்கூட்டமைப்புக்கு வாக்களிக்கக்கூடாது என்றும், அவர்கள் கோருவார்கள் என்பது திண்ணம்.

அரசியல் களத்தில் கூட்டமைப்புக்கு நிகரான மாற்று ஒன்று இல்லாத நிலையில், உருவாக முடியாதிருக்கும் யதார்த்தத்தில் கூட்டமைப்புக்கு வாக்களிக்கக்கூடாது என்று கோருவதும் அந்தக் கோரிக்கையில் நியாயம் இருப்பதாக மக்களுக்குத் தோன்றக்கூடிய சூழல் இருப்பதும் மக்களை வாக்களிப்பில் இருந்து அந்நியப்படுத்திவிடும்.

அவ்வாறு வாக்களிப்புக்குச் செல்வதை மக்கள் குறைத்துக் கொள்ளும்போது, ஏனைய தரப்புகள் பெறும் குறைந்தளவு வாக்குகள்கூட விகிதாசாரப்பிரதிநிதித்துவத்தின்ஊடாகஅவற்றுக்கு அதிக ஆசனங்களைப் பெற்றுத்தரக்கூடியதாக அமைந்துவிடும்.

இந்தச் சிக்கலில் இருந்து விடுபடவேண்டுமானால் தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தமிழ் மக்களின் மனங்களில் இருக்கும் சந்தேகங்களைதெளிவுபடுத்த வேண்டியது அவசியம். தேர்தல் அறிக்கை மூலமாகவே அதனைக் கூட்டமைப்பால் செய்யக்கூடியதாக இருக்கும். தமிழ் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளில் இருந்து விலகாத வகையிலும், ஏற்கனவே தாம் மக்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட ஆணையிலிருந்து விலகாத வகையிலும், தமது தேர்தல் அறிக்கையை கூட்டமைப்பு முன்வைக்க வேண்டும். சிக்கலானசட்டமொழிக் கையாளுகையை விடுத்து அனைத்து மக்களும் புரிந்துகொள்ளக்கூடிய தெளிவான தேர்தல் அறிக்கை ஒன்றைக் கூட்டமைப்பு இந்தத் தேர்தலில் விடுக்கவேண்டும். அதன் மூலமே மக்களை வாக்களிப்பு நிலையங்களை நோக்கி அதனால் கவர முடியும்.

அத்தோடு தன் மீதான சந்தேகங்களைக் களைவதும், மக்களின் ஆணையிலிருந்துதான்விலகிச்செல்லவில்லைஎன்பதைஎண்பிப்பதும் கூட்டமைப்பின் கடமையும்கூட.



# புலம்பெயர் தேசத்தில் எழுச்சிபெற்று தமிழர் தாயகத்தை ஆற்றுப்படுத்திய மாவீரர்களின் நினைவலைகள்

நந்தினி

கார்த்திகை 27 ஈழத் தமிழர் வரலாற்றில் கண்ணீரால் பொறிக்கப்பட்ட நாள். ஈழ விடுதலைப் போராட்டத்தில் தம்மை அர்ப்பணித்த மாவீரர்களை நினைவு கூர்வதும் அவர்களுக்கு அஞ்சலி செய்வதும், மட்டுமன்றி, தமிழ் மக்களின் தேசியக் கனவின் நாயகனாக வேலுப்பிள்ளை பிரபாகரனின்பிறந்ததினமான கார்த்திகை 26ஆம் நாளை மனதில்இருத்திமதிப்பளிக்கும் காலத்தால் அழி க்க முடியாத வரலாற்றுப் பதிவுகள் அவை. அந்தவகையில்இந்தஅஞ்சலி நிகழ்வுகள்இம்முறைஈழத்தில் தமிழ் மக்களின் வாழ்விடங்களான வடக்குகிழக்கில்மிகவும் உணர் வெழுச்சியுடன் கடைக்கொள்ளப்பட்டன. வடக்கு கிழக்கில் கார்த்திகை மாதத்தில் மாவீரர் வாரத்துடன்மரம்நடுகை வாரமும் இயற்கையின் பால்கொண்ட அக்கறையுடன்வெயில்உஷ்ணம் தணித்து நிழல்தரும் நிலையில்நாட்டப்படுதல் உயிர்களின்உயிர்ப்பின் உன்னதமானதோர்அம் சமாகக்கொள்ளமுடியும். ஈழத்தில் 2009 ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த வருடம்வரை மிகுந்த கெடுபிடிகளுக்கு மத்தியில், அதிகார வர்க்கங்களின் கண்களுக்கு தெரியாத வகையில் ஒழித்துமறைத்துதங்கள் ஆத்ம விடுதலை உணர்வை வெளிப்படுத்திக்கொண்டதமிழ் மக்கள், இவ்வருடம் தாயகம் எங்கும் மிக வெளிப்படையாக தமிழ்த் தேசிய உணர்வை வெளிக்காட்டியது மட்டுமன்றி, தத்தமது மனங்களையும் ஆற்றுப்படுத்திக்க கொண்டனர்.

**தமிழர் தாயகத்தில் மாவீரர் துயிலும் இல்லங்கள் மாவீரர் நாளுக்காகத் தயார்ப்படுத்தப்பட்டன**

இராணுவத்தினால் அடையாளமின்றி அழிக்கப்பட்ட துயிலும் இல்ல சுற்றாடல்களில் மாவீரர் நாளுக்கு ஒரு வார காலம்முன்பே துப்பரவுப்பணிகள் இடம்பெற்றதுடன் அவை சிவப்பு மஞ்சள் நிறக் கொடிகளினால்அலங்கரிக்கப்பட்டு, எழுச்சிப்படுத்தப்பட்டன. புலனாய்வுப்பிரிவினரின்கண்காணிப்புக்களுக்குமத்தியிலும் யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர், வவுனியாகுடியிருப்பு, யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், முழங்காவில், தீவகம், சாட்டி, முள்ளிவாய்க்கால், தோறாவில், வன்னிவிளாங்குளம், கனகபுரம்வவுனியாவளாகம், மாங்குளம், முல்லைத்தீவு ஆகிய இடங்களிலும் மட்டக்களப்புஅம்பாறைஆகிய இடங்களிலும், மஞ்சள்சிவப்புவர்ணக் கொடிகளால் துயிலும் இல்லங்கள் அலங்கரிக்கப்பட்டு மாவீரர்களின்புகைப்படங்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. முன்னாள்போராளிகள்மற்றும் மாவீரர்களின் குடும் பங்கள் நிகழ்வைஒழுங்கமைத்தனர், அரசியல்தலைமைகளையும், அரசியல்வாதிகளையும் மக்கள் புறக்கணித்த னர். தங்கள் பிள்ளைகள் எங்கு விதைக்கப் பட்டனரோ, அங்கு சென்று அவர்களதுபெற்றோர்கள் அஞ்சலி செய்து ஆறுதல் கொண்டனர். அந்த வகையில், தமிழர் தாயகத்தில் உணர்ச்சிபூர்வமாகவும், மாவீரர்களின் பெற்றோர்களால் பொதுச் சுடர் ஏற்றப்பட்டு, மலர்மாலைகள் சூட்டப்பட்டும் மலர் தூவி அஞ்சலி செய்யப்பட்டதுடன், தாயகப் பாடலும் இசைக்கப் பட்டது. சந்தன பேழைகளின் பாடல் வரிகள் மக்களை உணர்வெளிச்சிப்படுத்தியதுடன் அவர்களின் உள்ளக் கிடைக்கைகளை வெளிப்படுத்தி கொட்டித் தீர்த்து, மனஆறுதல்பட வாய்ப்பை வழங்கியது. ஈழ அரங்கில் சடங்கரங்கின் பணியை இந்தத் தினம் பூரணமாக உள்வாங்கிக் கொண்டது என்றால் அது மிகையல்ல.

**புலம்பெயர் ஈழத் தமிழர்கள் 2009ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக மாவீரர் வாரங்களில் மாவீரர்களை நினைவு கூர்ந்து வருகின்றனர்**



புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள்2009ஆம்ஆண்டுக்குப் பின்னரும் பன்னாட்டு ரீதியில் மாவீரர் தின நிகழ்வுகளைத் தொடர்ச்சியாகக் கடைப்பிடித்து வருகின்றனர். ஈழத்தில்உணர்ச்சிபூர்வமாகவும், எழுச்சிபூர்வமாகவும்கடைக்கொள்ளப்பட்டுவரும் வீரர்தினநிகழ்வுகள், புலம்பெயர் நாடுகளிலும் பேரெழுச்சியுடன் இடம் பெற்று வருகின்றன. அந்தவகையில்லண்டன், ஆஸ்திரேலியா, சுவிஸ், ஸ்கொட்லாந்து, பிரான்ஸ், நோர்வே, இத்தாலி, ஜேர்மன் மற்றும் பின்லாந்து ஆகிய இடங்களிலும் இந்தியா



வில் சென்னை, புதுச்சேரி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் ஆகிய இடங்களிலும் மாவீரர் நாள் எழுச்சிபூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டதுடன் விளையாட்டுப் போட்டி, கலை, கலாசார நிகழ்வுகளும், பரிசளிப்புநிகழ்வுகளும். மிகப்பிரமாண்டமானமுறையில்முன்னெடுக்கப்பட்டன. தமிழ் மக்களின் வாழ்வில் மறக்கவும் மாற்றவும் முடியாத வரலாற்றின் வாழ்வியல் நாள் கார்த்திகை 27.

லண்டனில் 'எக்ஸல்' மண்டபத்தில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வில் தமிழீழ தேசிய சின்னங்களைத் தாங்கிய தபால் தலை வெளியிடப்பட்டுள்ளது. எமதுதேசியஅடையாளங்களை தடைசெய்துஅவற்றைநாட்டுமக்கள் மனங்களில்இருந்துநீக்கும்இலங்கை அரசின் சதியை முறியடிக்கும் நோக்கில், இந்தத் தபால்தலை வெளியிடப்பட்டதாக லண்டன் இளையோர் அமைப்பினர் தெரிவித்துள்ளனர். இத்தாலியில்கோல்டன்மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் அஞ்சலி நிகழ்வுகளைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளுடன், கலை இலக்கிய போட்டிகளுக்கான பரிசளிப்பும் இடம் பெற்றன. ஸ்கொட்லாந்தில் இடம்பெற்ற நிகழ்வில் அஞ்சலி நிகழ்வுகளுடன் விசேட உரைகளும் ஜேர்மனி டோன்மூன் நகரில் இடம்பெற்ற நிகழ்வில் அஞ்சலி நிகழ்வுகளுடன் எழுச்சிப் பாடல்களும் நடனங்களும், இடம் பெற்றதுடன்ஜேர்மன்நாட்டவர்களும் கூட அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு மலரஞ்சலி செலுத்தினார்கள். நெதர்லாந்தில்இடம்பெற்றநிகழ்வில் ஈகைச் சுடர் ஏற்றி அஞ்சலி செய்யப்பட்டதுடன் தமிழமுதம் இசைக்குழுவினரின் எழுச்சி கானங்கள், நடனங்கள், கவிதைகள், மற்றும் சிறப்புரைகள் என்பனவும் இடம் பெற்றன. அத்துடன்தேசியநாள்விளையாட்டுப் போட்டியும்போட்டியில்வெற்றிபெற்றவர்களுக்கு பரிசில் வழங்குதலும் இடம்பெற்றன.

சுவிட்சர்லாந்தில், சுவிஸ் கிளைப் பொறுப்பாளர் ரகுபதி தலைமையில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வில் எழுச்சிப் பாடல்கள், கவியரங்கம், காலைகலாசாரநிகழ்வுகளுடன்தமிழ் நாட்டைச் சேர்ந்த மே 17 இயக்கத் தலைவர் திருமுருகன் காந்தியின் விசேட உரையும், பிரான்ஸ் ஸ்ராஸ்பூர்க் நகரில் மண்டபம் நிறைந்த மக்கள் எழுச்சியுடன் மாதிரிக் கல்லறைகளுக்கு மலர் தூவி அஞ்சலி செய்யும் நிகழ்வு இடம்பெற்றது. மண்டபம்நிறையநடுகற்கள் வைக்கப்பட்டு சிவப்பு, மஞ்சள் நிறப் பூக்களின் அலங்காரங்களினால் எழுச்சி நிறைந்திருந்தது. மாவீரர்களின் பெற்றோர்கள் மதிப்புறுத்தப்பட்டதுடன்நடனம், நாடகம், எழுச்சிப் பாடல்கள், கவிதை, என்பவைவும்கலைத் திறன் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கானகேடயங்கள் வழங்கலும் இடம்பெற்றன.

நோர்வே ஒஸ்லோவில் இடம் பெற்ற நிகழ்வில் நாடகம் உட்பட எழுச்சிகரமான பல கலை நிகழ்வுகளும், நியூசிலாந்தில் மவுண்ட் ரொஸ்கில் போர் நினைவு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில்புலிகொடியும்அந்தநாட்டின் தேசியக்கொடியும்ஏற்றப்பட்டு, பொதுச் சுடர் ஏற்றப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. மேலும் பல்வேறு எழுச்சி நிகழ்வுகளுடன் 2008 ஆம் ஆண்டு மாவீரர் நாள் தினத்தன்று தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனால் நிகழ்த்தப்பட்ட உரையில் ஒரு பகுதி திரையில் காண்பிக்கப்பட்டதுடன் மாவீரர்களின் போராட்டவலிகள், தியாகங்கள்குறித்து விசேட உரைகளும், சிறப்புரைகளும் இறுதியாக தமிழீழ எழுச்சிப் பாடல்களும், கவிதைநிகழ்வுகளும்இடம்பெற்றன. ஆஸ்திரேலியா சிட்னியில் நியூவின்றன் மைதானத்தில் இடம்பெற்ற நிகழ்வில்3ஆயிரத்துக்கும்மேற்பட்ட மக்கள்பங்குகொண்டனர். சிவப்புமஞ்சள் கொடி அலங்காரங்களுடன் இங்கும் மாதிரி மாவீரர் துயிலும் இல்லம் அமைக்கப்பட்டு, அஞ்சலிகள், வணக்கப்பாடல், வணக்க நிகழ்வுகள், சிறப்புரை என்பனவும் இடம்பெற்றதுடன் உயிர்ப்பூ வெளியீட்டகத்தின்'காந்தள் கரிகாலன்' என்ற விடுதலைப் போராட்ட வரலாற்றில் தமிழீழ விடுதலைப்புலிகளின்முக்கியபதிவுகளைக் கொண்டதமிழர்வரலாற்றுஆவணத் தொகுப்பு நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது.

தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் ஒழுங்கமைப்புடன் பின்லாந்தின் தலைநகர்ஹெல்சிங்கில்இடம்பெற்ற நிகழ்வில்மாவீரர்நாள்அறிக்கைஒளிபரப்பப் பட்டது. நோர்வே அன்னை பூபதிகலைக் கூட மாணவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. டென்மார்க்கில்நடைபெற்ற எழுச்சி நிகழ்விலும் 2008ஆம் ஆண்டுமாவீரர்தினத்தன்றுதலைவர் பிரபாகரனால் நிகழ்த்தப்பட்ட உரை வாசிக்கப்பட்டது. மெல்போன்ஸ்பிரிங்வலே மண்டபத்தில்நடைபெற்றநிகழ்விலும், பல்வேறு நிகழ்வுகள் இடம் பெற்றன.



**லண்டன், ஆஸ்திரேலியா, சுவிஸ் , ஸ்கொட்லாந்து, பிரான்ஸ், நோர்வே, இத்தாலி, ஜெர்மன் மற்றும் பின்லாந்து ஆகிய இடங்களிலும் இந்தியாவில் சென்னை, புதுச்சேரி, கிருஷ்ணகிரி, இராமநாதபுரம் ஆகிய இடங்களிலும் எழுச்சி பூர்வமாகக் கடைப்பிடிக்கப்பட்டதுடன் விளையாட்டுப் போட்டி, கலை,கலாசார நிகழ்வு களும், பரிசளிப்பு நிகழ்வுகளும் . மிகப்பிரமாண்டமான முறையில் முன்னெடுக்கப்பட்டன. தமிழ் மக்களின் வாழ்வில் மறக்கவும் மாற்றவும் முடியாத வரலாற்றின் வாழ்வியல் நாள் கார்த்திகை 27.**


### காந்திதேசத்துத் தொப்பிள் கொடி உறவுகளும் மாவீரர் களை உணர்வுபூர்வமாக நினைவு கூரத் தவறவில்லை

இந்தியாவில் தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில் அஞ்சலிநிகழ்வுகள் இடம் பெற்றதுடன், தேசியத் தலைவரின் பிறந்த தின நிகழ்வுகளும் தமிழ்த் தேசியவிரும்பிகளினால்குழுவாகவும் தனியாகவும் கடைப்பிடிக்கப்பட்டன, சென்னை மெரினா கடற்கரையிலும், புதுச் சேரி அரிய குப்பம் பகுதியில் கப்டன்மில்லர்அரங்கில்கொளத்தூர் மணி தலைமையில் மாவீரர்களின் புகைப்படங்களுக்கு ஈகைச் சுடர் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலியும், விசேட உரை நிகழ்வும் இடம்பெற்றன. தஞ்சாவூர் முள்ளி வாய்க்கால் நினைவுமுற்றத்தில் உலகத் தமிழர் பேரவையின் தலைவர் பழ. நெடுமாறன் தலைமையில் அஞ்சலிநிகழ்வுகளுடன், தவில் நாதஸ்வர இசைக் கச்சேரியும் இடம்பெற்றது.



ராமேஸ்வரத்தில் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் ஏற்பாட்டிலும், கிருஷ்ணகிரியிலும் அஞ்சலி நிகழ்வுகள் இடம் பெற்றன.

மொத்தத்தில் உலகில் எங்கெல்லாம் தமிழ் மக்கள் வாழ்கின்றனரோ அவர்களெல்லாம் தமிழீழ விடுதலைப் புலிகள் மேற்கொண்ட விடுதலைப் போட்டம் குறித்தும் தாயக விடுதலைக்காக களமாடி உயிர்நீத்த மாவீரர்களது தியாகம்குறித்தும்மதிப்பும்மரியாதையும்செலுத்த ஒருபோதும்பின்னின்றதில்லை என்பதை வரலாற்றுப் பதிவுகள் உறுதிப்படுத்தி வருகின்றன.



## ஆசிரியருக்கான கடிதம்

### ஆசிரியர்கள் என்றும் மதிப்புக்கு உரியவர்களே!

"நல்லாசிரியர் விருதுக்கு உள்வாங்காதது ஏன் எனக் கேள்வி யெழுப்பும் தனியார் பாடசாலைகள்" என்கின்ற தலைமைப்பிலான செய்தி உதயன் பத்திரிகையில் வெளியாகியிருந்தது. ஆசிரியர்கள் என்பவர்கள் நல்லவர்களே. அந்த வகையில் விருது வழங்கப்பட்டாலும் சரி, வழங்கப்படா விட்டாலும் சரி அவர்கள் மதிப்புக்கும் மரியாதைக்கும் உரியவர்களே. ஆசிரியர்கள் என்பவர்கள், வெறுமனே பாடங்களைக் கற்பிப்பதோடல்லாது மாணவர்கள் மத்தியில் நற்பண்புகளையும் கற்றுக் கொடுப்பவர்கள் ஆவர்.

அவர்கள் நேர்வழியில் தமது பதவிகளைப் பெற்று, நேர்வழியில் தமது பதவி உயர்வுகளையும் பெற்று, நேர்வழியில் சம்பள அதிகரிப்பையும் பெறுபவர்கள் ஆவர். அல்லாமலும் அனைத்துத் துறைகளுக்குமான (மருத்துவம் பொறியியல், கணக்காளர் துறை, காவற்றுறை, ஊடகத்துறை... முதலியவை) ஆளுமைகளைப் பதிய வைப்பவர்களும் அவர்களே. அந்த வகையில் ஆசிரியர்கள் அனைவரும் நல்லவர்களே. அதில் மாற்றுக்கருத்துக்கிடையாது. இந்த நிலையில் நல்லாசிரியர் விருது பெற்றவர்கள் மட்டுமே நல்லாசிரியர் என்கின்ற முத்திரை எங்கும் எவராலும் குத்தப்படவில்லை. அல்லாமலும் அரச பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகளுக்கு ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறிமுறையில் நல்லவர்களையும் வல்லவர்களையும் மட்டுமே தேர்ந்தெடுத்து ஆசிரியர்களாக்குவது வழமை. அப்போதுதான் தனியார் பாடசாலை தனது பெயரையும் மதிப்பையும் தக்க வைத்துக் கொள்ள முடியும் என்பது வெள்ளிடை மலை. அந்த வகையில் தனியார் பாடசாலை ஒன்றில் ஆசிரியராக இணைத்துக் கொள்ளப்படுதலே, அவர் நல்லவர் வல்லவர் என வழங்கப்படும் விருதாகும். அதற்கு மேலாக தாமும் நல்லாசிரியர் விருதுக்கு சிபார்சு செய்யப்பட வேண்டும் எனக் கோருவது, விருது பெறாத ஆசிரியர்களைக் கொச்சைப்படுத்துவது போலாகிவிடும். அழகு ராணிப் போட்டிகளில் பங்கு கொண்டு அதில் தெரிவாகி முடி சூடிக் கொள்பவர்கள் மட்டும் தான் அழகிகளா? போட்டிகளில் பங்கு கொள்ளாதவர்கள் மற்றும், போட்டிகளில் பங்கு கொண்டும் முடிசூடிக் கொள்ளாதவர்களும் அழகிகள் அல்ல என அடையாளப்படுத்த இயலுமா?

செ.செல்வா.

உதயன் நித்திய சுகம் 345
உடலே கோயில்



# 'சூரிய ஒளி'

## இயற்கையாய் உடல் ஆரோக்கியம் தரும் பேறு

பொது வைத்திய நிபுணர்
எஸ்.கேதீஸ்வரன்

நாம் சிறுவர்களை வெயிலில் இருந்தும், மழையில் இருந்தும் பாதுகாத்துக்கொள்கிறோம். வெயிலில் நிற்காதே, மழையில் நனையாதே என்று அறிவுரைகூறி அச்சறுக்கைப்படுத்துகிறோம். வெயிலைத் தவிர்க்க குடை, தொப்பி, நீளமான ஆடைகள், சூரிய ஒளியின் தாக்கத்தைக் கட்டுப்படுத்தும்பூச்சுக்களைப்பாவிக்கிறோம். உண்மையில் நாம் கைக் கொள்கின்ற இந்தச் செயல்நிலைகள் எவ்வளவு தூரம் சரியானது என்பது கேள்விக்குரியதே. சூரிய ஒளியிலுள்ள 'புறஊதா கதிர்கள் பி' (Ultraviolist B rays) எமது தோலில் 'விற்றமின் டி' உற்பத்தியாவதற்கு அவசியமாகும். எமக்குத் தேவையான 'விற்றமின் டி' இல் 90 தொடக்கம் 95 வீதமானவை சூரிய ஒளி மூலமாகத் தோலில் உற்பத்தியாகிறது. போதிய சூரிய ஒளி நேரடியாகத் தோலில் படாவிட்டால் 'விற்றமின் டி' குறைபாடு ஏற்பட்டு பல நோய்கள் ஏற்படலாம்.

அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, உலகில் பலருக்கு 'விற்றமின் டி' பற்றாக்குறையிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆண்டு முழுவதும் சூரியஒளி குறைவின்றிக் கிடைக்கும் இலங்கை போன்ற நாடுகளிலும் 'விற்றமின் டி' குறைபாடு பலருக்கு உள்ளமை அதிர்ச்சி தரும் விடயமாகும்.

வெள்ளையர்களை விடவும் கறுப்பான தோலுடைய ஆசிய நாட்டவர்களில் தோலில் அதிகம் காணப்படும் மெலனின் எனும் நிறப்பொருளால் சூரிய ஒளி தோலில் ஊடுருவும் தன்மை குறைவடைகிறது. இதனால் வெள்ளையர்களை விடவும் ஆசிய நாட்டவர்களான நாம் அதிக நேரம் வெயிலை உடலில் படவிட வேண்டும். இடம்பெயர்ந்து மேலைத்தேய நாடுகளில் வாழும் ஆசிய நாட்டவர்களில், குறிப்பாகப் பெண்களில் 'விற்றமின் டி' குறைபாடு அதிகமாகக் காணப்படுகிறது. எம்மவர்கள் குளிர் காரணமாக உடலைப் போர்த்தி மூடிய உடைகளை அணிந்து கொள்வதும், வீட்டை விட்டு வெளியில் வருவது குறைவாக இருப்பதுமே இதற்குரிய காரணங்களாக கொள்ளப்படுகிறது.

### சூரிய ஒளி தரும் நன்மைகள்

★ 'விற்றமின் டி' ஆனது கல்சியம் அகத்துறிஞ்சப்படுவதற்கு அவசியமாகும். எனவே எலும்பு மற்றும் பல் ஆரோக்கியத்துக்கு சூரிய ஒளி அவசியமாகிறது. குறிப்பாக மாதவிலக்கு நின்றபின் பெண்களில் ஏற்படும் 'Ostoproosn' எனும் நோய்க்கு கல்சியம் குறைபாடு காரணமாக அமைகிறது.

★ சூரிய ஒளியினால் எமது உடலில் 'Sorotonin' எனும் ஓமோன் அதிகமாகச் சுரக்கின்றது. இந்த ஓமோன் சோம்பல் இல்லாமல் சுறுசுறுப்பாக எமை இயங்க வைக்க உதவுகிறது. சூரியஒளி குறைந்த குளிர்காலங்களில் மேற்குலக நாடுகளில் நரம்புத்தளர்ச்சி அதிகம் ஏற்படுகிறது.

★ சூரிய ஒளியானது உடலின் கொழுப்பு அளவு மற்றும் குருதியமுக்கம் என்பவற்றைக் குறைக்கிறது. வெயில் குறைந்த குளிர் காலத்திலேயே மாரடைப்பு பொதுவாக ஏற்படுகிறது. எனவே சூரிய வெளிச்சம் மாரடைப்பை குறைக்கிறது என்பதை ஊகிக்க முடிகிறது.

★ சூரிய ஒளி உடலில்படுவதால் உடல் பருமன்க்குறைவடைவதுடன், நீரிழிவு ஏற்படும் சந்தர்ப்பங்களும் குறைவடைவதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

★ சூரிய ஒளியினால் உடல்நோ, மூட்டுவாதம் என்பன குறைவடைகின்றன.

★ அதிகமான சூரியஒளி குறிப்பாக வெள்ளையர்களின் தோலில் புற்றுநோயை ஏற்படுத்தலாம். ஆனால், அளவான சூரிய ஒளி உடலில் படுவதால் புற்றுநோய்கள் ஏற்படுவது குறைவடைவதாக அண்மையில் வெளியான ஆய்வுகள் தெரிவிக்கின்றன. மார்புப் புற்றுநோய், குடல்புற்றுநோய், கருப்பைப் புற்றுநோய், இரைப்பைப் புற்றுநோய் என்பன அவற்றில் சிலவாகும்.

★ மிதமான சூரிய ஒளியினால் மாத விலக்குப் பிரச்சினைகள் குறைவடைகின்றன. அத்துடன் மாத விலக்கு நிற்பதும் தள்ளிப்போகிறது. அதுமட்டுமல்லாமல் பெண்கள் பிள்ளைப்பேறு பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகரிக்கிறது.

★ சூரிய ஒளி உடலில் படுவதால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கிறது.

### சூரிய ஒளியைத் தவிர்த்து 'விற்றமின் டி' கிடைக்கும் சந்தர்ப்பம்

'விற்றமின் டி' சில உணவு வகைகளிலேயே காணப்படுகிறது. எண்ணெய்த்தன்மையுள்ள tuna, saman போன்ற மீன்களில் 'விற்றமின் டி' காணப்படுகிறது. பால், முட்டை என்பவற்றிலும் 'விற்றமின் டி' காணப்படுகிறது. ஆனால் உணவு மூலம் பெறப்படும் 'விற்றமின் டி' உடலுக்குப் போதுமானதாக இருப்பதில்லை. 'விற்றமின் டி' உள்ள மாத்திரைகள் தற்போது பாவனையில் உள்ளன. ஆனால், இவ்வகையாக உள்ளெடுக்கப்படும் 'விற்றமின் டி' இல் மேற்குறிப்பிட்ட நன்மைகள் அதிகம் கிடைப்பதில்லை என ஆய்வுகளின் மூலம் அறியப்பட்டுள்ளது. எனவே இலவசமாக எங்கும் கிடைக்கும் சூரிய ஒளியை நாம் பயன்படுத்தி பயன் பல காண்போம்.


அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின்படி, உலகில் பலருக்கு 'விற்றமின் டி' பற்றாக் குறையிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆண்டு முழுவதும் சூரியஒளி குறைவின்றிக் கிடைக்கும் இலங்கை போன்ற நாடுகளிலும் 'விற்றமின் டி' குறைபாடு பலருக்கு உள்ளமை அதிர்ச்சி தரும் விடயமாகும்.

ஆசிய நாட்டவரான ஒருவர் குறைந்தளவான ஆடைகளுடன் அரை மணிநேரம் சூரிய ஒளியில் நின்றால் அவருக்கு 8 ஆயிரம் தொடக்கம் 10 ஆயிரம் வரையிலான பன்னாட்டு அலகு 'விற்றமின் டி' உடலில் உற்பத்தியாகிறது. இந்த அளவிடை போதுமானதாக காணப்படுகிறது.

### ஒருநாளில் சூரிய ஒளி

ஆசிய நாட்டவர்களான நாம் ஒவ்வொரு நாளும் அண்ணளவாக அரை மணிநேரம் வெயிலில் நின்றால் போதுமானதாகும். குறிப்பாக, காலை 6 மணி தொடக்கம் 10 மணி வரையும், மாலை 4 மணி தொடக்கம் 6 மணிவரையும் உள்ள நேரத்திலே நாம் சூரிய ஒளியைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த நேரத்தில் உடற்பயிற்சி செய்வதால் அல்லது நடப்பதால் இரட்டிப்பு நன்மை கிடைக்கும்.

ஆசிய நாட்டவரான ஒருவர் குறைந்தளவான ஆடைகளுடன் அரை மணி நேரம் சூரிய ஒளியில் நின்றால் அவருக்கு 8 ஆயிரம் தொடக்கம் 10 ஆயிரம் வரையிலான பன்னாட்டு அலகு 'விற்றமின் டி' உடலில் உற்பத்தியாகிறது. இந்த அளவிடை போதுமானதாக காணப்படுகிறது. எனவே, விலையுயர்ந்த மருந்துகளை நாடிச் செல்வதை விடுத்து, இயற்கையான சூரிய ஒளி, கடற்கரைக் காற்று, இயற்கை அழகு என்பவற்றை அதிகம் பயன்படுத்துவோம். இதனூடே உடலும் உள்ளமும் ஆரோக்கியம் பெறும்.



சூரியகாந்தி
உதயன்
ஞாயிறு அம்சம் 03.12.2017



# பெறுமதியை இழக்கப்போகின்றன உருச்சிதைந்த பணத்தாள்கள் !




## பணத்தாள்களை கவனமாகக் கையாளுங்கள்!



கட்டுரை

ஸூடோ ஸ்வாமி

எதிர்வரும் 31ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில், சேதப்படுத்தப் பட்ட, மாற்றம் செய்யப்பட்ட அல்லது உருச்சிதைக்கப்பட்ட பணத்தாள்களுக்கு எந்தவொரு வங்கியாலும் மாற்றீடு வழங்கப்பட மாட்டாது என இலங்கை மத்திய வங்கி அறிவித் திருக்கிறது. இதுவரை காலமும் வங்கிகள் மூல மாக அத்தகைய பணத்தாள்களை மீளப்பெற்று வந்த மத்திய வங்கி, அந்த நடவடிக்கையை 31ஆம் திகதிக்குப் பின்னர் முடிவுறுத்தத் தீர்மா னித்திருக்கிறது.

இது குறித்த அறிவித்தல் ஆறு மாதங்களுக்கு முன்னதாக, இந்த ஆண்டு ஜூன் மாதத்தில் விடுக் கப்பட்டிருந்தது. பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங் களில் இந்த அறிவித்தல் காட்சிப்படுத் தப்பட்டிருந்தது. அந்த அறிவுறுத்த லையே இலங்கை மத்திய வங்கி தற் போது மீள வலியுறுத்தியிருக்கிறது.



இலங்கையில் பாவனையில் உள்ள பணத் தாள்களையும் நாணயக் குற்றிகளையும் வெளியிடும் அதிகாரபூர்வ நிறுவனமான இலங்கை மத்திய வங்கி, சுற்றோட்டத்தில் உள்ள நாணயங்கள் போதுமான அளவில் புழங்கத்தில் உள்ளனவா? என்றும் அவற்றின் தரம் மற்றும் நிலைமை தொடர்பிலும் கண்வைத்திருப்பது வழமை. தற்போது பணத்தாளின் மதிப்பைக் கெடுக்கும் வகையில் சிதைந்து போன நாணயத்தாள்கள் தொடர்பில் தனது கவனத்தைச் செலுத்தியிருக்கிறது.

**பாவனைக்கு மாறாக**
**பணத்தாளில் சில்மிசங்கள்**

தரமான மற்றும் பாவனைக்கு அனுமதிக்கக்கூடிய நாணயத்தாள்கள் மீதான கரிசனை, போலி நாணயத்தாள்களைச் சுலபமாக வேறு பிரிப்பதற்கு உதவுகின்ற ஒன்றாகும். அது மாத்திரமல்லாமல் நாட்டினுடைய பிரதிமை தொடர்பில் நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தவும் இத்தகைய தரமான பணத்தாள் பாவனை வித்திடுகிறது.

பணத்தாளினுடைய தரம் தொடர்ச்சியான பாவனை காரணமாகக் காலப்போக்கில் நொந்து நூலாகுவது வழமையானதே. இத்தகைய, பாவனைக்குரிய தராதரத்தினைக் கொண்டிராத பணத்தாள்கள் காலத்துக்குக் காலம் பணச் சுற்றோட்டத்திலிருந்து அகற்றப்பட்டுப் புதிய பணத்தாள்கள் அச்சிடப்பட வேண்டும். பாவனையில் உள்ள பணத்தாள்கள் பணப்பரிமாற்றங்களின்போது கைமாறல்களுக்கு உட்பட்டுத் தாமாக தரங்குன்றுவதற்கு அப்பால், வேண்டுமென்றே செய்யப்படும் சேதமாக்கல், சில்மிஷங்களாலும் பாவனைக்கு உதவாத நிலையை எட்டுகின்றன. பணத் தாள்களின் மீது எழுதுதல், முத்திரை பதித்தல், வெட்டுதல் அல்லது சேதமாக்குதல் போன்ற நடவடிக்கைகளை வேண்டுமென்று செய்யப்பட்ட சேதமாக்கல் செயற்பாடுகளாகக் கருதப்படுகின்றன.

**வீம்பு வேலைகள் இனி வேண்டாம்**

இலங்கையில் புழக்கத்தில் உள்ள பணத்தாள்கள் மற்றும் நாணயக்குற்றிகளைக் கட்டுப்படுத்தும் சட்டமான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணயவிதிச் சட்டம், தனது 58ஆவது பிரிவில் பணத்தாள்களை உருத்திரிபடையச் செய்யும் நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிடுகிறது. பணத்தாள்களை வெட்டுதல், துளையிடுதல், உருச்சிதையச் செய்தல், அச்சுப் பதித்தல், முத்திரையிடுதல், நாணயத்தாள்களின் மீது வரைதல் மற்றும் ஏதேனும் முத்திரையையோ அல்லது அடையாளத்தினையோ இணைத்தல் என்பன சிறை அல்லது தண்டப்பணம் செலுத்த நேரிடக்கூடிய குற்றச் செயல்கள் என வரையறுக்கின்றது.

தினசரிப் பணப் பரிமாற்றத்தின்போது எமது கைக்கு வரும் அல்லது பணப்பையை வந்தடையும் பணத்தாள்களில் சிலர் தமது கலைத்துவத்தை, வித்துவத்தனத்தை, வெளிப்படுத்தும் விதமான 'கலைவேலை'களை நிகழ்த்தியிருப்பதை அவதானிக்க முடியும். பொதுவாக இந்த வகை பணத்தாள்கள் தொடர்பில் விழிப்பாக இருந்தாலும், சிலவேளைகளில் அவை தாள்களோடு தாள்களாகத் திணிக்கப்பட்டு விடுகின்றன. இதனால் அந்தத் தாள்கள் புழக்கத்தில் இருக்கவே செய்கின்றன.

வேண்டுமென்றே பணத்தாள்களை உருத்திரிபடையச் செய்யும் நடவடிக்கைகளிலிருந்து பொதுமக்களை விலகியிருக்குமாறு கோரும் மத்திய வங்கி, அத்தகைய பணத்தாள்கள்களை வைத்திருப்பவர்கள் அந்த நாணயத்தாள்களின் முழுப்பெறுமதியையும் இழப்பர் என்று எச்சரித்திருக்கிறது.

**தூய பணத் தாள் கொள்கை**

பேருந்து நிலையங்கள், தொடருந்து நிலையங்கள் என மக்கள் கூடும் இடங்களில் உள்ள தொலைக் காட்சிகள் மூலம் விழிப்புணர்வுக் காணொலிகளைக் காண்பித்து தூய்மையான பணத்தாள்களைக் கையாளுமாறு வலியுறுத்தி வந்தமை அனைவரும் அறிந்ததே. தூய்மையாகவும் பாதுகாப்பாகவும் பணத்தாள்களையும் நாணயக்குற்றிகளையும் பயன்படுத்துவது இலங்கை நாட்டுக் குடிமக்களின் கடமை எனக்குறிப்பிடும் மத்தியவங்கி, தூயபணத்தாள் கொள்கையை மக்கள் பின்பற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கிறது. இதை அடைவதற்குப் பொதுமக்களின் ஒத்துழைப்பையும் கோருகிறது. பணத்தாள்களின் மீது திட்டமிட்டுச் செய்யப்படும் சேதமாக்கல்களைத் தவிர்த்துக் கொள்ளுமாறும், பணத்தாள்களை கசக்கவோ, கிழிக்கவோ முனையக்கூடாது என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. கறையான், எலி, அந்துப்பூச்சி என்பவற்றால் பாதிக்கப்படக்கூடிய வகையில் பணத்தாள்களை வைக்கக்கூடாது என்பதுடன் ஈரலிப்புக் காரணமாகவோ தீயினாலோ சேதமுறக்கூடிய வகையில் பணத்தாள்கள் சேமிக்கப்படக்கூடாது என்றும் மத்தியவங்கி குறிப்பிடுகிறது. அசுத்தமடைந்த கைகளால் பணத்தாள்களைக் கையாளக் கூடாது என வலியுறுத்தியிருப்பதுடன் நாணயக்குற்றிகளைச் சேகரிக்கும் உண்டியலினுள் பணத்தாள்களை மடித்துத் திணிக்கக் கூடாது என்றும் குறிப்பிட்டி ருக்கிறது.

கறையான், எலி, அந்துப்பூச்சி என்பவற்றால் பாதிக்கப்படக்கூடிய வகையில் பணத்தாள்களை வைக்கக்கூடாது என்பதுடன் ஈரலிப்புக் காரணமாகவோ தீயினாலோ சேதமுறக்கூடிய வகையில் பணத்தாள்கள் சேமிக்கப்படக்கூடாது என்றும் மத்தியவங்கி குறிப்பிடு கிறது. அசுத்தமடைந்த கைகளால் பணத்தாள்களைக் கையாளக் கூடாது என வலியுறுத்தியிருப்பதுடன் நாணயக்குற்றிகளைச் சேகரிக்கும் உண்டியலினுள் பணத்தாள்களை மடித்துத் திணிக்கக் கூடாது என்றும் குறிப்பிட்டி ருக்கிறது.

**மத்திய வங்கியின் தெளிவுபடுத்தல்**

வேண்டுமென்றே சிதைக்கப் பட்ட பணத்தாள்களை ஏற்றுக்கொள்வதை நிறுத்துவது தொடர்பான தெளிவுபடுத்தல் ஒன்றை விடுத்துள்ள மத்திய வங்கி, வேண்டுமென்றே உருச்சிதைக்கப்பட்ட அல்லது மாற்றம் செய்யப்பட்ட பணத்தாள்களுக்குப் பதிலீடு செய்வதற்கான புதிய பணத்தாள்களை அச்சிடுவதற்காகப் பெருமளவிலான மக்களின் பணம் செலவிடப்படுவதாகத் தெரிவித்திருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்காகவும் தூய பணத்தாள் கொள்கையை நடைமுறைப்படுத்துவதனை ஊக்குவிக்கவுமே, இந்தத் திட்டம் நடைமுறைக்கிடப்படுவதாகக் குறிப்பிடுகிறது. எனினும், பணப்புழக்கத்தின்போது வழமையான பாவனை காரணமாகப் பழுதடைந்த, பாவனையால் அழுக்கடைந்த (அதாவது வேண்டுமென்று சேதப்படுத்தப்படாத, மாற்றம் செய்யப்படாத அல்லது உருச்சிதைக்கப்படாத) பணத்தாள்களை வழமைபோலவே இலங்கை மத்திய வங்கியிலும் ஏனைய உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிலும் கொடுத்து மாற்றிக்கொள்ளலாம் என மத்திய வங்கி தனது நிலைப் பாட்டை விளக்கியிருக்கிறது.

இலங்கை மத்திய வங்கி தீர்மானித்ததன் பிரகாரம், வேண்டுமென்றே சிதைக்கப்பட்ட, உருவழிக்கப்பட்ட பணத்தாள்களுக்குப் பதிலாக அதே பெறுமதியுடைய பணத்தாளை மாற்றீடாகப் பெறுவது இந்த வருட இறுதிக்குப் பின் சாத்தியமற்றதாகும். எனவே, கடைக்காரரினாலோ, பேருந்து நடத்துநரினாலோ வேறு பலாராலோ உங்கள் தலையில் கட்டப்பட்ட இந்தவகை நாணயத்தாள்கள் உங்கள் வசம் இப்போதும் இருக்குமாயின் அவற்றை இப்பொழுதே வங்கிகளில் கொடுத்து மாற்றிக்கொள்வது உங்கள் பண இழப்பைத் தவிர்ப்பதற்கு உதவும். அத்துடன் அடுத்த வருடத்திலிருந்து பணத்தாள்களை மடித்து வைக்கக்கூடிய பணப்பை (பேர்ஸ்)களையும் தவிர்க்க வேண்டியவேலையும் வந்திருக்கிறது. இல்லையேல் வருடப்பிறப்புக்குப் பின் மடித்த, கசக்கிய, வரைந்த காசுத் தாள்கள் சொல்லாத காதல்போல ஆகிவிடும். ஆமாம், செல்லாக் காசாகிவிடும்.





இலங்கையின் பண அலகு ரூபா என அழைக்கப்படுகிறது. உலக நாடுகளிலுள்ளதைப் போன்றே இலங்கையில் இலங்கை மத்திய வங்கி நாணயங்களை வெளியிடும் ஏகபோக உரிமையைக் கொண்டிருக்கிறது. இலங்கை ரூபாவின் அனைத்துலக நிறுவனக் குறியீடு 'எல்.கே.ஆர்' என்பதாகும். ரூபா ஒன்று 100சதங்களைக் கொண்டதாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ரூபா10க்குக் கூடிய பெறுமானம் கொண்டவை தாள் நாணயங்களாகவும், ரூபா10க்குக் குறைந்த பெறுமானம் கொண்டவை உலோக நாணயங்களாகவும், ரூபா10 இந்த இரண்டு விதமாகவும் தயாரித்துப் பாவனைக்காக விடப்படுகின்றன.

உலோக நாணயங்கள் ஐக்கிய இராச்சிய நாணய வார்ப்பகத்தில் வார்க்கப்படுகின்றன. தாள் நாணயங்கள் வரையறுக்கப்பட்ட தோமஸ் டீ லா ரூ நிறுவனத்தால் அச்சிடப்படுகின்றன. ஆரம்ப காலத்தில் அளவில் பெரியதாக இருந்த இந்த நாணயங்கள் இப்பொழுது அளவில் சிறியதாகத் தயாரிக்கப்படுகின்றன. நாணயத் தயாரிப்பில் ஏற்படும் செலவைக் குறைக்கவே இவ்வாறு செய்யப்பட்டதாக அறிய முடிகிறது. இந்த நிலையில் தான் பணத்தாளைக் கவனத்துடன் கையாள வேண்டித் தற்போது இந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கிறது. தாள் நாணயங்களின் இரண்டு பக்கங்களிலும் நாட்டின் இயற்கை அழகு, பண்பாடு, வரலாறு போன்றவற்றைக் குறிக்கும் சித்திரங்கள் காணப்படுகின்றன. அவற்றின் அழகைச் சிதைப்பதும் தவறு தானே! அத்துடன் கண்பார்வையற்றோரின் நன்மை கருதி பிரேல் முறையிலும் பெறுமானம் பொறிக்கப்பட்டுள்ளது. அனைத்து தாள் நாணயங்களும் விசேடமாகப் பண்படுத்தப்பட்ட இரும்பு நூல் கோர்த்த காகிதத்திலேயே அச்சிடப்பட்டுகின்றன. 200ரூபாய் நாணயம் மட்டும் விசேட பிளாஸ்டிக் தாளில் அச்சிடப்பட்டது. இவ்வளவு அம்சங்களை உள்ளடக்கியுள்ள அவற்றின் பெறுமதியை மதிக்கக் கற்றுக் கொள்வது அனைவரதும் கடைமையும்கூட.

**பணத்தாள்களை மடித்து வைக்கக்கூடிய பணப்பை (பேர்ஸ்)களையும் தவிர்க்க வேண்டியவேலையும் வந்திருக்கிறது. இல்லையேல் வருடப்பிறப்புக்குப் பின் மடித்த, கசக்கிய, வரைந்த காசுத் தாள்கள் சொல்லாத காதல்போல ஆகிவிடும்**



# உன் அருகிருத்தல் என்பது....

கவிதை
வேலணையூர்தாஸ்

உன் அருகிருத்தல் என்பது
ஆயிரம் நதிகளின் நீர்மை.

அன்பின் திரிகளில்
எரிகிற வெம்மை.

பூச்சொரியும் நந்தவனங்களை,
குளிர் சொரியும் அருவிகளை,
தலை தடவும் தென்றலை,
உன் புன்னகையால் கட்டி இழுக்கிறாய்.

விழிகளால் விடியல் செய்கிறாய்
மொழிகளால் மெத்தையிடுகிறாய்
மண்ணில் சொர்க்கம் செய்கிறாய்
அன்பே...!
மறந்தா சிலவேளை வெட்கம் செய்கிறாய்

உன் அருகிருத்தல் என்பது தவம்
உன் அருகிருத்தல் என்பது
கனவினில் மிதத்தல்
உன் அருகிருத்தல் என்பது காலத்தை

இழத்தல்
உன் அருகிருத்தல் என்பது
உயிருடன் இறத்தல்
உன் அருகிருத்தல் என்பது
அன்பின் கவிதையை எழுதுதல்.

அன்பே
காலம் உள்ளளவும்
இதைப்
பாடிக்கொண்டிருக்கட்டும் காற்று

# 'கொர்ப்போட்டம்'

கட்டுரை
ராஜேஸ்மணாளன்

“இதென்ன மழை...?”
“சொல்லாமல் கொள்ளாமல் சட்டென வருகிறது. ஒன்றோ இரண்டோ நிமிடங்களுக்குச் சோவெனப் பெய்கிறது”
'பட்டெனக் காணாமல் போய்விடுகிறது'
எனக்கு எதுவுமே தெரியாது என்பதுபோல பளிச்சென வெயில் அடிக்கிறது. “அப்பாடா மழை விட்டுவிட்டது” என்று வெளியே புறப்பட்டால், அழையா விருந்தாளியாகப் பட்டெனக் கொட்டித் தெப்பமாக நனைத்து விடுகிறது. மழையில் ஸ்கூட்டர் ஓட்ட அவன் என்றுமே விரும்புவதில்லை. யாழ்ப்பாண வீதிகளில் ஸ்கூட்டர்
ஓட்டுவதே ஒரு சர்க்கஸ்காரனின் வேலைபோல இருக்கும். யமகிங்கரர்கள்போல தெருக்களில் வளையவரும் ஓட்டோக்களிடம் வெகு கவனமாக இருக்க வேண்டும்.
நீங்கள் கவனமாக ஓட்டினாலும், இன்னொருவன் கண்மூடித்தனமாக வாகனத்தை ஓட்டினால், பலியாடு நீங்கள்தான். அதிலும் மழைகாலம் என்றால் கண்ணில் எண்ணெய் விட்டுக்கொண்டுதான் ஓட்டவேண்டும்.

— — — —

சென்ற வருடம் யாழ்ப்பாணத்தில் மாரிமழை இல்லை. காவிச் சென்ற மழை அங்கிக்கும் வேலை இல்லை. ஆனால் இந்த வருடம் வட்டியும் குட்டியுமாகப் பெய்கிறது. வேலை மணிக்கு முடிவடைந்த நேரம் நான்கரையாகி விட்டதென அவனது கைக்கடிகாரம் காட்டியது. இனிப் புறப்பட வேண்டியதுதான். விட்டு விட்டு பெய்யும் இந்த மழை விடாது. இனிப் புறப்படவேண்டியதுதான்.
நான்கரைக்கே ஆறு மணி போல வானம் இருட்டி, சிணுங்கிக் கொண்டிருந்தது. மழை அங்கியை அணிந்தவன், மெல்ல ஸ்கூட்டியை ஓட்ட ஆரம்பித்தான். தெருவெல்லாம் கழுவித் துடைத்தால்போல மழை கொட்டியிருந்த அடையாளம் வழிமுழுதும் தெரிந்தது. வாகன நடமாட்டம் மிகக் குறைவாக இருந்ததை அவன் அவதானித்தான். அவனை ஒரு ஸ்கூட்டி முந்திக்கொண்டு போனது. ஓட்டுவது ஒரு பெண். அவனுக்கு மகா எரிச்சலாக இருந்தது. இந்தப் பெண்கள் ஏன் இவ்வளவு வேகமாக ஓட்டுகிறார்கள்? பல பெண்களுக்குப் பொறுமையாகப் பின்பக்கமாக வருவதில் நாட்டமில்லை என்பதை அவன் கண்டிருக்கிறான். முந்த வேண்டும் என்ற உந்தல் இவர்களுக்கு ஏன் ஏற்படுகின்றது?
வேகமாக ஓடுவது ஒரு நாகரீகம் என்றாகி விட்டதோ? இந்த மழை நேரத்தில் வேகமாக ஓட்டும் வண்டியை நிறுத்துவது கடினம் என்று இவர்களுக்குத் தெரியாதா?



— — — —

சொல்லாமல் கொள்ளாமல் , விட்டிருந்த மழைத் தூறல் சட்டென ஆரம்பித்தது. சில நிமிடங்கள் சோவெனப் பெய்து விட்டுப் பட்டென அடங்கியது. அவனது அக்காவினுடைய பிள்ளையின் ஞாபகம்தான் அவனுக்கு அப்பொழுது வந்தது. அந்தப் பிள்ளையும் இப்படித்தான். காரண, காரியம் இல்லாமல் 'குயோ மாயோ' என்று அழுது ஊரைக் கூட்டும். கையில் எவராவது ஒரு பிஸ்கெட்டை அல்லது இனிப்பைத் திணித்தால், பெட்டிப்பாம்பாய்ப் பிள்ளை அடங்கி விடும். ஏன் அழுதாய் என்று யாரும் கேட்க முடியாது. கேட்டால், இரண்டாம் அத்தியாயம் ஆரம்பித்து விடும்.

— — — —

மழை அங்கி அணிந்திருந்தாலும், கொட்டும் மழையில் ஸ்கூட்டியை ஓட்டும் அவசரம் அவனுக்கில்லை. வழியில் கண்ட ஒரு தேநீர்க் கடைக்கு முன்பாக நனையாத ஓர் இடத்தில் ஸ்கூட்டியை நிறுத்தினான். மழையோ வந்த வேகத்தில் காணாமல் போய்விட்டது. மேலே சூரியன் பல்லிளிப்பது தெரிந்தது. தண்ணீர் சொட்டும் தன் மழை அங்கியை வெளியே இருந்த ஒரு கதிரையில் மாட்டிவிட்டு, உள்ளே சென்று ஒரு கதிரையில் உட்கார்ந்தான். அவனுக்குப் பிடித்தமான 'ருசியம்' இல்லை. 'வாய்ப்பன்' இருந்தது. பிளேட்டில் கொண்டு வந்து வைத்தார்கள். சுடச்சுட இருந்ததோடு. மொரமொரப்பாகவும் இருந்தது. ஒன்றுக்கு இரண்டாகச் சாப்பிட்டான். மற்றையது கொஞ்சம் ஆறட்டும் என்று தாமதித்தபோது, அவனுக்கு நேர் எதிரே இருந்த ஒரு நாற்காலியில் ஒருவர் வந்து அமர்ந்தார்.
அவனைப் பார்த்து புன்னகைத்தார். அவனும் பதிலுக்குப் புன்னகைத்தான்.
“தம்பி வேலையால வாறியள் போல கிடக்கு?”
பதிலுக்குத் தலையாட்டினான் குமரன்.
“தூரத்தில இருந்து வாறியளோ?”
“இல்லை உரும்பிராயிலதான் வீடு”
அவனுக்கு வாய்ப்பன் கொண்டுவந்தவன், ஒரு தட்டில் இரண்டு வாய்ப்பன்களைக் கொண்டு வந்து அவருக்கும் வைத்தான். தனக்கு ஒரு 'பிளேன் ரீ' வேண்டுமென்று அவர் கேட்டர். அதை அளித்த கையோடு பரிமாறுபவன் அடுத்த மேசைக்குச் சென்றுவிட்டான்.

'மழையைப் பாத்தியளே தம்பி.... ஒரு பிடி பிடிக்குது' என்றார் வாய்ப்பனில் ஒரு கடிகடித்த அந்தப் பெரியவர்.
மனதுக்குள் அடக்கி வைத்திருந்த கேள்வியை அவன் அவரிடம் கேட்டுவிட்டான்.
“இதென்ன புதினமான மழையாக் கிடக்குப் பெரியவர்? பட்டெனப் பெய்யுது. பட்டென வெளிக்குது?”
வெளிநாட்டில் நீண்டகாலம் வாழ்ந்து, இப்பொழுது யாழ்ப்பாணத்தில் மறுபடியும் வாழ்க்கையைத் தொடக்கி இருக்கும் அவனுக்குப் பல புதினங்கள். புதிர்கள் இருக்கத்தான் செய்கிறது.

பெரியவர் வாய்ப்பனில் இன்னொரு துண்டைக் கடித்தார்.
“தம்பி கொஞ்சக் காலம் இந்த மழை எங்கட மண்ணில இல்லை. இதைத்தான் 'கொர்ப்போட்டம்' எண்டு நாமள் சொல்லுறம். தொர்ப்போட்டம் எண்டும் சிலர் சொல்லுகினம்...”
“அதென்ன கொர்ப்போட்டம்...? இது தமிழ்ச் சொல்லா...?” என்று கேட்க நினைத்தான் அவன்.
வாயைச் சட்டென அடக்கிக் கொண்டான்... கையில் வெண்ணெய் இருக்கிறது. ஊரெல்லாம் நெய்க்கு அலைவானேன்?
“ஐபோனை”க் கையிலெடுத்தான்.
'கொர்ப்போட்டம்' என்று தமிழில் அதன் விசைப்பலகையைத் தட்டி, எழுதி விளக்கம் தேடினான். உடனே கிடைத்தது.
தமிழர்களின் அடுத்த வருட மழைக் கணிப்பு முறைதான் இந்தக் கொர்ப்போட்டம். அதாவது 'கரு ஓட்டம்' என்பதே கர்ப்ப ஓட்டம் என்று மாறி, கர்ப்போட்டம் என்றாகி, இன்று நாள்காட்டிகளில், கொர்ப்போட்டம் என்று திரிந்து விட்டது. பதினான்கு நாட்கள் 'கர்ப்போட்ட நாள்கள்' காணப்படுகின்றன. அதாவது மழை கருக்கொள்ளும் அல்லது மேகம் சூலாகும் நாள்கள் இவை. கர்ப்போட்ட நாள்களில் முறையாகச் சூல் கொண்டால், ஒன்பது
மாதங்கள் கழித்து அடுத்த ஆண்டில் ஐப்பசி, கார்த்திகையில் மழைப் பொழிவு முறையான அளவாக இருக்குமாம்.
அட இவ்வளவு விளக்கம் இந்தச் சொல்லுக்குள் நிறைந்திருக்கிறதா?

— — — —

பணத்தைக் கவுண்டரில் செலுத்தி விட்டு, வெளியே வந்தான் அவன். வெளியே மழை இல்லை. இனி மழை வராது என்பதுபோல வெயிலடித்துக் கொண்டிருந்தது. பள்ளிப் படிப்பில் கற்பதைவிட மேலாக, சமூகம் நமக்குச் நிறையச் சொல்லித் தருகிறது. ஆனால், அதைக் காது கொடுத்துக் கேட்கிற அளவுக்கு நமக்குத்தான் பொறுமையும் இல்லை ஆர்வமும் இல்லை என்று மனதுக்குள் நினைத்தபடியே 'போனை'ப் பையுக்குள் திணித்தான். ஸ்கூட்டியை ஸ்ராட் செய்தான். அடித்த வெயிலுடன் பிடித்தான் ஒரு பிடி. வீட்டை அண்மித்துவிட்டான். இதுவரைதான் தனக்கு ஒதுக்கப்பட்ட இடம் என்பதுபோல அங்கே மழை எல்லையமைத்துப் பெய்தது. 'கொர்ப்போட்டம்' என்று தனக்குள் ஒருமுறை சொல்லிக் கொண்டான்.

# அம்மாவுக்காக...?



பதிவுகளின் தொடர்

கே.ஆர்.டேவிட்

காலை ஒன்பது மணியிருக்கும்... செங்கமலம் தலைமைக் காரியாலயத்தை வந்தடைந்தாள். அங்கு பாதுகாப்புப் பணியில் நின்ற போராளிக்குச் செங்கமலத்தின் வருகை பற்றி ஏற்கனவே அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருக்க வேண்டும். அவன் செங்கமலத்தை எந்தத் தடையுமின்றி உள்ளே செல்ல அனுமதிக்கிறான்.

செங்கமலம் பிரதான மண்டபத்துக்குள் நுழைகின்றாள். அந்த மண்டபத்துக்குச் செங்கமலம் இன்றுதான் முதன் முறையாக வந்திருக்கின்றாள். அந்த மண்டபத்தின் அமைப்பும், அமைதியும் செங்கமலத்தின் மனதில் பெரும் அச்சத்தை எற்படுத்துகின்றன.

நிலவன். இவன்தான் இந்தத் தலைமைக் காரியாலயத்தின் பொறுப்பாளர்.

“செங்கமலம் வாருங்கோ... இருங்கோ....” பொறுப்பாளர் அன்போடும் மதிப்போடும் செங்கமலத்தை வரவேற்கிறார். செங்கமலம் அமர்கிறாள்.

“எங்களால் அடுத்து நடத்தப்படவுள்ள தாக்குதலுக்கான பூர்வாங்க நடவடிக்கைகள் யாவும் முடிந்துவிட்டன. அந்தத் தாக்குதலைப் பொறுப்பேற்று நடத்தும் போராளியாக உங்களைத்தான் தலைமைக்குழு தெரிவு செய்திருக்கு... இந்தச் செய்தியை உங்களுக்குத் தெரிவிக்கத்தான் உங்களை அழைத்திருந்தேன்...” நிலவன் கூறுகிறான். செங்கமலத்தால் அந்தச் செய்தியை நம்ப முடியவில்லை. அவளது மனம் பூரித்துப் போய்விட்டது. இப்படியொரு சந்தர்ப்பத்தை எதிர்பார்த்து ஒவ்வொரு போராளியும் தவங்கிடக்கிறான். செங்கமலமும் தவங்கிடந்தவள்தான். அவளுடைய தவம் பலித்துவிட்டது.

— — —

போராளிகளால் நடத்தப்படுகின்ற தாக்குதல்களில் தனது உயிரை ஆயுதமாகப் பாவித்து நடத்துகின்ற இந்தத் தாக்குதல், அனைத்துத் தாக்குதல்களிலும் முக்கியமான தாக்குதலாகும். இந்தத் தாக்குதலை நடத்துகின்ற போராளிகளில் தொண்ணூற்றென்பது வீதமான போராளிகள் தாக்குதல் களத்திலேயே சாவடைகின்றனர். அவர்களின் உடல்கள் கூடக் கிடைப்ப தில்லை.

சகல மனிதர்களுமே அவர்களின் சாவின் பின் காலில்லாக் கட்டிலில் தங்களின் இறுதிப் பயணத்தை ஆரம்பித்து மயானங்களில் குடியேறு கின்றனர். ஆனால் இந்தப் போராளிகள் தங்களின் சொந்தக் காலிலேயே நடந்து 'வரலாற்றில்' குடியேறு கின்றனர். செங்கமலமும் தனது இறுதிப் பயணத்துக்கு ஆயத்தமாகிவிட்டாள்.

— — —

செங்கமலம்...

இவள் மிக வறுமைப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவள். இவளது தகப்பன் பசுபதி. தாய் முத்தம்மா. இவளுக்குக் கீழ் இரண்டு பெண் சகோதரர்கள். மூன்றாவது பிள்ளைக்கு மூன்று வயது நடக்கும்போது பசுபதி இறந்துவிட்டான். குடும்பச் சுமை முத்தம்மாவின் தலையில் இறங்கியது. பெருஞ்சுமை.... அதுவும் இறக்க முடியாத சுமை.

முத்தம்மா கச்சான் வியாபாரம் செய்ய ஆரம்பித்தாள். நல்லூர் கந்தசுவாமிக் கோயிலைத் தெரிவு செய்து தனது தொழிலை ஆரம்பித்தாள். இதில் கிடைக்கின்ற வருமானம் நான்கு உயிர்களின் வயிற்றைக் கழுவ உதவியது. ஒவ்வொரு வருசமும் ஆவணி மாதத்தில் மட்டும் சப்பானி கொட்டியமர்ந்து, மூக்கடி வியர்க்க வயிறு நிறைய அவர்களால் சாப்பிடக் கூடியதாக இருந்தது. ஏனெனில், ஆவணி மாதத்தில் நல்லூர் கந்தசுவாமி கோயிலில் திருவிழா நடக்கும். நிறையப் பக்தர்கள் வருவார்கள். கச்சான் வியாபாரமும் சிறப்பாக நடக்கும். ஆவணி மாதம் நல்லூர்த் திருவிழா ஆரம்பமாகிவிட்டால், இரவு ஒன்பது மணிக்குப் பிறகுதான் முத்தம்மா வீட்டுக்கு வருவாள். செங்கமலமும் சகோதரிகளும் முத்தம்மாவின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருப்பார்கள். முத்தம்மாவின் அடுக்குப் பெட்டி பூராகவும் காசு நிறைந்திருக்கும். அதைப் பாயில் கொட்டி மூவரும் எண்ணுவார்கள். முத்தம்மா பெருமூச்சுவிடுவாள்.

இப்படிப்பட்ட ஒரு சூழலில்தான் செங்கமலம் தன்னை போராளிகளுடன் இணைத்துக் கொண்டாள். வறுமை வெக்கையில் வறுபட்டு, புரியாத பாதையில் காலை வைத்துக் கால் வைத்த பாதையைச் சிறுகச் சிறுகப் புரிந்து இப்போது செங்கமலம் உயிர் ஆயுதப் போராளியாகி நிற்கிறாள்.

— — —

“செங்கமலம் இந்தத் தாக்குதலை மிக விரைவில் நடத்த வேண்டியுள்ளது. உங்கடை மனதிலை ஏதாவது அபிப்பிராயங்கள், தேவைகள் இருந்தால் நீங்கள் சொல்லலாம்” நிலவன் கூறுகிறான். மிகவும் பூரிப்போடிருந்த செங்கமலத்தின் முகத்தில் ஒரு கேள்விக்குறி படர்வதை நிலவன் அவதானிக்கிறான். நிலவன் நிறைந்த அனுபவசாலி.

“சொல்லுங்கோ... செங்கமலம்?” நிலவன் திரும்பவும் கேட்கிறான்.

“அண்ணை... இந்தத் தாக்குதலை ஆவணி மாதப் பிற்பகுதியிலை வைச்சாலென்ன. இண்டைக்கு ஆடி பதினைந்தாம் திகதி...” செங்கமலம் விக்கி விக்கிக் கூறுகிறாள்.

செங்கமலத்தின் மனதில் ஏதோவொரு பிரச்சினை இருப்பதை நிலவன் உணர்கிறான்.

“ஆவணி மாதத்துக்கு இந்தத் தாக்குதலை மாற்ற வேண்டியதற்கான காரணத்தைச் சொல்லமுடியுமா?” நிலவன் செங்கமலத்தின் மனதைத் துலாவுகிறான்.

சில விநாடிகள் மௌனமாக நின்ற செங்கமலம் பெருமூச்சுடன் பேச ஆரம்பிக்கிறாள்...

“அண்ணை... எனக்குத் தகப்பன் இல்லை. அம்மாதான் என்னையும் என்ரை சகோதரங்களையும் வளர்த்தவா... அம்மாவின்ரை உழைப்பிலைதான் நாங்கள் வளர்ந்தனாங்கள். என்ரை தாக்குதல் செய்தியை அம்மாவும், என்ரை சகோதரர்களும் கேள்விப்படத்தான் போகினம்” இப்படிக் கூறிவிட்டு சில விநாடிகள் மௌனமாக நின்ற செங்கமலம் மீண்டும் ஒரு பெருமூச்சுடன் பேச ஆரம்பிக்கிறாள்.

“என்ரை தாக்குதல் செய்தியை... அம்மாவாலும் சகோதரங்களாலும் நிச்சயமாகத் தாங்கிக் கொள்ள முடியாமல்தான் இருக்கும்...” மீண்டும் செங்கமலம் மௌனிக்கிறாள். நிலவனும் மௌனமாகவே இருக்கிறான். வலது கை நடுவிரல்கள் மூன்றையும் இடது கையால் பின்நோக்கி அழுத்தி நெட்டி முறித்த செங்கமலம் மீண்டும் பேச ஆரம்பிக்கிறாள். “இரண்டொரு மாதங்களுக்கு அம்மா கச்சான் வியாபாரத்துக்குப் போகமாட்டா... வியாபாரத்துக்குப் போகாட்டி வருமானம் இருக்காது. அம்மாவும் சகோதரர்களும் பட்டினி கிடப்பார்கள். “இந்தத் தாக்குதலை நல்லூர் கந்தசாமி கோவில் திருவிழா முடிஞ்சாப் பிறகு வைச்சால் திருவிழாக் காலத்திலை அம்மாவுக்குக் கச்சான் வியாபாரம் கொஞ்சம் சிறப்பாக நடக்கும். அம்மாவின்ரை கையிலை கொஞ்சக் காசிருக்கும். அம்மா என்ரை கவலையிலை வேலைக்குப் போகாட்டியும் கையிலை இருக்கிற காசை வைச்சு அம்மாவும் சகோதரங்களும் கஞ்சியாவது குடிக்கக் கூடியதாக இருக்கும். அதாலைதான் நான் இந்தத் தாக்குதலை நல்லூர் கோயில் திருவிழாவுக்குப் பிறகு வைச்சாலென்ன என்று கேட்டன்...”

இந்தத் தாக்குதலை நடத்தக் கூடிய களப் பொருத்தங்கள் இப்போது எங்களுக்குச் சாதகமாக இருக்கு. இப்போது அந்தத் தாக்குதலை நடத்தி முடிக்க வேண்மென்டொரு சூழல் இருந்தால் அதுக்கும் நான் தயாராகவே இருக்கிறேன். அம்மாவும் சகோதரங்களும் இரண்டொரு மாதங்களுக்கு பட்டினி கிடக்க வேண்டித்தான்வரும்... பசி எங்களுக்குப் பழக்கப்பட்ட ஒண்டு தானே” செங்கமலம் கூறி முடிக்கிறாள்.

நிலவன் மௌனமாகவே இருக்கிறான்.

செங்கமலம் தனது இறுதி மூச்சிலும் தனது தாயையும், உடன் பிறப்புக்களையும் நேசிக்கின்ற அந்த உறவும், அதேவேளை தனது இறுதி மூச்சை தான் பிறந்து வளர்ந்த இந்த மண்ணுக்காக விடத் துணிந்திருக்கும் தியாகமும்...

நிலவனின் மனத்தளத்தில், செங்கமலம் இமயமாய் நிமிர்ந்து நிற்கிறாள்...





# நேரம் இல்லா நேரம்

கவிதை

வேலணையூர் சுரேஷ்

பல்லுத் தேய்ந்த துருவலைக்கு
பல்லுமாற்ற இல்லை நேரம்

தள்ளாத வயதுத் தாத்தாவின்
காற்தசைப் பிடிப்புக்கு
எண்ணை தடவ இல்லை நேரம்

பள்ளி செல்லும்
பிள்ளைக்குப் பாடம்
சொல்லிக்கொடுக்க
இல்லை நேரம்.

கடன் தண்ணிக் கஸ்ரம் பற்றி
மனைவி, பிள்ளைகள்
உடன் கதைக்க இல்லை நேரம்.

எம் வாழ்வின் நேரங்களை
தின்று தொலைக்கின்றன
நம் அலட்சியங்களும்
அசண்டையீனங்களும்

இணையங்களின் ஊடுருவல்
ஆன்மாவின் அடிவேரை
பதம் பார்க்கிற பேரவலம்

மூழ்கிப்போய்
'முகநூல்' கயிற்றில் சிக்கி
சிதைந்தழிந்து ஒன்றுமற்று
நனைந்த கோழியாய்
ஒரு மூலைக்குள்
கிறாவிக் கொண்டு கிடக்கிறான்

அட
மலையைப் புரட்டிய மனிதன்
தலையை நிமிர்த்தத்
திராணியற்று...

நாம்
இழந்த நேரங்களை எல்லாம்
தாம்
உழைக்கும் நேரங்களாக்கிச்
சம்பாதிக்கின்றன
இணையத்தளங்கள்

கட்டுப் பணம் தீர்ந்தால்
மீள் நிரப்பி விடலாம்
எம்மை விட்டுப்போன
நேரங்களைக் கெஞ்சிக்
கேட்டால்கூட
கடவுள் தருமா?



# தயக்கம் ஏன்?



மியன்மார் அரசின் தலைமை ஆலோசகர் சூகியுடனான சந்திப்பின்போது, மிகக் குறைந்த பட்சம் 'ரொஹிங்யர்கள்' என்று குறிப்பிட்டுக்கூடப் பேசுவதைப் பாப்பரசர் தவிர்த்துள்ளார்.

பாப்பரசர் பிரான்சிஸ் 3 நாள்கள் பயணமாக மியன்மாருக்குச் சென்றிருந்தார். தனது பயணத்தின் மூன்றாம் நாளான கடந்த புதன்கிழமை அவர் மியன்மார் அரசின் தலைமை ஆலோசகர் ஆங் சாங் சூகியைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பின்போது ரொஹிங்யர்களுக்கு ஆதரவாக பாப்பரசர் குரல் கொடுப்பார் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும், 'ரொஹிங்யர்கள்' என்ற சொற்பதத்தை ஒரு தடவையேனும் பாப்பரசர் பயன்படுத்தவில்லை.

பாப்பரசரின் மியன்மாருக்கான சுற்றுப் பயணம் கடந்த மாதங்களுக்கு முன்னரேயே உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. பாப்பரசரின் பயணத்திலாவது ரொஹிங்யர்களுக்கு விடிவு வரும் என்று பரவலாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுவந்த நிலையில் அவர் 'ரொஹிங்யர்கள்' என்ற சொற்பதத்தைப் பயன்படுத்தாமல் விட்டமை பெரும் ஏமாற்றமே. அமெரிக்கா, மெக்சிக்கோ இடையே எல்லைச்சுவர் அமைக்கப்படுவதைக் கண்டித்து அமெரிக்க அதிபர் ட்ரம்ப்பை எதிர்த்து குரல் கொடுத்திருந்த பாப்பரசன் மியன்மார் அரசுக்கு பணிந்தமை ஏனோ?

*"என் இறைவா என் இறைவா
ஏன் என்னைக் கைவிட்டீர்..."*

> "பாப்பரசரின் பயணத்திலாவது ரொஹிங்யர்களுக்கு விடிவு வரும் என்று பரவலாகக் கருத்துத் தெரிவிக்கப்பட்டுவந்த நிலையில் அவர் 'ரொஹிங்யர்கள்' என்ற சொற்பதத்தைப் பயன்படுத்தாமல் விட்டமை பெரும் ஏமாற்றமே."

## பிரபஞ்ச அழகி




**தென்னாபிரிக்காவைச் சேர்ந்த நெல்பீற்றர்ஸ் பிரபஞ்ச அழகியாக (மிஸ் யுனிவர்ஸ்) தெரிவு செய்யப்பட்டுள்ளார். அமெரிக்காவின் லொஸ் வெகாஸில் நடைபெற்ற பிரபஞ்ச அழகிப் போட்டியில் 22 வயதான பீற்றர்ஸ் மகுடத்தைத் தனதாக்கினார்.**



## மீண்டும் ஏவியது வடகொரியா

பதற்றம் நிறைந்திருந்த கொரியத் தீபகற்பம் தற்போது மேலும் பதற்றமடைந்துள்ளது. கடந்த புதன்கிழமை வடகொரியா சோதித்த கட்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணையாலேயே பதற்ற நிலைமை இரட்டிப்பாகியுள்ளது.

பன்னாட்டுச் சட்டதிட்டங்களை மீறி வடகொரியா அவ்வப்போது ஏவுகணைச் சோதனைகளை நடத்தி வருகிறது. ஐக்கிய நாடுகள் சபை விதித்துள்ள தடைகள் உள்ளிட்ட எந்தத் தடையையும் வடகொரியா கண்டுகொள்வதில்லை. அந்த நாடு கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஜப்பானுக்கு மேலாக ஏவுகணைச் சோதனையொன்றை நடத்தியது. இதற்கு பல முனைகளில் இருந்தும் கண்டனங்கள் குவிந்தன. அதன்பின்னர் அணுகுண்டை விடவும் சக்தி வாய்ந்த ஐதரசன் குண்டுச் சோதனையை வடகொரியா நடத்தியது. தற்போது மற்றுமொரு ஏவுகணைச் சோதனையை அது நடத்தியுள்ளது. இந்த ஏவுகணை வடகொரியாவில் இருந்து புறப்பட்டு அமெரிக்காவின் எந்தப் பாகத்தையும் தாக்கும் திறன் படைத்தது என்று தெரிவிக்கப்பட்டது.

மறுநாளே அதாவது வியாழக்கிழமை அதிகாலை ஏவுகணைகளை வானில் வைத்துத் தாக்கி அழிக்கும் தாட் அமைப்பை தென்கொரியா சோதித்தது. ஆக, பதற்றம் மேலும் அதிகரித்துள்ளது.

*"வேதாளம் மீண்டும் முருங்கையில்..."*

## பதவியேற்றார் கென்யட்டா

கென்யாவின் அதிபராக இரண்டாவது முறையாக கடந்த செவ்வாய்க்கிழமை பதவியேற்றார் உகுரு கென்யட்டா. ஆபிரிக்க நாடான கென்யாவில் அதிபர் கென்யட்டாவின் பதவிக் காலம் முடிவடைந்ததை அடுத்து கடந்த ஓகஸ்ட் மாதம் 8ஆம் திகதி அதிபர் தேர்தல் நடந்தது. இந்தத் தேர்தலில் முறைகேடு நடந்தது என்று தெரிவித்து, மறுதேர்தலை நடத்துமாறு உத்தரவிட்டது கென்ய உச்ச நீதிமன்றம். பின்னர் ஒக்ரோபர் 26ஆம் திகதி மறுதேர்தல் நடத்தப்பட்டது. எதிர்க்கட்சிகள் புறக்கணித்த இந்தத் தேர்தலில் கென்யட்டாவே வெற்றிபெற்றார். இதையடுத்துத் தொடர்ந்து இரண்டாவது முறையாக அவர் கடந்த செவ்வாய்க்கிழமை அந்த நாட்டின் அதிபராகப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

*"ஆடாமல் ஜெயிச்சோமடா..."*



# ரவுண்ட் த வேல்ட்

பிரகாஸ்

## உறக்கம் கலைத்தது அகுங்

இந்தோனேசியாவின் பாலித் தீவிலுள்ள அகுங் எரிமலை, வெடிக்க ஆரம்பித்துள்ளது. இதையடுத்து எரிமலையிலிருந்து சுமார் 10 கிலோ மீற்றர் தொலைவுக்குள் இருப்பவர்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

இந்தோனேசியா ஏகப்பட்ட எரிமலைகளைக் கொண்ட நாடு. அங்குள்ள பாலித் தீவிலுள்ளது அகுங் எரிமலை. சுமார் 50 வருடமாக உறக்கத்தில் இருந்த இந்த எரிமலை, கடந்த 22ஆம் திகதி முதல் தனது உறக்கத்தைக் கலைத்து சீற்றமடைந்து வருகிறது. சுமார் 4 ஆயிரம் மீற்றர் உயரத்துக்குக் கரும் புகை எழுந்துள்ளது. எரிமலைக்கு அயல் கிராம மக்கள் அனைவரும் வெளியேற்றப்பட்டுள்ளனர். 'அகுங்' பதற்றம் இந்தோனேசியாவை ஆட்கொண்டுள்ளது.


*"இந்தோனேசியா என்றாலே எரிமலைகள்தானே..."*



கட்டுரை

கு.மதுசுதன்

# பாண் ஒரு வரலாற்றின் வகிபாங்கு



இன்று எம்மவர்க்கெல்லாம் காலை புலர்வதென்பது சேவல் கூவலுடனோ கோவில் மணியோசையுடனோ நிகழ்வதில்லை. மாறாகப் பாண் வண்டிகளின் வயலின் இசை, நாதஸ்வரத் தவில் இசை, புல்லாங்குழல் இசை, ஏ.ஆர்.ரகுமான் இசையிலேயே புலர்ந்து போகிறது.

பாண் என்பது உலக மக்களிடையே பல நூற்றாண்டு கால வரலாற்றை உடைய உணவு வகையாகும். இது போர்த்துக்கீசர் இங்கே வந்திறங்கியபோதே இலங்கையருக்கு அறிமுகமானது. அவர்கள் பாண் உண்பதையும் 'சிவப்பு வைன்' அருந்துவதையும் கண்டு வந்த இலங்கை ஒற்றன் ஒருவன், 'வந்துள்ளவர்கள் கல்லை உணவாகவும் குருதியைக் குடிப்பவர்களாகவும் உள்ள பிசாசுகள்' என வர்ணித்திருந்தான். அவன் கல் என்று சொன்ன உணவுதான் பாண்.

இப்படியாக இலங்கைக்கு அறிமுகமான பாண் தமிழர்களாகிய எமக்குப் பரிச்சயமாகிய உணவுகளிலொன்றாக மாறிவிட்டது. இங்கு நடைபெற்ற நீண்ட கால உள்நாட்டுப் போரின்போது, இடப்பெயர்வுகளின்போது உணவுகளை ஆக்கியுண்ண நேரம் கிடைக்காது. அத்துடன் உணவுக்குத் தட்டுப்பாடு ஆதாலால் அனைவருக்கும் பாணே பெரும்பாலும் விரைவுணவாக அமைந்திருந்தது

போர்க்காலங்களில் உணவுத் தட்டுப்பாடுகள் குடாவைக் குறிபார்த்து வதக்கியவேளை பாணுக்காகக் காலை வேளையில் வெதுப்பகத்துக்கு முன்னால் நீண்ட வரிசையில் நின்ற அனுபவம் இன்றைய சிறுவர்களுக்கு இருக்கலாம். ஆனால் நாங்கள் சிறுவர்களாக இருந்த காலம். காலை ஐந்து, ஐந்தரை மணிக்கே நீண்ட வரிசையில் வெதுப்பகங்கள், கடைகளுக்கு முன்னால் பாணுக்காக ஓலைப்பை, 'சந்திரிக்கா பாக்', பிளாஸ்ரிக் பின்னல்(அப்போது சொப்பின் பாக்குகள் பாவனையில் இல்லை) பாக்குடன் நீண்ட வரிசையில் நிண்டு பாண் வாங்கிய அனுபவம் கண்முன்னே தோன்றுகிறது.

ஐந்து மணிக்குப் பாண் வாங்க வரிசையில் முதலில் வந்தவர், பாணை வாங்கிச் சாப்பிட்டுச் செமித்த பின்னேதான் வரிசையின் கடைசியில் நின்றவருக்குப் பாண் கிடைக்கும். இந்த வரலாற்றை இந்தத் தலைமுறையினர் அறிவாரோ!

◆ ◆ ◆

இன்றுபோல கையை விசிக்கிக் கொண்டு, சும்மா போய்ப் பாண் வாங்க முடியாது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் கிராம சேவகரால் வழங்கப்பட்ட குடுப்பப் பங்கீட்டு அட்டையைக் காட்டியே பாண் வாங்க வேண்டும். அந்த அட்டையிலுள்ள குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைப் பதிவின்படியே பாண் வழங்கப்படும். உதாரணமாக நான்கு பேர் கொண்ட குடும்பம் என்றால் குறைந்தது ஓர் இறாத்தலும் ஆகக் கூடியதாக ஒன்றரரை இறாத்தல் அளவும் கிடைக்கும். அவ்வளவு தான். அதற்காகக் குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரையும் ஒவ்வொரு வெதுப்பகத்துக்கு முன்னாலும் வரிசையில் நிற்குமாறு ஒழுங்கமைத்து. அப்பா பாண் வாங்கி முடித்ததும் குடும்பக் காட் அண்ணா நிற்கும் வெதுப்பகத்துக்குக் கைமாற அங்கு அவர் பாண் வாங்குவார். பின்னர் அது நான் நிற்கும் வெதுப்பகத்துக்கு வரும். நான் பாண் வாங்கியதும் அக்கா வரிசையில் நிற்கும் வெதுப்பகத்துக்குப் போகும். எனது குடும்பம் நீண்ட, பெரிய குடும்பமாகையால் மாத்திரம் இந்தச் செயலில் நாம் இறங்கவில்லை. அங்கொரு இறாத்தல், இங்கொரு இறாத்தலாக நாம் பாண் வாங்கும் வித்தையைப் போரே எமக்குச் சொல்லித்தந்திருந்தது. பாணுக்காக வரிசையில் நிற்கும்போது தாக்குதல்கள் நடந்தால் ஓடி ஒளிவதுண்டு. பின்னர் வேறொரு வெதுப்பகத்துக்குச் சென்று வரிசையில் இணைவதுண்டு. (பாணுக்காக கியூவில் நிக்கும் போது 'புக்காரா', 'பொம்பர்' அடித்து இறந்தவர்கள் பலர்)

◆ ◆ ◆

பெற்றோல் தட்டுப்பாடு வந்ததுமே எமது மக்கள் மண்ணெண்ணெயில் வாகனம் ஓட்டி உலக சாதனை படைத்தவர்கள். நடந்த போரும் இடப்பெயர்வுகளும் எங்களுக்கு ஒற்றுமையையும், கண்டுபிடிப்புக்களையும், வாழ்க்கைத் தத்துவங்களையும், தக்கன பிழைத்தலையும் தர்க்க ரீதியாக மாத்திரமன்றி அனுபவப் படிப்பினையாகவும்கூடத் தந்திருந்தது என்றால் அது மறுக்க முடியாத உண்மை.

1995ஆம் ஆண்டு. 'முன்னேறிப்பாய்சல்' சண்டை. எனக்கு ஆறு வயதிருக்கும். அந்த அனுபவத்தை இப்போதும் என்னால் மறக்க முடியாது. நாவற்குழி நோக்கிச் செம்மணி வீதியூடாகக் கால்நடையாகச் சென்று கொண்டிருந்தபோது கடும் மழை. அத்தோடு பசி. இஞ்சி இஞ்சியாகவே நகர வேண்டியிருந்தது. அந்தளவுக்குத் தெருவைச் சனத்திரள் நிரப்பிவிட்டிருந்தது. மழையால் வெட்டைகள் எல்லாம் நீரால் நிரம்பித் தார் வீதி மட்டுமே தெரிந்துகொண்டிருந்தது. அதிலும் தார்க் கறுப்புத் தெரியாதளவுக்குச் சனம். அந்தச் சனத்திரளில் முன்னர் சொன்னதுபோல வரிசையில் நின்று வாங்கிய மேலதிக பாண்(பழைய பாண்) சில துண்டுகள் இருந்தன. அது பெய்த மழைநீரில் ஊறியே விட்டது. அந்தக் கடும் பசியில் அதைத்தான் நாம் பங்கிட்டுச் சாப்பிட்டுக்கொண்டோம். நீரும் இல்லை மழைநீரில் நனைந்த அம்மாவின் சேலை பிழிந்தே தாகம் தணித்தோம். எல்லோரும் அப்படித்தான்.

அப்போது முதலாம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்த சிறுவனான எனக்கு இடம்பெயர்ந்த அவ்வளவு காட்சியும் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது. அந்த இடப்பெயர்வில் பாண் விற்றும் அவித்த மரவள்ளிக் கிழங்கை விற்றும் பலர் பணக்காரர் ஆன வரலாறையும் பின்னர் நான் அறிந்திருக்கிறேன்.


◆ ◆ ◆

அது ஓர் அழகிய ஆனால் கொடிய காலம். வாழ்க்கை இதுவென்று வாழக் கற்றுக்கொடுத்த காலம். ஒரு இறாத்தல் பாணின் விலை எட்டு ரூபாவாக இருந்தது. பின்பு சந்திரிக்கா அம்மையார் ஆட்சிக்கு வந்ததும் அதன் விலை அதிகரித்தது. நாங்கள் பட்ட அல்லோலகல்லோலம் அவருக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. இப்போது எமது வீட்டை அண்மித்து நான்கு, ஐந்து பாண் வண்டிகள் பாட்டுடனும் மேளதாளத்துடனும், வயலின், புல்லாங்குழலிசையுடனும் போட்டி போட்டுக் கொண்டு வீதிப் படலையடியில் வந்து நிற்கின்றன. இதை நினைக்க என் கண்கள் வரலாற்றில் நான் கடந்து வந்த காட்சியைக் கண்டு பனிக்கின்றன. இது கால மாற்றமா? இல்லை தக்கன பிழைத்தலை ஏற்றுக்கொள்ளாமலிருக்கப் பழக்கப்படுகிறோமா? என எண்ண வைக்கத் தவறவில்லை. அதிலும் கொடுமை இந்தத் தலைமுறைப் பிள்ளைகள் காலையில் வாங்கிய பாணை மாலையில் பழைய பாண் என்பது! பாணையும் எம்முடைய அந்தக் காலத்தையும் எப்படி மறக்க முடியும்? வரலாற்றை அடுத்த தலைமுறைக்குக் கடத்துவது எமது கடமை. இல்லையேல் இராவணன் அரக்கானாக மாற்றப்பட்டதுபோல இதுவும் ஆகிவிடும்.

## நூல் அறிமுகம்

தொகுப்பு

அயக்கிரீவன்




**நூல்: வானத்தின் அமைதி குலைகிறது (கவிதைத் தொகுதி)**
**ஆசிரியர்: வல்வைக் கமல்**
**வெளியீடு: ஞானம் பதிப்பகம்**
**விலை: 200ரூபா**

ஈழத்து வடபுலத்துச் சமகாலக் கவிதைப் பயணிகள் அனைவரும் போர்க்காலப் பயணிகளே. போர்க்காலக் கருவறையில் கருக்கொண்டு பிறந்து, போர் மூடிய இருளில் 'பெரியவர்கள்' ஆக வளர்ந்த பயணிகள். இவர்களது கவிதைகளும் போருக்குள் கருக்கொண்டு பெருகியவையே. குருதி சிந்தும் வாழ்வு, நீண்ட பதுங்குகுழி நாள்கள், சிறையுறைவு, இடப்பெயர்வு என நீளும் துக்கத்தின் அடுக்குகள் நிரம்பிய இவர்களின் கவிதைகள் விடுதலை வானத்தை அவாவியவை. காவு கொண்ட வாழ்வுக்காகச் சாகத் துணிந்தவர் மத்தியிலும் செத்து மீண்டவர் மத்தியிலும் மண்ணுண்டு போன மனித நினைவிலும் தொடர்கிறது இவர்களது கவிதை வாழ்வு. மரணம் மலிந்த பூமியில் உயிர்ப்புக்காகப் பாடியவர்கள், இவர்கள். பாடிக்கொண்டிருப்பவர்களும் இவர்களே.

கடிகார முள்ளின் ஒவ்வொரு அசைவிலும் இவர்கள் கால்களுக்குள் கண்ணி வைத்திருந்தது, காலம். சவப்பெட்டியே இவர்களது சூரிய உதயமாகவும் அஸ்தமனமாகவும் அமைந்திருந்தது. போரின் நெடிய வீதிகளின் பயணம் தாய் நிலத்தில் முடிவுறாமல் இன்னும் தொடர்ந்து செல்கிறது காலம்.

(விரிவுரையாளர், தமிழ்த்துறை செல்லத்துரை சுதர்சன்)




**நூல்: மாருதம்(சஞ்சிகை)**
**வெளியீடு: வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்**
**ஆசிரியர்கள்: கலாநிதி தமிழ்மணி அகளங்கன் மற்றும் கலாநிதி சுந்தையா சிறி கணேசன்.**
**விலை: 100ரூபா.**


வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் 1997ஆம் ஆண்டு மாசி மாதத்து முழு நிலா நாளில் ஆரம்பிக்கப்பட்டது. இந்த ஆண்டு இருபது வருடங்களைப் பூர்த்தி செய்துவிட்டது. 202 மாதாந்த முழு நிலாக் கருத்தாடல்களை நடாத்தியிருக்கிறது. மாருதம் சஞ்சிகையின் 16 இதழ்களையும் 40 நூல்களையும் வெளியிட்டுள்ளது.

வவுனியா நகரில் அமைக்கப்பட்டுள்ள பெரியார்களின் திருவுருவச் சிலைகளுக்கு மாலை சூட்டி நினைவுப் பேருரை வழங்கிக் கௌரவித்து நினைவு படுத்தும் நிகழ்ச்சியில் தமிழ் விருட்சம், வவுனியா வரி இறுப்பாளர் சங்கம் ஆகியவற்றோடு இணைந்து செயற்பட்டு வருகிறது. மற்றும் பல்வேறு வகையான சமூகப் பணிகளையும் வழங்கியுள்ளது... மாருதம் இந்த இதழும் புதுப்பொலிவோடு பயனுள்ள பல்வேறு ஆக்கங்களையும் தாங்கி வெளிவருகிறது. (ஆசிரியர்கள்)

நூலாசிரியர்களே!
இந்தப் பகுதியில் உங்கள் நூல் பற்றிய குறிப்புக்கள் இடம்பெறவேண்டுமாயின் உங்கள் நூல்களின் இரண்டு பிரதிகளைக் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.


'சூரியகாந்தி'
உதயன் பத்திரிகை
இல.361 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

அறிந்த மிருகம்



அறியாத கதை

# காண்டாமிருகம்



## காண்டாமிருகம் இனி காணாமிருகமாகிப் போய்விடுமோ!

கட்டுரை

ஏ.ஜே.ஞானேந்திரன்

கட்டுமஸ்தான தேகம், உடலை மூடிய போர்க் கவசம், கையிலே குத்தீட்டி.... காட்டில் இந்தக்கோலம்... உங்களுக்கு எந்த மிருகத்தை ஞாபகத்துக்குக் கொண்டுவருகின்றது?
யானையை நினைத்திருப்பீர்களா? வேறு மிருகங்களும் உங்கள் மனக்கண்ணுக்குள் உலா வந்து போயிருக்கும்! ஆனால் நான் சொல்ல வந்தது காண்டாமிருகத்தைப் பற்றித்தான்! முரட்டுத்தனமான ஒரு போர்வீரனைப்போல காட்டின் ஜாம்பவானாகத் திகழும் இந்தக் காண்டாமிருகம் அழிவின் விளிம்பில் நிற்பது கவலைக்குரியதே.

### எஞ்சி இருப்பது மூன்றே மூன்று இனங்கள்

ஆபிரிக்காவில் மட்டுமே காணப்படும் இந்தக் காண்டாமிருகங்களை வெள்ளை, கறுப்பு என்று இரண்டு இனங்களாகப் [illegible]ரிக்கிறார்கள். ஆசியாவில் மேலும் மூன்று இனங்[illegible]ள் வாழ்கின்றன. இதில் வெள்ளை இனம் குறி[illegible]கத் தென் ஆபிரிக்கக் காடுகளில்தான் காணப்படு[illegible]ன்றது. ஆனால் காலப்போக்கில் இவை பொட்[illegible]வானா, நமீபியா, சிம்பாவே, கென்யா ஆகிய நாடுகளுக்கும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அதே சம[illegible]யம் கறுப்புக் காண்டாமிருகங்களில் 98வீதமான தொகை தென் ஆபிரிக்கா, நமீபியா, சிம்பாவே, கென்யா ஆகிய நான்கு நாடுகளையும் மையப்படுத்தியே இருக்கின்றன. வெள்ளைக்காண்டாமிருகங்கள் என்று அழைக்கப்படும் ஓர் இனத்தை வடக்குக்குரிய சதுர வடிவிலான உதடுகளைக் கொண்ட வெள்ளை இனம், தெற்குக்குரிய வெள்ளை இனம் என்று இரண்டு உப பிரிவுகளுக்குள் உள்ளடக்கலாம். சதுர வடிவிலான உதடுகளைக் கொண்ட வெள்ளை இனம், மிக வேகமாக அழிந்து இன்று அருகிவிட்ட விலங்கினமாக மாறியிருக்கின்றது. முன்பெல்லாம் ஆபிரிக்கக் கண்டத்தின் கிழக்கிலும், மத்தியிலும் இவை செறிவாகக் காணப்பட்டுள்ளன. 2017ஆம் ஆண்டில் இந்த இனத்தில் மூன்றுதான் எஞ்சி இருக்கின்றன என்று நாம் அறியக் கிடைத்த தகவல் அதிர்ச்சி அளிக்காமல் இருக்குமா, என்ன? அத்தோடு இந்த மூன்றுமே செக் குடியரசின் ஒரு மிருகக் காட்சிச் சாலைக்குச் சொந்தமானவை. இவர்களின் செலவில், கென்யாவின் ஒரு வன விலங்குப் பாதுகாப்பகத்தில் இவை பராமரிக்கப்பட்டு வருகின்றன. இவற்றுக்கு 24 மணிநேரப் பலத்த பாதுகாப்பும் பராமரிப்பும் போடப்பட்டுள்ளது. இவை அடைக்கப்பட்ட நிலையில் இருந்தால் இனவிருத்தி இடம்பெறாது என்பதால், ஒன்றை இடையிடையே காட்டில் சுதந்திரமாக உலாவ விடுகிறார்கள். இவையும் இறந்து போனால், பள்ளிப் பிள்ளைகளுக்குச் சித்திரமாக வரைந்து காட்டி, 'முன்னொரு காலத்திலே...' என்று பாடம் ஆரம்பிக்கும் நிர்ப்பந்தம்தான் வரும்.

### கறுப்பு - வெள்ளை இரகசியம்

காண்டாமிருகத்தின் நிறம் சாம்பலாக இருக்கும்போது, அதென்ன வெள்ளை, கறுப்பு என்று கதை விடுகிறேன் என்கிறீர்களா? நீங்கள் சொல்வதும் சரிதான். இவற்றின் நிறம் சாம்பல்தான். ஆனால், ஆபிரிக்க மொழியில் 'wyd' என்பது அகலம் என்பதைக் குறிக்கும் சொல்லாகும். இந்த வெள்ளை இனத்துக்கு உதடுகள் அகன்று சதுரமாக இருக்கின்றன. இவை புல் மேய்வதற்கு வசதியாக அமைந்துள்ளன. அதேசமயம் கறுப்பு இனங்களின் உதடுகள் கூரான கொழுக்கிபோல் அமைந்திருக்கின்றன. மரத்தில் தொங்கும் பழங்கள், உயரமாக அமைந்து, பின்னிப்பிணைந்த செடிகளின் இலைகள் போன்றவற்றைச் சுலபமாக உண்பதற்கு இப்படியான உதடுகள் அமைந்திருக்கின்றன போலும்! ஆங்கிலத்தில் வெள்ளையைக் குறிக்கும் சொல்லும், அகலத்தைக் குறிக்கும் ஆபிரிக்கச் சொல்லும், ஒரே தொனியைக் கொண்டுள்ளமையால், ஓர் இனம் வெள்ளையாயிற்று. மற்றையது கறுப்பாயிற்று. இது தான் உங்களுக்குத் தெரிந்த சாம்பல், கறுப்பும் வெள்ளையுமாகிய இரகசியம். ஆசியக் கண்டத்துக்கு உரிய காண்டாமிருகங்கள். இந்தியாவிலும். இந்தோனேசிய தீவுகளான சுமத்திரா, ஜாவாவிலும் காணப்படுகின்றன. இவற்றுள் இந்தியா, ஜாவாவிலுள்ள காண்டாமிருகங்களுக்கு ஒரேயொரு கொம்பு மாத்திரமே உண்டு. ஆனால் சுமத்திராத் தீவிலுள்ள மிருகங்களுக்கு. ஆபிரிக்கக் காண்டாமிருகங்களைப் போல இரண்டு கொம்புகள் உண்டு.

'நான் கொம்பன்' என்று பெருமைப்பட வைக்காமல், 'எங்கள் கொம்புகளே எமக்கு எமனாக வாய்த்து விட்டனேவே' என நினைத்து காண்டாமிருகங்கள் கலங்குகின்றன. அழிகின்றன.

### 800 கிலோ நிறை!

இந்தக்காண்டாமிருகங்கள் எண்ணூறு கிலோ எடையுடையவை. இவற்றின் எடை 800கிலோக்களில் இருந்து ஆயிரத்து400 கிலோக்கள் வரை இருக்கிறது. 2ஆயிரத்துக்கு மேற்பட்ட எடை கொண்ட அசாதாரண ஆண் காண்டாமிருகங்கள் சில கூட முன்பு காணப்பட்டிருந்தமை புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வருகின்றது. பொதுவாகவே இந்தக் காண்டாமிருகங்களில் ஆண்களை விடப்பெண்கள் தோற்றத்தால் சிறியவை.

### இவர் பெரிய கொம்பனோ?

மனிதர்களின் நகங்களும், தலைமுடியும் கெரட்டினால் ஆனவை. இம்பாலா மான், மற்றும் மான் இனங்களின் நீண்ட கொம்புகள்கூட கெரட்டினால் உருவாகியவை தான். காண்டா மிருகங்களின் மண்டையோட்டில் துருத்திக் கொண்டிருக்கும் அவற்றின் இரண்டு கொம்புகளும்கூட இந்தக் கெரட்டினால் ஆனவையே. மூளையிலிருந்து வெளிக்கிளம்பும் எலும்புகளை மூடிக்கொண்டு, இந்தக்கெரட்டின் இருப்பது, கொம்புகளுக்குப் பெரும் பலமாக அமைகிறது. காண்டாமிருகத்துக்குள்ள இரண்டு கொம்புகளில் ஒன்று நீண்டதாக இருக்கும். இது 50 சென்ரிமீற்றர்கள் தொடக்கம் 140சென்ரிமீற்றர்கள் வரை நீளம் என்று சொல்லப்படுகின்றது. இவற்றில் இதுவரை அறியப்பட்ட மிக நீண்ட கொம்பாக 1.5மீற்றர்கள் வரை நீளமுடைய கொம்பு, ஒரு கறுப்புக் காண்டாமிருகத்துக்கு இருந்துள்ளதாகப் பதிவிலுள்ளது. "இவர் பெரிய கொம்பனோ...?" என்று கேட்குமளவுக்கு இவற்றுக்கு நீண்ட கொம்புகளும் இருக்கின்றன. சில மிருகங்களுக்கு, போனஸ் என்று கூறிவிடும்படியாக சிறிய, மூன்றாவது கொம்பு ஒன்று இருப்பதும் கண்டறியப்பட்டுள்ளது. எதிரிகளிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும், மண்ணுக்கடியிலுள்ள வேர்களை, கிழங்குகளைக் குத்திக் கிளறவும், கிளைகளை முறிக்கவும், இந்தக் கொம்புகள் உதவுகின்றன.

### எதிரியாகி விட்டதே என் கொம்பு...!

"நான் கொம்பன்" என்று பெருமைப்பட வைக்காமல், "எங்கள் கொம்புகளே எமக்கு எமனாக வாய்த்து விட்டனேவே" என நினைத்து காண்டாமிருகங்கள் கலங்குகின்றன. அழிகின்றன. தொகையில் அருகுகின்றன.

(தொடரும்)

---

# மனிதனை சபித்த பறவைக் கதை



3

கவிதை

வானவன்

கதிர் முற்றிச்
சதிராடும் நெல்லிதழில்
ஊஞ்சல்கட்டி
காதலி இடையணைத்தாடும்
கனவு
கலைந்தேபோனதாய்
புலம்பித் திரிகிறது
பறவை.

மாரி பொய்த்த நிலத்தில்
குளத்தில் தாமரைக் கிழங்கும்
கருகிப் பெருநாற்றம்
காற்றில்
கலந்ததாய்க் கலங்குகிறது
பறவை.

காலமழையின்றிப் போனது
வானத்தின் குற்றமல்ல
என்று கூறிச்சினக்கிறது
அந்தச்சிறு பறவை.

நிழலுக்கொதுங்கவும்
வழியில்லை என்றானபோது
கூடு கட்டுவது எப்படி?
குடும்பம் நடத்துவது எப்படி?

மழை முகிலைப் பிடித்து
தலைமேலே
தேய்த்துக் குளிப்பதற்கு
மரங்களேதும் நாட்டிலில்லை.
காடும்
அனேகமாய்ப் பகலிலும்
களவு போகிறது.

வல்லூறும்
அலறித் திரிகிறது
கூடு கட்டவும்
குடும்பம் நடத்தவும்
இடம் தேடி.
இரையையும் தான்.

எங்கே போயாற?
எவரிடம் சொல்லியழ?
யாதொன்றும்
புரியாமல் அலைகிறது
புறவை.

## அலசல்

மேரிகிறேஸ் வரதராஜன்

## இந்தியா இப்பிடித்தான், கொஞ்சம் பிசகு...!



ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் ஒரு தமிழர் உரையாற்றிக் கொண்டிருக்கிறார். அவர் பெயர் சமந்தா ரட்ணம். அவருடைய குடும்பம் பல காலங்களுக்கு முன்பு அகதியாக அங்கு சென்றது. அங்கு அவர் குடியுரிமை பெற்றார். கல்வி கற்றார். தற்போது ஒரு கட்சியின் தலைவியாக உள்ளார்.

அகதியாகச் சென்றவர் தற்போது நாடாளுமன்ற உறுப்பினராகி விட்டார்.





இவர் நளினியின் மகள் அரித்ரா. இந்தியத் தாய்க்கு, இந்தியச் சிறையில் பிறந்தவர். அவருக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

ஆனால், குடியுரிமை மட்டுமல்ல சிறையில் இருக்கும் தன் தாய், தந்தையரைப் பார்ப்பது கூட மறுக்கப்படுகிறது.

தற்போது லண்டனில் இருக்கும் அரித்ராவுக்குப் பிரித்தானியா குடியுரிமை வழங்கியிருக்கிறது. அவர் மருத்துவக் கல்வி பெறுவதற்குரிய வாய்ப்பும் வழங்கப்பட்டிருக்கிறது. அரித்ராவின் தாய், தந்தையர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்றுச் சிறை வைக்கப்பட்டிருப்பதால்தான் அவருக்கு வாய்ப்பு மறுக்கப்பட்டது எனச் சிலர் நினைக்கக்கூடும். அப்படி நினைப்பவர்களுக்கு இன்னொரு தகவலையும் தெரியப்படுத்த வேண்டும்.

தமிழக அகதி முகாமில் இருக்கும் நந்தினி என்ற ஒரு அகதி மாணவி பரீட்சையில் மருத்துவக் கல்விக்குத் தேவையான புள்ளிகள் எடுத்திருந்தும் அவருக்கு மருத்துவக்கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்டிருக்கிறது. இந்த மாணவியோ அல்லது இவரின் தாய், தந்தையரோ எந்தக் குற்றமும் செய்யவில்லை. எந்த வழக்கும் இவர்கள் மீது இல்லை. அகதி என்பதாலேயே இவருக்கான கல்வி வாய்ப்பு இந்திய அரசால் மறுக்கப்பட்டிருக்கிறது. இவர் நீதி கோரி உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். அப்போதைய 'அம்மையார்' இரக்கம் காட்டவேயில்லை.



ஆஸ்திரேலியா சென்ற ஓர் அகதிப்பெண் அங்கு அமைச்சராகி இருக்கிறார். இந்தியச் சிறையில் பிறந்திருந்தாலும் மற்றைய பெண் லண்டன் சென்றதால் அங்கு மருத்துவராக இருக்கிறார். மறுபுறம் தேவையான புள்ளிகள் எடுத்திருந்தும் அகதி என்று கூறி கல்வி வழங்க மறுத்திருக்கிறது இந்திய அரசு.

பிரிட்டன், ஆஸ்திரேலியா மட்டுமல்ல இன்னும் பல நாடுகள் தம்மிடம் தஞ்சமடையும் அகதிகளுக்குக் கல்வி, வேலை மட்டுமல்ல குடியுரிமையும் வழங்குகின்றன. ஆனால் இந்தியாவோ தனது நாட்டவருக்கே குடியுரிமை தராதது மட்டுமன்றிக் கல்வியையும் மறுக்கிறது. இத்தனைக்குப் பிறகும் இந்தியா ஈழத் தமிழருக்கு உதவும் என்று கூறிக்கொண்டு திரியும் நம்மவர்களை என்னவென்று சொல்வது...?

# f சின்னதா ஓர் அரட்டை





## 'பேஸ்புக்'கிலை எல்லாமே பொய் என்டும் சொல்லேலாது!

"1980ஆம் ஆண்டு சென்னை - மயிலாப்பூரில் ஜெயலலிதாவுக்குக் குழந்தை பிறந்தது உண்மைதான். எனது பெரியம்மா அவருக்கு உதவியாக இருந்தார். குழந்தை பிறந்ததை யாரிடமும் சொல்ல வேண்டாம் என்று எங்களிடம் ஜெயலலிதா சத்தியம் வாங்கிக் கொண்டார் என ஜெயலலிதாவின் அத்தை மகள் லலிதா கூறியுள்ளார்" என்கிற செய்தி 'பேஸ்புக்கில்' உலாவித்திரிகிறது.

"அப்பிடியெண்டால்... ஜெயலலிதா 'செல்வி' இல்லையாடா?"

"இந்த அம்மா, தான் பெத்த பிள்ளையயே, வெளிய காட்டமா மூடி மறைச்சிருக்கே"

"இவருக்கு எதிர்க் கட்சியா இருந்த கட்டுமரமும் ஆரம்பத்திலை தனக்குப் பிறந்த கனிமொழியைத் தன்னோடை பிள்ளை இல்லை எண்டு குத்துக்கரணம் அடிச்சுப் பிறகு முடியாமல் அதை ஏற்றுக் கொண்டதும் நடந்திருக்கு. இந்த ரெண்டும்தான் தமிழகத் தமிழர்களின் தலைமைகள்...!"

"தலைவலியா இருந்து ஆண்டிருக்குதுகள். இப்ப இந்த விசயத்திலை ரெண்டையும் 'ஓவர்டேக்' பண்ணின கமலுக்குப் பின்னலை சுத்துதுகள், அதுபோக இப்பவும் இதுகளுக்குப் பின்னாலை அலகு குத்தி, மொட்டை போட ஒரு கூட்டம்! இதுகள் எப்ப திருந்தி...! சப்பா இப்பவே கண்ணைக் கட்டுது"

அந்தச் செய்திக்கு இப்படியாக ஏகப்பட்ட கருத்துக்கள்.

## ஆதரிப்பதா? இல்லையா?

பூனை கறுப்பா? வெள்ளையா? என்பது பிரச்சினை அல்ல. அது எலியைப் பிடிக்குமா? இல்லையா? என்பதே முக்கியம்.

அதுபோன்று எமக்கு ஆதரவு தருபவர்கள் சீமானா? திருமுருகன் காந்தியா? என்பது பிரச்சினை அல்ல. எவர் எமக்கு ஆதரவு தருகிறார், என்பதே முக்கியம். மாவீரர் நினைவு தினத்தில் திருமுருகன்காந்தி, கௌதமன் எதற்கு என்று சிலர் கேள்வி கேட்கிறார்கள்.

நாம் வெல்வதற்கு எமக்கு எதிரானவர்களையும் வென்றெடுக்க வேண்டிய நிலையில் இருக்கிறோம். இந்த நிலையில் எமக்கு ஆதரவாகக் குரல் கொடுப்பவர்களை வேண்டாம் என்று கூறுவதற்கு ஒன்றில் நாம் முட்டாள்களாக இருக்க வேண்டும் இல்லையேல் எதிரிக்குத் துணை போகிறவர்களாக இருக்க வேண்டும். தமிழ் இனம் இனி ஒருபோதும் முட்டாள்தனமாக இருக்காது. எதிரிக்குத் துணை செய்யும் கருத்துகளுக்கும் இடமளிக்காது.




## புலம்பெயர் வட்டத்துள் ஒரு புடுங்குப்பாடு

**கேள்வி:** போராடியவர்கள் தாயகத்தில் வறுமையில் வாடும்போது மாவீரர்களுக்கு லண்டனில் மாபெரும் செலவில் விழா தேவையா?

**பதில் :** நல்லதொரு கேள்வி. கேட்க வேண்டிய கேள்விதான். ஆனால்,

இதே லண்டனில் ஈஸ்ற்காமில் அருகருகாக 4கோயில்களைப் பல மில்லியன் ரூபாவில் கட்டும்போது 'இது தேவையா?' என்று கேள்வி கேட்காதவர்கள் ஒக்ஸ்போட் நகரில் மாவீரர்களுக்குப் பணிமனை கட்டும்போது ஏன் கேட்கின்றனர்? இதே லண்டனில் அரினா மண்டபத்தில் ஏ.ஆர். ரகுமானின் கச்சேரி நடக்கும்போது கேள்வி கேட்காதவர்கள் எக்சல் மண்டபத்தில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தும்போது ஏன் கேட்கிறார்கள்? வெம்பிளி அரினாவில் மானாட மயிலாட நடந்தபோது கேள்வி எழுப்பாதவர்கள் அதே வெம்பிளி அரினாவில் மாவீரரை நினைவு கூரும்போது ஏன் கேட்கிறார்கள்? ஈலிங் அம்மன் றோட்டில் ஆயிரக்கணக்கான தேங்காய்களை உடைத்தபோது 'ஏன் இந்த வீண் செலவு?' என்று கேட்காதவர்கள் மாவீரருக்குப் பூவும் விளக்கும் வைக்கும்போது ஏன் கேட்கின்றனர்? நாய்க்கு ஐயர் பிடித்துச் செத்த வீடும், கெலிகப்டர் பிடித்துச் சாமத்தியச் சடங்கு நடத்தும்போதும் கேள்வி எழுப்பாமல் மௌனமாக இருந்தவர்கள் மாவீரர் நினைவு கூரும்போது மட்டும் ஏன் கேள்வி கேட்கின்றனர்?

**கேள்வி:** இத்தனையும் கேட்ட ஒருவர்தான் காயம்பட்ட போராளிகளுக்காகக் கேள்வி கேட்க முடியுமா... என்ன...?

**பதில்:** இல்லை. ஆனால், காயம்பட்ட போராளிகள் மீது அக்கறை கொள்ளும் ஒருவர் உண்மையில் இத்தனையையும் கேட்டிருப்பார் அல்லவா?

குறுகிய காலத்துக்குள் தமிழினம் மீண்டு, எழுந்து நிற்கிறது என்றால் அதற்கு முக்கிய காரணம் புலம்பெயர்ந்த தமிழர்களின் உணர்வும் பங்களிப்புமே. புலம்பெயர்ந்த தமிழர்கள் ஒருபுறம் போராட்டத்தை முன் நகர்த்துகின்றனர். மறுபுறத்தில் தாயகத்தில் உள்ள தம் உறவுகளைத் தாங்கிப் பிடிக்கின்றனர். கேள்வியை விதண்டாவாதத்துக்குக் கேட்கக் கூடாது. உண்மையயும் நேர்மையும் அதில் இருக்கவேண்டும்.

**கேள்வி:** ???

கோத்தபாயாவால் பேட்டி கொடுக்க வைக்கப்பட்ட மருத்துவர் வரதராசன் கடந்த வருடம் ஐ.நாவில் தமிழ் மக்களுக்குச் சார்பாகச் சாட்சியம் அளித்தார். கோத்தபாயாவால் சாட்சியாக முன்னிறுத்தப்பட்ட தமிழ்செல்வனின் மனைவியும் ஐ.நாவில் தமிழ் மக்கள் சார்பாகச் சாட்சியம் வழங்கினார். இதேபோன்று அடுத்த வருடம் யார் சாட்சியம் அளிக்கப் போகிறார்கள் என்று இலங்கை அரசு அச்சம் கொள்கிறது. இவையாவற்றையும் சாதிப்பதுகூட புலம்பெயர் தமிழர்களின் தொடர்ச்சியான போராட்டமே.

## அந்தக் கால நினைவுகள்

மிருசுவில் தமிழ்தாசன்

# சின்னமேளம் வருகுது ஒருத்தரும் எழும்பக் கூடாது...

6



அந்த ஊரே விழாக்கோலம் பூண்டிருந்தது. அம்மன் கோயில் திருவிழா ஆரம்பமாகிவிட்டால் இப்படித்தான். பதினைந்து நாள்கள் திருவிழாவில் ஐந்து நாள்களைக் கழித்துப் பார்த்தாலும் மிகுதி பத்து நாள்களுக்கு வேடிக்கை வினோதங்கள் கொண்டாட்டங்களுக்குக் குறைவுகளேதுமிருப்பதில்லை. சின்னஞ்சிறார் முதல் பாட்டன் பாட்டிவரை திருவிழா பார்ப்பதற்கு முண்டியடித்துக் கொண்டிருப்பர்.

குலசேகரம் வீட்டார் பக்கத்து வீட்டுப் பரமர் குடும்பத்தினர் அத்தனை பேருடனும் ஆச்சிப்பிள்ளை. சிவக்கொழுந்து என ஒரு பட்டாளமே சேர்ந்து கோயிலை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர்.

"எனக்கு இருபது சதம் வேணும்"

"எனக்குக் கால் ரூபா எண்டாலும் தராட்டில் அம்மாளானை நானிண்டைக்குத் திருவிழாவுக்கு வரமாட்டன்."

காத்தலிங்கத்தார் வீட்டுச் சிறுவர்களிருவரும் அடம்பிடித்துக் கொண்டிருந்தனர். குடுத்துவிடுங்கோப்பா ஒரு அரை ரூபா எண்டாலும். பாவம்! அதுகள் உந்தத் திருவிழாவுக்கு மட்டும் தானே போறதுகள். குடுத்துவிடுங்கோ"

சின்னாச்சி தனது பிள்ளைகளிருவருக்காகவும் வக்காலத்து வாங்கக் காத்தலிங்கத்தார் தனது வல்லுவத்தை எடுத்து ஒரு ஐம்பது சதத்தை மூத்தவனின் கையில் திணித்தார்.

"இந்தா! இதைச் சில்லறையாய் மாத்தி கால் ரூபாயை எடுத்துக் கொண்டு இருபது சதத்தை தம்பியிட்டைக் கொடுத்திட வேணும். மிச்சம் அஞ்சு சதத்தைக் கவனமாய் கொண்டுவர வேணும். சரியோ! பேந்து, அம்மாக்குழல், விசில் வாங்கிப் போட்டு..என்று எச்சரிக்கையுடன் அனுப்பினான்" கிட்டத்தட்ட எல்லா வீடுகளிலும் இதேநிலைமைதான்.

ஆலய வாயிலில் மூன்று சிகரங்கள் தலை நிமிர்ந்து நின்று ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சிக் கொண்டிருந்தன. மேடையில் யாரோ தவில். முன்பின் பரிச்சயமற்ற கலைஞர்கள் சபையில் ஆங்காங்கே சில பெண்களின் தலைகள்! இல்லையென்னாது சிறுவர்களும் ஆடி, ஓடி விளையாடித் திரிந்தனர். "தாமரைப் பூத்த தடாகமடி" எனும் தண்டபாணிதேசிகரின் கீர்த்தனையை ஒருமுறை வாசித்துவிடுவோம் எனப் பகீரதப் பிரயணத்தனம் செய்த நாதஸ்வரக் கலைஞர் அதில் தோற்றுத்தான் போனார். என்ன பாடலென்றே புரியாது தவில் வித்துவான் தலையைச் சொறிந்தார். "சே உதையென்ன பாக்கிறது மேல் மேளங்கள் வந்தபிறகு வருவம், எழும்பும் மார்க்கண்டன்ரை கடையில் ஒவ்வொரு சுடுதண்ணி குடிச்சிட்டு வருவம்"

இளைய தம்பியரும் சிவப்பிரகாசமும் மார்க்கண்டுவின் தற்காலிகத் திருவிழாக் கடைக்குள் நுழைந்துகொண்டனர். அருகருகே இன்றும் சில தேநீர்க் கடைகள் எல்லாமே திருவிழாவுக்காக அமைக்கப்பட்ட தற்காலிகக் கொட்டில்கடைகள்.

இரண்டு தேநீர்கள் மேசைக்கு வந்தன. "கடிக்கிறதுக்கு வடை ஏதேன் தரட்டே?"

"வேண்டாம் மோனை ஒரு அஞ்சு சதத்துக்கு சுண்டல் தா. அது இரண்டு பேருக்கும் காணும்"

கணக்குப் பதினைந்து சதம். பத்துச் சதக்குற்றிகள் இரண்டை விட்டெறிந்தார் இளையதம்பியர்.

"மிச்சம் அஞ்சு சதத்துக்கும் சேலம் பீடிதா மோனை"

ஐந்து பீடிகளைக் கொடுத்தான். வாங்கிப் பற்றிய படி இருவரும் வெளி வீதியில் உலாவத் தொடங்கினர்.

* * *

"எட என்னென்ன லைற்றுகளெல்லாம் பூட்டியிருக்கி றாங்கள். இளையண்ணை பாத்தியே! விளையாட்டை!"

"ஓமடா சிவப்பி! உது தானாம் நெல்லியடி ஆராச்சியெண்டவன்ரை லைற்று மிசினாம். இப்போதைக்கு உதைவிடப் பெரிய மிசினொண்டும் இயினேக்கை இல்லையாம்"

"மெய்யே காணும். இப்ப மேளம், சிகரம் , சப்பறம், லைற் மிசின், சின்ன மேளம் அது இதுவெண்டு கணக்குப் பார்க்க திருவிழாக்காறருக்கு ஒரு தொகையெல்லோ முடியப் போகுது".

"ஓ! .எல்லாமாய் ஒரு மூவாயிரம் எண்டாலும் எல்லாமாய் முடியும். அது மணியத்தார் தன்ரை சொந்தக் காறரிட்டை ஆளுக்குப் பத்து இருவதெண்டு தண்டிச் சமாளிச்சுப் போடுவார்" மேடையில் விசேட தவில் நாதேஸ்வரக் கலைஞர்கள் ஏறி அமர்ந்து கொண்டார்கள். இங்கொன்றும் அங்கொன்றுமாய்க் கலைந்து திரிந்த ரசிகர்கள் மேளக் கச்சேரி பார்க்கும் ஆவலில் ஒன்று கூடி அமர்ந்து கொண்டனர்.

"எட! உது ஆர் தெரியுமே! உவன் தானப்பா வாக்கன் கணேசன். நாச்சிமார் கோயிலடியான். நிறம் மேளம் மற்றது. இணுவில் சின்ராசா சும்மா விரலாலை கொறிப்பன். உந்தச் சிவலை மொக்கன் தானப்பா குமர குரு பத்மநாதனுக்கு இப்ப உவன் தான் சோடி. அந்த வாடலிருக்கிறானெல்லே. சாவகச்சேரி முருகப் பாவின்ரை பெடியன். தம்பியார் குழல் வாசிக்கிறவன். நல்லாய் பாட்டு வாசிப்பனாம்".

"அப்ப எல்லாம் நிறம் மேளம்தான். நாலு செற்றும் இண்டைக்குக் கலக்கத்தான் போறாங்கள்" மேளக்கச்சேரி களைகட்டிவிட இடை அருவியாகக் கொட்டிக்கொண்டிருந்தது. அடிக்கடி சபையோரிடமிருந்து பலத்த கரகோஷங்கள்!

"எழும்படா! உதையென்ன பாக்கிறது. போய் வடக்கு வீதி வேம்படியிலை நிண்டு வீடி அடிச்சுப் போட்டு பாட்டு வசிக்கத் துவங்க வரும். என்ன!"

"ஓமடா நவத்தான்! உந்தக் குடும்பிக்காரக் குழல்காரன் அண்டைக்கு பேரின்பமவையின்ரை கலியாண வீட்டுக்கு வந்து வாசிச்சான்ராப்பா பாட்டுக்கள். அமுதைப் பொழியும் நிலவே! பட்டணம்தான் போகலாமெடி, எந்தனுள்ளம் துள்ளி. என்ன சோக்காயிருந்தது மச்சான்"

சிறுவர்கள் ஓடி விளையாடுவதும் வந்தமர்வதுமாக ரகளை பண்ணிக் கொண்டிருந்தனர். பெண்கள் மட்டும் அந்த அமர்ந்த இடத்தை விட்டசைய முடியாது ஏதோ தண்டனையை அனுபவிப்பவர்கள் போலப் பரிதாமாக அமர்ந்திருந்தனர்.

"ஆராம் சின்ன மேளம்!"

"விலாசினி செற்று, விளான் செற்று, மற்றது முல்லை சகோதரிகளாம்"

"அந்த விலாசினி செற்றிலை ஒரு சிவப்பி இருக்கிறாள் மச்சான். அவளின்ரை சிரிப்பும் ஆட்டமும்... உண்ணாணை நான் அவளைப் பார்க்கத்தான் வந்தனான்"

"டேய் சிவராசா! நீ அவளைச் சொல்லுறாய். விளான் செற்றிலை ஒரு கறுப்பி நெடுப்பியிருக்கிறாள். பெடியங்களுக்குக் காலாலை மண் அள்ளிப் போட்டு எத்தினை சேட்டையள் விடுவளெண்டு பாரன். ஐயோ! ஐயோ!"

மேளச்சமா நடந்து கொண்டிருந்தது. எல்லோரும் ஓகோ ஆகா என ரசித்துக் கொண்டிருக்கத் தாளமென்றாலே என்னவென்று அறிந்திருக்காத குளத்தடிக்குணத் தானும் தொடையில் பச்சைப் பிழையாகத் தாளம்போட்டுக் கொண்டிருந்தான். என்ன செய்ய! அருந்திய கள்ளின் வேகம்!

"எடி பொன்னம்மா! எழும்பனடி ஒருக்கால் ஒண்டுக்குக் கிண்டுக்குப் போய் வருவம்"

"நான் வரயில்லை! உனக்கு வந்தால் போட்டு வா. எனக்கு வரயில்லை" பொன்னம்மா மேளச் சமாவை ரசிப்பதில் ஆர்வமாயிருந்தாள்.

"எடிஎடி! நாச மறுவாளே! எழும்படி எடி மகேசு எழும்படி! கடவுளாணை காலும் விறைச்சுப் போட்டுசுது. நாளைக்குப் பக்குவப் படுறவயதிலைஇதிலை வந்து கிடக்கிறாள் வெக்கமில்லாமல். எழும்படிமகேசு! சின்ன மேளம் வரப்போகுது எழுப்பு மோனை! கடலைக் கொட்டை வாங்கித் தெல்லாம். ஐயோ...! என்ரை மடியை விட்டு எழும்படி மகேசு!"

நாகம்மாக்கா நாக மாகச் சீறியும் மகேசு எழும்புவதாயில்லை. ஆனந்த சயனம் செய்து கொண்டிருந்தாள்.

மேளச்சமா முடிந்த கையுடன் மூன்று பவுன் சங்கிலியைப் பவிசாகக் காட்டிய படி மேடையிலேறிய திருவிழா உபயகாரர் திருநாவுக்கரவு ஒலிவாங்கியை எடுத்து ஊதோ ஊதென்று ஊதிக்கொண்டிருந்தார். எதையோ அறிவிப்புச் செய்வதற்காகவே இந்த ஊதல். இப்படியே இவர் ஊதிக்கொண்டிருக்க சின்ன மேளக் கோஷ்டியினரின் பாடகர்கள், வாத்தியக் கலைஞர்கள் அனைவரும் வந்து மூன்று இடங்களிலே அமர்ந்து கொண்டனர். இதனை அறிவிப்பதற்காகத்தான் அந்த ஊதல். அதற்கிடையில் இவர்களை முந்திக் கொண்டனர்.

"எல்லாம் இரு இருந்து பார்! சின்ன மேளனம் வருகுது. ஒருத்தரும் எழும்பக்குடாது. இரு! இரு!"

வாழைச்சரையைக் கட்டாகக் கட்டி அதிலடித்து ஒலியெழுப்பிய படி சபைக்குள் நுழைந்தார் இராசர். சாராய வாசம் குப்பென வீசி சபையோர்களை அசௌகரியப்படுத்தியது. மூன்று சதுர்க்காரக்குழுக்கும் மூன்று இடங்களை ஆக்கிரமித்துக் கொண்டனர். சபையோர் முகங்களில் ஆர்வம்.

விலாசினி கோஷ்டியில் கண்களைப் பூஞ்சியபடி ஏதோ பாடிக் கொண்டிருந்தார் பாட்டுக்கார நாராயணி. வாக்கன் சின்னத்தம்பி தபேலாவை உருட்டியடிக்க ஆர்மோனியம் ஏதோ ஒரு பாடலை வாசித்தது. ஒலிவாங்கி இல்லாத படியால் யாருக்கும் எதுவும் கேட்கவில்லை. பாடி வாசித்தவர்களுக்கே கேட்டிருக்குமோ என்பது சந்தேகம்தான். மறுபுறத்தில் விளான் செற்றுக்காக நாகர்கோயில் ஈழத்துச் சௌந்தரராஜன் பாடிக்கொண்டிருக்க அங்கேயும் வாத்தியங்கள் ஒலித்துக்கொண்டிருந்தன. முல்லைச் சகோதரிகள் பக்கமும் இதே கதைதான்.

* * *

"சண்முகம் வாவன்ரா கடலைக் கொட்டை வாங்கிக் கொண்டு வரும்"

"ஓமடா பத்துச் சதத்துக்குக் கடலைக்கொட்டையும் மண்ணிலாக் கொட்டையும் வாங்கிவந்தால் மடியுக்கை போட்டிட்டு அதைக் கொறிச்சுக் கொண்டு உவளவையின்ரை ஆட்டத்தைப் பார்க்கலாம்".

சண்முகமும் நாதனும் தாங்கள் இதுவரை வேட்டிகளில் சுமந்திருந்த புழுதியைப் பக்கத்திலிருந்தவர்களுக்கு அள்ளி இறைத்துவிட்டு அலட்சியமாக எழுந்து சென்றனர்.

இதோ விலாசினி கோஷ்டி. அந்தச் சிவப்பியுடன் ஒரு குண்டும் சேர்ந்து மார்புக்குக் கைகளைக் கட்டிய படி ஏதோ பக்திப் பாடல்களை முணுமுணுத்து மெல்ல மெல்ல சினிமாப் பாடல்களின் பக்கம் சாயத் தொடங்கினர்.

"ஆளை ஆளைப் பார்க்கிறார். ஆட்டத்தைப் பார்த்திடாமல் ஆளை ஆளைப் பார்க்கிறார்"

சிவராசன் சொன்னது உண்மை தான். கண்களைச் சிமிட்டியபடி அந்தச் சிவப்பி ஆடி இளைஞர்களின் உள்ளங்களைத் துவம்சம் செய்துவிட்டு உடைமாற்றிக்கொண்டு வரப் போய்விட்டார்கள். அவர்கள் போக இங்கேயிருந்த வாலிபக் கூட்டம் மறுபுறம் விளான் கோஷ்டியை நோக்கிப் பறந்தது. "வாங்க மச்சான் வாங்க வந்த வழியைப் பாத்துப் போங்க....! அந்த கறுப்பி, பாட்டிப் புயலாக ஆடக் கூட நின்றவளும் ஏதோ அரைகுறையாகப் பாடி ஆட மிருதங்கம் வல்லிபுரம் தபேலாவைத் தட்ட ஆர்மோனியச்சக்கரவர்த்தி சுதி தாங்க முடியாது எழுந்தமர்ந்து எழுந்தமர்ந்து பாட அந்தக் காட்சி வாலிப உள்ளங்களை வளைத்துப்பிடித்துவிட்டது.

* * *

முல்லைச் சகோதரிகள் சற்று அடக்கமாகவும் அமைதியாகவும் நிகழ்வினைக் கொடுத்த படியாலோ என்னவோ! அங்கே கூட்டம் சற்றுக் குறைவாகவேயிருந்தது. என்ன நினைத்தாரோ ஆர்மோனிய விற்பன்னர். டிங்கிரி டிங்காலே பாடலை வாசிக்க முல்லைச் சகோதரிகள் உருவிக்கொண்டவர்களாக சன்னதம கொண்டு ஆடிப்பாட அங்கே இப்போது வாலிபர் கூட்டம் இரட்டிப்பாகியது.

எப்படியோ சின்ன மேளக் கச்சேரியும் முடிவுற அதிகாலை ஐந்து மணியை நெருங்கும் வேளை இறந்த மாட்டு உண்ணிகள் போல ரசிகர்கள் வீடு நோக்கிக் கழரத் தொடங்கினர். முத்துச் சப்பறத்தில் அம்பாள் வீதியுலா வரப்போகின்றாள். மங்கல வாத்தியங்கள், தீவட்டி, சீப்பந்தம் சகிதம் அம்பாள் வீதியுலா வருகின்றாள் மிகச் சொற்பமான அடியார்களுடன். "டேய் கிடக்கிற காசுக்கு மண்ணிலாக்கொட்டையும் கடலைக் கொட்டையும் வாங்கிக்கொண்டு வாடா"

என்ன தானிருந்தாலும் திருவிழாவுக்கு வரும் போதிருந்த உற்சாகத்தை ஒருவர் முகத்திலேனும் காண முடியவில்லை.

சிறுவர் நவீனம்

செல்லையா குமாரசாமி



# தங்கப்பறவை 5

'அணில்களோ எலிகளோ இழுத்தும் போயிருக்கலாம். சுயம்வரத்தன்று அணிந்தவற்றை எங்காவது வைத்துவிட்டு மறந்திருப்பாய்'' எனப் பேச்சுக்கு முற்றுப் புள்ளி வைத்தார் அரசர்.

ஐந்து நாள்கள் தன் கால்களையே வாகனமாக்கித் தன் பயணத்தைத் தொடர்ந்தான் பார்த்தீபன்.

ஐந்து நாள்களும் மதனாபுரி நாட்டிலே அவனுடைய தேடல் நடைபெற்றது. தோல்வி கண்டது. அரசர் கட்டுவித்த சத்திரங்களில் உண்டு. உறங்கியபோது அங்கிருந்தவர்களிடமிருந்து அவன் அறிந்து கொண்டது. "தங்க நிறத்தினைக் கொண்ட பறவை மதனாபுரி நாட்டில் இல்லை. அப்படியான பறவையைக் கண்டவர்களும் இல்லை"

பக்கத்தேயிருக்கும் நாட்டுக்குப் போவதற்குத் தீர்மானித்தவன் ஆறாவது நாள் அந்த நாட்டில் கால் பதித்தான். அவன் வந்த இடம் ஒரு சிறிய கிராமம். மதியம் வரை தங்கப் பறவை பற்றிய செய்தி ஒன்றும் கிட்டாமையால் தெற்குத் திசை நோக்கி நடந்தான். நடந்து கொண்டேயிருந்தான்.

சூரியன் ஓய்வெடுக்கும் நோக்கிற்போலும் விரைந்து கொண்டிருந்தபோதுதான் தான் இப்போது அடர் காடு ஒன்றை அண்மித்ததை உணர்ந்தான்.

காடோ பெருங்காடு. கொன்று உண்ணும் கொடிய விலங்குகள் உலாவும் காடு எனத் தெரிய வந்ததும் சாதாரணமாக எந்த மனிதனுக்கும் எழக் கூடிய பயம் அவனையும் பற்றிக் கொள்ளத் தான் செய்தது.

திரும்பிக் கிராமத்துக்குப் போகலாமென்றாலும் வெகுதூரம் வந்தாயிற்று. இருட்டுவதற்கு முன்னர் கிராமத்தை அடைவதும் சாத்தியமில்லை.

இருள் முழுமையாகக் கவ்விக் கொள்வதற்கு முன்னர் ஏறி அதிலிருந்து இரவைக் கழிக்கக் கூடிய பெருமத்தைக் கண்கள் தேடிய போது அந்தப் பெருவனத்து எல்லையில் சிறு வெளிச்சம் தெரிந்தது.

அவனை அறியாமலே ஒளி தெரிந்த இடம்நோக்கி விரைந்தன கால்கள். அங்கே ஒரு சிறு குடில். குடிலில் இருந்த ஆணும் பெண்ணும் ஐம்பது வயதுக்கு மேலானவர்கள். குடில் வாயிலில் பார்த்தீபனைக் கண்டதும் வெளியே வந்த அவர்கள், "வா தம்பி உள்ளே" என மகிழ்ந்து வரவேற்றனர்.

"இது காட்டு மிருகங்கள் உள்ள இடம். முதலில் வா சாப்பிடு. அதன் பிறகு எல்லாம் பேசிக் கொள்ளலாம். சாப்பிட்டு உடனே மூவரும் மரத்திலுள்ள பரணில் ஏறிவிடுவோம்" எனச் சொல்லியபடி கீறி, நெருப்பில் வாட்டிய மான் மாமிசத்தை அவனுடைய கையில் திணித்தாள் அந்தப் பெண். "தொட்டுக் கொள்ள உப்புக் கலந்த மிளகாய்ப் பொடியிருக்கிறது. அதிலே தொட்டுத் தொட்டு விரைவாகச் சாப்பிடு மகனே"

அந்தப் பெண் கூறியதிலிருந்து கொடிய மிருகங்கள் உலாவும் இடத்துக்குத் தான் புத்தியீனமாய் வந்துவிட்டதை உணர்ந்த பார்த்தீபன் அந்தப் பெண் கொடுத்த மான் மாமிசத்தில் பாதியை மட்டுமே உண்டான்.

பெரிய பாலைமரம். ஒன்றில் மூன்று பாகத்துக்குக் குறையாத உயரத்தில் அமைக்கப்பெற்றிருந்த பரணில், அதிலிருந்து தொங்கிக் கொண்டிருந்த மான் தோலால் பின்னப்பட்டிருந்த ஏணி வழி ஒருவர் பின் ஒருவராக ஏறி அமர்ந்தனர்.

பரணுக்குக் கூரை கட்டித் தென்னங்கிடுகுகளால் வேயப்பட்டிருந்தது. காற்று மழையிலிருந்து தம்மைப் பாதுகாக்க கிடுகுகளால் தட்டிகள் கட்டி மறைத்திருந்தார்கள். கிடுகுகள் கிராமத்திலிருந்து வாங்கி வரப்பட்டதாக அவர்கள் கூறியதிலிருந்து அறிந்து கொண்டான் பார்த்தீபன்.

நேரிய காட்டுத் தடிகள் வெட்டி காட்டுக் கொடிகளால் வரிந்து, புற்கள் பரப்பி, பெண் மானின் தோல் விரிக்கப்பட்டிருந்தது. கட்டிலில் அமர வைக்கப்பட்டான் பார்த்தீபன். வீட்டில் இருக்கும் கட்டிலுக்கும் மெத்தைக்கும் நிகராக இருந்தது இவர்களுடைய காட்டுக் கட்டில்.

"நாங்கள் இந்தக் காட்டில் நீண்டகாலமாக இருக்கிறோம். இங்கிருந்தவர்கள் எல்லோரும் கிராமங்களுக்குச் சென்று குடியேறி விட்டார்கள். நாங்கள் இருவருந்தான் இங்கேயிருந்து வேட்டையாடிச் சீவனம் செய்கிறோம்" என ஆரம்பித்த முதியவர் "தம்பி உம்மைப் பார்த்தால் ஒரு இராசகுமாரன் போலத் தோன்றுகிறது. எங்கிருந்து வருகிறீர்? ஏன் இந்த வனத்துக்கு வந்தீர்?" என்று கேட்டார். மதனாபுரி இளவரசியின் சுயம்வரத்தில் ஆரம்பித்து, அந்த இரவுவரை நடந்த அனைத்தையும் கூறி, "அந்தத் தங்கப்பறவையையும் வைரத்தையும் மீட்டுக் கொள்ளாது நான் மதனாபுரிக்குத் திரும்புவதில்லை என்னும் சங்கற்பத்துடன் வீட்டிலிருந்து கால்நடையாக வந்தேன்" என்று முடித்தான்.

முதிய வேடர் சிரித்துச் சொன்னார் "தம்பி உன்னுடைய மனஉறுதியை நான் பாராட்டுகிறேன். உனக்கு வெற்றி கிட்டும் என நினைக்கிறேன். நீ தேடி வந்த பறவையைப் பற்றி நான் கேள்விப்பட்டிருக்கிறேன். தங்கப் பறவைகளின் ஒரு கூட்டம், பெரும் சமுத்திரத்தின் நடுவே, ஒரு மலையில் இருப்பதாக எனது தந்தையார் எப்போதோ சொன்னது என் ஞாபகத்துக்கு வருகிறது. ஆனால்... அந்த மலைக்கு யாருமே போக முடியாதாமே..."

"எப்படியும் நான் போயாக வேண்டும். என்ன செய்யலாம்? எப்படிப் போகலாம் என்று" கூறுவீர்களா பெரியவரே...?"

"நீர் மதனாபுரி நாட்டிலிருந்து வந்திருக்கிறீர் இல்லையா? மதனாபுரி அரசர் ஒருமுறை இராணி பிள்ளைகளோடு காட்டுக்கு வேட்டைக்கு வந்து, அரசரும் பரிவாரங்களும் தங்கியிருக்க பெரிய கூடாரங்கள் அமைத்திருந்தபோது துக்ககரமான நிகழ்வொன்று நடந்தது அறிந்தீரா? யாரும் சொல்லவில்லையா?"

"யாரும் சொல்லவில்லை. என்ன நடந்தது பெரியவரே?" ஆவலை அடக்க முடியாது கேட்டான் பார்த்தீபன்.

"நான் அறிந்ததைச் சொல்லுகிறேன். அரசர் ஒரு வாரம் வரையில் தங்கியிருக்கும் எண்ணத்தோடு தமது இரண்டு பெண் குழந்தைகளோடும் வந்திருந்தாராம்"

"அரசருக்கு இரண்டு பெண் பிள்ளைகள் இருந்தனரா? எழில்நிலாதான் அவருடைய ஒரே மகள் என்று நான் எண்ணிக் கொண்டிருக்கிறேன்"

"எழில்நிலா இரண்டாவது பிள்ளை. ஈராண்டுகள் முன் பிறந்தவள் யோதிநிலா"

"அப்படியா?"

"ஆம், தம்பி இறக்கும் தறுவாயிலிருந்த எனது தந்தையார் எனக்குச் சொன்னதைத்தான் உமக்குச் சொல்கிறேன். அவரிடமிருந்து முழுச் சரித்திரத்தையும் அறிந்து கொள்ள முடியாதுபோனது. எனக்குப் பெரும் கவலை"

"யோதிநிலா இப்போது எங்கே? உயிரோடு இருக்கிறாரா?"

"இருக்கிறார் என்று என் மனதில் படுகிறது. எங்கே இருக்கிறார் என்று சொல்ல முடியாது. யோதிநிலா கடத்தப்பட்டபோது அவருக்கு வயது ஐந்தாம்."

"யோதிநிலா கடத்தப்பட்டாரா?"

"முன்பொருமுறை உங்கள் அரசர் வேட்டைக்கு வந்தபோது, பறவைகளைப் போலச் சிறகும், மனித உருவரும் கொண்ட சிறுவன் ஒருவன் குளத்தில் விளையாடிக் கொண்டிருந்தான். அவனைப் பறவை என நினைத்து அரசர் ஈட்டி எறிந்து கொன்றுவிட்டாராம். அதற்குப் பழிவாங்கும் நோக்கத்திலேயே யோதிநிலாவை இறந்தவரின் தந்தையான பறவை மனிதன் கடத்தியிருக்கலாம் என்பது தந்தையாரின் அபிப்பிராயம்"

'மகளைப் பறிகொடுத்த அரசர் யோதிநிலாவைத் தேட முயற்சி மேற்கொள்ளவில்லையா?"

"முயற்சி எடுக்காது இருந்திருப்பாரா? ஒரு வாரம் வரை காடு மேடெல்லாம் பரிவாரங்களோடு தேடிப் பார்த்துவிட்டுத் திரும்பி விட்டார்களாம்"

"நீங்கள் கூறிய அந்தக் குளம் எங்கே இருக்கிறது பெரியவரே?"

"நாளை பூர[illegible]யல்லவா? ஒவ்வொரு முழுநிலா நாளிலும் பறக்கும் மனிதனும் நீர் கூறியது போன்ற தங்கப் பறவைகளும் வந்து அந்தக் குளத்தில் நீராடிச் செல்வதாக அறிந்திருக்கிறேன். பறவை மனிதனின் மகன் கொல்லப்பட்டதும் ஒரு முழுநிலா நாளில்தான். மகனின் நினைவாகத்தான் அவன் பறவைகளுடன் குளத்துக்கு வந்து போகிறான் என எண்ணத் தோன்றுகிறது மகனே"

"குளத்துக்கு என்னை அழைத்துக் கொண்டு போவீர்களா?"

"நிச்சயமாக ஒரு பகல் முழுவதும் விரைந்து நடந்தால் அங்கு போகலாம். நாளை காலை மூவரும் போய் அவர்கள் எம்மைக் கண்டு கொள்ளாதவாறு பதுங்கி இருப்போம். குளம் மதனாபுரி அரசுக்குச் சொந்தமானது. நாங்கள் பரண் அமைத்திருப்பது சீல நாட்டு முடிக்குரிய காடு"

"நாங்கள் இப்போது இருப்பது சீல நாட்டிலா?"

"ஆமாம் சீல நாட்டைக் கடந்தால், வருவது மதனாபுரி. மதனாபுரியிலேதான் நான் கூறிய குளம் இருக்கிறது." மறுநாள் அங்கு சென்ற வேடுவ மனிதனும் அவனுடைய மனைவியும் பார்த்தீபனும் மறைந்திருந்தனர்.

சிரித்தபடி கிழக்கில் தோன்றிய முழுநிலா, உச்சிக்கு வரும்வரை பறவைகளின் வருகைக்குரிய அறிகுறி தென்படவில்லை. இருப்பினும் மூவரும் பொறுமையாக மறைந்திருந்த வேளை-பேரொலி வானத்தில் கேட்டது.

நூற்றுக் கணக்கான தங்கநிறப் பறவைகள் பறந்து வந்து குளத்து நீரில் நீச்சலடித்தன. பறவை மனிதன் தன் முதுகில் அமர்ந்திருந்த இளம் பெண்ணை இறக்கிக் குளக்குட்டினை துப்புரவு செய்து கம்பளம் விரித்து அவளை அமர வைத்து விட்டுக் குளத்தில் இறங்கினான்.

"இந்தப் பெண் முற்றுமுழுவதும் எழில்நிலாவைப் போலேவே இருக்கிறாள். அதே நிறம் அதே அழகு. இவள் யோதி நிலாவேதான்" என்று தன் வாயை வேடுவனின் காதில் வைத்தான். அவனுடைய கையொன்று வாளைப் பற்றியது.


"கொஞ்சம் அமைதியாக இரு" எனக் கூறிய வேடுவன், "அதோ பார் தம்பி, தங்கப் பறைகளில் ஒன்று பெண் பிள்ளைகளுக்ளுப் பக்கத்தே வந்து அமர்ந்து அவளுக்குக் காவலாக இருக்கிறது"

"இந்தப் பறவைதான் வைரத்தை எடுத்துப் போயிருக்க வேண்டும் என நம்புகிறேன். பெரிய பறவை என்று சொன்னார்கள். எல்லாப் பறவைகளையும் விட இது பெரிதாகவும் நீளமானதாகவும் இருக்கிறது" எனக் கூறியபடி வாளுடன் எழுந்தான் பார்த்தீபன்.

(தொடரும்)

''அரசருக்கு இரண்டு பெண் பிள்ளைகள் இருந்தனரா? எழில்நிலாதான் அவருடைய ஒரே மகள் என்று நான் எண்ணிக் கொண்டிருகிறேன்'' ''எழில்நிலா இரண்டாவது பிள்ளை. ஈராண்டுகள் முன் பிறந்தது யோதிநிலா''

# பிள்ளை மனம்



சிறுகதை

சு.தர்மலிங்கம்

மதியம் 12மணி இருக்கும். சுட்டெரிக்கும் வெயில். வீதியில் தணல் பறக்கும் வெயிலின் கொடுமை. வயோதிபர் இல்ல முன்றலிலே இரண்டு கால்களும் இல்லாத எழுபது வயது மதிக்கத்தக்க ஒரு முதியவரை இரண்டுபேர் யாரும் காணாத வகையில் அந்தக் கொதிக்கும் வெயிலில் தூக்கி இருத்தினர். அந்த வாகனத்தில் வந்த நபர்கள் வாகனத்தை ஓட்டிச் சென்று விட்டனர். அந்த முதியவர் நடக்க முடியாத நிலை வெயிலின் சூடு தாங்க முடியாமல் வேதனையில் துடி துடித்து அழுது கூக்குரலிட்டார். அந்த வீதியிலே பயணித்த பலர் அவரைக் கண்டும் காணாதவர்கள்போலச் சென்றார்கள். ஆனால், மனித நேயம் கொண்ட ஈவிரக்கம் கொண்ட மனிதர்களும் எம்மிடையே வாழத்தான் செய்கிறார்கள். உடனடியாக முதியவர் இல்லப் பொறுப்பாளருக்குச் செய்தி கொடுக்கப்பட்டது. முதியோர் இல்லத்தில் முதியவர்களைக் அனுமதிப்பதென்றால் பல நடைமுறைகளைப் பின்பற்றவேண்டிய கடப்பாடு உண்டு. ஆனாலும் வெயிலிலே துடி துடித்து மயக்கமுற்ற நிலையில் அநாதரவான அந்த முதியவரிடம் எதையாவது எதிர்பார்க்க முடியுமா? மனித நேயச் செயற்பாடாக அதன் பொறுப்பாளர் கடமையிலிருக்கும் இரண்டு சிற்றூழியர்களின் உதவியுடன் அவரைக் காவுகை வண்டியில் ஏற்றி வைத்தியசாலையில் அனுமதித்தார். வயோதிப இல்ல நிர்வாகத்தினராலோ வைத்தியசாலை நிர்வாகத்தினராலோ அவர் சம்பந்தமான தகவல்களைப் பெறுதல் சாத்தியமற்றதாகி விட்டது.

அடுத்த நாள் வெளிவந்த நாளேடுகளில் எழுபது வயது மதிக்கத்தக்க இரண்டு கால்களையும் இழந்த முதியவர் ஒருவரை முதியோர் இல்ல முன்றிலில் அநாதரவான நிலையில் விட்டுச் சென்றுவிட்டனர். பொது நிறம், சுமாரான உடற்கட்டு, நரைத்த தலைமுடி என்று அடையாளப்படுத்தி, உற்றார், உறவினர் யாராவது இருந்தால் முதியோர் இல்லத்துடன் தொடர்புகொள்ளவும் என்பதாகப் பிரசுரிக்கப்பட்ட அந்தச் செய்தியால் எவ்வித பயனும் கிட்டவில்லை.

வைத்தியசாலைச் சிகிச்சையின் பின் ஓரளவுக்குத் தேறிய அவருடைய பேச்சு, செயற்பாடுகள் யாவும், வயோதிபத்துக்கே உரிய மாறாட்ட குணமாகத் தென்பட்டன. யாரும் அவரைப் பெறுப்பேற்காத நிலையிலே மீளவும் வயோதிப இல்லத்திலே அவர் சேர்க்கப்பட்டார். அவரிடமிருந்து அவரைப் பற்றிய விடயங்களை அறிவதற்கு இல்ல நிர்வாகம் முயற்சிகள் பலவற்றை எடுத்தும் அவருடைய புத்தி மாறாட்டக் கதையால் அது சாத்தியப்பட்டுவிடவில்லை. ஆனாலும் வலிந்து கட்டி அவர்கள் எடுத்த முயற்சியால் அவருடைய பெயர் நாகலிங்கம் என்று தெரியவந்தது. தமது கடமைகளைத் தாங்களே மேற்கொள்ளும் ஏனைய வயோதிபர்களின் உதவியுடன் இல்ல நிர்வாகத்தினர் அவரையும் ஒருவாறு பராமரித்தனர். கால் இழந்த நடக்க முடியாத அந்த வயோதிபரை உச்சி வெயிலில் விட்டுச் சென்ற, அந்த ஈனச் செயலைப் புரிந்த மிருக மனம் படைத்த மனிதர் யார்? என்பது புரியாத புதிராகவே இல்ல நிர்வாகத்தினருக்கு விளங்கியது. ஆனால் என்றோ ஒரு நாள் உண்மை வெளிவரத்தான் செய்யும் என்று நம்பினர்.

நாள்கள் உருண்டோடின. அவருடன் ஒரே அறையில் தங்கும் சின்னத்தம்பி என்பவரை 'வோர்டன்' அழைத்து நாகலிங்கத்தைப் பற்றி ஏதாவது தகவல் கிடைத்ததா என்பதை அறிய முற்பட்டார். "நானும் பல வழிகளில் அவரைப் பற்றிய தகவல்களை அறிய முயற்சித்தேன், கேட்டவுடன் முகம் விகாரமாகி, வேண்டா வெறுப்புடன் தலையை மறுபக்கம் திருப்பி விடுவார். அவர் தன்னைப் பற்றிய விசயங்களை வேண்டுமென்றே மூடி மறைக்கிறார்போல் தெரிகிறது" என்றார் ஒன்றாகத் தங்கியிருக்கும் சின்னத்தம்பி. அதன் பின் நிர்வாகம் அவரைப் பற்றி எத்தனிக்காமல் அப்படியே விட்டு விட்டது.

பல வருடங்கள் கழிந்தோடின. ஒரு நாள் நாகலிங்கம் இரவு உணவுக்குப் பின் படுக்கைக்குச் சென்றசமயம் நெஞ்சுவலி தாங்காமல் நெஞ்சைப் பொத்திக் கொண்டு துடி துடித்து அழுகுரல் இட்டார். 'வோர்டனுக்குச் செய்தி கொடுத்து இல்லத்தில் தரித்து நின்ற நோயாளர் காவுகை வண்டியில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும்போது வழியிலேயே அவருடைய உயிர் பிரிந்தது. உற்றார், உறவினர் அற்ற நிலையில் இல்லத்தில் எளிமையாக நடைபெற்ற அவருடைய இறுதிக் கிரியைகளுக்குப் பிறகு அவருடைய உடல் தீயில் சங்கமமானது.

அவர் இறந்து பல வருடங்கள் கழிந்த நிலையில் முதியோர் இல்லத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. நிர்வாகத்துக்குப் பொறுப்பான 'சுப்பிரிண்டன்ந்' இளைப்பாறிய நிலையில் புதியவர் ஒருவர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டார். இல்லத்துக்கு நேரடிப் பொறுப்பாகவிருந்த 'வோர்டனும்' இளைப்பாறும் வயதை எட்டியிருந்தார். அன்றொரு ஞாயிறு. விடுமுறை நாள். காலைவேளை. தனது வீட்டுக்குச் செல்வதற்கு ஆயத்தமான நிலையில் வாகனம் ஏதேனும் வருகிறதா? என ஜன்னலூடக ஏ9 வீதியை நோட்டம் விடுகிறார் 'வோர்டன்'. பல மாதங்களாக வறண்டு கிடந்த பூமியும் மழை வராதா? என்று ஏங்கித் தவித்திருந்தது. அந்தப் பூமி குளிர கவிந்திருந்த கருமேகக் கூட்டங்கள் இடி மின்னலுடன் மழையை வாரின. அந்த மழையை ஊடறுத்துப் பேரிரைச்சலுடன் வந்த வான் இல்லத்துக்கு முன்பாக வீதியோரத்தில் நிறுத்தப்பட்டது. மழையையும் பொருட்படுத்தாது அதிலிருந்து இருவர் ஒரு முதியவரை இறக்கிவிட வாகனம் நகர்ந்தது. நடக்க முடியாத அந்த முதியவர் . மழையிலே நனைந்தவண்ணம் அரக்கி அரக்கி இல்லத்துக்கு வர முயல்கிறார். இவற்றை அவதானித்த 'வோர்டன்' ஒரு சிற்றூழியனை அழைத்து அவரைச் சில்லு வண்டியில் காவி வருமாறு பணித்தார்.

> முதியோர் இல்லத்தில் முதியவர்களைக் அனுமதிப்பதென்றால் பல நடைமுறைகளைப் பின்பற்றவேண்டிய கடப்பாடு உண்டு. ஆனாலும் வெயிலிலே துடி துடித்து மயக்கமுற்ற நிலையில் அநாதரவான அந்த முதியவரிடம் எதையாவது எதிர்பார்க்க முடியுமா?

அந்த முதியவருடைய கால்கள் சூம்பிச் செயலிழந்து காணப்பட்டன. தண்ணியைக் காணாத மேனி. காவி படர்ந்த சேட்டும், வேட்டியும் அணிந்திருந்தார். நரைத்த தலைமுடி நீண்டு வளர்ந்தும் சவரம் செய்யப்படாமல் இருந்தது. மீசையும் தாடியும் சோகை நோயால் வெளிறிய உடலுமாக அவர் இருந்தார்.

"எங்கையிருந்து வாறியள்…? பெயர் என்ன?" என வினாவுகிறார் 'வேர்டன்'. ஒன்றுமே பேசாமல் தோளிலே போட்டிருந்த சீலைப் பையிலிருந்து ஒரு கடிதத்தை எடுத்துக் காட்டுகிறார் அந்த வயோதிபர். கிராம சேவையரால் சிபாரிசு செய்யப்பட்டுப் பிரதேச செயலரால் உறுதி செய்யப்பட்டு முதியோர் இல்லப் பொறுப்பாளருக்கு விலாசமிடப்பட்டிருந்தது. பெயர் நா.கனகசபை. வயது - 65. முடக்கு வாதத்தால் பாதிக்கப்பட்டு இரண்டு கால்களும் செயலிழந்துள்ளன. உறவினர்களால் கைவிடப்பட்டவர். ஆதரவுக்கு யாருமற்றவர். இல்லத்தில் அனுமதிக்கும்படி சிபாரிசு செய்யப்பட்டிருந்தது. "அப்ப உங்களைப் பார்க்க மனிசி பிள்ளையள் இல்லையோ…?" வினாவுகிறார் 'வோர்டன்'. "இருக்கிறார்கள்"

கண்களில் நீர் மல்கத் தனது கண்ணீரும் கம்பளையுமான வாழ்க்கை நிகழ்வுகளைச் சொல்லத் தொடங்கினார் முதியவர்.

"நான் எனது தூரத்து உறவுப் பெண்ணைத்தான் கலியாணம் கட்டினான். எனக்கொரு ஆம்பிளைப் பிள்ளைதான். கடையொண்டிலை கணக்குப் பிள்ளையாக வேலை செய்தனான். 60வயதில் வேலையை விட்டுச் சென்றதும் கிடைத்த சகாய நிதி முழுவதையும் மனிசி, பிள்ளைகளுக்கே செலவழித்தேன். அவர்கள் இப்பிடித் துரோகம் செய்வார்கள் என்று கனவிலைகூட எண்ணவில்லை. என்னுடைய மனைவி நடுத்தர வயதைத் தாண்டினாலும் இளமையாகக் காணப்பட்டாள். அது பிற்காலத்தில் எனக்கு ஆபத்தாக அமையும் என்பதை எண்ணத் தவறிவிட்டேன். ஒரேயொரு மகன். செல்லமாக வளர்த்தேன். பள்ளிக்கூடப் படிப்பைக் குழப்பிக் கொண்டு கூடாத கூட்டத்தோடு சேர்ந்தான். வந்தது வினை. முழு நேரக் குடிகாரன் ஆனான். அவனுக்குப் பல குடிகார நண்பர்கள். அதிலே ஒருவன் வாட்ட சாட்டமான நடுத்தர வயதைக் கொண்டவன். கள்ளுக் கொட்டில் உறவு வீடுவரை வந்தது. மகனுடன் அடிக்கடி வீடு வரை வரத் தொடங்கினான். அவனை வீட்டுக்கை அண்டாதை என்றும் அவனுக்குச் சொன்னால்போதும் தகப்பன் என்று பாராமல் என்னுடன் சண்டைக்கு வருவான். அவனுடைய செயற்பாடு வளர்த்த கடா நெஞ்சிலே குத்தியதுபோல இருந்தது. எனது உடலும் வலுவற்ற மனமும் குன்றியது. ஒன்றுமே செய்ய முடியாத நிலை. மனைவியும் ஊர், பெர் தெரியாதவனை ஆதரவளித்து உணவு பரிமாறினாள். நாளா வட்டத்தில் அது தகாத உறவுக்கு வழிகோலியது. என்னுடைய வீடு அவனுக்குத் தங்கு மடமாயிற்று. ஒரு நாள் மனந்தாங்கெணாத துயரத்தில் கோபவேசம் கொண்ட நான், ஒரு பொல்லையெடுத்து அவனைத் தாக்க முற்பட்டேன். மனிசியும் மகனும் அவனுடன் சேர்ந்து எனக்கு அடித்து என்னை வெளியே தள்ளி விட்டனர். வீட்டுக்குள் வந்தால் கொல்லுவோம் என்று மிரட்டிக் கொண்டே கேற்றையும் பூட்டி விட்டனர். மண்ணை அள்ளி எறிந்து கோபம் ஆறும் வரையும் திட்டினேன். பொலிசுக்குச் சென்று குடும்ப விசயங்களை வெளிப்படுத்த மனம் ஏவவில்லை. எனக்கு நன்கு அறிமுகமான ஒருவருடைய வீட்டில் தஞ்சமடைந்து பல மாதங்களாகின. ஒரு நாள் கால்கள் இரண்டிலும் தாங்க முடியாத வலி. படுக்கையிலிருந்து எழும்பி நடக்க முடியாத நிலை. எனக்கு இப்பிடியான நிலையேன் ஆண்டவா? மனம் வருந்தினேன். ஒரு புறம் மனைவி , பிள்ளையாள் கைவிடப்பட்ட நிலை. மறுபுறம் முடக்குவாதம். தஞ்சமளித்தவரோ என்னை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று தங்கி வைத்தியம் செய்வதற்கும் உதவி செய்தார். எனக்கு ஏற்பட்ட முடக்கு வாதத்துக்கு மேலும் வைத்திய சிகிச்சை இல்லை என்ற நிலைப்பாட்டில் விதானையாரின் கடிதத்தைப் பெற்று, பஸ்சிலே என்னை ஏற்றிவந்து, என்னை வைச்சுத் தன்னால் பார்க்க முடியாதெனக் கூறிக்கொண்டே இந்த இல்லத்துக்கு முன்னால் இறக்கிவிட்டுப் போய்விட்டார்.

"அப்பிடியெண்டால், உங்களைப் பாக்கிறதுக்குத் தாய், தந்தை, சகோதரங்கள் யாரும் இல்லையா?" என்று 'வோர்டன்' வினாவுகிறார்.

"ஒரேயொரு சகோதரி தான் கலியாணம் கட்டித் தனிக்குடித்தனம் போயிற்றா. என்னோடு அவ்வளவு நெருங்கிய தொடர்புகளில்லை. அம்மா சிறு பராயத்திலேயே இறந்துவிட்டா என்ரை அப்பா… அப்பா" என்று ஓலமிட்டு உரத்த குரலிலே அழத் தொடங்கினார். அவரிடம் மீண்டும் மீண்டும் கேள்விகளைத் தொடுக்க விரும்பாத 'வோர்டன்' இல்லத்தில் அவரை ஒரு அறையில் தங்குவதற்கு ஏற்பாடு செய்தார்.

தொடர்

02

“ சலாமும் இதயனும் இரும்புச் சனியனுக்குள் அகப்பட்ட தோழனை, உயிரான நண்பனை மீட்டெடுக்கப் போராடினர். ம்... ம்... ம்... மூச்சு முட்டி, விழி பிதுங்கி வெளியே வருமோ எனும் கோரமாய் இருந்தான் வசந். இயலுமட்டும் இழுத்துப் பார்த்த பின் பின்னே திரும்பிக் குடிசைகளைப் பார்த்து அழுகையோடு, ''யாரவது வாருங்களேன் என் வசந்தை மீட்க...'' உரத்துக் கத்தினேன். ”



கப்டன் மலரவன்



# போர் உலா...

நேரம்.11.52 இரவு எனக் கடிகாரம் காட்டியது. எப்படியும் போய்ச் சேர இரண்டு நாளாவது வேணும் என்று எண்ணினேன். வசந்தன் ரி.56ஐத் தடவியபடி ஏதோ யோசனையில் இருந்தான்.
குமுழமுனை நேர்வீதி சென்று திரும்பும் வளைவு. அதன் ஓரத்தே நாவலொன்று சாய்ந்து வீதியில் வேர் புடைத்துப் போய் இருந்தது. சலாம் இரண்டு கைகளையும் ஸ்ரேறிங்கில் வைத்து லாவகமாகத் திருப்பினான். அக்கறையாய் அவதானமாயத் திருப்பினான். எத்தனையோ தடவை திருப்பிப் பழக்கப்பட்டவன் அவன். உடம்பும் சேர்ந்து திரும்பியது. அட அவ்வளவு பெரிய முடக்கோ இப்பிடித் திருப்பிறான். சலாமின் உடலில் ஏதோ அவசரம், ஏதோ நடக்கக் கூடாதது நடந்துவிட்டதாய், வியர்த்து விறுவிறுத்துப் பேயறைந்ததாய்க் கத்தினான். “டேய் பின்னாலை குதியுங்கோடா! ஸ்ரேரிங் றொட் உடைச்சுப் போட்டுது!”
பின்னிருந்த நான் ஒரே தாவலாய்த் தாவினேன். தாவும் போதே திரும்பிப் பார்த்த போது வசந்தன் நித்திரை தூங்கினான். இல்லையில்லை, துரோணர் போல் நிஷ்டையில் இருந்தானோ?
“டேய் வசந்த், டெய் குதியடா அடிபடப்போகுது!”
உடலிலுள்ள சக்தியெல்லாம் திரட்டி அப்படியே தொண்டைக்குக் கொண்டுவந்து குரல் கொடுத்துக் கத்தினேன். காட்டுக் கத்தலாய் அட்ட திக்கும் அதிர்ந்தது. பாலை மரமும், வீரைமரமும் ஒருமுறை அசைந்தன. நிலவு ஒருமுறை அழுதது. மரத்திலிருந்த பறவைகள் கத்தியபடி கலைந்தன. பட்டியில் நின்ற பசுக்கள் ஒருமுறை அம்மா என்றன. ஆட்காட்டி ஒன்றை ஒன்று துரத்திக் கத்தியது. மயில் ஒன்று அவலமாய் அகவியது. ஊர் மக்கள் எல்லோரும் எழுந்து கொண்டனர். ஒரு துளி குருதி என்னில் தெறித்தது. நாவல் வேரில் ரைக்ரர் ஏறி இறங்கியிருக்க, பின்னால் வந்த உயரமான அந்தப் பெட்டி ஏறி வீதிப் புறமாய் கவிழ்ந்திருந்தது. விழுந்த நோவையும் மறந்து வேகமாய் ஓடினேன். “டேய், வசந்! வசந்” மீண்டும் அதே காட்டுக் கத்தல். சலாமும் இதயனும் இரும்புச் சனியனுக்குள் அகப்பட்ட தோழனை, உயிரான நண்பனை மீட்டெடுக்கப் போராடினர்.
ம்... ம்... ம்... மூச்சு முட்டி, விழி பிதுங்கி வெளியே வருமோ எனும் கோரமாய் இருந்தான் வசந். இயலுமட்டும் இழுத்துப் பார்த்த பின் பின்னே திரும்பிக் குடிசைகளைப் பார்த்து அழுகையோடு, “யாரவது வாருங்களேன் என் வசந்தை மீட்க...” உரத்துக் கத்தினேன். அது காற்றைக் கிழித்துப் படலையைப் பிரித்து வீட்டுத் திண்ணையில் அப்புவையும் அம்மாவையும், அக்காவையும், அண்ணாக்களையும் எழுப்பியது. “எல்லோரும் வாருங்களேன். எல்லோரும் வாருங்களேன்.”
அந்த அழகான வைக்கோலால் வேயப்பட்ட குடிலுக்குள், வீட்டின் ஒரேயொரு பஞ்சு மெத்தையின் மீது வசந் கிடந்தான், அரைமயக்கமாக. வலதுகை தோள் மூட்டுடனும், இடதுகை முழங்கைக்குக் கீழாகவும் சிதைந்து தொங்கியது. மூச்சுமேலும் கீழுமாய் ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. இரண்டு கைகளுக்கும் இவ்விரண்டு தலையணையாக வீட்டில் இருந்த எல்லாத் தலையணைகளும் இரத்தத்தால் தோய்ந்து கிடந்தன. அந்த அம்மா, பாசம் மிகுந்த தாய், அன்பான அக்காவின் கரத்திலிருந்த சூடான கோப்பியை விரைவாக வாங்கி வசந்தின் உதட்டோரம் சரித்தார். முதிர்ந்த ஐயாவசந்தைப் பார்த்த பின் பசுக்களின் பட்டியோரம் போனார், கொஞ்சம் பல் எடுக்க பசுக்கன்று ஒன்று அம்மா என அழுதடங்கியது.
டேவிட் அண்ணர் வோக்கியில் ‘சுப்பர்றொட்’ மாற்றி உடனே வாகனத்தைக் கொண்டுவருமாறு பணித்தார். இடையில் கிராமத்தில் இருக்கும் மருத்துவ பீட மாணவன் ஒருவன் பூரண முதலுதவி சிகிச்சையை மேற்கொண்ட பின் வலியம்- 3மில்லி லீற்றர் மயக்க ஊசி மருந்தைச் செலுத்திய பின் வசந் கொஞ்சம் அமைதியானான். என்னருகே இருந்து இவ்வளவு காலமும் எங்களுடன் ஒன்றாய்த் துயின்ற மண்ணின் மைந்தன் களப்படுக்கையில் இருக்கின்றான்.


உடலிலுள்ள சக்தியெல்லாம் திரட்டி அப்படியே தொண்டைக்குக் கொண்டுவந்து குரல் கொடுத்துக் கத்தினேன். காட்டுக் கத்தலாய் அட்ட திக்கும் அதிர்ந்தது. பாலை மரமும், வீரைமரமும் ஒருமுறை அசைந்தன....



அருகே அமைதியாக இருந்த அக்காவுடன் கதைக்கத் தொடங்கினான். வசந் என்னடா உரையாடுறான் என்று வியந்தேன்.
“அக்கா, அக்கா.....” இழுத்தது குரல்.
“உம், என்ன தம்பி?”
“நீங்க சரியா எங்கட மூத்தக்கா வித்தி மாதிரி. எங்கக்கா இப்ப என்ன செய்வா? சின்னத்தம்பிக்கு பக்கத்தில படுத்திருப்பாவோ? தோட்ட வேலை செய்து கஷ்டப்படுங்கள். எல்லா ஆமியால... எளிய சிங்களவங்கள்...எங்கட அப்பர் குடிச்சாலும் நல்லவர் ஐயோ, அய்யா...” வேதனை மிகுந்த அந்தத் தீனமான குரல் மெல்லிய அலையாக ஒலித்தது.
முற்றத்தில் நின்ற நாய் மெதுவாய் ஊழையிடத்தொடங்கியது. “ஊ....... ஊ..........” என உயிரையே துளைத்துவிடும் தொனி. தேங்காய் நெய்விளக்கு உயிரற்று எரிந்தது. மஞ்சளாய் உருகி உருகி அழுதது. விட்டிலொன்று திரியில் படச் சிறகுகள் கொஞ்சம் வெளிச்சமாய் எரிய, பின் எண்ணெய்க்குள் விழுந்து துடித்தது. எண்ணெய் அலையோடு ஆடியபின் ஓரமாய் ஒதுங்கியது.
தூரத்தே வாகனமொன்றில் இரைச்சல் அருவியோட்டத்தின் மேலாகத் தவழ்ந்து வருகிறது. அவ்விதம் வந்த டெலிக்கா வான் வசந்தைத் தாங்கிய வண்ணம் மீண்டும் வேகமாய் நகரத் தொடங்குகிறது. நான் வசந்தின் பக்கத்தினின்று அவனை ஆதரவாகப் பிடித்திருந்தேன். குருதிப் பெருக்கினால் அவன் பலம் குறைவது தெரிந்தது. வெள்ள மலை ஏற்றமடியில் கிறீஸ் என்ற சத்தத்தோடு வான் ஒரு புறமாக இழுபட்டுப் போய் நின்றது. “காத்துப் போட்டுது போல” என வாகனத்தை ஓட்டிய தோழன் கூறியபடி இறங்கினான். வேறுவழியில்லாமல் வோக்கி டோக்கியில் தொடர்பு கொண்டு வேறு வாகனத்தை அழைத்தேன்.
எதிர்ப்புறமாக வந்த ஜீப்பை மறித்து வசந்தை ஏற்றிவிட்ட பின் அவனது சொரசொரப்பான கன்னத்தை அன்போடு வருடிவிட்டு நான் விடைபெற வேண்டியவனானேன்.
“லியோ, என்னைத் தனியே விட்டிட்டுப் போகாதே!” எனப் புலம்பினான். நான் என்ன செய்ய? வாகனம் மறையும் வரை என் நெஞ்சமும் அதன் பின் ஓடிக்கொண்டிருந்தது. வானிற்கு ‘எக்ஸ்ராவீலை’ மாற்றிக்கொண்டு குமுழமுனை நோக்கிப் பயணமானோம். அப்போது நேரம் 5.35 அதிகாலை, எந்தப் பெரிய காடுகள்! அவற்றுக்குக் குறுக்காக பெரும் கால்வாய்களில் மாரிவெள்ளம் சீறிப் பாய்ந்து வந்தது.
''இங்க இப்படித்தான் தண்ணி எக்கச்சக்கமாகப் பாயும். சில நேரம் றோட்டையும் மூடிப் பாயும். பெரிய பெரிய பாலை, வீரை மரங்களையெல்லாம் பிரட்டிப்போடும்” நான் வேறுபகுதியைச் சேர்ந்தவன் என அவன் இனங்கண்டுவிட்டான் போலும்!
ஒரு பெரிய பாலத்தடியில் திடீர் பிறேக் போட்டு நிற்பாட்டினான். “அங்க பாரும் அந்தப் பாலைக்கட்டையிலை முதலையொன்று கிடக்குது” எனச் சுட்டிக்காட்டினான்.
“எங்க கிடக்குது?” உண்மையில் எனக்கு சரியாகத் தெரியவில்லை.
“அங்கபாரும் அந்தப் பாலையிலை” என்று எனக்குச் சுட்டிக்காட்டினான். ஒரு பெரிய முதலை, மரத்தோடு மரமாக ஒட்டிக் கிடந்தது. கொஞ்சமும் வித்தியாசம் தெரியாமல் இருந்தது.
“உது இப்பிடித்தான் இருக்கும். ஏதாவது இரைகள் ஆடு, மாடுகள் அகப்பட்டால் அவ்வளவுதான்! பிடிச்சா விடாது. முந்தி இப்பிடித்தான் நான் சின்னவனாயிருக்கும் போது, எங்கட பசுவும் கன்றும் மேயப் போனதுகள். மத்தியான வெய்யிலுக்கை தண்ணி குடிக்கப் போன கன்றை பெரிய முதலை பிடிச்சுக் கொண்டு போட்டுது. இரவு எல்லா மாடும் பட்டிக்கு வந்தும் வெள்ளைப் பசுவைக் காணேல்ல. என்னையும் அண்ணாவையும் அப்பு அனுப்பினார் பார்க்கிறதுக்கு. எல்லா இடத்தில் தேடியும் காணேல்ல. பின் தண்ணி குடிக்கிற இடத்துக்குக் கிட்ட போகேக்க பசு கதறின சத்தம் கேட்டுப் போய்ப் பார்த்தா பசு நின்றது.
அண்ணாதான் சுருக்கைப் போட்டு இழுத்தவர். பசுவரமாட்டன் என்றுட்டுது. பிறகு அப்பாவிடம் போய்ச் சொல்ல இன்னும் இரண்டு பேரும் வந்து கட்டி இழுத்துக் கொண்டு வந்திச்சினம்.”
“பிறகு?” என்றேன் ஆவலாக.
“பிறகென்ன? கொஞ்சக் காலத்தில் சாப்பிடாமல் செத்துப் போச்சு” என்றான். எனக்கு வசந்தின் அம்மா முகம்தான் நினைவில வந்தது. பசுக்களைப்போல அம்மாக்களும் இருப்பார்களே. அதுக்களைப் போலச் சாப்பிடாமல் கிடந்து ஒருவேளை அதுகளைப் போலவே.... சே என் கற்பனை. அதுகள் ஐந்தறிவுப் பிராணிகள். என்னைத் தேற்றிக் கொண்டேன். சில கணங்களில் திடுக்கிட்டு வெளியே பார்க்கிறேன். பாலத்தைக் கடந்து வெகுதூரம் வந்துவிட்டோம்.

(வளரும்)

# கிணற்றுத் தவளைகள்



மழை என்றால் கடும் மழை. குளம், குட்டைகள் எல்லாம் நிரம்பி வழிந்தன. பூமி குளிர்ந்தே போய் விட்டது. இதுவரையும் குளத்துக்குள் வாழ்ந்து வந்த அந்தத் தவளையால் தொடர்ந்து பெய்யும் மழையால் குளிரைத் தாக்குப் பிடிக்க முடியவில்லை. உடலுக்கு வெது வெதுப்பூட்டும் சூடான வாழ்விடத்தைத் தேடி அது அலைந்தது. வெயில் காலங்களில் மாத்திரமன்றி மழை காலத்திலும் கிணற்று நீர் சூடாக இருக்கும் என்று அந்தத் தவளைக்குத் தெரிந்திருந்தது. நீர் வெகு நேரமாக வெப்பத்தைத் தனக்குள் இழுத்து வைத்திருக்கும், அத்துடன் மழை காலத்தில் கிணற்றுநீர் சூடாக இருக்கும் என்பதையும் சிறுவயதில் கிணற்றுக்குள் வசித்த அனுபவம் அந்தத் தவளைக்குக் கற்றுக்கொடுத்திருந்தது. ஆகையால் இப்போது அந்தத் தவளை குளத்தை விட்டு வெளியே வந்து கிணறொன்றைத்தேடத் தொடங்கிற்று...

கிணறு ஒன்றைக் கண்டு பிடித்த தவளை கிணற்றுக்குள் குதித்தது. அந்தக் கிணற்றுக்குள்ளும் பல தவளைகள் வசித்து வந்தன. அவற்றில் ஒரு தவளை மாத்திரமே இந்தத் தவளையை வரவேற்றது. ஏனையவை முகத்தை மறுபக்கமாகத் திருப்பிக்கொண்டன.

இரண்டு நாள்கள் ஆகிற்று. இரண்டு தவளைகளும் மாத்திரமே நட்புடன் இருந்தன. மற்றத் தவளைகளுக்கு குளத்திலிருந்து வந்த தவளையைப் பிடிக்கவில்லை. "இங்கே கிடைக்கும் உணவு எங்களுக்கே போதுமானதாக இருப்பதில்லை. இந்த இலட்சணத்தில் புதிய விருந்தாளி வேறு" என்று அவை அந்த இரண்டு தவளைகளின் காதுகளுக்குக் கேட்கும்படியாக உரக்கக் கத்தித் திரிந்தன.

மூன்றாவது நாளும் ஆனது.

ஒன்றாகக் கூடிய கிணற்றுத் தவளைகள் குளத்துத் தவளையை மெய்த்துக் கொண்டன. அதில் ஒரு தவளை. "இத்தனை நாளும் எங்கே தங்கியிருந்தாய்?" என்றது.

"நான் குளத்தில் இருந்தேன்" என்றது குளத்துத் தவளை.

"குளமா...? அப்படியென்றால் என்ன?" எனக் கேட்டது கிணற்துத் தவளை.

"இந்தக் கிணற்றைப்போல பெரிய நீர் நிலை" என்றது குளத்துத் தவளை.

"இந்தக் கிணற்றைவிடப் பெரியதா...! இருக்கவே இருக்காது" கிணற்றையே தனது உலகமாகக் கொண்ட கிணற்றுத் தவளை குளத்துத் தவளை கூறியதை ஏற்றுக் கொள்ளவில்லை. நம்பவில்லை.

"நீ பொய் சொல்லுகிறாய். இந்த உலகத்தில் இந்தக் கிணற்றைவிடப் பெரிய நீர் நிலை இல்லவே இல்லை" என்று வாதிட்டது கிணற்றுத் தவளை.

தான் வசிக்கும் அந்தப் பெரிய குளத்தைவிடவும் பெரிய பெரிய நீர் நிலைகள் எவ்வளவோ இருக்கின்றன என்பதையும் இந்தக் கிணற்றுத் தவளைகளின் அறியாமையையும் எண்ணி அவற்றுக்கு எப்படிப் புரிய வைப்பது என்று சிந்தித்தது குளத்துத் தவளை. குளத்துத் தவளை எவ்வளவுதான் சொன்னாலும் கிணற்றுத் தவளைகள் நம்புவதாக இல்லை.

"நீ பொய்யன், புரட்டன்" என்று சொல்லியபடி கிணற்றுத் தவளைகள் ஒன்றாகச் சேர்ந்து குளத்துத் தவளையைத் தாக்க முனைந்தன. கொஞ்ச நேரமாக அவற்றைப் பேசிப்பேசிச் சமாளித்துக் கொண்டது குளத்துத் தவளை. அந்தநேரம் பார்த்து வீட்டுக்காரப் பெண் கிணற்றில் தண்ணி அள்ளிக் கொள்ளுவதற்காக வாளியை உள்ளே இறக்கினாள். உடனடியாக அதனுள் தாவிக் குதித்த குளத்துத் தவளை வாளித் தண்ணீருடன் மேலே வந்து குளத்தை நோக்கி ஓடியது.



## புள்ளிகளை இணைத்து படத்தை முழுமை செய்வோம்



சிட்டுக் குருவி

சிட்டுச் சிட்டுக் குருவி
சின்னச் சின்னக் குருவி
பட்டுச் சிறகை அடித்து
பறக்கும் வண்ணக் குருவி

விட்டு விட்டுக் கத்தும்
விரும்பியதைக் கொத்தும்
வட்டமிட்டுப் பறந்து
வானில் எங்கும் சுற்றும்

வெட்ட வெளி எங்கும்
வாலை ஆட்டிப் பறக்கும்
கிட்ட வரக் கேட்டால்
கீக்கீ என்று கத்தும்

-வேலணையூர் சுரேஷ்







ச.மாயோன்,
தரம் - 1,
யா/யாழ்ப்பாணக் கல்லூரி.



அன்றியா சுரேந்திரன்,
தரம் - 1,
யா/புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

## விடுகதைகள்

1. கட்டைபோலிருந்தவனை வெட்டிப் பிழிந்தால் ருசியோ ருசி அது என்ன?
2. ஒருவாய் கண்ணீரை உயரே சுமந்து கொண்டு நிற்கிறான் அவன் யார்?
3. சடக்கென்று வருவான் சத்தமிட்டுப் போவான் அவன் யார்?
4. ஆயிரம் கண் உண்டு அசந்து தூங்க இடம் உண்டு அது என்ன?
5. ஓசை இடுவான் உணவு சமைப்பான் அவன் யார்?
6. மொட்டைத் தாத்தாவுக்கு இரட்டைப்பிளவு மண்டையில் அது என்ன?
7. மணி அடித்தால் மலைப்பாம்பு நிற்கும் அது என்ன?
8. படுத்துத் தூங்காத விலங்கு பந்தயத்தில் ஓடும் விலங்கு அது என்ன?
9. கனியிலே கனி என்றுமே திகட்டாதகனி அது எந்தக் கனி?
10. நல்லபொண்ணு உத்தமிக்கு நடுக்குடலில் ஓட்டை அது என்ன?

### விடைகள்

1. கரும்பு
2. தென்னை மரம்
3. தும்மல்
4. நார்க்கட்டில்
5. குக்கர்
6. பட்டாணி
7. ரயில்
8. குதிரை
9. பிள்ளைக்கனி
10. வடை

## கல்வயல் வே.குமாரசுவாமி

கல்வயல் என்பது யாழ்ப்பாணம். சாவகச்சேரியை அண்மித்துள்ள ஓர் ஊர் ஆகும். இந்த ஊரில் பிறந்ததாலேயே வே.குமாரசாமி அவர்கள் கல்வயல் வே.குமாரசுவாமி என்று அழைக்கப்பட்டார். இவர் 1944ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி பிறந்தார். சிறுவயதில் இருந்தே கவிதை புனையும் ஆற்றல் மிக்கவராகத் திகழ்ந்தார். மரபு மற்றும் புதுக்கவிதையில் ஆளுமை பெற்றவராகவும் குழந்தைப் பாடல்களை எழுதுவதில் வல்லவராகவும் திகழ்ந்தார். குழந்தைகளுக்கான 'பாப்பா பாட்டுக்கள்' பாலர் கதைகள் போன்றவற்றையும் எழுதிப் புகழ் பெற்றவர். அஞ்சல் அதிபராகப் பணியாற்றியவர். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் வருகைதரு விரிவுரையாளராகச் சில காலம் தமிழ் போதித்தார். ஈழத்துக் கவிஞரும் கல்வியாளருமான இவர் சிறுவர் பாடல்கள், கவிதைகள் படைத்தமை மட்டுமன்றி தமிழிலக்கியப் பரப்பில் சிறந்த புலமை கொண்டவராகவும் திகழ்ந்தார். இவர் இயற்றிய மெல்லிசைப் பாடல்கள் வானொலியில் ஒலிபரப்பாகியுள்ளன. பாலகுமாரன், நந்தா, வாகடனன் போன்ற புனை பெயர்களில் பத்திரிகைகளில் பல கட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதியுள்ளார். அரசாலும் பல நிறுவனங்களாலும் இவருடைய புலமையைப் பாராட்டிப் பல விருதுகள் வழங்கப்பட்டன. ஈழத்துத் தமிழ் எழுத்துலகுக்குப் பெருமை சேர்த்த குமாரசுவாமி, 2016ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் திகதியன்று இயற்கை எய்தினார்.






# தீரன் அதிகாரம் ஒன்று பரவாயில்லை ரகம்

**2000** ஆம் ஆண்டின் ஆரம்பத்திலிருந்து இந்தியா–சென்னையின் புறநகர்ப் பகுதிகள் உட்பட தமிழகத்தின் பல இடங்களிலும் ஆந் திரா, கர்நாடகா மாநிலங்களிலும் முதன்மை வீதிகளை அண்மித்துள்ள பகுதிகளில் கொலை, கொள்ளைச் சம்பவங்கள் அவ்வப்போது நடந்துவந்தன. அதில் ஈடுபட்டவர்கள் குறித்த தகவல்கள் பொலிஸாருக்குப் பெரிதாகக் கிடைக்காத நிலையில், 2005ஆம் ஆண்டில் கும்மிடிப்பூண்டித் தொகுதியின் அ.தி.மு.கவின் சட்டமன்ற உறுப்பினர் சுதர்சனம் இந்தக் கும்பலால் கொல்லப்பட்டார். இதையடுத்து, இந்தக் கும்பலைப் பிடிக்க, தமிழக அரசு ஒரு தனிப்படை அமைத்தது. உத்தரப் பிரதேசப் பொலிஸார் மற்றும் மத்திய புலனாய்வு அமைப்புகளின் ஒத்துழைப்புடன் ராஜஸ்தான், ஹரியானா, பஞ்சாப் ஆகிய மாநிலங்களில் தமிழகப் பொலிசார் பல மாதங்களாகத் தேடுதல் வேட்டை நடத்தினர். இதன் விளைவாக அந்தக் கும்பலைச் சேர்ந்த பஸுரா பவரியா, விஜய் பவரியா ஆகியோர் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஓமா பவாரியா, லட்சுமணன் ஆகியோர் கைது செய்யப்பட்டு சிறப்பு நீதிமன்றத்தின் மூலம் தமிழகத்தில் விசாரணை நடைபெற்று, சிலருக்குத் தூக்குத் தண்டனையும் வழங்கப்பட்டது. இது ஒரு உண்மைச் சம்பவம். இதையே படமாக்கியிருக்கிறார் 'சதுரங்க வேட்டை' படத்தின் மூலம் கவனத்தை ஈர்த்த எச். வினோத்.

### கதை

பொலிஸ் துணைக் கண்காணிப்பாளராகப் பணியில் சேரும் தீரன் (கார்த்தி), தன்னுடைய நேர்மையான செயற்பாடுகள் காரணமாகப் பல இடங்களுக்கு மாற்றம்செய்யப்படுகிறார். பொன்னேரிக்கு மாற்றம் செய்யப்படும்போது, மிகக் கொடூரமான முறையில் ஒரு கொலை, கொள்ளைச் சம்பவம் அங்கு நடக்கிறது. அதை விசாரிக்க ஆரம்பிக்கும் தீரனுக்கு, அதுபோலவே பல சம்பவங்கள் ஏற்கனவே நடந்திருப்பது தெரியவருகிறது. இந்தச் சம்பவத்தில் ஈடுபடும் கும்பல் யார் என்பதை விசாரிக்க ஆரம்பிக்கிறார் தீரன். வட இந்தியாவைச் சேர்ந்த குற்றக் கும்பல் ஒன்றே இதில் ஈடுபடுகிறது என்று தெரிந்தாலும் அதைப் பிடிப்பது அவ்வளவு சுலபமாக இல்லை. இதற்கிடையில் சட்டமன்ற உறுப்பினர் ஒருவரும் இந்த கும்பலால் கொல்லப்பட, வேட்டை தீவிரமாகிறது. இறுதியில் பல போராட்டங்கள், காத்திருப்புகள், அபாயங்களுக்குப் பிறகு அந்தக் கும்பலைச் சேர்ந்த 2 பேர் கொல்லப்பட, மீதமுள்ளவர்கள் பிடிபடுகிறார்கள்.

கார்த்தி தலைமையில் நடக்கும் தேடுதல் வேட்டை, கைரேகையை வைத்து சங்கிலித் தொடர்போல கொள்ளைக் கூட்டத்தினரைப் பிடிப்பது, அவர்களது பரம்பரைக்குப் பின்னுள்ள வரலாறு ஆகியவற்றில் அதிகம் ஈடுபாடுகாட்டியிருக்கிறார் இயக்குநர். அந்தக் காட்சிகள் படத்துக்கு நம்பகத்தன்மையை ஏற்படுத்துகின்றன. அதே வேளையில், ஆங்கிலேயரால் குற்றப் பரம்பரை எனக் குற்றஞ்சாட்டப்பட்ட ஒரு பிரிவினரை முழுவதுமாகக் கொலைக் கும்பலாகச் சித்திரிப்பது நெருடல். ஆங்காங்கே ஓரிரு குறைகள் இருந்தாலும், ஒரு உண்மைச் சம்பவத்துக்கு விறுவிறுப்பான் திரைக்கதை அமைத்து, நேர்த்தியான தொழில்நுட்பத்தோடு, உண்மைக்கு நெருக்கமாக அதைத் திரையில் படர விட்டிருக்கிறார் இயக்குநர்.

### கவனம் ஈர்க்கும் படம்

பல வகையிலும் கவனத்துக்குரிய திரைப்படம் இது. ஒரு பெரிய கொள்ளைக் கும்பல், அதுவும் வெளிமாநிலங்களைச் சேர்ந்த கொள்ளைக் கும்பலை மெல்ல மெல்லத் துப்புகளைச் சேகரித்து நெருங்குவதை ஒரு விறுவிறுப்பான திரைக்கதையுடன் உருவாக்குவது அவ்வளவு சுலபமான காரியமல்ல.

பொலிஸ் சம்பந்தப்பட்ட வழக்கமான சுட்டுத்தள்ளும் மற்றும் அதிரடிப் படமாக இல்லாமல், ஒரு துப்பறியும் கதைக்கே உரிய இரகசியங்கள், பின்னணித் தகவல்களுடன் படத்தை நகர்த்துகிறார் வினோத். ஆனால், சில பகுதிகளைத் தவிர்த்திருந்தால் படம் இன்னும் சிறப்பாக அமைந்திருக்கக்கூடும். குறிப்பாகப் படத்தின் ஆரம்பத்தில் வரும் காதல் காட்சிகள். இருக்கை விளிம்பில் ரசிகர்களை இருத்திவிட்டுத் திடீரென கதாநாயகன் கதாநாயகி காதல்; வயப்படுவது படத்தை ரசிப்பதற்குப் பெரும் தடையாக அமைகிறது. இடையிடையே இது மணிரத்தினம் படத்தை நினைவூட்டவும் தவறவில்லை.

### பாத்திர வார்ப்புக்கள்

கச்சிதமான உடல், ஆழமான பார்வை, கம்பீரமான பொலிஸ் அதிகாரியாக இருக்கிறார் கார்த்தி. மனைவியுடன் காதலில் லயிக்கும்போதும், சக பொலிசாருக்கு எதுவும் ஆகிவிடக் கூடாது எனக் கலங்கும்போதும், பாலைவனத்தில் வில்லன் கும்பலுடன் மோதும் போதும் நேர்த்தியாக நடித்திருக்கிறார். சக பொலிஸ் அதிகாரியாக பக்குவமாக நடித்திருக்கிறார் போஸ் வெங்கட். வில்லனாக வரும் அபிமன்யு சிங் பார்வையிலேயே மிரட்டுகிறார். கதாநாயகி ரகுல் ப்ரீத் சிங் வரும் காட்சிகள் இயல்பானவை, ரசிக்கத்தக்கவை என்றாலும் கதையுடன் அவர் ஒட்டவில்லை. ஆனால், தன் பணியைச் செவ்வனே செய்திருக்கிறார். குறும்புப் பெண்ணாகக் காதல் காட்சிகளில் ஈர்க்கிறார்.

### இசை, ஒளிப்பதிவு

விறுவிறுப்பும், பரபரப்பும் நிறைந்த திரைக்கதைக்குச் சத்யன் சூர்யனின் ஒளிப்பதிவு உயிரூட்டுகிறது. முதன்மை வீதியோர அடர்ந்த காடு, பரந்த பாலைவனம், ஆரவல்லி மலைகள் என அந்தந்தப் பகுதிகளைத் தன்மை மாறாமல் அசலாகப் படம்பிடித்திருக்கிறார். திரைக்கதையின் வேகத்துக்கு ஊக்கியாக அமைந்திருக்கிறது ஜிப்ரானின் பின்னணி இசை. பாடல்கள் மனதில் ஒட்டவில்லை. ஓநாய் தந்திர பாணி, பாலைவன மணலில் புதைந்திருப்பது என ஆக்சன் காட்சிகளில் சண்டை பயிற்சியாளர் திலீப் சுப்பராயனின் உழைப்பும் அசரவைக்கிறது.

வலுவான திரைக்கதை, பொருத்தமான நடிகர்கள், முன்பு பாராத இடங்கள் என ஒரு கவனிக்கத்தக்க திரைப்படம் இது.



# திருட்டுப்பயலே-2

## சாவகாசமான த்ரில்லர் ரசிகர்களுக்கு

**சு**சி கணேசன் இயக்கத்தில் 2006ஆம் ஆண்டு வெளிவந்த படம் திருட்டுப் பயலே. ஜீவன், மாளவிகா, சோனியா அகர்வால் நடித்திருந்த அந்தப் படத்தின் கதையை ஒட்டி உருவாகியிருக்கிறது, திருட்டுப் பயலே – 2.

### கதை

நுண்ணறிவுப் பிரிவில் பணியாற்றுகிறார் பொலிஸ் பரிசோதகர் செல்வம் (பாபி சிம்ஹா). தொலைபேசி உரையாடல்களை ஒட்டுக்கேட்கும் வேலை அவருக்குரியது. அவரது மனைவி அகிலா (அமலா பால்). ஆரம்பத்தில் மிக நேர்மையானவராகத் தனது கடமையை ஆரம்பிக்கிறார் செல்வம், பின்னர் ஒட்டுக்கேட்பதன் மூலமாகத் தனக்குக் கிடைக்கும் தகவல்களை வைத்து பெரிய அளவில் பணம் சம்பாதிக்க ஆரம்பிக்கிறார். அகிலாவுக்கு முகப்புத்தகம் மூலம் அறிமுகமாகும் பால்கி என்ற பாலகிருஷ்ணன் (பிரசன்னா), ஒரு கட்டத்தில் அகிலாவின் அந்தரங்கப் படங்களை வெளியிடுவதாக மிரட்ட ஆரம்பிக்கிறார். மனைவியின் தொலைபேசி அழைப்புகளை ஒட்டுக்கேட்க ஆரம்பிக்கும் செல்வத்துக்கு இந்த விவகாரம் தெரியவருகிறது. தனக்குத் தெரிந்தது மனைவிக்குத் தெரியாத வகையில் விஷயத்தை முடிக்க நினைக்கிறார் செல்வம்.

கணவனுக்குத் தெரியாமல் விஷயத்தை முடிக்க நினைக்கிறாள் அகிலா. இருவரையும் பகடைக்காய்களாக்கி விஷயத்தைச் சாதிக்க நினைக்கிறான் பால்கி. கதாநாயகன் மிகப் புத்திசாலித்தனமாகக் காய்களை நகர்த்தி, வில்லனை வீழ்த்துவார் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தி, மிகச் சாதாரணமாக முடிகிறது படம்.



### பாத்திரங்கள்

நாயகன், வில்லன் ஆகிய இருவரையும்விட மிகப் புத்திசாலித்தனமான துப்பறிவாளராக வரும் சுசி கணேசனின் பாத்திரம் படத்தோடு ஒட்டவில்லை. பாபி சிம்ஹாவின் முந்தைய சில படங்கள் சரியாக ஓடாத நிலையில், இந்தப் படம் கவனத்தை ஈர்க்கக் கூடும். பல இடங்களில் மிக இயல்பான, ஆர்ப்பாட்டமில்லாத நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார் பாபி சிம்ஹா. அமலாபாலுக்கு மீண்டும் முன்னிலை தரப்போகும் படம் இது எனத் தோன்றுகிறது. சந்தோஷம், உற்சாகம், காதல், கவர்ச்சி, பயம் என பல உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் இடங்களில் பின்னியெடுக்கிறார். ஆனால், அவருக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் பின்னணிக் குரல் வித்தியாசமாக இருக்கி றது. வில்லன் பால்கியாக வரும் பிரசன்னா ஏற்கனவே இது போன்ற வில்லன் பாத்திரங்களில் பரிச்சயமானவர்தான் என்பதால் ஆச்சரியமேற்படவில்லை. வித்யாசாகரின் இசையில் 'நீ பார்க்கும் பார்வை கண்ணோடு' பாடல், முதல் முறை கேட்கும்போது மனதில் ஒட்டிக்கொள்கிறது. பிற பாடல்கள் படத்தின் வேகத்தைக் குறைக்கின்றன.

### நம்பகத் தன்மையும் சலிப்பும்

திருட்டுப் பயலே படத்தைப் போலவே இதுவும் இருக்கிறது. படம் ஆரம்பித்தவுடனேயே நேரடியாகக் கதைக்குள் நுழைகிறது. சுசி கணேசனின் திரைப்படங்கள் அனைத்திலும் இருக்கும் கச்சிதமான திரைக்கதை இந்தப் படத்திலும் இருக்கிறது. தொலைபேசியை ஒட்டுக்கேட்கும் பணியின் சிக்கல்கள், அதிலிருந்து கிடைக்கும் தகவல்கள் எப்படிப் பயன்படுத்தப்படும் என்ற தகவல்கள், அதற்குப் பின்னான அரசியல் சதிகள் என நிறைகிறது படத்தின் முற்பகுதி. தனக்குக் கிடைக்கும் தகவல்களைப் பயன்படுத்தி கதாநாயகன் பணம் சம்பாதிக்கும் காட்சிகள், வில்லனாக வரும் பிரசன்னாவின் அறிமுகம் என இடைவேளை வரை விறுவிறுப்பாக நகர்கிறது திரைப்படம். ஆனால், இடைவேளைக்குப் பிறகு, கதாநாயகனுக்கும் வில்லனுக்கும் இடையிலான மோதல், தொடர்ந்துகொண்டே போவது சலிப்பை ஏற்படுத்துகிறது. படத்தின் முற்பாதியில் இருந்த விறுவிறுப்பு பிற்பாதியில் சுத்தமாகக் கரைந்துபோகிறது.




தொகுப்பு
அனார்கலி



## புனிதன் அப்துல் மஜீத்!

கிழக்கிலங்கையின் சிரேஷ்ட அரசியல்வாதியும் தமிழ், முஸ்லிம் மக்களின் நேசத்தை வென்றவருமான மர்ஹிம். எம்.ஊ. அப்துல் மஜீத்தின் ஆறாவது நினைவுதின நிகழ்வு அவரது சொந்த ஊரான சம்மாந்துறையில் நடைபெற்றது. எல்லோராலும் "பீ.ஏ. மஜீத்" என அழைக்கப்பட்ட அப்துல் மஜீத் கிழக்கிலங்கையின் முதலாவது பட்டதாரி ஆவார்.

'அப்துல் பவுண்டேசன்' தலைவர் ஏ.ஆர். முகம்மட் அலியின் தலைமையில் நடைபெற்ற இந்த நினைவுதின நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவரும் கிழக்கு மக்களால் கல்முனையில் வைத்து "தமிழ்பேசும் மக்களின் தலைவன்'' என்று மகுடம் சூட்டப்பட்டவருமான இரா. சம்பந்தன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

"இனப்பிரச்சினைத் தீர்வு, வடக்குக்கிழக்கு இணைப்புப் போன்ற விடயங்களில் தமிழ்-முஸ்லிம் சமூகங்கள் இணக்கப்பாட்டை எட்டவேண்டியுள்ளது'' என அந்த நிகழ்வில் உரையாற்றிய சம்பந்தன் வலியுறுத்திக் கூறினார்.

*"மனிதர்களுக்கு மத்தியில் புனிதனாகத் திகழ்ந்த அப்துல் மஜீத்தின் நினைவு தின நிகழ்வு ஆத்மார்த்த உணர்வின் வெளிப்பாடெனில் முஸ்லிம் மக்கள் சம்பந்தனின் அறைகூவல் பற்றி ஆழ்ந்து சிந்திப்பார்களா?"*



## விட்டகலாத சுனாமிப் பீதி

தென்கிழக்கிலுள்ள கரையோரப்பிரதேசக் கிராமங்களில் கடந்த ஒருவார காலத்துக்கு மேலாகச் சீரற்ற காலநிலை நீடித்து வருகின்றது. கடந்த மாதம் 24ஆம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக இந்தப் பிரதேசங்களில் பலத்த காற்று வீசி வருவதுடன் அடை மழையும் பெய்து வருகின்றது. அதனால் கரையோரங்களில் கடல் சீற்றமும் கொந்தளிப்பும் அதிகரித்துள்ளதால் கடற்றொழிலாளர்கள் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட முடியாமல் இருக்கின்றனர். அன்றாடம் உழைத்து அன்றாடம் உண்பவர்கள் தொழில் இல்லாமையால் வருமான மின்றி வீட்டில் முடங்கிக் கிடக்கிறார்கள். அவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கிறது.

கடற்கரையை அண்மித்துள்ள பிரதேச மக்கள், இயற்கையின் இந்த வழமைக்கு மாறான செயற்பாடுகள் காரணமாகச் சுனாமி ஏற்படுமோ என்ற அச்சத்துடனும், பீதியுடனும்தான் இன்னமும் காணப்படுகின்றனர்.

*"ஆடு கண்ட பூனைகால்லவா கரையோர மக்கள்"*

## மறுபரிசீலனை செய்!

"கிழக்கின் 'முக வெற்றிலை'யென வர்ணிக்கப்படும் கல்முனை மாநகரப் பிரதேசத்தை நான்காகப் பிரிப்பதற்கு இணக்கம் காணப்பட்டுள்ள தீர்மானம் மீள்பரிசீலனை செய்யப்படவேண்டும்"

முஸ்லிம் தேசிய முன்னணியின் தலைவரும், முஸ்லிம் காங்கிரஸின் முன்னாள் தவிசாளரும், முன்னாள் அமைச்சருமான சேகு இஸதீன் மேற்கண்டவாறு கருத்து வெளியிட்டுள்ளார்.

கல்முனை மாநகரத்தின் பெருமையையும், பொலிவையும் பேணிக்காக்கும் வகையிலேயே இந்தத் தீர்மானங்கள் நிறைவேற்றப்படவேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

*"போராட்டத்தில் மாத்திரமே மூர்க்கமாக இருப்பவர்களுக்கு இதைப் புரியவைப்பதுதான் எப்படியோ?"*



## மாட்டுவண்டி போராட்டம்!

சாய்ந்தமருதுக்கான தனி உள்ளூராட்சி சபைக் கோரிக்கை தொடர்பான மக்கள் எழுச்சிப்போராட்டம் பல்வேறு வடிவங்களில் உருமாறிவருகின்றது. அந்த வகையில் அந்தப் போராட்டத்தின் தொடர்ச்சியாக மாட்டு வண்டிகளை வைத்துத் தமது வாழ்வாதாரத்தைக் கொண்டு நடத்தும் தொழிலாளர்களும் குறித்த போராட்டத்தில் குதித்திருக்கின்றனர்.

மாட்டுவண்டிகளை வைத்துத் தொழில் புரிந்து வரும் மாட்டுவண்டித் தொழிலாளர்கள் கடந்தவாரம் சாய்ந்த மருதில் தனி உள்ளூராட்சி மன்றக்கோரிக்கையை முன்வைத்து ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்றை நடத்தினர். அத்துடன் "தனி உள்ளூராட்சி மன்றம் கிடைக்கும் வரை மக்கள் எழுச்சிப்போராட்டங்களின் வடிவங்கள் மாறிக்கொண்டேயிருக்கும்" என்கிறார் பள்ளிவாசல் உறுப்பினர் ஒருவர்.

*"தமிழக விவசாயிகளின் போராட்டம்போலல்லவா இருக்குது. என்னதான் நடக்கும் நடக்கட்டுமே!"*

## இடமாற்றம் இல்லவே இல்லை!

"அண்மையில் கிழக்கு மாகாணத்தில் புதிதாக நியமனம் பெற்ற பட்டதாரி ஆசிரியர்கள் வழங்கப்பட்ட பாடசாலைகளில் கடமைப் பொறுப்பை ஏற்கவேண்டுமென்றும், இடமாற்றம் தருமாறு கோரி வரவேண்டாம்" எனவும் கிழக்கு மாகாண ஆளுநர் ரோஹித போகொல்லாகம உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

*"பட்டதாரிகள் இருக்கட்டும் முதலில் அரசியல்வாதிகள் விழித்துக்கொண்டால் சரிதான்!"*

## போராட்டங்களுக்குத் தடை!

சாய்ந்த மருது பிரதேசமக்களின் தனி உள்ளூராட்சி சபைக் கோரிக்கைக்கான மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் குறைந்தாலும் அவை முற்றிலுமாக இல்லாமல் போய்விடவில்லை. மாறுபட்ட வடிவங்களில் அவை நீடித்தே வருகின்றன. இதனால் அதற்குத் தடையும் வந்துள்ளது.

இந்தமாதம் 12ஆம் திகதிவரை சாய்ந்தமருதுப் பகுதியில் போராட்டங்களை நிகழ்த்துவதற்கு கல்முனை நீதிவான் நீதிமன்றம் தடைவிதித்துள்ளது. இந்த மக்கள் எழுச்சிப்போராட்டங்களின்போது இடம்பெற்ற சில அசம்பாவிதங்களை அடுத்து, எதிர்காலங்களில் அவ்வாறு அசம்பாவிதங்கள் இடம்பெறாமல் தடுக்கும் பொருட்டு கல்முனை பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவை அடுத்தே நீதிமன்றம் மேற்படி தடை உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

*"மக்கள் எழுச்சி வரம்பு மீறக் கூடாதல்லவா?"*

## எம்மைச் சேர்க்காதீர்!


காரைதீவுப் பிரதேசத்தைச் சம்மாந்துறைத் தொகுதியுடன் இணைக்குமாறு மாகாண சபைத்தேர்தல் தொகுதி எல்லை நிர்ணய அரசதலைவர் குழுவுக்குச் செய்யப்பட்டிருக்கின்ற சிபார்சு தொடர்பில் அதிகளவான விமர்சனங்கள் எழுந்துள்ளன.

"மக்களின் அபிப்பிராயம் உரிய முறையில் பெறப்படாமல் எல்லை நிர்ணயக்குழுவிடம் இதற்கான முன்மொழிவு ஏன் வழங்கப்பட்டது?" எனக் காரைதீவு மக்கள் தம்முடைய கொதிப்பை வெளிப்படுத்தி வருகிறார்கள். வங்குரோத்து அரசியல்வாதிகளுக்கு வாயில் அவல் போட்ட கதையாகவும் இது மாறியிருக்கிறது.

*"மக்களின் கருத்தல்லவா கணக்கிலெடுக்கப்பட வேண்டும்...?"*

கட்டுரை

வி. அருணாசலம்





# பசுமையாக்குதல் அல்ல பச்சையாக்குதல்

ஒருபெரும்போர்நெருக்கடியைச்சந்தித்த இலங்கை தற்போது அதிலிருந்து மீண்டிருந்தாலும் பொருளாதாரப் போரொன்றுக்குத் தொடர்ந்தும் முகம் கொடுத்தே வருகிறது. இதிலிருந்து மீள்வதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன 'பசுமைப் புரட்சி' ஒன்று ஏற்படவேண்டும் என்று செயற்பட்டு வருகிறார். அத்துடன் மறுபுறத்தில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க அரசியல் ரீதியாக நாட்டைப் 'பச்சையாக்க' (ஐக்கிய தேசியக் கட்சியை உறுதிப்படுத்தி) முயன்று வருகிறார். இந்த இரண்டு கட்சிகளுக்கும், இரண்டு தலைவர்களுக்கும் நேரெதிரான சிந்தனையும், செயற்பாடுமே உண்டு.

1994ஆம் ஆண்டிலிருந்து 2005ஆம் ஆண்டுவரை சந்திரிகா தலைமையிலும், 2005ஆம் ஆண்டிலிருந்து 2015ஆம் ஆண்டு வரை மகிந்த ராஜபக்சவின் தலைமையிலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியே இலங்கையில் ஆட்சியமைத்தது.

**இதன் பின்னரும் மகிந்தவின் ஆட்சி தொடர்ந்தால், ஐக்கிய தேசியக் கட்சியை மக்கள் மறந்துவிடுவார்கள் என்ற யதார்த்தம் ரணிலுக்குப் புரிந்திருந்தது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தொடர்ச்சியை முறியடிக்க அதே கட்சிக்குள்ளிருந்து பிரித்தெடுக்கப்பட்ட புதிய தலைமைத்துவம் தான் மைத்திரிபால சிறிசேன.**

### ஐ.தே.கவின் அதிரடி நடிவடிக்கைகள்

'தவளைகளை ஒன்று சேர்க்கும்போது அவற்றை ஒன்றுதிரட்டி ஒருவாறாக ஓரிடத்துக்குக் கொண்டுவந்து விட்டு, போய்விடுபட்ட தவளைகளை அழைத்து வந்து இவற்றுடன் சேர்த்துவிடும்போதுதான் பார்த்தால், ஏற்கனவே கொண்டுவந்துவிட்ட தவளைகள் வேறு திசைகளில் போய்விடும்' இந்த விடயம் சிங்களத்தில் பழமொழியாக உண்டு.

ஏற்கனவே சேர்த்த மாற்றுக் கட்சிகளைக் ஒரே தளத்தில் தொடர்ந்து நிற்கவைப்பதற்குப் பெருந்தொகைப் பணம் ஐக்கிய தேசியக் கட்சியினரால் வழங்கப்பட்டது. இதில் முஸ்லிம் தலைவர்களும், தமிழ்த் தலைவர்களும் அடங்கியிருந்ததாகக்கூடச் செய்திகள் உண்டு.

இது கட்சி, கொள்கை என்பவற்றுக்கு அப்பால் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு தலைவர்களுடனும் பேசி, வழங்கப்பட்ட பேரமாகும். இவற்றை வாங்கியவர்கள் தமது கட்சிகளுக்குக்கூட அதை மறைத்திருந்தார்கள்.

2015ஆம் ஆண்டு அரசதலைவர் தேர்தலில் ஆட்சிமாற்றம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அதிக உத்தரவாதங்களை அள்ளி வழங்கினார் ரணில். தேர்தல் முடிந்து ஆட்சிமாற்றம் ஒன்று ஏற்படுத்தப்பட்டதன் பின் அவற்றில் பல மறக்கப்பட்டன. ஆதரவு வழங்கிய பல கட்சிகளும், நபர்களும் 'நல்லாட்சி' சரியில்லையென்று கூறும் நிலை 2வருடங்களில் ஏற்பட்டு விட்டது.

### மைத்திரியின் இறுக்கமான நடவடிக்கை

சிங்களத் தேசியவாதிகளின் வாக்குகள் மகிந்த ராஜபக்சவின் பக்கம் குவிக்கப்பட்டன. இந்த எதிர்க்கட்சி இறுக்கம் என்பது சதா நல்லாட்சிக்குத் தலையிடி கொடுத்து வருகிறது. மகிந்தவுக்கு வழங்கப்பட்ட வாக்குகள் ஒருபோதும் உடையப்போவதில்லை. ஆனால் கூட்டுக்கட்சிகளின் நிலை அவ்வாறல்ல. இரண்டு முதன்மைக் கட்சிகளுக்கு இடையிலும் பல புடுங்குப்பாடுகள் எழுந்துள்ள நிலையில் அரச தலைவர் தனது பூர்வீகக் கட்சியான சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் என்ற வகையில் சில இறுக்கமான முடிவுகளை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அதன் உச்சமே மத்திய வங்கி பிணை முறி விவகாரத்தில் அரச தலைவர் ஆணைக்குழுவின் முன்னிலையில் தலைமை அமைச்சர் போய் குந்தவேண்டியிருந்தது. இந்த நெருக்கடியிலிருந்து தப்புவதற்காக அல்லது பரிகாரம் பெறுவதற்காகத் தலைமை அமைச்சர் தமது குல தெய்வங்களில் ஒன்றான கர்நாடக எல்லையில் உள்ள ஸ்ரீ முகாம்பிகை அம்மனை தரிசிக்கவும் தவறவில்லை.

(ரணிலின் மூதாதையர்கள் இந்துக்கள். அவர்கள் இலங்கைக்கு வந்ததன் பின் போர்த்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேயர் காலத்தில் பதவிகளுக்காகக் கிறிஸ்தவர்களாக மாறினர். பின்னர் அதற்காகவே பௌத்தர்களாகவும் மாறினர். இவரது மாமனான ஜே.ஆரின் முதற்பெயர்கள் யூனியஸ் றிச்சாட் ஜெயவர்த்தன என்பதாகும். மற்றோர் உறவுக்காரரான பண்டாரநாயக்கவின் முதற்பெயர்கள் சொலமன் வில்லியம், டயஸ் பண்டாரநாயக்க என்பதாகும்).

### பச்சையாக்கும் திட்டம்

தேர்தலுக்காகப் பணத்தை அள்ளி இறைத்த அர்ஜுன மகேந்திரனின் குடும்பத்தினருக்குப் பலசலுகைகளை வழங்கவேண்டிய நிலை ரணிலுக்கு ஏற்பட்டதால், சிங்கப்பூர் வாசியான அர்ஜுன மகேந்திரனுக்கு இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை வழங்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இது தலைமை அமைச்சருக்கும் அரசதலைவருக்குமான முரண்பாடாகவும், பின்னர் கட்சிகளின் முரண்பாடாகவும் உருவெடுத்துள்ளது. அர்ஜுன மகேந்திரனைப் பதவியிலிருந்து நீக்கியபோது தலைமை அமைச்சரின் ஆலோசனை பெறப்படாமலேயே புதிய மத்திய வங்கி ஆளுநராகத் தமிழரான இந்திரஜித் குமாரசுவாமி அரச தலைவரால் நியமிக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. அர்ஜுன மகேந்திரன் மத்திய வங்கி ஆளுநராக நியமிக்கப்பட்டதன் பின் அர்ஜுன் அலோசியசுக்குப் பணமுறி வழங்கியதில் பெரும் ஊழல்கள் இடம்பெற்றதாகக் குற்றம் சாட்டப்பட்டது.

இந்தப் பணமுறிகள், கல்குடாவில் அமைக்கப்படும் வடிசாலை, புதிய ஐக்கிய தேசியக் கட்சிக்கான பத்திரிகை மற்றும் தொலைக்காட்சி எனும் பல வருமான மார்க்கங்களின் ஊடாக ஐக்கிய தேசியக் கட்சியைப் பொருளாதார ரீதியில் உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளாக ஆரம்பிக்கப்பட்டன. ஆனாலும் மகிந்த தரப்பு மற்றும் ஜே.வி.பி.யினரின் எதிர்ப்புக் காரணமாக அவற்றைச் சரிவரச் சாதிக்க முடியவில்லை. இந்த நடவடிக்கைகளின் மூலம் இலங்கையில் ஐ.தே.காவை வியாப்பிக்கச் செய்தல் என்ற வேலைத்திட்டமே முன்மொழியப்பட்டது.

### கட்சிகளின் போக்கும் பாதிக்கப்படும் சிறுபான்மையினரும்

பிரதேச சபைத் தேர்தல்கள், மாகாண சபைத் தேர்தல்கள், பொதுத் தேர்தல், அரச தலைவர் தேர்தல் என எல்லா மட்டங்களிலும் ஐக்கிய தேசியக் கட்சி தனக்கான தனிப்பட்ட சாத்தியப்பாடுகள் பற்றியே சிந்தித்து வருகிறது. இரண்டு முதன்மைக் கட்சிகள் இணைந்து கூட்டாட்சி ஒன்றை அமைத்தபோதிலும் அது மகிந்த ஆட்சிக்கு எதிரான கூட்டாக அமைந்ததே தவிர, இரு கட்சிகளதும் முழு மனதுடன் ஏற்படுத்தப்பட்டதல்ல. கூட்டாட்சியில் அமைச்சர்களை எந்தக் கட்சியிலிருந்து நியமிப்பது, நீக்குவது தொடர்பில் இரண்டு கட்சிகளுக்கும் இடையில் இழுபறிகள் தொடர்கின்றன.

இரண்டு யானைகள் தமக்குள் மோதிக்கொள்ளும்போது காலுக்குள் அகப்பட்ட கோரைப்புற்கள் எந்தவித தேவையுமின்றி நசுக்கப்படுவதுபோல, சிறுபான்மை இனங்களின் எதிர்பார்ப்புக்கள் சிறிலங்கா சுதந்திரக்கட்சியாலும் ஐக்கிய தேசியக் கட்சியாலும் நசுக்கப்பட்டு வருகின்றன.

### புலிகளிடமிருந்து தப்பிப் பழிதீர்த்த ரணில்

இலங்கையின் முதலாவது கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஜே.ஆரின் பின்னர் மிகவும் நலிவடைந்த நிலைக்கு தள்ளப்பட்டது. அந்தக் கட்சிக்குத் தலைமை தாங்கவேண்டிய பல தலைவர்கள் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டனர். அடுத்தநிலைத் தலைவர்கள் இல்லாது ஒழிக்கப்பட்டதால், கட்சி தலைதூக்க முடியாத அளவுக்குப் பின் தள்ளப்பட்டது. இந்தத் தொடர் தலைவர்கள் அழிப்பில் தப்பியொட்டி இருந்தவர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமே. அதன் பின் பல தேர்தல்களில் போட்டியிட்டு அவர் தோல்வி கண்டார். 2005ஆம் ஆண்டில் அரசதலைவர் தேர்தலில் வெல்லக்கூடிய வாய்ப்பு இருந்தபோதிலும், விடுதலைப் புலிகள் வடக்குக் கிழக்கில் தேர்தலைப் புறக்கணித்ததன் விளைவாக அவர் தோல்வியடைந்தார்.

தமது தலைவர்களைக் கொன்ற விடுதலைப் புலிகளை இல்லாது செய்யும் நோக்குடனேயே கருணாவை அந்த அமைப்பிலிருந்து பிரித்தெடுக்கும் முயற்சியில் ரணில் வெற்றிபெற்றார். ரணில் அரச தலைவராக வந்துவிட்டால் தமது அமைப்பு முழுமையாக அழிக்கப்பட்டுவிடும் என நினைத்த புலிகள் அமைப்பு மகிந்த ராஜபக்ஷவைப் பதவிக்குக் கொண்டு வந்தது. 2005 இல் தொடங்கியிருக்கவேண்டிய புலி அழிப்பு நடவடிக்கை 4 ஆண்டுகள் தாமதித்து மகிந்த ராஜபக்சவினால் முடித்து வைக்கப்பட்டது. சிங்களத் தலைவர்கள் ஒரே விடயத்தைத்தான் சிந்திக்கிறார்கள் என்பது இதன் மூலம் தெளிவாகியது.

### ஜே.ஆர் செய்வதையே ரணில் செய்கிறார்

சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள் ஏற்படுத்தப்பட்டுள்ள உடைவு என்பது மேலும் முடுக்கிவிடப்படும் பட்சத்திலேயே, ஐக்கிய தேசியக் கட்சியினதும், ரணில் விக்கிரமசிங்கவினதும் நிலைபேறு தங்கியுள்ளது.

அடுத்துவரும் அரச தலைவர் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க போட்டியிடும்போது, யாருடனும் கூட்டுச்சேரத் தயாராகவே இருப்பார். நிலைமை இவ்வாறு இருக்க ரணில் அரச தலைவர் ஆணைக்குழுவின் முன் சாட்சியமளிக்க அழைக்கப்பட்டது சற்றுப் பின்னடைவை ஏற்படுத்தியிருக்கிறது. ரணில் விக்கிரமசிங்க பெரும் சொத்துக்காரராக இருப்பதால் அவருக்கு காசு எடுக்கவேண்டிய அவசியம் இல்லையெனச் சிலர் வாதிட்டாலும், கட்சியை வளர்ப்பதற்கு அவரது சொத்துக்களை விற்று செலவழிக்க அவர் முன்னிற்கப் போவதில்லை.

இந்தக் கட்சிக்கான மேலதிக நிதியீட்டம் என்பது மகிந்த தரப்பிலும், ஜே.வி.பி.யினாலும் எதிர்க்கப்படும் வரை சுமூகமாக எடுத்துச்செல்ல முடியாது. ஜே.ஆர். இன்று உயிருடன் இருந்திருந்தால் எதைச் செய்வாரோ அதையே அவரது மருமகனான ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டு வருகிறார்.


### ரணிலின் திட்டங்கள்

சிங்கள இளைஞர், யுவதிகளை நவீன தொழில்நுட்பங்களுக்குள் புகுத்துவது, அந்நியச் செலாவணி உழைப்புக்காக நாட்டில் கிடைக்கும் மீன்கள் தொடக்கம் செவ்விளநீர் வரை வெளிநாடுகளுக்கு விற்பது என்பதாக அது அமையும். வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவரக்கூடிய சட்ட இலகுபடுத்தல்களையும், குறைந்த விலையிலான தொழிலாளர்களை வழங்குவது என்பதும் கவர்ச்சிகரமான திட்டங்களாக வெளித்தெரியும். வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கான கொள்கை ஒன்றை வகுப்பதன் மூலம் இலங்கைக்குத் தற்போது இருந்து வரும் பன்னாட்டு நெருக்கடிகளை இல்லாது செய்யமுடியும். அந்தச் சூழலில் பன்னாடுகள் இலங்கை மிகச்சிறந்த ஜனநாயக நாடு என்ற நற்சான்றிதழையும் வழங்கும்.

ரணில் விக்கிரமசிங்க அரச தலைவராக மாறும் பட்சத்தில் தனியார் மயமாக்கல் அதி உச்சம் பெறும். கல்வி, சுற்றுலா, துறைமுகங்கள் உள்நாட்டுப் பொருட்கள் என எல்லாத் துறைகளிலும் உற்பத்தி மற்றும் சேவைகள் மூலம் அந்நியச் செலாவணி பெறப்பட வாய்ப்பு உண்டு.

விவசாயத்தில் வெளிநாட்டவர்களுக்கான உணவு உற்பத்திகளும், மீன்பிடியில் சிறந்தவற்றை வெளிநாடுகளில் விற்றுவிட்டு உள்நாட்டவர்கள் எஞ்சியதைச் சாப்பிடும் நிலையும் ஏற்படும். நவீன உலகுடன் உடனடியாக இலங்கையைப் பொருத்துவது என்பது பசுமைப் புரட்சியாக ஒருபோதும் இருக்கப்போவதில்லை. அது பச்சைப் புரட்சியாகவே இருக்கும். இந்தப் பச்சைப் புரட்சியில் வடகிழக்குத் தமிழரின் நிலை மிக மோசமானதாக மாறவே வாய்ப்பு உண்டு. வெறும் சேவை வழங்குநர்களாகவும், கூலிகளாகவும் பெரிய முதலீட்டாளர்களின் கீழ் பணிபுரியும் நிலையுமே இவர்களும் ஏற்படும். ஒருவாறாக இந்த வாழ்க்கை முறை ஒரு 10வருட காலத்தைத் தாண்டினால் அதுவே மக்களின் வாழ்வு முறையாக மாறிவிடும் ஆபத்தும் உண்டு.

# நிலவில் ஒரு குகை!



கட்டுரை
என்.ராமதுரை

நிலவில் பெரிய குகை இருப்பதாக ஜப்பான் அனுப்பிய விண்கலம் கண்டுபிடித்துள்ளது. எதிர்காலத்தில் நிலவுக்குச் செல்கின்ற விண்வெளி வீரர்கள் இந்தக் குகையில் தங்க முடியும் என்று கருதப்படுகிறது. அமெரிக்கா 1969ஆம் ஆண்டில் தொடங்கி ஆறு முறை நிலவுக்கு விண்வெளி வீரர்களை அனுப்பியபோது அவர்கள் தங்களது விண்கலத்திலேயே தங்கவேண்டியிருந்தது. ஒவ்வொரு முறையும் இரண்டு பேர் மட்டுமே சென்றதால், இப்படி விண்கலத்தில் தங்குவது சாத்தியமாக இருந்தது. தவிர, அவர்கள் நிலவில் அதிக காலம் தங்கவில்லை. 1972ஆம் ஆண்டில் அப்போலோ 17 விண்கலத்தில் சென்றவர்கள் தான் நிலவில் அதிகபட்சமாக 75மணித்தியலங்கள் வரை தங்கினர்.

எதிர்காலத்தில் அடுத்தடுத்து பல விண்வெளி வீரர்கள் அனுப்பப்படும்போது நிலவில் நிறைய நாள்கள் தங்க வேண்டியிருக்கும். அவர்கள் நிலத்துக்கு அடியில் குடியிருப்புகளை ஏற்படுத்திக்கொண்டு, அதில்தான் தங்கவேண்டியிருக்கும். அப்படியான குடியிருப்புகளை ஏற்படுத்திக்கொள்ளும்வரை இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ள குகையில் தங்கலாம்.

### கடும் வெயில்; கடும் குளிர்

நிலவின் நிலப் பரப்பில், அதாவது திறந்த வெளியில் குடியிருப்புகளை ஏற்படுத்திக்கொள்வது என்பது அநேகமாக இயலாத விடயம். நிலவில் பகல் என்பது பூமிக் கணக்குப்படி 14 நாள்கள். இரவு என்பது இதே போல 14 நாள்கள். நிலவில் பகல் நேரத்தில் உச்சி வேளையில் வெயில் சுமார் 106 டிகிரி (செல்சியஸ்) ஆகும். இரவில் குளிர் மைனஸ் 173 டிகிரி (செல்சியஸ்) அளவுக்கு இருக்கும். நிலவில் காற்று மண்டலம் இல்லை என்பதே இந்த நிலைமைக்குக் காரணம். நிலவில் உள்ள நிலைமையுடன் ஒப்பிட்டால், பூமியில் பதிவான அதிகபட்ச வெயில் (ஈரான் பாலைவனத்தில்) 70 டிகிரி (செல்சியஸ்) ஆகும். எனவேதான் நிலவுக்குச் சென்ற அமெரிக்க விண்வெளி வீரர்கள் ஆறு தடவைகளிலும் நிலவில் சூரியன் உதித்த சற்று நேரத்தில்தான் போய் இறங்கினர். நிலவில் உச்சி வெயில் நேரத்தில் போய் இறங்கவில்லை. வெயில் ஏறுவதற்கு முன்னர் அங்கிருந்து திரும்பிவிட்டனர்.

நிலவில் பல நாட்கள் தங்குவதானால் நிலத்துக்கு அடியில் குடியிருப்புகளை ஏற்படுத்திக் கொண்டாக வேண்டும். அல்லது நிலவின் துருவப் பகுதிகளில் போய் இறங்க வேண்டும் என்பதுதான் ஏற்கெனவே உள்ள நிலை. இப்படியான பின்னணியில்தான் ஜப்பானிய விண்கலம் நிலவில் குகையைக் கண்டுபிடித்துள்ளது. நிலவில் கண்டுபிடிக்கப்பட்ட குகை இயற்கையாக ஏற்பட்டுள்ளதாகும்.

சுமார் 300கோடி ஆண்டுகளுக்கு முன்னர் நிலவில் எரிமலைகள் செயற்பட்டன. பூமியில் இப்போதும் எரிமலைகள் நெருப்புக் குழம்பைக் கக்குகின்றன. ஆனால், நிலவில் எரிமலைகள் அவிந்துவிட்டன. பூமியில் எரிமலைக் குழம்பு கெட்டியாகிறது. எரிமலையின் வாய் வழியே வெளிப்படும் நெருப்புக் குழம்பு மேலும் மேலும் இறுகி, எரிமலை கொஞ்சம் கொஞ்சமாகக் கூம்பு வடிவில் உயர்ந்துகொண்டே போகும். நிலவில் அப்படியில்லை. நிலவில் நெருப்புக் குழம்பு பெரிதும் நீர்த்து இருக்கும். எனவே, அதிக பரப்பளவில் அது பரவி நிற்கும்.

### கறுப்பின் காரணம்

இரவில் முழு நிலவைப் பார்த்தால் பல பகுதிகள் கறுப்பாகத் தெரியும். ஆரம்பகாலத்தில் தொலைநோக்கி மூலம் நிலவை ஆராய்ந்த விஞ்ஞானிகள், நிலவில் கறுப்பாகத் தெரிகின்ற பகுதிகளைக் கடல்கள் என்றே கருதினர். பின்னர்தான் அவை எரிமலைக் குழம்பு பாய்ந்து ஓடிய பகுதிகள் என்பது தெரியவந்தது. நீங்கள் பௌர்ணமி தினத்தன்று நிலவை உற்றுக் கவனித்தால் நிலவின் மேற்குப் பகுதி, வடபகுதி ஆகியவை கருமையாக இருப்பது தெரியவரும். நிலவின் எரிமலைக் குழம்பில் இரும்புச் சத்து அதிகம் என்பதால், எரிமலைக் குழம்பு பரவிய பகுதிகள் இவ்விதம் கறுப்பாகத் தெரிவதாகக் கருதப்படுகிறது.

தொடர்ந்து பல பௌர்ணமிகளில் நிலவைக் கவனித்து வந்தால், நிலவு ஒரே மாதிரியாகத்தான் தென்படும். நிலவு எப்போதும் நமக்கு தனது ஒரு பாதியை மட்டுமே காட்டிவருவதால் இப்படியான நிலை உள்ளது. நிலவில் பெருக்கெடுத்து ஓடிய நெருப்புக் குழம்பு என்பது உருகிய பாறைக் குழம்பே ஆகும். பாறைக் குழம்பு ஆறிய பிறகு அதன் மேற்புறம் இறுகிவிட்டது. உள்ளே நெருப்புக் குழம்பு ஓடிய இடம் வெறுமையான பிறகு, அது சுரங்கப்பாதை போலானது. இதை 'லாவா குழாய்' என்று விஞ்ஞானிகள் குறிப்பிடுகிறார்கள். நிலவில் இப்படி எரிமலைக் குழம்பு ஓடிய சுரங்கப்பாதைகள் பல உள்ளன என்பது முன்னரே தெரியும்.

### காக்கும் சுரங்கம்

அதற்கு முன்னர் நிலவை ஆராய்ந்த பல விண்கலங்கள் நிலவில் உள்ள எரிமலை சுரங்கப் பாதைகளை ஆராய்ந்து தகவல் தெரிவித்துள்ளன. இந்தச் சுரங்கப்பாதைகள் சில இடங்களில் 300மீற்றர்கள் அகலத்துக்கு உள்ளன. சுரங்கப்பாதைக்குள் மைனஸ் 20டிகிரி அளவுக்குக் குளிர் உண்டு. நிலவில் திறந்த வெளியில் இருக்கக்கூடிய கடும் வெப்பம் அல்லது கடும் குளிருடன் ஒப்பிட்டால் இது எவ்வளவோ பரவாயில்லை. இந்தச் சுரங்கத்துக்குள் தங்கிக் கொண்டால் காஸ்மிக் கதிர்வீச்சு, சூரியனில் இருந்து வரும் ஆபத்தான துகள்கள், சிறியதும் பெரியதுமான விண்கற்கள் ஆகியவற்றின் தாக்குதலிலிருந்து தப்பித்துக்கொள்ளலாம்.

நிலவில் உள்ள எரிமலைகளில் சுரங்கப்பாதைகளின் நுழைவு வாயில்போல ஆங்காங்கு வட்டவடிவக் குழிகள் உள்ளன. இந்தக் குழிகளுக்குள் இறங்கினால் சுரங்கப்பாதையில் போய்க் கொண்டே இருக்கலாம். நிலவைச் சுற்றிச் சுற்றி வந்து நிலவை ஆராய்ந்த ஜப்பானின் காகுயா விண்கலம் கண்டுபிடித்துள்ள புது விடயம், இந்தச் சுரங்கப்பாதை ஒன்றில் பெரிய குகை ஒன்று உள்ளது என்பதாகும்.

அந்தக் குகை 100 மீற்றர் அகலமும் 50 கிலோ மீற்றர் நீளமும் கொண்டதாக உள்ளது. அந்தக் குகையில் பனிக்கட்டி அல்லது தண்ணீர் இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது. நிலவில் உள்ள சுரங்கப்பாதைகள் குறித்து ஜப்பானிய விண்கலம் நிறையத் தகவல்களை அளித்துள்ளது.


### பூமியிலும் எரிமலை சுரங்கப்பாதைகள்

ஜப்பானிய விண்கலம் 2007ஆம் ஆண்டில் நிலவுக்கு அனுப்பப்பட்டது. அது இரண்டு ஆண்டுகாலம் நிலவை விரிவாக ஆராய்ந்தது. காகுயா அனுப்பிய தகவல்கள் ஆராயப்பட்டு, இப்போதுதான் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. நிலவுக்கு மறுபடியும் விண்வெளி வீரர்களை அனுப்புவதற்குச் சில நாடுகள் திட்டமிட்டுள்ள பின்னணியில் நிலவில் இந்தக் குகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

2030ஆம் ஆண்டளவில் விண்வெளி வீரர்களை நிலவுக்கு அனுப்ப உள்ளதாகச் சீனா ஏற்கெனவே அறிவித்துள்ளது. நிலவில் குடியிருப்புகளை ஏற்படுத்துவது தங்கள் திட்டம் எனச் சீனா அறிவித்துள்ளது. பிற நாடுகளுடன் சேர்ந்து நிலவுக்கு 2036ஆம் ஆண்டுக்குள் விண்வெளி வீரர்களை அனுப்ப ஜப்பான் திட்டமிட்டுள்ளது. 2030ஆம் ஆண்டளவில் நிலவுக்கு நான்கு விண்வெளி வீரர்களை அனுப்ப உள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளது. இவை ஒரு புறம் இருக்க, நிலவில் மட்டுமின்றி பூமியிலும் இவ்வித எரிமலைச் சுரங்கப்பாதைகள் உள்ளன. அமெரிக்காவில் இடாஹோ மாகாணத்திலும் ஆரிகன் மாகாணத்திலும் உள்ளன. தென்கொரியா, ஸ்பெயின் நாட்டின் கேனரி தீவுகள், போர்ச்சுகல், கென்யா, ஐஸ்லாந்து ஆகிய நாடுகளிலும் எரிமலை சுரங்கப் பாதைகள் காணப்படுகின்றன. ஹவாய் தீவில் உள்ள எரிமலை சுரங்கப்பாதை 65கிலோ மீற்றர்கள் நீளம் கொண்டது. செவ்வாய் கிரகத்திலும் எரிமலைச் சுரங்கப்பாதை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நன்றி - தி ஹிந்து

> இரவில் முழு நிலவைப் பார்த்தால் பல பகுதிகள் கறுப்பாகத் தெரியும். ஆரம்பகாலத்தில் தொலைநோக்கி மூலம் நிலவை ஆராய்ந்த விஞ்ஞானிகள், நிலவில் கறுப்பாகத் தெரிகின்ற பகுதிகளைக் கடல்கள் என்றே கருதினர். பின்னர்தான் அவை எரிமலைக் குழம்பு பாய்ந்து ஓடிய பகுதிகள் என்பது தெரியவந்தது. நீங்கள் பௌர்ணமி தினத்தன்று நிலவை உற்றுக் கவனித்தால் நிலவின் மேற்குப் பகுதி, வடபகுதி ஆகியவை கருமையாக இருப்பது தெரியவரும். நிலவின் எரிமலைக் குழம்பில் இரும்புச் சத்து அதிகம் என்பதால், எரிமலைக் குழம்பு பரவிய பகுதிகள் இவ்விதம் கறுப்பாகத் தெரிவதாகக் கருதப்படுகிறது.



# உள்ளூராட்சித் தேர்தலும் அரசியல் கட்சிகளும்



கட்டுரை

சந்திரசேகர ஆசாத்

உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சிக்காலம் நிறைவு பெற்று அவை கலைக்கப்பட்டு விட்டன. அவற்றுக்கான தேர்தல்கள் இடம்பெறாமல் இழுபறி நிலையே நிலவி வருகிறது. விகிதாசாரத் தேர்தல் முறைக்குப் பதிலாக வட்டாரத் தேர்தல் முறையைக் கொண்டு வருவதற்கும் அதற்கான எல்லைகளை நிர்ணயம் செய்வதற்குமே இந்தக் காலதாமதம் எனக் கூறப்பட்டது. எனினும் அந்தப் பிரச்சினை ஒருவாறு தீர்க்கப்பட்டு தேர்தலுக்கான அறிவித்தல் வெளியிடப்பட்டது. அதேவேளையில் அந்த அறிவித்தலுக்கு எதிராக மேன்முறையீட்டு நிதிமன்றில் மனுத்தாக்கல் செய்தமையால் அதற்கு மீண்டும் தடங்கல் ஏற்பட்டது. எனினும் இப்படியான சிக்கலுக்குட்படாத 93 உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்களை நடத்துவதற்குத் தேர்தல் ஆணையாளர்; வேட்பு மனுத்தாக்கல் செய்யும் திகதிகளை அறிவித்துள்ளார். ஏனைய மன்றங்களுக்கும் விரைவில் திகதி அறிவிக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால் இப்போதைக்கு 93 உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடப்பது உறுதியாகி விட்டது. இதில் வடக்கில் ஒரு உள்ளூராட்சி மன்றமும், கிழக்கில் மூன்று உள்ளூராட்சி மன்றங்களும் உள்ளடங்குவதாகத் தெரிய வந்துள்ளது.

### மக்கள் என்ன செய்யப் போகிறார்கள்?

தேர்தல் காலம் வந்தால் அரசியல் சூடுபிடித்துவிடுவது வழமைதான். விழாக்களிலும், ஊடகச் சந்திப்புக்களிலும் மட்டும் உரையாற்றி விட்டு உல்லாச வாகனங்களில் பவனி வரும் கனவான் அரசியல்வாதிகள் கூட மக்கள் மத்தியில் இறங்கி வருவார்கள். மக்கள் போராட்டங்களை நடத்தும்போது சுகவீனம் காரணமாகக் கலந்து கொள்ளாதவர்கள் கூட இளைஞர்களாக மாறித் துள்ளிக்குதித்துத் தேர்தல் பரப்புரைகளில் இறங்கி விடுவார்கள். இவர்கள், தாங்கள் மலையைப் பெயர்த்து விட்டதாகவும் அதைத் தோளில் தூக்கத் தங்களுக்கு வாக்களிக்கும் படியும் பரப்புரை செய்து முழங்குவர். இந்த முறை அதிகளவான மக்கள் மத்தியில் வாக்களிப்பது தொடர்பாகக் குழப்பங்கள் கோலோச்சுவது மாத்திரம் இப்போதைக்கு உறுதியாகியிருக்கின்றது.

### எதிர் எதிராக அரசு

எதிர்வரும் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியும் தனித்தனியே போட்டியிடப் போகின்றன. அதாவது இரண்டும் ஒன்றையொன்று எதிர்த்துப் போட்டியிடப் போகின்றன. இரண்டு கட்சிகளும் இணைந்தே இன்று அரசாக ஆட்சி பீடத்தில் அமர்ந்துள்ளன. சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர் அரசதலைவர். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் தலைமை அமைச்சர். இரண்டு கட்சியினதும் பிரமுகர்களே அமைச்சரவையில் உள்ளனர். வரவு செலவுத் திட்டம் உட்படச் சகல சட்டங்களும் திட்டங்களும் இரண்டு கட்சியினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டே நிறைவேற்றப் படுகின்றன. இப்படியான ஒரு நிலையில் தான் இந்த இரண்டு கட்சிகளும் ஒன்றையொன்று எதிர்த்துப் போட்டியிடப் போகின்றன. அப்படியானால் மக்கள் யாருக்கு வாக்களிப்பது? எதற்கு வாக்களிப்பது? சாதனைகள் ஏதாவது செய்திருந்தால் அதற்கு இரண்டு கட்சிகளும் உரிமை கோர முடியும் பின்னடைவுகள் ஏற்பட்டிருந்தால் இரண்டு கட்சிகளுமே பொறுப்புக் கூறவேண்டும் இப்படியான நிலமையில் இந்த இரண்டு கட்சிகளில் ஒன்றை எப்படி மக்கள் தெரிவு செய்ய முடியும்?

### குற்றச் சுமத்தல்கள்

இந்த இரண்டு கட்சிகளும் தங்களுக்குத் தனியாக வாக்களிக்கக் கோருவதற்கு என்ன காரணங்களை முன்வைக்கப் போகின்றன? கடந்த இரண்டரை வருடங்களில் தங்கள் கட்சிகள் மூலமாகத் தனித்துவமான சாதனைகள் எதையும் செய்துள்ளனரா? அப்படியெதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், ஒருவர் மேல் ஒருவர் குற்றச்சாட்டுகளைச் சுமத்த வாய்ப்புண்டு. கடந்த காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கண்மூடித்தனமாகக் கடன்களை வாங்கியதாலும், ஊழல் மோசடிகளில் ஈடுபட்டதாலுமே தற்சமயம் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளதெனச் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மீது ஐக்கிய தேசியக்கட்சி குற்றம் சுமத்தலாம். அதன் காரணமாகவே துறைமுகங்களையும் விமானநிலையங்களையும் பிறநாடுகளுக்கு நீண்ட காலக் குத்தகைக்கு விட வேண்டிய தேவை ஏற்பட்டதாகவும் குற்றம் சுமத்தவும் கூடும். அதே வேளையில் பிணை முறி மோசடி காரணமாகவே தேசியப்பொருளாதாரத்தில் பெரும் பாதிப்பு ஏற்பட்டதென ஐக்கிய தேசியக்கட்சி மேல் சிறீலங்கா சுதந்திரக்கட்சி குற்றம் சுமத்தலாம். ஆனாலும் இரண்டு கட்சிகளும் பங்காளிகளாக இருந்த அரசிலேயே, ஒரே அமைச்சரவையின் ஆட்சியிலேயே சகலதும் இடம் பெற்றது என்பது மக்களுக்குத் தெரியாதா என்ன?

### மகிந்த அணியால் ஐ.தே.கவின் கை உயரலாம்!

சிறீலங்கா சுதந்திரக்கட்சியையும் மகிந்த அணியினரையும் ஒன்றிணைக்க இன்னொருபுறம் முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. ஆனால் அதற்கான சாத்தியப்பாடுகள் எதுவும் தென்படுவதாகத் தெரியவில்லை. சிறு கட்சிகளை இணைத்து ஒரு அணியாகப் போட்டியிடப்போவதாகவும் தங்கள் அணியில் கூடுதலான வேட்பாளர்களாகத் தேரர்கள் நியமிக்கப்படுவர் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே செய்து வந்த புதிய அரசமைப்பு மூலம் நாட்டைப் பிரிக்கப் போகிறார்கள் எனவும் பிறநாடுகளுக்கு விற்கிறார்களனெனவுமான பரப்புரைகளை அவர்கள் முழு அளவில் அவிழ்த்து விடுவார்கள்.

இன்னொரு புறம் ஜே.வி.பி சகல விதமான ஊழல் மோசடிகளுக்கு எதிராகவும் வாழ்க்கைச் செலவு உயர்வு, பணவீக்கம், பொரளாதாரப் பின்னடைவு என்பனவற்றையும் அம்பலப்படுத்தித் தனது பரப்புரையை மேற்கொள்ளும். ஐக்கிய தேசியக்கட்சி, சிறீலங்கா சுதந்திரக்கட்சி என்பவற்றுக்கு பாரம்பரியமான நிரந்தர ஆதரவுத்தளங்கள் உண்டு. அவை எந்தக் காலமும் நிலை பெற்றிருக்கும். இந்த முறை சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் ஆதரவுத்தளத்தின் ஒரு பகுதியை மகிந்த தலைமையிலான பொது எதிரணியர் உடைத்தெடுக்க வாய்ப்பு உண்டு. எனவே சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையே இடம்பெறும் பலப் பரீட்சையில் ஐக்கிய தேசியக்கட்சியின் கை மேலோங்கலாம்...!

### குழப்பமடையும் மக்கள்

ஜே.வி.பிக்கு நிலையான, அசைந்து கொடுக்காத ஒரு ஆதரவுத்தளம் உண்டு. அதைப் பொது எதிரணியினராலோ ஆட்சியிலுள்ள கட்சிகளாலோ உடைக்க முடியாது. எனவே அவர்கள் தென் மாவட்டங்களில் சில உள்ளூராட்சி சபைகளைக் கைப்பற்ற முடியும். மாறாக ஒன்றாக ஆட்சிசெய்யும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒரு கூட்டு முன்னணி அமைத்துப்போட்டியிட்டால் தென்னிலங்கையிலுள்ள சகல உள்ளூராட்சி சபைகளையும் கைப்பற்ற முடியும். ஆனால், அது ஒருபோதும் நடக்காது. பதவி, அதிகாரவெறி என்பன அங்கே முக்கிய தடைகளாக நிற்கின்றன. மக்களின் நலன்கள் என்பன இரண்டாம் மூன்றாம் பட்சமே. ஐக்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக்கட்சி ஆகியவற்றின் நிரந்தர ஆதரவாளர்களைவிட இன்னொரு விதமாக அரசுக்கு ஆதரவாளர்கள் உண்டு. அவர்கள் மகிந்த குழுவினரின் சர்வதிகார, ஊழல் மோசடி ஆட்சி மிண்டும் வந்து விடக்கூடாது என்பதற்காக மாற்று அரசை விசுவாசமாக ஆதரிப்பவர்கள். அவர்கள் நிலைதான் சிக்கலானது. அவர்களிடம் எழும் கேள்வி ஐ.தே.கட்சிக்கு வாக்களிப்பதா? அல்லது சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு வாக்களிப்பதா? என்பது தான் அது. அவர்களால் இக்குழப்பத்திலிருந்து விடுபட முடியாது. இதேபோன்ற ஒரு குழப்பம் தமிழ்மக்கள் மத்தியிலும் உருவாகுவதற்கு வாய்ப்புக்கள் உண்டு.




### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் யாரைத் தெரிவு செய்வது?

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இணைச் செயலாளர்களில் ஒருவரும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியில் பொதுச்செயலாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் எதிர்காலத்தில் தமிழ் அரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடப் போவதில்லையெனத் தெரிவித்துள்ளார். அதே வேளையில் தான் தமிழ்தேசியக் கூட்டமைப்பிலிருந்து வெளியேறப் போவதில்லையெனவும் அதில் தொடர்ந்தும் அங்கம் வகிக்கப்போவதாகவும் அறிவித்துள்ளார். எனவே ஈ.பி.ஆர்.எல்.எவ் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் வீடு இல்லாத வேறு ஒரு சின்னத்தில் போட்டியிடலாம். அதே வேளையில் தமிழ் அரசுக் கட்சி, ரெலோ, புளொட் என்பன தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வழமைபோலவே வீட்டுச் சின்னத்தில் போட்டியிடலாம். தமிழ்தேசியக் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டு பல வருடங்கள் கடந்த நிலையிலும் அது ஒரு அரசியல் கட்சியாகவோ அல்லது அரசியல் கட்சிகளின் கூட்டணியாகவோ பதிவு செய்யப்படவில்லை. அதற்கென ஒரு சின்னமும் கிடையாது. ஆனால் தமிழ் மக்கள் தங்கள் ஏகத்தலைமையாகத் தமிழ்தேசியக் கூட்டமைப்பையே ஏற்றுக் கொண்டுள்ளனர். அவர்கள் கடந்த தேர்தல்களிலெல்லாம் தமிழரசுக் கட்சியையோ, தமிழ்விடுதலைக் கூட்டணியையோ, ரெலோவையோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்வையோ, புளொட்டையோ தெரிவு செய்யவில்லை மாறாகத் தமிழ்தேசியக் கூட்டமைப்பையே தெரிவுசெய்தனர். இந்தநிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின்; சார்பில் வீட்டுச் சின்னத்தில் ஒரு தரப்பும் வேறு ஒரு சின்னத்தில் இன்னொரு தரப்பும் போட்டியிட்டால் தமிழ் மக்கள் வாக்களிப்பது யாருக்கு? இவ்வாறாக இரண்டு தரப்பினர் போட்டியிடும்போது மக்களுக்குக் குழப்பம் ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகும்.

### சேவையாற்றுவதற்கான முண்டியடிப்பு இதுவல்ல

ஒரு காலத்தில் கட்சிகள் என்றால் அவற்றுக்குக் கொள்கைகள் இருக்கும். அதை முன்வைத்தே தேர்தல் காலங்களில் மக்களுக்கு முன்பாக வருவார்கள். ஐக்கிய தேசியக்கட்சி என்றால் மேற்குலக ஏகாதிபத்தியம் சார்ந்த கட்சியென்றும், சிறீலங்கா சுதந்திரக்கட்சியென்றால் தேசிய முதலாளித்துவக் கட்சியென்றும் ஒரு வரையறை இருந்தது. தற்சமயம் இரண்டு கட்சியுமே நிரந்தர பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக்கொண்டு விட்டன. தமிழ் காங்கிரஸ் என்றால், சம அந்தஸ்து, தமிழ் அரசுக்கட்சியென்றால் சமஷ்டி என்று கொள்கைகள் இருந்தன. ஆயுதக்குழுக்கள் தனிநாட்டைக் கொள்கையாகக் கொண்டன. இப்போது எல்லாமே ஒன்றிணைந்த வடக்குக் கிழக்கில் தர நிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பரவலாக்கத்தில் வந்து நிற்கின்றன. தெற்கிலும் சரி, வடக்கு கிழக்கிலும் சரி ஒரே கொள்கையை ஏற்றுக் கொண்ட தரப்புகள் ஒன்றுடன் ஒன்று போட்டியிடுகின்றன. அடிப்படையில் இது அதிகாரத்துக்கும் பதவிகளுக்குமான போட்டிகளே தவிர மக்களின் விமோசனத்துக்கான போட்டிகளல்ல. அதேவேளை மக்களைக் குழப்பத்திலாழ்த்தும் போட்டிகளும்கூட. அந்தக் குழப்பம் தெளிவடையும்போது சில அரசியல் கட்சிகளின் வேஷங்கள் அம்பலமாகும். அவர்கள் மக்களால் ஒதுக்கப்படுவது தெரியவரும்.

# எனதூர் அழகே!



கட்டிப்பிடித்துக் கபடி ஆடிய
கிளிநொச்சி மண் அழகே
போர் மேகம் சூழ்ந்தபோதும்
பார் போற்றிய மண்ணும் இதுவே

கிழமை நாளில் எல்லாம்
களவாய்க் குளிக்கச் செல்லும்
கனகாம்பிகைக் குளமோர் அழகு
அதில் குதித்துக் கும்மாளமிட்டதும் நினைவு

'ஹெலி' வந்து கலிபர் அடித்தபோதும்
கிலி கொள்ளாது கில்லாடி செய்த காலம்
சொந்த நிலம் என்ற சுய விருப்புடன்
சுற்றி வந்த சந்தோ போகம்

செம்மண் வீதிகளில் சிவந்த மேனியுடன்
சிற்றொழுங்கைகளில் செருப்பற்ற கால்களுடன்
சினேகிதமாய்த் திரிந்தவர்கள்
சிலுவை ஏந்திச் செம்மல்கள் ஆகினர்

இருபதாண்டுகளுக்கு முந்திய என் நினைவலைகள்
இன்றும் பசுமையாய் இதயத்தில் தவழ்கின்றன.

விவேகானந்தனூர் சதீஸ்




வாழ்க்கை ஒரு வட்டம்
நீண்ட பயணம்
சுற்றி வர முடியாது
குறுகிய காலத்திலும்
முடியலாம்
நீண்ட காலமும் செல்லலாம்
சூரியனை எட்டாத தூரம்
எண்ணுவது எளிது
நினைப்பது சுகம்
ஆழ் கடலின் எல்லை
எல்லையில்லா வானம்
முடிவில்லா எண்ணம்
முடியாத தூரம்

நிலைக்கும் என்று
எண்ணுமுன் முடிந்துவிடும்
முடிந்துவிடும் என்பது
நிலைத்து விடும்
குறுகிய காலம்
நடக்கும் என்பதும்
கிடைக்கும் என்பதும்
எண்ணத்தின் முடிவு
எண்ணுவதும்
நினைப்பதும்
மொழியின் தன்மை
மொழியில்லா விடின்
வாழ்க்கை இல்லை.

வாழ்க்கை என்பது
வசந்த காலம்
வாழ்வும் தாழ்வும்
அவரவர் கையில்
கையில் இல்லாததற்கு
கணக்குப் பார்க்காதே
கையில் கிடைத்ததை
விட்டு விடாதே
வார்த்தை என்பது
எண்ணத்தின் முடிவு
வார்த்தையை விட்டு
வாழ்க்கையைப்
பெற்றுக்கொள்
சொல்லிடும் வார்த்தை
திரும்ப வராது
அதுவே உன்னை
திருப்பி அடிக்கும்
எல்லாம் அவனவன்
கையில் உண்டு
அடுத்தவன் பொருளுக்கு
ஆசைப் படாதே
அதுவே உந்தன்
வாழ்க்கையை அழிக்கும்
நல்லதை நினை
நல்லதைச் செய்
அதுவே உந்தன்
வாழ்வுக்கு வழி

குட்டிநகர் பாவரன்

# கனவே என் வாழ்வு

நா.கீர்த்தலோஜினி

அன்னையவள் என்னை அன்புடன் அணைக்க
தந்தையோ தளராது முத்த மழை பொழிய
அண்ணனவன் அன்புச் சண்டைபோட
தங்கையவள் என்னருகே தலைசாய்க்கும்போது,
தோழியவள் என்னைத் தட்டி எழுப்ப
கலைந்தது என் தூக்கம் மட்டுமல்ல கனவும் தான்

ஏட்டு வாழ்க்கை ஆரம்பிக்கும் முன்பே
ஏக்கம் என் வாழ்வைப் பற்றிக் கொண்டது
மார்போடு தூங்க வைக்கும் தந்தையை
மரணதூதன் வேகமாய் அழைத்துச் செல்ல - யான்
அடைந்தேன் அன்றே சிறுவர் இல்லம்

ஓரெட்டில் ஆரம்பித்து ஈரெட்டுக் கழியும்வரை
ஓரக்கண்ணில் வழியும் நீர் மட்டுமே என் சொத்து
பதினாறு எய்தியதும் பாசக்கதவு திறந்தது
என் அன்னையவள் அருளால்
பகலவன் மறையுமுன்னே
இருள்மேகம் பற்றிக் கொள்வதுபோல்
ஈரிரு வருடங்கள் கடக்கும் முன்னே - மீண்டும்
இருண்டது என் வாழ்வு

யுத்தங்கள், சத்தங்கள் தாக்கு முன்னே
கொடிய அரக்கர் குலமே - என் மனதை
சத்தம் இன்றி வதம் செய்தனர்
உணர்ந்தேன் அன்று
நம்பிக்கை எ◌ும் அம்பை எய்தி
நரபலி செலுத்தும் நாவல்லர் மத்தியில்
பாசக் கயிறு கொடுக்கும் எமதர்மன் சிறந்தவன்

உறவெனும் சிறு வட்டத்தில் ஏங்கிய நான்
பல்கலை எனும் பரந்த உலகை எய்தினேன்
மாறியது என் வாழ்வு...
நான் நுழைந்த கருவில் என் முன்னே
உருவான என் சகோதரனே
விரிந்த உலகில் எனக்கான விதையிட்ட வள்ளல்
மாற்றான் வீட்டுச் சொத்தானாலும்
மறவேன் என் உடன் பிறப்பை...



# அன்பினால் கவிதை

நிறை குடமாய்
வழிகின்றது அழகு

பனி முட்டி உடையும்
நெஞ்சின் பலவீனம்
என்னுடலில் மோதுகின்றது

இதோ
இந்தக் காற்று
என்னை அள்ளிச் செல்லும்

நான் புதிய ஸ்வரங்களோடு
காத்திருப்பேன்


பற்றைகளிலும்
முட்களிலும்
விழுகின்ற கற்பனை
இந்த உலகை ஆளும்

நான் மோன நிலையில்
மண்ணோடும் அவள்
மார்போடும் பேசிக்
கொண்டிருப்பேன்

செரல்லாத வெட்கத்தை
சேலையால் துவட்டுவேன்

அவள் அன்பினால்
எழுதப்படுகின்ற
இந்தக் கவிதையைப் பார்த்து
ஒரு கவிஞன்
பொறாமைப் பட்டுக்
கொண்டிருப்பான்

நெடுந்தீவு கே.யோகேஸ்



# என்று மாறும்...?

பா.பாலாஜினி

பெண் என்றால் என்ன பொருள்
பேதமை என்பார்கள் நானோ
பெருமை என்றிருந்தேன்
பெண்ணாக மலர்ந்ததிலே
பெரிதும் மகிழ்ந்திருந்தேன்
மகிழ்ச்சி எங்கே நிலைத்தது
மண்ணாகிப் போனதல்லோ...

பேச முடியவில்லை
சிறைக் கைதியாய் தினம்
சித்திர வதை காண்கிறேன்
சிறகுகள் முளைத்த பின்னும்
பறக்க முடியவில்லை
என்ன செய்ய என் விதி
என்று மாறும் தெரியவில்லை.

பெண்ணடிமை கூறி எனை
பேசிக் கொள்கின்றனர்
பெண்ணாய்ப் பிறந்ததனால்
சந்தேகம் கொள்கின்றனர்
பழி வரும் என்கின்றனர்
பாவம் நீ என்கின்றனர்
பல வகை விதி கூறி
மாடாய் வதைக்கின்றனர்
பெண்களே பெண்களை
பெரிதும் வெறுக்கின்றனர்
கத்தி வார்த்தைகளால்
காயப்படுத்திப் போகின்றனர்
தொட்டாலும் குற்றம்
பட்டாலும் குற்றமாம்



# 'ஜுமான்ஜி: வெல்கம் ரூ தி ஜங்கிள்'



இருபத்தியிரண்டு வருடங்களுக்கு முன்னர் குழந்தைகளைக் குதூகலிக்கச் செய்த படம் 'ஜுமான்ஜி'. அந்தப் படத்தின் தொடர்ச்சியாக, வெளிவர உள்ளது 'ஜுமான்ஜி: வெல்கம் ரூ த ஜங்கிள்' திரைப்படம். இந்த மாதம் 20ஆம் திகதியளவில் அதை வெளியிடுவதற்கு உத்தேசித்திருக்கின்றது படக்குழு.

குழந்தை எழுத்தாளரான க்ரிஸ் வான் ஆல்ஸ்பர்க் 1981இல் வெளியிட்ட 'ஜுமான்ஜி' ஓவியப் புத்தகத்தைத் தழுவி, அதே பெயரில் எடுக்கப்பட்ட திரைப்படம் 1995ஆம் ஆண்டில் வெளியானது. குழந்தைகள் பரிவாரத்துடன் ராபின் வில்லியம்ஸ் நடித்த அந்தப் படம் அவருக்காகவும் அப்போதைய விசேட உத்திகளைப் பயன்படுத்தியதற்காகவும் பெரியளவில் பேசப்பட்டது. உலகம் முழுக்க வசூலையும் வாரிக் குவித்தது.

மந்திரப் பலகை ஒன்றில் விளையாடத் தொடங்கும் சிறுமி ஒருத்தியும் அவளுடைய தம்பியும் வன விலங்குகளைக் கண் முன்னே உயிர்ப்பிக்கிறார்கள். கூடவே 26ஆண்டுகளுக்கு முன்னர் அதுபோன்று விளையாடி அதற்குள்ளே இழுக்கப்பட்டவர்களையும் மீட்கின்றனர். வயது வித்தியாசமின்றி அனைத்து வயதினரையும் கவர்ந்த இந்தப் படத்தின் மூலக்கதையைத் தழுவி அதன் பின்னர் நிறையப் படங்கள் எடுக்கப்பட்டபோதும் ஏனோ அவை பெரியளவில் வரவேற்புப் பெறவில்லை. 22ஆண்டுகால இடைவெளிக்குப் பிறகு பலத்த எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில், ஜுமான்ஜியின் 2ஆம் பாகம் தற்போது இந்த ஆண்டின் நத்தார்ப் பரிசாக வெளியாக இருக்கிறது.

முதல் படத்தின் கதை முடிந்த 20வருடங்களுக்குப் பிறகு இரண்டாம் பாகத்தின் கதை தொடங்குகிறது. மாணவர்கள் சிலர் பள்ளியின் பாழடைந்த கிடங்கில் தட்டுப்படும் 'வீடியோ கேம்' மீது ஆர்வமாகிறார்கள். அதில் ஜுமான்ஜி மந்திரப் பலகையின் விளையாட்டினுடைய உத்திகள் வீடியோ கேமாக விரிய, அதை இயக்குபவர்கள் வளர்ந்த மனிதர்களாகி அடர்ந்த காட்டுக்குள் தள்ளப்படுகிறார்கள். அவர்கள் நிஜ உலகுக்குத் திரும்பும் முயற்சியில் தொடர்ந்து நிகழும் சாகச, சுவாரசியங்களை முப்பரிமாணத் தொழில்நுட்பத்துடன் புதிய 'ஜுமான்ஜி'யில் காட்சியாக்கியுள்ளார்கள்.

ஜேக் கேஸ்டன் இயக்கிய இந்தப் படத்தில் ட்வெய்ன் ஜோன்சன் (றொக்) உடன் ஜேக் பிளாக், கெவின் ஹார்ட், நிக் ஜோனஸ் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். இவர்களுடன் மறைந்த ராபின் வில்லியம்ஸ் பாத்திரத்தையும் மீட்டுருவாக்கி உலவச் செய்திருக்கிறார்கள்.



# 'ஸ்ரார் வோர்ஸ்: தி லாஸ்ற் ஜேடி'

அறிவியல் புனைவுப் படங்களின் வரிசையில் மாபெரும் சாதனை என்று புகழப்படுவது 'ஸ்ரார் வோர்ஸ்'. முதல் படம் 1977ஆம் ஆண்டில் வெளியானது. தற்போது 40 ஆண்டுகள் கழித்து அதன் 8ஆவது படமாக டிசம்பர் 15ஆம் திகதி வெளியாகிறது 'ஸ்ரார் வோர்ஸ்: தி லாஸ்ற் ஜேடி'.

ஸ்ரார் வோர்ஸ் திரைப்பட வரிசைக்குத் தலைமுறைகளைத் தாண்டிய ரசிகர்கள் உண்டு. மும் மூன்று படங்களாக வெளியாகும் பிரதான பட வரிசையில், முதலிரண்டு தொகுப்புகளுக்குப் பின்னர், புதிய தொகுப்பின் முதல் படமாக 'ஸ்ரார் வோர்ஸ்: தி வ்போர்ஸ் அவேகன்ஸ்' 2015ஆம் ஆண்டில் வெளியானது. தற்போது அந்தத் தொகுப்பின் 2ஆவது படமாகவும், முழுத் தொகுப்பின் 8ஆவது படமாகவும் 'தி லாஸ்ற் ஜேடி' வெளியாகிறது. இந்தப் படங்களுக்கு இடையே 3ஆண்டுகளாக இருந்த இடைவெளி புதிய தொகுப்பிலிருந்து 2ஆண்டாக மாற்றப்பட்டதன் அடிப்படையில், தொகுப்பின் இறுதிப் படமான 9ஆவது பாகம் 2019ஆம் ஆண்டு டிசெம்பரில் வெளியாகலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கணக்கு மட்டுமல்ல, அண்டவெளியின் கற்பனைக் கிரகங்களில் விரியும் அறிவியல் புனைவின் கிளைக் கதைகள், எந்திரன்களை உள்ளடக்கிய கதை மாந்தர்கள், அவர்களுக்கு இடையேயான உறவு முறைகள், நட்பு, முன்விரோதம் என அனைத்தும் ஸ்ரார் வோர்ஸ் ரசிகர்களுக்கு அத்துப்படி. அவர்களை நம்பித்தான் புதிய பாத்திரங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பங்களுடன், ஸ்ரார் வோர்ஸ் வரிசையின் நீளமான படம் என்ற பெருமையுடனும் 'தி லாஸ்ற் ஜேடி' வருகிறது.

முந்தைய பாகமான 'தி வ்போர்ஸ் அவேகன்ஸ்' முடிந்த இடத்திலிருந்து ஆரம்பிக்கின்றது இந்தக் கதை. ஜேடி மாஸ்டரான லூக் ஸ்கைவாக்கரைக் கண்டடையும் ரே, அவரது லேசர் வாளை லூக்கிடம் அளிக்கிறார். இருவருக்கும் இடையிலான உறவு; அடுத்த ஜேடியின் அதிரடி ஆகிய கேள்விகளுக்கு விடை தேடும் கதையில் வ்பின், போ உள்ளிட்டோர் கைகோர்க்க புதிய சாகசங்களின் பின்னணியில் பழைய ரகசியங்கள் பலவும் வெளிப்படுகின்றன. ரியான் ஜோன்சன் இயக்கியுள்ள இந்தப் படத்தில் மார்க் ஹாமில், கேரி வ்பிஷர், டெய்சி ரிட்லி உள்ளிட்டோர் நடித்துள்ளனர். முந்தைய பாகங்களுக்கு இசையமைத்த ஜோன் வில்லியம்ஸ் இதிலும் தொடர்கிறார்.

## ஹொலிவுட் சினிமாக்கள்

கோமளவண்




# 'தி ஷேப் ஒவ் வோட்டர்'



வெனிஸ் திரைவிழாவின் சிறந்த படத்துக்கான 'தங்கச் சிங்கம்' உட்படப் பல விருதுகளை இந்தப் படம் தனதாக்கியது.

குழந்தைகளைத் தூங்கச் செய்வதற்காகச் சொல்லப்படும் வினோதங்கள் நிறைந்த கதை. அதில் விண்வெளி ஆராய்ச்சி, பனிப்போர்ப் பின்னணி, உருக்கும் காதல், திகிலடிக்கும் மர்மம் எல்லாம் கலந்துகட்டிய ஹொலிவூட் திரைப்படம் தான் 'தி ஷேப் ஒவ் வோட்டர்'. இது இந்த மாதம் டிசம்பர் 8ஆம் திகதி அன்று திரைக்கு வரவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க– ரஷ்ய பனிப்போர் உச்சத்தில் இருந்த ஆயிரத்துத் தொள்ளாயிரத்து அறுபதுகளில் கதை நடக்கிறது. சிறுவயதிலேயே பேசும் திறனை இழந்த இளம்பெண்ணுக்குத் தனிமையே நண்பனாகின்றது. அரசின் விண்வெளி ஆராய்ச்சி நிலையம் ஒன்றின் இரகசிய பரிசோதனைக் கூடத்தில் இரவு நேரப் பணிப் பெண்ணாக அவளது இயந்திரமயமான வாழ்க்கை கழிகிறது. ஒருநாள் நீரிலும் நிலத்திலும் வசிக்கும் மனிதனை ஒத்த வினோத உயிரினம் ஒன்று ஆய்வுக்காகப் பரிசோதனைக் கூடத்துக்குக் கொண்டு வரப்படுகிறது. அந்த விசித்திர உயிரியைப் பராமரிக்கும் பொறுப்பு அவளது வாழ்க்கையை மாற்றிப் போடுகிறது.

நீர்த் தொட்டியில் அடைத்து வைக்கப்பட்ட அவனைப் பரிவுடன் அணுகுகிறாள். உணவு, இசை, உணர்வு எனப் பழக்குகிறாள். ஒரு கட்டத்தில் சூழும் ஆபத்தில் இருந்து அவனை விடுவிக்கக் கடுமையாக முயல்கிறாள். அந்த உயிரி மீது விண்வெளி ஆராய்ச்சிக்கான விபரீத பரிசோதனையைத் தொடங்கும் அதிகாரிகள், தலையிடும் ரஷ்ய உளவாளிகள் ஆகியோருக்கு இடையே அந்த உயிரியை நேசிக்கத் தொடங்கும் அந்தப் பெண், அவனைக் காப்பாற்றும் முயற்சியில் வென்றாளா? அவளது நிலைமை என்னவாயிற்று? என்பதை விறு விறுப்பான திரைக்கதை மூலம் படமாக்கியிருக்கிறார்கள். பணிப்பெண்ணாக நடித்திருக்கும் இங்கிலாந்து நடிகை சாலி ஹாக்கின்சின் வார்த்தைகளற்ற நடிப்பு விமர்சகர்களால் பேசப்படுகிறது. வினோத உயிரினமாக டக் ஜோன்ஸ் மிரட்டுகிறார். படத்தை எழுதி, இயக்கி இருப்பவர் கைய்ல்லெர்மோ டெல் றொறோ. நடப்பாண்டின் வெனிஸ் திரைவிழாவின் சிறந்த படத்துக்கான 'தங்கச் சிங்கம்' உட்படப் பல விருதுகளை இந்தப் படம் பெற்றுள்ளது. 'புளூ ஜாஸ்மின்' படத்துக்காக ஒஸ்கருக்குப் பரிந்துரைக்கப்பட்ட சாலி ஹாக்கின்ஸ், மீண்டும் அந்த வாய்ப்பைப் பெறுவார் என்ற விமர்சன வரவேற்பும் படத்துக்குக் கவனம் சேர்த்திருக்கிறது.




# சங்கமித்ரா படப்பிடிப்பு ஏப்ரலில் ஆரம்பம்

சுந்தர்சி இயக்கத்தில் ஜெயம்ரவி, ஆர்யா, திஷா படானி உள்ளிட்ட பலர் நடிக்கவிருக்கும் 'சங்க மித்ரா' படத்தின் படப்பிடிப்புப் பணிகள் எதிர்வரும் ஏப்ரலில் ஆரம்பமாகவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வரலாறு சம்மந்தப்பட்ட கதையம்சத்துடன் இந்தப் படம் தயாராகவுள்ளது. ஏ.ஆர்.ரகுமான் படத்துக்கு இசையமைக்கவுள்ளார். ஆகிய தகவல்கள் ஏற்கனவே வெளியாகியிருந்தன. இந்த நிலையில் எதிர்வரும் ஏப்ரல் 14ஆம் திகதி படப்பிடிப்பு ஆரம்பமாகும் என்று படக்குழு அறிவித்துள்ளது.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** நண்பர்களுக்குள் சிக்கல் வரலாம். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சுமாராக இருக்கும். கடன் பெறுவதைத் தவிர்ப்பது நல்லது.

**இடபம்:** உங்கள் திறமையை பலரும் பாராட்டுவர். தொழில், வியாபாரம் செழிக்க சில மாற்றங்கள் செய்வீர்கள். தாராள வருமானம் கிடைக்கும். சுப நிகழ்வு நடத்த திட்டமிடுவீர்கள்.

**மிதுனம்:** மனக்கவலை தீர இஷ்ட தெய்வ பிரார்த்தனை உதவும். தொழில், வியாபாரத்தில் நேரம் தவறாமை அவசியம். பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**கடகம்:** உறவினர்களிடம் உங்களைப் பற்றிய நல்ல அபிப்பிராயம் வளரும். தொழில், வியாபார வளர்ச்சி இலக்கை அடைவீர்கள். தாராள பணவரவு கிடைக்கும்.

**சிங்கம்:** பெரியவர்களின் வழிகாட்டுதலை பின்பற்றுதல் நல்லது. தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை செழிக்கும். பணப்பரிவர்த்தனை திருப்திகரமாகும்.

**கன்னி:** உங்களின் அந்தஸ்துக்கு குறை வரலாம். பகைவர்களிடம் விலகுவது நல்லது. தொழில், வியாபாரம் செழிக்க அதிகம் பணிபுரிவீர்கள்.

**துலாம்:** உங்களை பற்றிய ஏளனப் பேச்சுக்களை கண்டு கொள்ள வேண்டாம். தொழில், வியாபாரத்தில் பணி அதிகரிக்கும். பணவரவு, உரிய செலவுகளுக்குப் பயன்படும்.

**விருச்சிகம்:** கடந்த கால இனிய நினைவுகளால் மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி உண்டாகும். பணவரவில், இலாபம் அதிகரிக்கும்.


**தனுசு:** நண்பர்களின் உதவியால் அதிக நன்மை பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி ஏற்படும். பெற்றோரின் தேவையை நிறைவேற்றுவீர்கள்.

**மகரம்:** குடும்ப உறுப்பினர்களின் உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சிக்கு அதிகம் உழைப்பீர்கள். தாராள பணவரவில் விரும்பிய பொருள் வாங்குவீர்கள்.

**கும்பம்:** பொது இடங்களில் நிதானம் வேண்டும். தொழிலில் இடையூறை சரி செய்வதால் உற்பத்தி விற்பனை சீராகும். சுமாரான அளவில் பணவரவு கிடைக்கும்.

**மீனம்:** வசீகரமாகப் பேசுவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து காணப்படும். மேலதிக வருமானம் கிடைக்கும். பெற்றோரின் அன்பு, ஆசி ஊக்கம் தரும்.


**கணவன் செய்த தவறு.....**



**மனைவி சொல்லிக் காட்டுவது...**



**உண்மைதானே!**




**முகப்புத்தகம் வந்த பிறகு யார் புத்தகத்தை மதிக்கிறார்கள்.**



**நாம் எந்தக் கஷ்டமும் தெரியாமல் வளர்ந்து கொண்டிருக்கிறோம் என்றால் எமக்காக யாரோ ஒருவர் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார் என்று அர்த்தம்.**

**கோபமான நிமிடங்களை பொறுமையோடு கடந்து விடு வாழ்க்கை சந்தோசமான தருணங்களை அடுத்ததாக பரிசளிக்கும்**

**பணத்தின் மதிப்பு தெரிய வேண்டுமா? செலவு செய்யுங்கள்**

**உங்களின் மதிப்பு தெரிய வேண்டுமா? கடன் கேளுங்கள்.**

**சோறு குழைஞ்சிட்டாலும் சரி, எம் வாழ்க்கை குழைஞ்சிட்டாலும் சரி... கவலைப்படக்கூடாது. தயிர் சாதமா மாத்தி சந்தோசப்படனும்**



**கெத்தா இருக்கணும்...!**



எமக்கு தெரியாத விடயத்தை எமக்கு மேல் உள்ளவரிடம் சிரித்தும், கீழ் உள்ளவரிடம் முறைத்தும் சமாளிக்கிறோம்!!!

# சுடோக்கு

என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 5 | | 6 | 2 | | |
| | | | | 2 | | 3 | | 8 |
| | | 5 | | | 8 | | | |
| | | | | | 1 | | 9 | 4 |
| | | 4 | | | | 1 | | |
| 3 | 5 | | 6 | | | | | |
| | | | 2 | | | 4 | | |
| 7 | | 6 | | 1 | | | | |
| | | 8 | 9 | | 7 | | | 1 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக் கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | 4 | 7 | 1 | 9 | 3 | 2 | 6 | 8 |
| 8 | 3 | 1 | 2 | 6 | 7 | 5 | 9 | 4 |
| 6 | 9 | 2 | 5 | 8 | 4 | 1 | 7 | 3 |
| 3 | 6 | 8 | 4 | 5 | 1 | 9 | 2 | 7 |
| 2 | 7 | 5 | 9 | 3 | 6 | 4 | 8 | 1 |
| 4 | 1 | 9 | 7 | 2 | 8 | 6 | 3 | 5 |
| 9 | 8 | 3 | 6 | 4 | 5 | 7 | 1 | 2 |
| 7 | 5 | 6 | 3 | 1 | 2 | 8 | 4 | 9 |
| 1 | 2 | 4 | 8 | 7 | 9 | 3 | 5 | 6 |


Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 900 | 1000 | 1000 |
| நண்டு | 400 | 400 | 300 | 500 |
| கணவாய் | 600 | 500 | 900 | 1000 |
| பாரை | 500 | 500 | 600 | 700 |
| சுறா | 500 | 700 | 550 | – |
| சீலா | 400 | 400 | 500 | 400 |
| விளை | 500 | 400 | 550 | 600 |
| முரல் | 300 | 350 | 450 | – |
| கும்பிளா | 200 | 300 | 350 | 400 |
| கிளாக்கன் | 800 | – | 500 | – |
| ஒரா | 300 | 300 | 550 | 400 |
| திரளி | 200 | 200 | 250 | 200 |
| நகரை | 200 | 200 | 300 | – |
| சூடை | 100 | 120 | 150 | 200 |
| ஒட்டி | 100 | 200 | 200 | 300 |
| திருக்கை | 250 | 200 | 300 | – |
| மதனம் | 200 | 180 | 350 | – |
| கொய் | 100 | 100 | 50 | 100 |
| பாலை | 100 | 200 | 450 | 400 |
| வாளை | 100 | 200 | 250 | – |

# வாழைப்பூ வெங்காயத் தோசை



**தேவையான பொருள்கள் :**
புழுங்கல் அரிசி - ஒரு கோப்பை
துவரம்பருப்பு, கடலைப்பருப்பு - தலா அரைக் கோப்பை
இஞ்சி - சிறு துண்டு (சுத்தம் செய்யவும்)
உள்ளி - 4 பல்
காய்ந்த மிளகாய் - 6
பெருஞ்சீரகம் - ஒரு கரண்டி
சிறிய வாழைப்பூ - ஒன்று
பெரிய வெங்காயம் - ஒன்று
துருவிய சீஸ்- ஒரு மேசைக்கரண்டி
எண்ணெய், உப்பு - தேவையான அளவு

**செய்முறை :**
வெங்காயத்தை சிறிய துண்டுகளாக நறுக்கி கொள்ளவும்.
இஞ்சியை தோல் நீக்கி சுத்தம் செய்து கொள்ளவும்.
வாழைப்பூவின் நாரை எடுத்து நீக்கி சிறு துண்டுகளாக நறுக்கி கொள்ளவும்.
அரிசியை தனியாகவும், பருப்புகளை ஒன்று சேர்த்தும் 2 மணி நேரம் ஊறவிடவும்.
முதலில் அரிசியை மிக்ஸியில் போட்டு பாதி அரைப்பட்டதும் பருப்புகள், இஞ்சி, பூண்டு, காய்ந்த மிளகாய், பெருஞ்சீரகம், உப்பு சேர்த்து சற்று இருவல் நொருவலாக அரைத்துக் கொள்ளவும்.
அரைத்த மாவை உப்பு சேர்த்து கரைத்து கொள்ளவும்.
சட்டியில் சிறிது எண்ணெய் விட்டு வெங்காயத்தை இட்டு வதக்கி, பின்பு வாழைப்பூ சேர்த்து 5 நிமிடம் வதக்கவும்
வதக்கிய வாழைப்பூவை மாவில் இட்டு நன்கு கலந்து கொள்ளவும்.
தோசைக்கல்லை அடுப்பில் வைத்து சூடானதும் மாவை வட்டமாக ஊற்றி, மேலே சிறிது சீஸ் சேர்த்து, சுற்றிலும் எண்ணெய் விட்டு, பொன்னிறமாக சுட்டு எடுக்கவும்.

# மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சாவகச்சேரி | சன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 80 | 140 | 80 | 80 | 80 |
| கத்தரி | 140 | 120 | 160 | 240 | 120 |
| மரவள்ளி | 60 | 50 | 60 | 40 | 40 |
| பயிற்றை | 240 | 320 | 300 | 200 | 200 |
| பாகல் | 350 | 320 | 450 | 240 | 340 |
| க.கிழங்கு | 80 | 80 | 60 | 80 | 60 |
| பெ.வெங்காயம் | 140 | 200 | 200 | 140 | 180 |
| சி.வெங்காயம் | 350 | 400 | 350 | 380 | 160 |
| பூசணி | 80 | 80 | 60 | 60 | 60 |
| தக்காளி | 90 | 120 | 150 | 100 | 100 |
| வாழைக்காய் | 80 | 60 | 70 | 60 | 60 |
| கீரை | 50 | 60 | 60 | 60 | 50 |
| பொன்னாங்காணி | 50 | 60 | 40 | 35 | 40 |
| ப.மிளகாய் | 600 | 700 | 800 | 600 | 700 |
| புடோல் | 100 | 120 | 120 | 120 | 80 |
| கோவா | 160 | 160 | 120 | 140 | 140 |
| வெண்டி | 100 | 160 | 180 | 120 | 100 |
| போஞ்சி | 180 | 200 | 200 | 160 | 180 |
| லீக்ஸ் | 140 | 240 | 200 | 240 | 240 |
| தேங்காய் | 75 | 90 | 100 | 80 | 70 |
| உ.கிழங்கு | 50 | 100 | 80 | 70 | 50 |
| தேசிக்காய் | 80 | 100 | 70 | 60 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 15 | 20 |
| கறிமிளகாய் | 310 | 300 | 300 | 300 | 350 |
| கரட் | 200 | 200 | 200 | 160 | 240 |
| முருங்கைக்காய் | 220 | 320 | 500 | 120 | 320 |

# குழந்தைகளின் உணவு விடயத்தில் பெற்றோரின் தவறுகள்



குழந்தைகளின் உணவு விடயத்தில் பெற்றோர்கள் சில தவறுகளை செய்கின்றார்கள். பெற்றோர்களை பொறுத்தவரையில் குழந்தைகள் அதிகமாக சாப்பிட வேண்டும் என்ற ஒரு கருத்து மட்டுமே நிலவுகிறது. அதற்காக அவர்கள் போதும்.. போதும் என்று கூறினாலும் கூட அதிகப்படியான உணவை குழந்தைக்கு திணிக்கின்றார்கள். இது உங்களது குழந்தையின் செயல் திறனை பிற்காலத்தில் பாதிக்கிறது.


1. குழந்தைகளுக்கு மாலை நேரத்தில் அதிகமாக சாக்லேட், ஐஸ் கிறீம் கொடுப்பதை தவிர்க்கவும். 10 வயது குழந்தைக்கு ஒரு நாளைக்கு 1000 கலோரிகள் மட்டும் போதுமானது. 300 முதல் 400 கலோரிகள் நொறுக்குத் தீனிகளின் மூலமாகவே பூர்த்திய டைந்துவிடும்.
2. குழந்தைகளுக்கு அளவான போதுமான உணவையே வழங்க வேண்டும். தேவைக்கு அதிகமாக உணவை கொடுப்பதால், உடல் நிறை அதிகரிப்பு மற்றும் மெட்டபாலிசத்தில் பிரச்சினை உண்டாகிறது.
3. குழந்தைகளுக்கு வழங்க வேண்டிய உணவை சரியான இடைவெளியில் வழங்க வேண்டியது அவசியம். அதன்படி அவர்களுக்கு ஒரு நாளைக்கு மூன்று வேளை உணவு மற்றும் 2 முறை இடை உணவு வகைகளை வழங்குவதே சிறந்ததாகும்.
4. வீட்டில் சமைக்கப்படாத எந்த ஒரு உணவும் ஆரோக்கியமானது அல்ல. நீங்கள் உங்களது குழந்தைகளுக்கு வெளியில் இருந்து உணவுகள் அல்லது குளிர்பா ணங்களை வாங்கி கொடுத்தால் அவற்றில் உள்ள அறிவுறுத்தல் சிட்டையை கவனமாகப் படிக்க வேண்டியது அவசியம். பதப்படுத்தப்பட்ட உணவுகளில் அதிமாக சக்கரை இருக்கும் எனவே கவனம் தேவை.
5. நீங்கள் உங்களது குழந்தைகளுக்கு வழங்கும் உணவை தினமும் சரியான நேரத்திற்கு வழங்க வேண்டியது அவசியம். அந்த நேரத்துக்கு இடையில் நீங்கள் அதிக கலோரி உணவுகள் அல்லது சமிபாடடைய காலதாமதமாகும். உணவுகளை கொடுப்பதை தவிர்க்க வேண்டும். நீங்கள் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நேரத்துக்கு உணவு கொடுத்தால், அது குழந்தையின் மெட்டபாலிசத்தை பாதிக்கும்.

# செவ்வந்திப் பூவின் மருத்துவப் பயன்கள்



ஒவ்வொரு விதமான பூவிலும் ஒவ்வொருவிதமான மணமும், மருத்துவக் குணமும் நிறை ந்துள்ளது. இதே போன்று மலர்களிலிருந்து எடுக்கப்படும் எண்ணெய் வாசனைத் திரவியங்களாகப் பயன்படுத்தப்படுகிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த பூக்களில் செவ்வந்திப்பூ என அழைக்கப்படும் சாமந்திப் பூவின் மருத்துவக் குணங்களை அறிந்துகொள்வோம்.
உடலில் எத்தகைய பாதிப்பு ஏற்பட்டாலும் அதன் பாதிப்பு முதலில் தலைவலியாகத்தான் வெளிப்படும். இந்தத் தலைவலி நீங்க செவ்வந்திப் பூவின் இதழ்களை நிழலில் உலர்த்தி பொடி செய்து தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் தலைவலி நீங்கும். மலச்சிக்கல்தான் நோயின் முதல் அறிகுறி. மலச்சிக்கல் என்பது மலம் வெளியேறாமல் இருப்பது மட்டுமல்ல, மலம் அடிக்கடி வெளியேறுவதும் அல்லது சிறுகச்சிறுக வெளியேறுவதும் மலச்சிக்கலின் காரணம்தான்.
இவர்கள் சாமந்திப் பூவை கசாயம் செய்து அதனுடன் பனை வெல்லம் கலந்து அருந்தினால் மலச்சிக்கல் நீங்கும். உடல்சூடானால் பலநோய்களுக்கு ஆளாக நேரிடலாம். இத்தகைய உடல் சூடு மாற செவ்வந்திப் பூவை கசாயம் செய்து அருந்தி வந்தால் உடல் சூடு நீங்கும். சிலருக்கு எவ்வளவுதான் உணவருந்தினாலும் உடல் நிறை அதிகரிக்காமல் மெலிந்தே இருப்பார்கள். எப்போதும் சோர்வாக இருப்பர்.
இவர்கள் சாமந்திப் பூவின் இதழ்களைக் காய வைத்து பொடி செய்து தேன் கலந்து சாப்பிட்டு வந்தால் உடல் பலம் பெறும். அடிக்கடி சோர்வு ஏற்படாது. சாமந்திப் பூவின் இதழ்களை நீரில் கொதிக்க வைத்து அந்த நீரை சுளுக்கு, வீக்கம் உள்ள பகுதிகளில் ஒற்றடம் கொடுத்து வந்தால் சுளுக்கு மற்றும் வீக்கம் என்பன விரைவில் குறையும்.
அரைலீற்றர் தண்ணீரில் 25 கிராம் அளவு நிழலில் உலர்ந்த சாமந்திப் பூவை கொதிக்க வைத்து அதனுடன் சிறிது பனை வெல்லம் சேர்த்து அப்படியே மூடி வைத்து 15 நிமிடங்கள் கழித்து வடிகட்டி அருந்தி வந்தால் சூதகக் கட்டு, சூதகச் சன்னி, குளிர்சுரம் எளிதில் குணமாகும். தினமும் இருவேளை என அருந்துவது நல்லது. சாமந்திப் பூவை நீரில் கொதிக்க வைத்து குடிநீராக அருந்தி வந்தால் சிறுநீர் எளிதில் பிரியும்.


# இது புதுசு



பெண்களுக்கான காதணிகள் சில சந்தைக்கு அறிமுகமாகியுள்ளன. இவை 400 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

# பிள்ளை மனம்

(31ஆம் பக்கத் தொடர்ச்சி)



அடுத்த நாள் இரவு அவருடைய அறையிலே தங்கியிருக்கும் வேறொரு முதியவரின் கதை கொடுக்கிறார். "இரண்டு கால்களற்ற நிலையில் இங்கே தங்கியிருந்த நாகலிங்கம் என்ற பெயருடையவர் எங்கே?" என்று கேட்கிறார்.

"அந்த இரண்டு காலுமில்லாத நாகலிங்கமா இறந்து பல வருடங்களாகின்றனவே...?" என்று கூறியதுதான் தாமதம் முதியோர் இல்லம் அதிரும் படி இரவென்றும் பாராது பலத்த குரலில்

"என்ரை அப்பா என்னை விட்டுட்டுப் போயிட்டியோ" என்று ஒப்பாரி வைத்தார். அவருடைய புலம்பல் தாங்காது வோர்டனுக்குச் செய்தி அனுப்பப்பட்டது. "இரவென்றும் பாராது மற்றவர்களுக்கும் இடைஞ்சலாக ஏன் இப்படி ஒப்பாரி வைத்து அழுகின்றீர்..." என்று வினாவினார் வோர்டன்.

"ஐயா கொஞ்சம் பொறுமையாய்க் கேளுங்கோ. எனக்கு சின்ன வயதிலை தங்கச்சி பிறக்கேக்கை அம்மா இறந்துபோனா. எனக்கும் தங்கச்சிக்கும் அம்மாவாகவும் அப்பாகவும் நின்று விறகு வெட்டி விற்றுக் கூலி வேலை செய்து எங்களை வளர்த்தவர். அவர் எங்களை வளர்க்கப் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமில்லை. எங்களைப் படிப்பிச்சு ஆளாக்க வேண்டுமென்று இராப்பகலாக உழைத்தார். எனக்கும் தங்கச்சிக்கும் சிறப்பான வாழ்க்கை அமைக்க ஒரு நிலவரம் தேடிக்கொடுத்தார். விறகு விற்கும் வேலையில் போதிய வருமானம் கிடைக்கவில்லையென்று ஒரு தள்ளு வண்டியை விலைக்கு வாங்கி மூடைகள் சுமந்து கடைகளுக்கு கூலிக்காகச் சாமான்களை ஏற்றுவதும் இறக்குவதுமாக இருந்தார். இரவு பகலென்று பாராது உழைத்தார். ஒரு நாள் ஒரு கடையிலிருந்த தள்ளு வண்டியிலே சாமான்களை ஏற்றி வேறோரு கடையில் இறக்குவதற்காக வாகன நெரிசல் கூடிய வீதியில் தள்ளிக்கொண்டு போகேக்கை பின்னால் வந்த டிப்பர் வாகனம்மோதித் தள்ளி விட்டுத் தப்பி ஓடி விட்டது. ஆபத்தான நிலையில் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் பல நாள்களாகச் சிகிச்சைப் பெற்று சேதமுற்ற இரண்டு கால்களும் அகற்ற வேண்டிய நிலை ஏற்பட்டது. அவர் பூரண சுகமாகி இரண்டு கால்களுமற்ற நிலையில் என்னுடைய வீட்டுக்குக் கொண்டுவர என்னுடைய மனுசியும் மகனும் "அவரை நாங்கள் பார்க்க மாட்டம். என்னுடைய சகோதாரி வீட்டுக்குக் கொண்டு போய் விடும்படி சண்டையிட்டனர். என்னாலே வேறு ஒன்றும் செய்ய முடியாத நிலையில் எனது சகோதாரியின் வீட்டுக்குக் கொண்டு போனேன். அங்கே அதிர்ச்சிக்கு மேல் அதிர்ச்சி சகோதரி தன்னுடைய புருசன்ரை கதையைக் கேட்டு அவரை ஏற்றுக் கொள்ள மறுத்துவிட்டாள். வேறு வழியில்லாது என்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய என்ரை அப்பாவை... அந்தக் கொடூரச் செயலை ... மனிதநேயமற்ற பாவச்செயலை... எத்தனை பிறவி எடுத்தாலும் தீராத பழியை சுமந்த வண்ணம் முதியோர் இல்லம் முன் வாசலிலே கொழுத்தும் வெயியிலே வாகனத்தில் இறக்கி விட்டுச் சென்ற பாவிநான்தான். என்னுடைய அப்பாவுக்குச் செய்த தண்டனைக்காக நான் அதே தண்டனையை அனுபவிக்கிறான். "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்று கூறிக்கொண்டே தனது அழுகையை நிறுத்தினார். அந்த இரண்டு கால்களுமில்லாத நாகலிங்கத்தின் மகன் "பிள்ளை மனம் கல்லு பெற்ற மனம் பித்து" என்பது போலவே தன்னுடைய அந்திமகாலம் வரையும் தன்னுடைய மகன்தான் அந்த ஈனச் செயலைச் செய்ததென்று மகனைக் காட்டிக்கொடுக்க விரும்பாத உத்தம தந்தையாக அமரராகிவிட்டார்" என்றும் ஆதங்கப்பட்டார். ■

## சொற்சிலம்பம் போட்டி இல: 500

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | 3 | ■ | 4 | | 5 |
| | ■ | 6 | | 7 | | ■ | |
| 8 | 9 | | ■ | 10 | | | |
| 11 | | ■ | 12 | | | ■ | |
| ■ | 13 | 14 | | | ■ | 15 | |
| 16 | | | | ■ | 17 | | ■ |
| | ■ | | ■ | 18 | | | 19 |
| 20 | | | | | | ■ | |

அனுப்புபவர் பெயர்:........................................

முழுமையான தபால் விலாசம்: ..............................

........................................................

கையொப்பம்:................................................

---

**இடமிருந்து வலம்**

1. நிரந்தரமாக ஒரு இடத்தில் வசிக்காது ஒவ்வொரு நாடாக அலைபவன்
4. உளவு
6. (வாழ்க்கை) வரலாறு
8. ரூபாவில் நூறு
10. தாமரை
11. வறுமை
12. அக்கினி
13. ஒரு இராசி
15. கொலை செய்யு மாறான ஏவல் சொல்
16. சோறு
17. இல்லம்
18. வயல் கரைகளில் கட்டுவது
20. கடன் வாங்கியவன்

**மேலிருந்து கீழ்**

1. ஒரு திதி
2. நாடு
3. நகு
4. கண்ணைத் திறந்து கொண்டு இதைச் செய்ய முடியாதாம்
5. அரற்றுதல்
7. எரியும் செயற்பாடு
9. நெஞ்சில் சளி வைத்தால் இது வரும்
12. இரும்பு ஆயுதங்களைத் தீட்டுவது இதனால்
14. சமூக மதிப்பு மிக்கவர்
15. கொடூரமான....
16. மிகை
17. வீரம் மிகுந்தவன்
18. வருவதற்கு...
19. காயம்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 498 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1)துவேசம் (4)கமுகு (7)ரோசம் (8)பருத்தி (9)கம்பளம் (10)தரை (11)பதம் (13)சம்சாரம் (16)பாதை(17)சம்பவம் (19)என (20)திம்பு (21)கரும்பு (22)புலி

**மேலிருந்து கீழ்**
(1)துரோகம் (2)வேசம் (3)சம்பளம் (4)கரு (5)முத்தம் (6)குதிரை (8) பம்பரம் (12)தம்பதி (13)சதை (14)சாசனம் (15)அம்புலி (16)பாரி (18)வம்பு (19)எரு

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 498இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
கு..ஜெனகன்,
4ஆம் கட்டை,
மன்னார் வீதி, பூநகரி.

**2 ஆம் பரிசு**
தி.கிருசாந்தி,
ஏகாம்பரம் வீதி,
மீசாலை கிழக்கு, மீசாலை.

**3 ஆம் பரிசு**
சு.தவராசா,
இல.927, திருநகர் வடக்கு,
கிளிநொச்சி.

**4 ஆம் பரிசு**
ச.கோமைந்தன்,
12ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.

**5 ஆம் பரிசு**
திருமதி த.தர்மிக்கா,
இல.04. கல்மடுநகர்,
இராமநாதபுரம்,
கிளிநொச்சி.

**பாராட்டுப் பெறுவோர்**

திருமதி P.ராகினி,
இல.83, டபிள்யூ,ஏ.சில்வா
மாவத்தை, கொழும்பு - 06

திருமதி R பத்மநாதன்,
தேவி அகம், பழைய
தபாற்கந்தோர் ஒழுங்கை,,
உரும்பிராய்.

செ.ஜெகதீஸ்வரன்,
'ஈஸ்வரிவாசா, பிரதான வீதி,
பருத்தித்துறை.

**சொற்சிலம்பம் போட்டி இல.500**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (13.12.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.500 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 17.12.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 498 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

## மேடம்

செவ்வாய், புதன், குரு சுக்கிரனால் நன்மை ஏற்படும். நிதானித்துப் பேசுவது நல்லது. கஷ்டம் விலகி வளர்ச்சிப்பாதை உருவாகும். தம்பி தங்கை பாசத்துடன் உதவுவர். பயணங்கள் அளவுடன் இருக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித்தருவீர்கள். பூர்வ சொத்தில் அளவான பணவரவு கிடைக்கும். உடல் ஆரோக்கியம் பலம்பெறும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி கருத்திணக்கம் கொள்வார். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை அதிகரிக்கும். பணியாளர்கள் குறித்த காலத்தில் பணி இலக்கை நிறைவேற்றுவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## இடபம்

ராகு, சந்திரன் ஓரளவு நற்பலன் தருவர். பணிகள் நிறைவேற தனிக்கவனம் வேண்டும். புதியவர்களின் அறிமுகம் கிடைக்கும். தம்பி, தங்கைக்கு உதவுவீர்கள். வாகனத்தில் பராமரிப்பு பயணத்தை இனிமையாக்கும். உடல் நலத்திற்கு ஒவ்வாத உணவு உண்ண வேண்டாம். குடும்பத்தில் ஒற்றுமை சீராகும். மனைவியின் செயல்களில் குளறுபடி ஏற்படலாம். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற கிடைக்கின்ற வாய்ப்பை தவறாமல் பயன்படுத்துங்கள். பணியாளர்கள் அலுவலகத்தில் கேட்ட கடன் தாமதமாகக் கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் முன்னேற நண்பர் உதவுவர். மாணவர்கள் படிப்புடன், கலைகளும் பயில்வர்.

## மிதுனம்

பெரும்பாலான கிரகங்கள் அனுகூல அமர்வில் உள்ளனர். மனதில் புத்துணர்வு ஏற்படும். பணிகளை குறித்த காலத்தில் நிறைவேற்றுவீர்கள். உறவினர், நண்பர் கேட்ட உதவியை வழங்குவீர்கள். சமூகப் பணிகளில் உங்களின் பங்களிப்பு அதிகரிக்கும். புத்திரர்கள் உங்களிடம் பாசத்துடன் நடந்து கொள்வர். வீட்டில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி விரும்பிக் கேட்ட பொருள் வாங்கித்தருவீர்கள். தொழில், வியாபாரம் செழித்து ஆதாய பணவரவு கிடைக்கும். சேமிப்பு அதிகரிக்கும். பணியாளர்கள் பணி இலக்கை நிறைவேற்றி மனநிறைவு அடைவர். மாணவர்கள் நன்றாகப் படித்துப் பாராட்டு பெறுவர்.

## கடகம்

சுக்கிரன், செவ்வாய், சந்திரனால் நற்பலன் கிடைக்கும். இஷ்டதெய்வ அருளால் புதிய முயற்சி நிறைவேறும். மனம் ஒருமுகத்தன்மையுடன் இருக்கும். குடும்பத்தில் ஒற்றுமை மகிழ்ச்சி வளரும். வாகனப் பயன்பாடு அதிகரிக்கும். புத்திரர்களின் செயல்களில் திறமை பளிச்சிடும். புதிய சொத்து வாகனம் வாங்க அனுகூலம் உண்டு. பயணத்தில் உரிய பாதுகாப்பு பின்பற்றவும். மனைவியின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். தொழில், வியாபாரத்தில் அளப்பரிய இலாபம் கிடைக்கும். பணியாளர்கள் விண்ணப்பித்த சலுகைகள் கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங்குவர்.

## சிங்கம்

புதன், சுக்கிரன், கேது, சந்திரன் நன்மை வழங்குவர். மனதில் ஞான சிந்தனை வளரும். செயல்களை புதிய முயற்சியால் நிறைவேற்றுவீர்கள். உறவினர்கள் எதிர்பார்ப்புடன் அணுகுவர். செலவில் சிக்கனம் சிரமத்தைத் தவிர்க்கும். புத்திரர்களின் பாசம் மகிழ்ச்சி தரும். பயணத்தில் பாதுகாப்பு தவறாமல் பின்பற்றவும். மனைவியின் கருத்தும் உதவியும் ஆறுதலாக இருக்கும்.. தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை அதிகரிக்கும். பணியாளர்கள் கடமையை உணர்ந்து பணிபுரிவர். பெண்கள் கலையம்சம் நிறைந்த பொருட்கள் வாங்குவர். மாணவர்கள் சிறப்புப் பயிற்சி பெற்று முன்னேறுவர்.

## கன்னி

பெரும்பான்மை கிரகங்கள் நற்பலன் தரும். அக்கம் பக்கத்தவர் அன்பு பாராட்டி உதவுவர். பணிகளை சிறப்பாக நிறைவேற்றுவீர்கள். குடும்பத்தில் சுபமங்கள நிகழ்வு ஏற்படும். வாகனப் பயன்பாடு அதிகரிக்கும். புத்திரர்களின் செயல்கள் பெருமை தேடித் தரும். கலை ஆர்வம் அதிகரிக்கும். நண்பருடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். மனைவி உங்களின் எண்ணங்கள் சிறப்பு பெற உதவுவார். தொழில், வியாபாரத்தில் மாற்றம் செய்வீர்கள். பணியாளர்கள் தொழில் நுட்பம் அறிந்து கொள்வர். பெண்களுக்கு தாய்வீட்டு உதவி கிடைக்கும். மாணவர்கள் பெற்றோரின் வழிகாட்டுதலைப் பின்பற்றுவதால் நன்மை கூடும்.

# வார ராசிபலன் உங்களுக்கு எப்படி?

## 03.12.2017 தொடக்கம் 09.12.2017 வரை

## துலாம்

சுக்கிரன், சந்திரன் மட்டுமே ஓரளவு நற்பலன் தருவர். செயல்கள் நேர்த்தியாக அமையும். உறவினர்களின் உதவி கிடைக்கும். வாகனப் பயன்பாடு அதிகரிக்கும். புத்திரர்கள் சில விஷயங்களில் பிடிவாதம் செய்வர். இஷ்ட தெய்வ வழிபாடு நன்மை தரும். நேரத்திற்கு உண்பதால் ஆரோக்கியம் சீராகும். விவகாரங்கள் தீர்வுபெற இதமான அணுகுமுறை வேண்டும். மனைவியின் அன்பு பாசம் நெகிழ்ச்சி தரும். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் அக்கறையுடன் பணிபுரிவர். பெண்கள்; குடும்பநலன் பாதுகாப்பர். மாணவர்கள் கவனமுடன் படித்தால் அதிக தேர்ச்சி பெறலாம்.

## விருச்சிகம்

செவ்வாய், சுக்கிரன், கேது ஆதாய பலன் வழங்குவர். புதிய அனுபவம் கிடைக்கும். வீணாக பேசுபவரிடம் இருந்து விலகுங்கள். பணிகளில் முன்னேற்றம் உருவாகும். நீண்ட தூரப்பயணங்களை பயன் அறிந்து மேற்கொள்ளவும். புத்திரர்கள் அறிவு, செயல்திறனில் முன்னேறுவர். வழக்கு விவகாரத்தில் சமரச தீர்வு கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும். மனைவி விரும்பிக்கேட்ட பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி கூடும். தொழில், வியாபாரத்தில் உற்பத்தி விற்பனை சுமாராக இருக்கும். சேமிப்பு பணம் செலவுக்கு பயன்படும். பணியாளர்கள் கடும் வேலைப்பளுவைச் சந்திப்பர். மாணவர்கள் உரிய பயிற்சியால் அதிக மதிப்பெண் பெறுவர்.

## தனுசு

சந்திரன், குரு, சுக்கிரனால் நற்பலன் கிடைக்கும். உறவினர் அன்புடன் நடந்து கொள்வர். தைரிய மனதுடன் செயல்படுவீர்கள். குறுக்கீடு விலகி புதிய வெற்றிப்பாதை உருவாகும். வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டு. புத்திரர்களின் செயல்களை சரி செய்வது நல்லது. குடும்பச்செலவுக்கு தாராளமாக பணம் இருக்கும். மனைவியின் நல்ல கருத்துக்களை ஏற்றுக்கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை சரி செய்வதால் பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் சிறப்பாக செயல்பட்டு சலுகை பெறுவர். பெண்கள் புத்தாடை, நகை வாங்க யோகம் உண்டு. மாணவர்கள் படிப்பில் முன்னேறுவர்.

## மகரம்

சூரியன், புதன், சுக்கிரன், சனீஸ்வரர் அளப்பரிய நன்மை வழங்குவர். நற்செயல்களால் பேரும் புகழும் கிடைக்கும். வாய்ப்புக்களை பயன்படுத்தி அதிக பணவரவு பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் உதவுவர். வெளியூர்ப் பயணம் இனிய அனுபவம் தரும். புத்திரர்கள் பெற்றோர் சொல் கேட்டு செயல்படுவர். உடல் ஆரோக்கியம் பலம்பெறும். கடன்களைச் செலுத்துவீர்கள். குடும்பத்தில் மங்கள நிகழ்வு உண்டாகும். ஒற்றுமை, மகிழ்ச்சி கூடும். மனைவி உங்களுக்கு பெருமை தேடித்தருவார். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெற்று பணவரவு கூடும். பணியாளர்கள் நிர்வாகத்தின் வழிகாட்டுதல்படி செயற்பட்டு நற்பெயர் பெறுவர். மாணவர்களுக்கு படிப்பில் அதிக கவனம் வேண்டும்.

## கும்பம்

சூரியன், புதன், குரு, ராகு வியத்தகு பலன் வழங்குவர். முக்கியப் பணிகள் சிறப்பாக நிறை வேறும். உங்கள் சொல்லுக்கு வரவேற்புக் கூடும். தம்பி, தங்கை வாழ்வு சிறக்க உதவுவீர்கள். புத்திரர்கள் பெற்றோரிடம் நன்பர்க்கு இணையாகப் பழகுவர். சத்தான உணவு உண்டு மகிழ்வீர்கள். பகைவரின் செயல் பலமிழக்கும். மனைவியிடம் குடும்ப விவகாரம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்திற்கு அரசு சார்ந்த உதவி கிடைக்கும். ஆதாய வரவு சேமிப்பாகும். பணியாளர்களுக்கு சலுகை, பாராட்டுக் கிடைக்கும். பெண்கள் தாய் வீட்டு உதவி பெறுவர். மாணவர்கள் படிப்புடன் கலைகளும் பயில்வர்..

## மீனம்

கேது, சந்திரன், சுக்கிரன் அதிர்ஷ்டபலன் தருவர். செயல் குறையை சரி செய்வதால் பணி சிறக்கும்.. வீடு, வாகனத்தில் பராமரிப்புச் செலவு கூடும். புத்திரர்கள் அறிவு, செயற்திறனில் முன்னேற்றம் காண்பர். தாய்வழி உறவினர் பாசம் கொள்வர். விவகாரங்களில் சுமூகத் தீர்வு தாமதமாகலாம். மனைவியின் பாசம் மனதிற்கு நம்பிக்கை தரும். தொழில், வியாபாரம் செழித்து வளர அதிகம் பணி புரிவீர்கள். பணியாளர்களுக்குப் பணித்திறன் மேம்படும். பாராட்டு, வெகுமதி கிடைக்கும். பெண்கள் பிறருக்காக பணப்பொறுப்பு ஏற்க வேண்டாம். மாணவர்கள் வெளியில் சுற்றுவதைக் குறைக்கவும்.



# மீண்டெழுதல்

> மிகவும் கடினமான சம்பவங்களை எதிர்கொண்டாலும், மன அழுத்தங்களின்போது பரந்த சூழ்நிலை யிலும் தூரநோக்கு டனும் அணுக வேண்டும். கடினமான சம்பவத்தை அதன் விளைவோடு விகிதாசார அடிப் படையில் ஒப்பிடுவதைத் தவிர்த்து. நீண்ட ஆரோக்கியமான விதத்தில் அணுக் வேண்டும்.

கட்டுரை

அ. அஜந்தன்

இயற்கை இடர்களினாலும், போரினாலும் பல்வகையான இழப்புக்களைச் சந்திந்தவர்கள், அந்த இழப்புக்களை நேரடியாகப் பார்த்தவர்கள் பின்பு தமது நாளாந்தச் செயற்பாடுகளோடு, மற்றவர்களுடன் நல்லதொரு உறவைப் பேணிக் கொள்ள முடிகிறது. பொறுப்புணர்வுடனும் எதிர்காலம்பற்றிய முனைப்புடனும்வாழ முடிகிறது. எனில் அது அவர்களின் மீண்டெழும்தன்மையின் வெளிப்பாடே ஆகும். இழப்பு அல்லது கோரமான சம்பவங்களுக்கு வெற்றிகரமாக முகம்கொடுத்து மீண்டுவரும் ஒரு நபரின் மீண்டெழும் திறன் எனலாம். நீண்டகாலப்போர் மற்றும் இயற்கை இடர்களின் விளைவாகத் தமிழ்மக்கள் மத்தியில் அதிலும் குறிப்பாகத் தமிழ்ப் பெண்கள் மத்தியில் மீளெழும் திறன் வளர்ச்சிகண்டிருப்பதைக் காணமுடிகிறது. பல பெண்கள் துணையிழந்து தமது பிள்ளைகளையும், தம்மில் தங்கிவாழும் பெற்றோர், சகோதரர்களையுப் பராமரிக்கும் பொறுப்பைக் கையிலெடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர்.

### பெறுப்புகளிலிருந்து விலகும் ஆண்கள்

பெரும்பாலான நேரங்களில் குடும்பத்தினை நிர்வகிக்கின்ற பொறுப்பு பெண்களிடத்தில் விடப்பட்டிருப்பதை காணக்கூடியதாக உள்ளது. இதேபோல் கணவன் உள்ள பெண்களும் அதிகமான பொதுச் செயற்பாடுகளிலும், பிரதேசமட்ட அமைப்புக்களிலும், பொதுக் கூட்டங்களில் கலந்துகொள்வதிலும் ஆண்களைவிட அதிகமாகவே செயற்படுவதைக் பார்க்கமுடிகிறது. இன்னும் சில பெண்கள் இவ்வாறான இன்னல்களுக்குமுகம்கொடுக்க இயலாதநிலையில்குடும்பத்தின் பொறுப்பிலிருந்துவிலகுதல் அல்லதுபிள்ளைகளுக்கு அதிக தண்டனை வழங்குதல், தற்கொலை முயற்சி போன்ற நடத்தைமாற்றங்களைக்காண்பிப்பதையும்காணமுடிகிறது. பெரும்பாலான ஆண்கள் தாம் ஒரு கோரமான சம்பவத்தினுள் தள்ளப்படுகின்றபொழுது சமூகத்தின்கட்டமைப்பு அல்லது தவறான எண்ணங்களால் தம்மை ஆளுமையானவர்களாக காண்பிக்க முயல்கின்றனர்(உதாரணம்: ஆண்கள் அழக்கூடாது). அதற்கு முகம்கொடுப்பதற்குப் பதிலாக மது போதைக்கு அடிமையாதல், வன்முறைகளில் ஈடுபடுதல் போன்ற நடத்தைப் பிறழ்வுகளினூடாகத் தமது பிரச்சினைகளிலிருந்து விலகிவிடலாம் என்று தவறாக எண்ணிக்கொள்கின்றனர். பின்பு நாளடைவில் அவர்கள் அதற்கே அடிமையாகிவிடுகின்றனர். இன்னும் சில சந்தர்ப்பங்களில் பிரச்சினையிலிருந்துமீண்டுவரமுடியாமல்தற்கொலைக்குமுயற்சி செய்கின்றனர். சில ஆய்வு முடிவுகளின்படி கீழே தரப்படும் 10 வழிமுறைகளும்பாதிக்கப்பட்ட மக்களிடையேமீண்டெழும் திறனை வளர்ப்பதற்கு பெரிதும் உதவும் என்று அமெரிக்க உளவியலாளர்கள் கருதுகின்றனர். அவை அனைத்தும் எமது மக்களும் மீணடெழ உதவும் என்பதை நம் அனுபவ ரீதியாக உணர்த்தமுடியும்.

### பிறருடன் ஆரோக்கியமான உறவைப் பேணுதல்

குடும்பத்திலுள்ள அங்கத்தவர்கள், நெருங்கிய உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள், நிறுவனங்களோடு நல்ல உறவைப் பேணுவது எமது மீண்டெழும் தன்மைக்கு அத்திபாரமாக அமையும். உங்கள் மீது கரிசனை கொண்டவர்களிடமிருந்து உதவியையும் ஆதரவையும் பெறுவதோடு நீங்களும் தேவை ஏற்படும் பட்சத்தில் உதவிகேட்கும் திறனை விருத்திசெய்ய இந்த உறவுமுறை நெருக்கம் உறுதுணையாக அமையும். மக்கள் உடலாலும் உள்ளத்தாலும் குழுக்களாக வாழ்வதும், சமூகமட்ட அமைப்புக்களில் உற்சாகமாகச் செயற்படுவதும் அல்லது சமூகமட்ட அமைப்புக்கள் சிறப்பாகச் செயற்படுவதும் ஒரு சமூக ஆதரவைத் திரட்டித்தரும். பிறரின் தேவையைப் பூர்த்திசெய்வதற்காக நாம் உதவும்பொழுதும் அதனூடாக நன்மைபெறமுடியும். உதாரணமாகப் போரினால் பாதிக்கப்பட்டவர்கள் தம்மைச் சமூகசேவையிலும், சமூகமட்ட அமைப்புக்களிலும் இணைப்பதன் மூலம் தாமும் உள சமூகப் பிரச்சினைகளிலிருந்து மீண்டெழுவதோடுதமது செயற்பாடுகள் மூலம் ஏனைய பாதிக்கப்பட்டவர்களையும் மீட்டெடுக்க முடியும்.

### நெருக்கடிகளை உருவாக்கும் நெருக்கீடுகளைத் தவிர்த்தல்

போர், இடர்கள் போன்ற மிகவும் பாதகமான நிகழ்வுகளை எம்மால்தவிர்க்கமுடியாது. ஆனால் இந்தநிகழ்வை எவ்வாறு விளங்கிக்கொள்வது? அதற்கு எப்படி பொறுப்புக் கூறப்போகின்றோம் என்பதை எம்மால் தீர்மானிக்கமுடியும். அந்தப் பாதகமான நிகழ்வின் பின்பும் எமக்கு வாழ்க்கை இருக்கின்றது என்பதையும் எம்மில் தங்கிவாழும் குடும்ப அங்கத்தவர்களின் சிறப்பான வாழ்வுக்கான சிந்தனையை வளர்த்துக் கொள்ளவேண்டும். வாழ்வின் மீதான நம்பிக்கையை இழந்துவிடாமல் பார்த்துக்கொள்ளவேண்டும். இவற்றுக்கு நாம் முன்பு எதிர்கொண்ட இதுபோன்றதொரு கடினமான சூழலையும் அதற்கு நாம் பயன்படுத்திய உத்திகளையும் கவனத்தில் கொள்ளவேண்டும்.

உதாரணமாகச் சுனாமிபோன்ற இடர்களின் பின் வாழ்வை எப்படி முன்னெடுக்க முடிந்தது போன்ற அனுபவங்களை மீளாய்வு செய்தல்.

### இழப்பை அல்லது மாற்றத்தை வாழ்வின் ஒருபகுதியாக்குதல்

பாதகமான நிகழ்வுகளால் ஏற்பட்ட மாற்றங்களை எமது வாழ்வின் ஒரு பகுதியாக ஏற்றுத் தொடர்ந்தும் வாழப் பழகவேண்டும். இந்தப் பாதகமான மாற்றம் வாழ்வின் இலக்கை அடையவிடாமல்தடுக்கலாம். இதனால் மீதிவாழ்வு ஒரு இலக்கில்லா வாழ்வென்ற சிந்தனை வந்துவிடக்கூடாது. மாற்றமுடியாத சூழ்நிலைகளை ஏற்றுக்கொள்ள முனைவதே மாற்றக்கூடிய சூழ்நிலைகள் பற்றிய சிந்தனையைத் தூண்டி மீதி வாழ்வின் மீது கவனத்தைச்செலுத்த உதவும். உதாரணமாக ஓவியராக வர எண்ணிய பெண் விபத்தில் தனது இரு கைகளையும் இழந்தபின்பு தனது கால்விரல்களைப் பயன்படுத்தி தனது விடாமுயற்சியால் ஓவியம் வரைந்து வருவதைச் சிந்தித்துப்பார்க்கலாம்.

### இலக்கை நோக்கி வாழ்தல்

எமது வாழ்வுக்கு யதார்த்தமாகத் தோன்றும் இலக்குகளையே வளர்த்துக்கொள்ளவேண்டும், மேலும் முதலில் ஒரு சிறிய இலக்கைத் தெரிவு செய்து செயற்படுங்கள். அதில் கிடைக்கும் வெற்றியும்; திருப்தியும் ஒரு சிறிய சாதனைபோல் தோன்றும். அந்த வெற்றியுணர்வே உங்களை ஏனைய இலக்குகளை நோக்கிநகரச்செய்யும். அடையமுடியாத விடயமொன்றின்மேல் கவனத்தைச் செலுத்தாது உங்களுக்கு நீங்களே சொல்லிக்கொள்ளுங்கள் 'என்னால் முடியும்' என்று. 'இன்று என்னால் என்ன செய்யமுடியும் என்று எனக்குத் தெரியும்' என்ற சாதகமான சிந்தனைகளையும் வளர்க்கவேண்டும். அதுவே நீங்கள் போகவிரும்பும் திசைக்கு உங்களை வழிநடத்திச்செல்லும். உதாரணம்: மிகச்சிறிய தொழில்முயற்சியில் ஈடுபட்டு வெற்றிகண்டால் தொடர்ந்தும் அதை விரிபுபடுத்தி ஏனைய இலக்கை நோக்கி நகர்வதற்கான மனவுறுதி தோன்றுவதைக் காணலாம்.

### தீர்க்கமாகச் செயற்படுதல்

கடினமானசூழ்நிலைகளிலும்உங்களால்எவ்வளவுமுடியுமோ அந்தளவுக்குச் செயற்பட்டுக்கொண்டிருங்கள். அவ்வாறு நீங்கள் செயற்பட்டால் பிரச்சினைகள் மற்றும் நெருக்கீடுகளை களைவதற்கு முன் இலகுவாகவே அவை உங்களை விட்டு அகன்றுவிடும். உதாரணம் அதிக நெருக்கீட்டோடு, பிரச்சினையோடு உள்ளபோது உங்களை சமூகச் செயற்பாடுகளில், ஆன்மீகச் செயற்பாடுகளில், தொழிலசார் செயற்பாடுகளில ஈடுபடுத்துவதன்மூலம் பிறரின் ஆதரவு கிடைப்பதோடுபிரச்சினைக்கானதீர்வைஎட்டுவதும் இலகுபடுத்தப்படும்.

### மாற்றுத் திறனை உணருதல்

மிகவும்கடினமான சூழ்நிலைகளில்நீங்கள்உங்களைப்பற்றி ஏதோ சில புதிய விடயத்தைக் கற்றிருப்பீர்கள். ஒரு இழப்பின் பின்பு உங்களுக்குள் ஏற்பட்ட மனப்போராட்டத்தின் விளைவாக உங்களுக்குள் சிலவிடயங்கள் வளர்க்கப்பட்டிருப்பதைக் காணலாம். துயரங்களை அனுபவித்த பலர் மற்றவர்களுடன் சிறந்த உறவுகளை வளர்த்திருக்கலாம், ஆன்மிகத்தில் அதிக நம்பிக்கை ஏற்பட்டிருக்கலாம், தனிப்பட்ட மனபலம் கிடைத்திருக்கலாம், துன்பத்தினைத் தாங்கிக் கொள்ளும்பொழுது சுயமதிப்பு அதிகரிக்கலாம் மற்றும் அவர்களின் வாழ்வுக்கான பாராட்டுக்கள் அதிகரித்திருக்கலாம். சுயகண்டுபிடிப்பிற்கான தேடல் உங்களிற்குள் ஏற்பட்ட இந்த மாற்றங்களை அடையாளப்படுத்த உதவும்.

உதாரணம்: குடும்பத்துக்குப்பொறுப்புள்ளவர் அல்லது குடும்பத் தலைவராக இருந்தவர் இறந்துவிட்டால் அது ஒரு கடினமான சூழ்நிலையைத் தோற்றுவிக்கும். குடும்பத்தின் மீதான பொறுப்பை இன்னொருவர் ஏற்றுக்கொள்ளும்பொழுது தனிப்பட்ட மனபலம் அவருக்குள் வளர்க்கப்படுகிறது.

### சாதகமான பார்வை

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு உங்களிடமுள்ள திறன்கள் மீதான நம்பிக்கையை வளர்த்துக்கொள்ளுங்கள். பிரச்சி னைகளைத் தீர்ப்பதற்கு நீங்கள் பயன்படுத்தும் உத்திகள் உங்கள் மீண்டெழும் திறனை வளர்க்க உதவும். உதாரணமாக உங்களுக்கு இருக்கக்கூடிய தொடர்பாடல் திறன் மீதான நம்பிக்கை மற்றவர்களிடம் உதவிபெற்றுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவலாம்.

### விடயங்களைத் தொலைநோக்கில் பார்த்தல்

மிகவும் கடினமான சம்பவங்களை எதிர்கொண்டாலும், மன அழுத்தங்களின்போது பரந்த சூழ்நிலையிலும் தூரநோக்குடனும் அணுகவேண்டும். கடினமான சம்பவத்தை அதன் விளைவோடு விகிதாசார அடிப்படையில் ஒப்பிடுவதைத் தவிர்த்து. நீண்ட ஆரோக்கியமான விதத்தில் அணுகவேண்டும்.

உதாரணம்: பிள்ளை காணாமல் ஆக்கபட்ட சம்பவத்தில் மூழ்கி மனவழுத்தத்தினுள் உள்ளபோது ஏற்பட்ட அசௌகரியமான மனநிலை இருப்பினும் தற்காலிக அல்லது நிரந்தர இழப்பை ஏற்றுக்கொள்வதோடு , அவர்களின் எதிர்காலத்தைப்பற்றிய அல்லது உயிரோடு இருக்கின்ற ஏனைய பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய பரந்த தூரநோக்கான சிந்தனையும் அணுகுமுறையும் அவசியமானது.

### நம்பிக்கையூட்டலைத் தக்கவைத்துக்கொள்ளளுதல்

உங்களது வாழ்வில் இனி நல்லவிடயங்கள் நடக்கும் என்ற எதிர்பார்ப்பு நம்பிக்கையூட்டும் கண்ணோட்டத்துக்கு வலுச் சேர்க்கும். நீங்கள் எதற்காகப் பயப்படுகின்றீர்களோ அதைப் பற்றிக் கவலைப்படுவதைவிட நீங்கள் என்ன விரும்பு கின்றீர்களோ அதைப்பற்றிய கண்ணோட்டத்தை வலுப்படுத்துங்கள் அதை நோக்கி நகருங்கள்.

உதாரணம்: போரில் அனைத்தையும் இழந்துவிட்டோம் சொத்துக்கள் இல்லை, தொழில் இல்லை, உறவுகள் இல்லை என்ன செய்வதென்று புரியாமல் எதிர்காலம் தொடர்பான பயத்தில் உறைந்திருப்போர் பலர் உள்ளனர். இந்தப் பிரச்சினையின் பாலன்றி புதிய தொழில்வாய்ப்புக்கள், உறவுமுறையைக் கட்டியெழுப்புதல் அவற்றுக்காக முயல்தல் போன்றவற்றிலும்அவர்கள்கவனம்செலுத்திப்பிரச்சினையிலிருந்து வெளிவரவேண்டும்.

### உங்களைப் பாராமரித்தல்

உங்கள் சொந்தத் தேவைகளிலும் உணர்ச்சிகளிலும் கவனம் செலுத்துங்கள். உங்களை மகிழ்விக்கக்கூடிய விடயங்களில் ஈடுபடுங்கள். தொடர்ந்து உடற்பயிற்சி செய்யுங்கள், உங்கள்மீதுநீங்கள்கவனம்செலுத்துவதுபிரச்சினைகளைக் கையாளக்கூடிய மகத்தான உடலையும் உள்ளத்தையும் உருவாக்கும். போர் மற்றும் இடர்களால் பாதிக்கப்பட்ட மக்கள் மத்தியில் மிகவும் கடுமையாகப் பாதிக்கப்பட்ட பலர் மேலே குறிப்பிட்ட உத்திகளினூடாகத் தமது கொடிய அனுபவங்களிலிருந்து மீண்டெழுந்து சமூகத்தின் முக்கியமான நபர்களாகச் சமகாலத்தில் திகழ்வதை அவதானிக்க முடிகிறது. அவர்கள் கண்ட சிறுசிறு முயற்சிகளின் வெற்றிகளே அவர்களை இந்த நிலைக்கு உயர்த்தியுள்ளன. இன்னும் சில துணையிழந்த பெண்கள் எஞ்சியுள்ள தமது பிள்ளைகளின் வாழ்வுக்காக உடல்தளர்ந்த வேளைகளிலும் மனதிடத்துடன் கூலிவேலைகளில் ஈடுபட்டுத் தமது வாழ்வை தூரநோக்கத்தோடு நகர்த்துகின்றனர். வீட்டுக்குள் முடங்கிக்கிடந்த பெண்கள் பலர் துணையிழப்பின் பின்பு தனக்குள் இருக்கும் திறமைகளை அடையாளம் கண்டும், தமக்குள் ஏற்பட்ட சாதகமான திறன் மாற்றங்களை இனம்கண்டும் மீதி வாழ்வுக்காகப் புதியபாதையில் பயணிக்கின்றனர். இருந்தபோதிலும் இன்னும் சிலர் இக்கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல் மீண்டெழ முடியாமல் தம்மையும் தம்மைச் சார்ந்தவர்களையும் தொடர்ந்தும் ஒரு கடினமான சூழ்நிலைக்குள் வைத்துக்கொள்கின்றனர். இவர்களின் மீண்டெழும் திறனை விருத்திசெய்வதில் குடும்ப அங்கத்தவர்கள், சமூகமட்ட அமைப்புக்கள், அயலவர்கள், மதத் தலைவர்கள் போன்றோரின் உதவிகளோடு மேற்குறிப்பிட்ட உத்திகளைக் கையாள வேண்டும்.

# மாற்று வலுவுள்ளோரை வாழ வைப்பது கடமை



குறைபாடுகள் பலவிதமானவை. உடல் குறைபாடு, உளகுறைபாடு, புலன்குறைபாடு, எல்லாமே சேர்ந்த குறைபாடு எனப் பல வகையுண்டு. இவையெல்லாவற்றுக்கும் சில காரணங்கள் பொதுவானவையாகவே அமைகின்றன.

கட்டுரை
க.கோபாலகிருஸ்ணன்

மாற்றுவலுவோடு பிறக்கும் குழந்தைகளைப் புறந்தள்ளி வைத்தகாலம் நாம் மறந்த காலமாகிவிட்டது. இன்று சகல மாற்றுவலுவுடைய குழந்தைகளையும் பேணி அரவணைத்து, கல்வி புகட்டக்கூடியவர்க்கு கல்வி புகட்டி வாழ்வளித்து அவர்களையும் ஏனையோர் போன்று சீருடனும் சிறப்புடனும் வாழ வைக்க அரச, அரச சார்பாற்ற நிறுவனங்களும் பெற்றோரும் மற்றோரும் முன்வந்து கொண்டிருப்பது மிகவும் வரவேற்கத்தக்க விடயம். அதே வேளை ஊனங்களைக் குறைப்பதற்கு வழிகள் உண்டாயின் அவற்றை அறிந்து உரிய வழிவகைகளைக் கைக்கொள்ளாதிருப்பது மனிதம் இழைக்கும் பெருந்தவறு. இந்த ஊனங்கள் ஓர் குழந்தை பிறக்கும் முன்பே இருந்திருக்கலாம். பிறந்த பின்பும் ஏற்படலாம். எதுவாக இருப்பினும் பெற்றோரின் கவனமின்மை இரண்டுக்குமே ஓரளவு காரணமாக அமைகின்றது. இவற்றைச் சிறிது விரிவாகப் பார்த்தல் அவசியம்.

### குறைபாடுகள் பல

குறைபாடுகள்பலவிதமானவை. உடல்இயக்கம்சார்ந்த குறைபாடு, உளகுறைபாடு, புலன்குறைபாடு, எல்லாமே சேர்ந்த குறைபாடு எனப் பல வகையுண்டு. இவையெல்லாவற்றுக்கும் சில காரணங்கள் பொதுவானவையாகவே அமைகின்றன. முதலில் குறைபாடுகளை நோக்குவோமாகில் செவிப்புலனிழப்பு, விழிப்புலனிழப்பு ஆகியவை புலன் குறைபாடுகளாகின்றன. மூளை வளர்ச்சியின்மை, பிறழ்வான செயற்பாடுகள் (Autism) உட்பட உளக்குறைபாடுகளாகின்றன. கை, கால், உடல் இயங்காமை ஆகியன உடல் குறைபாடுகளில் அடங்கும். இவற்றை விட மிகவும் அரிதாக சில சயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட குறைபாடுகளுடனும் பிள்ளைகள் காணப்படுகின்றனர். இங்கே கூறப்பட்ட குறைபாடுகள் ஒவ்வொன்றும் வேறுபட்டவை. ஆனால் பலவற்றுக்கு பரம்பரை ஓர்பொதுவான காரணியாகக் கூறப்படு கின்றது. இந்தக் காரணியை இல்லாமற் செய்வதென்பது மிகவும் கடினமான விடயம்.

### மாற்று வலுவுள்ள குழந்தைகள் பிறப்பதற்குரிய காரணங்கள்

இன்றும் எமது சமூகத்திலே திருமணங்கள் சிறு வட்டத்துக்குள்ளேயே அதாவது நெருங்கிய உறவினரிடையே செய்து கொள்வது பாதுகாப்பானதென பிழையான நம்பிக்கை நிலவுகிறது. மேற்குறிப்பிட்ட குறைபாடுகள் ஏற்படுவதற்கு இதுவும் ஓர் காரணியாக அமைகின்றது. இன்னொன்று குடும்பக் கட்டுப்பாட்டு மாத்திரைகளை மருத்துவர் ஆலோசனையின்றி உட்கொள்ளல். பல சந்தர்ப்பங்களில் இதனால் புலன் மையங்கள் பாதிப்படைந்திருப்பதாக அறியப்படுகின்றது. மூன்றாவதாகதாய் கருவுற்று மூன்று மாத காலத்துக்குள் அம்மை நோய், பொக்களிப்பான் போன்ற நோய்களால் பீடிக்கப்படும் போது சிசுவின் புலன் மையங்கள் பாதிப்படைகின்றன. மேலைநாடுகளில் இப்படியாக கருக்களை அழிப்பது சட்டபூர்வமாக்கப்பட்டுள்ளது. இங்கும் இது பற்றிச் சிந்திப்பது பொருத்தமானதாகும். இவற்றுக்கு மேலாக தாய் கருவுற்றிருக்கும் காலத்தில் குடும்பத்தில் ஏற்படும் விபத்துக்கள், சச்சரவுகள், அதிர்ச்சிகள் என்பனவும் சில காரணிகளாக அமைகின்றன.

ஓர் குழந்தை பிறந்த பின்னும் இழப்புக்கள் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு. விபத்துக்களால் கையை இழக்கலாம், காலை இழக்கலாம், உடல் இயங்காது போகலாம், மாறாத சில வியாதிகளால் உடல்ஊனமடையலாம். அதேபோன்று ஓர் குழந்தை பிறந்து மூன்று மாதத்துக்குள் அம்மை, பொக்களிப்பான் போன்ற நோய்களால் பீடிக்கப்படும் போது புலன்கள் பாதிப்படையலாம். அத்தோடு காதில் சிதல் வடிதல் போன்ற நோய்கள் வரும்போது நீண்ட நாள்கள் கவனிக்காத தன்மை கொண்டு கேண்மைத் திறனை இழக்கும் வாய்ப்புண்டு. சில சந்தர்ப்பங்களில் விபத்துக்களும் புலன்களை இழக்கச்செய்கின்றன. அத்தோடு பெரிய தொழிற்சாலைகளில் வேலை செய்யும் போது தாங்க முடியாத ஒலிகளை நித்தமும் கேட்பதனாலும் கேண்மைத் திறனை இழக்கும். வாய்ப்புண்டு. அத்தோடு சிலருக்கு காதில் ஒருவித ஒலி எந்த நேரத்திலும் ஒலித்துக்கொண்டே இருப்பதனாலும் கேண்மைத் திறன் பாதிப்படைகின்றது. அத்தோடு வயது மூப்பு, உள இயல் காரணிகளும் கவனிக்கப்பட வேண்டியவை. இறுதியாக கேண்மைத் திறனையும் பார்வைத் திறனையும் நாம் ஆகக் கூடியளவு பிரயோகித்தல் வேண்டும். இல்லாவிட்டால் இந்தப் புலன்கள் மழுங்கிச் செல்ல வாய்ப்புண்டு. குறைபாடு வந்துவிட்டால், மருத்துவரிடம் சென்று நன்றாகப் பரிசோதித்து குறைபாட்டை உறுதிப்படுத்தி விட்டால் குறைபாட்டிற்கான காரணத்தை அறிவதிலோ அல்லது மூடநம்பிக்கை களிலோ நாள்களை வீணடிப்பது பயனற்றது. இவை பிள்ளையின் முன்னேற்றத்தையே பாதிக்கும். தற்போதைய நவீன யுகம் வளர்ச்சியடைந்து வரும் காலகட்டங்களிலும் கூட செவிப்புலனிழந்த பிள்ளைகளுக்கோ விழிப்புலன் இழந்த பிள்ளைகளுக்கோ பாலர் பாடசாலைகளின்மை என்பது பெரிதும் வருந்தத்தக்கதாகும். ஆனால் கூடிய விரைவில் இந்தக் குறையை நீக்குவதற்கான வழிகள் தோன்றுமென்ற நம்பிக்கையுண்டு. அதேவேளை இந்தப் பிள்ளைகளை பாடசாலையில் சேர்க்கும் காலம் வரும்வரை அவர்களுக்கு வீட்டில் அடிப்படைப் பயிற்சிகளை அழிப்பது பெரிதும் அனுகூலமாக அமையும்.

### மாற்று வலுவுள்ள குழந்தைகளுக்கு கூடுதல் பாடசாலைகள் அவசியம்

செவிப்புலனிழந்த பிள்ளைகளைப் பொறுத்தமட்டில் கைதடியில் ஓர் அரச நன்கொடை பெறும் பாடசாலை இயங்கி வருகின்றது. ஆனால் நூற்றுக்கணக்கான பிள்ளைகள் இன்று வடமாகாணத்தின் பல கிராமங்களில் பாடசாலைக்குச் செல்லாது வீடுகளிலேயே காலத்தைக் கழிப்பது காணக்கூடியதாக இருக்கின்றது. இதற்கு இந்த மாகாணத்தின் இன்னொரு பிரதேசத்தில் அரசு ஓர் பாடசாலையை அமைப்பதன் மூலம் வீடுகளில் முடங்கியிருக்கும் இந்தப் பிள்ளைகளுக்கு வாழ்வளிக்கமுடியும்.

விழிப்புலனிழந்த பிள்ளைகளுக்கு ஒன்றிணைக்கப்பட்ட கல்வித்திட்டம் பெரும் வரப்பிரசாதமாக அமைகிறது. வாழ்வகம் இவர்களுக்கு ஓர் கைகொடுக்கும் இல்லமாக அமைவது யாவரும் அறிந்தது. அதேபோன்று யாழ். விழிப்புலனற்றோர் சங்கம் கைதடியில் ஓர் வதிவிடத் தொழிற்பயிற்சி நிலையத்தை அமைத்து அரும்பணியாற்றி வருவது போற்றத்தக்கது. இதேபோன்று பாடசாலைக்குச் செல்லாத மற்றும் கல்வியை முடித்து வேலையற்றிருக்கும் செவிபுலனற்றோர்க்கு அவர்களது வாழ்வை வளம்பெறச் செய்யும் நோக்குடன் யாழ். மாவட்ட றூட் நிறுவனம், வடமராட்சி செவிப்புலனற்றோர் நிறுவனம் ஆகியன தம்மால் இயன்ற சேவைகளை ஆற்றி வருகின்றன.


இதேவேளை மெல்லக்கற்போருக்கென சிவபூமி நிறுவனம், முளை வளர்ச்சி குறைந்த பிள்ளைகளுக்கென ஆக் நிறுவனம், செயற்கை அவையவங்கள் பொருத்துவதற்கென ஜெய்ப்பூர் நிறுவனம், இவற்றைவிட சகல மாற்றுவலுவுடையோர்களும் தங்கியிருந்து பயிற்சி பெறுவதோடு தொழிலையும் மேற்கொள்ளக்கூடிய வசதிகளுடன் திருநெல்வேலி ஆடியபாதம் வீதியில் வலுவிழந்தோர் புனர்வாழ்வுச் சங்கமும் அமைந்திருப்பது யாவரும் அறிந்ததே. இங்கே தையல் வேலைகள், பொம்மைகள் செய்தல், மாலை கட்டுதல், கேக் ஐசிங் செய்தல், காகித உறைகள் ஒட்டுதல் போன்ற சகல துறைகளிலும் பயிற்சி வழங்கப்பட்டு பயிற்சியின் பின் வேலையை மேற்கொள்ளவும் வசதியளிக்கப்படுகின்றது. தற்பொழுது பெண்கள் மட்டும் தங்கக் கூடிய வசதிகள் உண்டு. வெளியிலிருந்தும் பிள்ளைகள் பயிற்சிக்காக இங்கு வந்து கதிரை பின்னல், தும்புத்தடி, விளக்குமாறு செய்தல் போன்றவற்றில் பயிற்சி பெறுவதோடு தொழிலையும் மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது. மேலே குறிப்பிட்டவையே விட கருவி, பெதஸ்டா விஷன், டெப்லிங் போன்ற பல நிறுவனங்கள் மாற்று வலுவுடையோருக்கான பணிகளை மேற்கொண்டு வருவது பெரிதும் வரவேற்கத்தக்கது.

இன்றைய தேவை மேற்கூறிய நிறுவனங்கள் யாவும் ஒன்றிணைந்து தங்கள் வளங்களையும், அரச வளங்களையும் தங்கள் அனுபவங்களையும் ஆலோசனைகளையும், மாற்றுவலுவடையோரின் வாழ்வு வளம்பெறுவதற்கு பயன்படுத்த முன்வரவேண்டும். அதேவேளை அவ்வப்போது வெளியிடப்பட்டு எந்த வசதிகளோ சலுகைகளோ மாற்றுவலுவுடையோரை வந்தடையாதிருப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகவே உள்ளது. அவ்வாறே வாகனமோட்டும் சாரதி அனுமதிப்பத்திரம் மாற்றுவலுவுடையோருக்கு வழங்கப்படாமை மற்றும் மாற்றுவலுடையோருக்கான உதவி அரச பணிமனைகளிலோ அரசஅதிபர் பணிமனைகளிலோ நடைபெறும் கூட்டங்கள் மேல்மாடியில் வைப்பதனால் இவர்களின் போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாக அமைகிறது என்பதையும் அரசு கருத்தில்கொள்ள வேண்டும். இவ்வாறு இன்னும் பல விடயங்கள் எழுத்தளவில் மாத்திரமே உள்ளன. இவற்றை நடைமுறைப்படுத்த அரசுக்கு அழுத்தங்கொடுக்க யாவரினதும் ஒத்துழைப்பும் வேண்டப்படுகின்றது. மாற்றுவலுவுடையோர்க்கு ஆற்றும் பணி ஓர் தெய்வீகப் பணி. இதில் யாவரும் பங்கேற்க வேண்டும். வெல்க இந்தப் பணி.





# வார்த்தை மோதல்



ஆஷஸ் தொடரில் வார்த்தை மோதல்கள் பற்றிக் கருத்துத் தெரிவிக்க அன்டர்சனுக்குத் தகுதி இல்லை என்று தெரிவித்துள்ளார் ஆஸ்திரேலிய அணித் தலைவர் சிமித்.

வார்த்தை மோதல்களில் ஆஸ்திரேலியர்கள் ஈடுபடுகின்றனர் என்று அன்டர்சன் குற்றம்சாட்டியிருந்த நிலையில் இதற்குப் பதிலடியாகவே சிமித் இவ்வாறு தெரிவித்தார்.

விளையாட்டு

லயனல்

நடப்பு வருட ஆஷஸ் தொடரில் பிரிஸ்பெய்னில் வைத்து ஆஸ்திரேலியாவை வீழ்த்துவோம் என்று அறிக்கையை விட்டுவிட்டு தற்போது சமூக வலைத்தளங்களில் கிண்டலுக்கு உள்ளாகியுள்ளார் அன்டர்சன்.

இங்கிலாந்து - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. முதலாவது ஆட்டம் பிரிஸ்பெய்னில் கடந்த 23ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெற்றது. ஆஸ்திரேலிய அணி 10 இலக்குகளால் வெற்றிபெற்றது.

பிரிஸ்பெய்ன் ஆஸ்திரேலியாவின் கோட்டையாக திகழ்கிறது. கடந்த 31 வருடங்களில் இந்த மைதானத்தில் ஒரு ஆட்டத்திலேனும் ஆஸ்திரேலியா தோல்வியடையவில்லை. இங்கிலாந்து பலமுறைகள் வெற்றிபெறுவதற்குப் போராடிய போதிலும் எதுவும் பயனளிக்கவில்லை. எனினும் ஆட்டம் ஆரம்பமாவதற்கு முன்பாக ஆஸ்திரேலியாவை பிரிஸ்பெய்னில் வைத்து வீழ்த்தும் நம்பிக்கையை வெளிப்படுத்தியிருந்தார் அன்டர்சன். ஆனால் குறைந்த பட்சம் ஆஸ்திரேலியாவை எதிர்த்து இங்கிலாந்தால் போராடக்கூட முடியவில்லை.



# சொன்னது என்னாச்சு

# உலக அழகிக்கு விருது வழங்கிய விராட் கோக்லி

உலக அழகியாக தெரிவு செய்யப்பட்டுள்ள மனுஷி சில்லருக்கு டெல்லியில் நடைபெற்ற விழாவில் கலந்துகொண்டு விருது வழங்கினார் இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோக்லி.

சீனாவின் சான்யா நகரில் அண்மையில் நடந்த 2017ஆம் ஆண்டுக்கான உலக அழகிப்போட்டியில் இந்தியாவின் அரியானா மாநிலத்தை சேர்ந்த மருத்துவ மாணவி மனுஷி சில்லர் உலக அழகியாக தெரிவு செய்யப்பட்டார். இதனையடுத்து அவரை மதிப்புறுத்தும் விதமாக டெல்லியில் ஒரு சிறப்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் உலக அழகி மனுஷி சில்லருக்கு இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோக்லி விருது வழங்கி சிறப்பித்தார். கோக்லியிடம் விருதுபெற்ற மனுஷி அவரிடம் சில கேள்விகளைக் கேட்டார்.

உலக அரங்கில் நீங்கள் ஒரு சிறந்த வீரர். உங்களை இன்று ஏராளமானோர் பின்தொடர்கின்றனர்.

இளைஞர்கள் உங்களை தமது மாதிரியாகக் கருதுகின்றனர். அவர்களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள். குறிப்பாக கிரிக்கெட் விளையாடும் குழந்தைகளுக்கு நீங்கள் என்ன சொல்ல விரும்புகிறீர்கள் என சில்லர் கேட்டார்.

அதற்கு பதிலளித்த விராட் கோக்லி, நாம் களத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதில் தெளிவாக இருக்க வேண்டும். அதை எப்போது செய்ய வேண்டும் என உணர்ந்து செயற்படவேண்டும். ஒரு விடயத்தை செய்யும்போது மனப்பூர்வமாக செய்யவேண்டும். நான் எப்போதும் மற்றவர்களை போல் இருக்க நினைத்ததில்லை. நான் நானாகாவே இருக்கிறேன். உங்களுக்கு முன்னுதாரணமாக சிலர் இருக்கலாம். நீங்கள் அவரை பின்பற்றலாம். ஆனால் அவரைப் போலவே நடந்துகொள்ள கூடாது. நீங்கள் நீங்களாக மட்டும் இருங்கள். எதற்காகவும் உங்கள் தனித்திறனை மாற்றிக்கொள்ளக்கூடாது. நீங்கள் நீங்களாக இருந்தால் மட்டுமே சாதிக்க இயலும் என கோக்லி பதில் வழங்கினார்.




# அஸ்வினை புகழ்கிறார் ஆர்னல்ட்

அஸ்வினுக்கு இலங்கை அணியின் முன்னாள் ஜாம்பவான் முரளிதரன் வாழ்த்துத் தெரிவித்திருந்த நிலையில், தற்போது ஆர்னல்ட்டும் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தில் 8 இலக்குகளை வீழ்த்தியிருந்தார் அஸ்வின். இந்த 8 இலக்குகளின் உதவியுடன் பன்னாட்டு டெஸ்ட் அரங்கில் அவர் விரைவாக 300 இலக்குகளை வீழ்த்திய வீரரானார். இதற்கு முரளிதரன் வாழ்த்துத் தெரிவித்திருந்த நிலையில் ஆர்னல்ட்டும் தற்போது வாழ்த்துத் தெரிவித்தார்.







# ஜல்லூயிஜிக்கு உயரிய விருது

இத்தாலிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான சீரி ஏ தொடரின் இந்த ஆண்டுக்கான சிறந்த வீரராக, ஜுவென்டாஸ் அணியின் கோல் காப்பாளரான ஜல்லூயிஜி தெரிவாகியுள்ளார்.

தொடர்ச்சியாக ஆறாவது ஆண்டாக ஜுவென்டஸ் அணியின் வீரரொருவர் சீரி ஏ தொடரின் சிறந்த வீரராகத் தெரிவாகியுள்ளார். 2012, 2013, 2014ஆம் ஆண்டுகளில் சிறந்த வீரராக அன்ட்ரயா பியர்லோ தெரிவாகியதுடன், 2015ஆம் ஆண்டு கார்லோஸ் டெவேஸ் தெரிவாகியிருந்தார். கடந்தாண்டு லியனார்டோ பொனுச்சி தெரிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கதை சொல்லுமா கைபேசி?



கட்டுரை

ஆ.காட்சன்



குழந்தைகள் பள்ளிக்கூடம் போவதற்கு முன்பே, வீட்டிலேயே கற்கத் தொடங்கி விடுகிறார்கள். குறிப்பாக, குழந்தைப் பருவத்தில் யாரிடம் அதிக நேரம் செலவழிக்கின்றார்களோ, அவர்கள்தான் முதல் ஆசிரியர்கள். அவர்கள்கற்றுக்கொள்வதில்நல்லது கெட்டது என எல்லா விடயங்களுமே உள்ளடங்கும்.

முன்பெல்லாம் குழந்தைகள் தாத்தா பாட்டிகளுடன் நேரத்தைச் செலவழிக்கும் வாய்ப்பு இருந்தது. அவர்களும் குழந்தைகள் சளைக்காமல் கேட்கும் கேள்விகளுக்குத் தங்களுக்குத் தெரிந்தவரை அறிவுபூர்வமாகப் பதில் சொல்லிக்கொண்டிருப்பார்கள். எனக்குத் தாத்தா உடனான ஒவ்வொரு தருணமும் நிச்சயமாகச் சிந்தனையைத் தூண்டியிருக்கிறது. அவர் அந்தக் காலகட்டத்தின் செய்திகளையும் கூட எனக்குக் கதையாகச் சொல்லியிருக்கிறார். 'ஜப்பான்காரன் ஏறோ பிளேன்ல இருந்து அமெரிக்கக் கப்பல்கள் மேல குண்டுபோடும்போது ஒரு கப்பலை மட்டும் நெருங்க முடியேல்லை. கடைசில ஒரு ஜப்பான்காரன் குண்டு நிரப்பின ஏறோ பிளேனோட கப்பல் புகைபோக்கிக்கு உள்ள விழுந்து கப்பலை நொருக்கிட்டான்' என்று இரண்டாம் உலகப் போரின் நிகழ்வுகளை என் தாத்தா கதையாகச் சொல்லியிருக்கிறார்.

சில வருடங்களுக்கு முன்புதான் அவர் சொன்னது 'பேர்ல் ஹார்பர்' சம்பவம் என்பது. ஆங்கிலப் படம் மூலம் எனக்குத் தெரியவந்தது. ஆனாலும், எனது குழந்தைப் பருவத்தில் கற்பனையில் உருவாக்கியிருந்த பிம்பத்தை எந்த ஆங்கிலப் படமும் காட்டிவிட முடியாது.

**இன்றைய சூழல்**

இன்றைக்கு, 24மணிநேர செய்திச்சேவைகளும் அழுது வடிந்துகொண்டிருக்கும் தொலைக்காட்சித் தொடர்களும் தாத்தா பாட்டிகளின் நேரத்தைத் தின்றுகொண்டிருக்கின்றன.

குழந்தைகளும் கார்ட்டூன் படங்கள், தொடுதிரைக் கைபேசிகளின் விளையாட்டு மற்றும் சமூக வலைத்தளங்களில் மூழ்கிக்கொண்டிருக்கிறார்கள்.

பள்ளிக்குழந்தைகளின் செய்முறைக் கல்வி, பெற்றோரை 'ஸ்டிக்கர்கள்' வாங்கவைத்து, பிள்ளைகளை அதை ஒட்டவைப்பது என்ற அளவில்தான் உள்ளது. இன்னும் ஒருபடி மேலே போய் 'விர்ச்சுவல் லேர்னிங்' என்ற பெயரில் கிரிக்கெட் விளையாடுவது முதல் வனவிலங்குகள் சரணாலயத்தைச் சுற்றிப்பார்ப்பது வரை அலைபேசியிலேயே எல்லாவற்றையும் கற்றுக்கொடுக்கிறார்கள்.

கிடைக்கும் நேரங்களில் திறன் வளர்ச்சி வகுப்புகளுக்குத் திணித்து அனுப்பிவிட்டால் மட்டும் எமது கடமை முடிந்துவிடுவதில்லை. கற்றல் வீட்டிலுள்ள, அக்கம்பக்கத்திலுள்ள ஒவ்வொருவரிடமும் இருந்துதான் ஆரம்பிக்கிறது. கார்ட்டூன்கள் மற்றும் வீடியோக்களில் கற்பனைக் காட்சிகளைக் கதையுடன் நேரடியாகவே வழங்கிவிடுவதால் சுயமாகக் கற்பனை செய்யும் திறன் மழுங்கிவிடும். ஆனால், கதைகளைக் கேட்கும்போது கற்பனை உலகத்தை அவர்களாகவே விரித்துக்கொள்ளும் திறன் உருவாகும்.

**பெற்றோரின் திணிப்பு**

பக்கத்து வீட்டுச் சிறுவன் இசைப் பயிற்சி வகுப்புக்குச் செல்கிறான் என்பதற்காக நன்றாகப் படம் வரையும் சிறுவனையும் இசைப் பயிற்சிக்கு அனுப்பும் சூழலில் நாம் இருக்கிறோம். பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் தேவையைத் தெரிந்துகொள்வதைவிட, தங்கள் விருப்பத்தையும் உலகின் எதிர்பார்ப்பையும் திணிப்பதையே விரும்புகிறார்கள். மற்றவர்களின் மனநிலை, விருப்பங்கள் மற்றும் எண்ண ஓட்டங்கள் எப்படி இருக்கிறது என்பதையும், மற்றவர்களின் மனவோட்டங்கள் தன்னைப் போலேவே இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்பதான புரிதல் ஐந்து வயதைத் தாண்டிய எல்லா குழந்தைகளுக்கும் இருக்க வேண்டும். இதைப் பற்றி விவரித்த புகழ்பெற்ற கோட்பாடுதான் 'தியரி ஒவ் மைண்ட்'. இந்த மனநிலையானது 'ஆட்டிசம்' மற்றும் 'மனச்சிதைவு' நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் குறைபாடாக இருக்கும் என்று நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதனால்தான் ஆட்டிசத்தால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கள் உலகத்திலிருந்து மற்றவர்களைப் பிரித்தறிய முடிவதில்லை.

**'அந்தக் காலம் போல வருமா'**

இன்றைக்கு அலைபேசிகளையும் சமூக வலைத்தளங்களையும் அதிக அளவில் உபயோகித்து வரும் குழந்தைகளும் இதைப்போன்ற ஒரு மனநிலைக்குத்தான் மாறிவருகிறார்கள். அவர்களது பேச்சுத் திறனிலும் மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு பிரதிபலிக்கும் திறனிலும் பெரிய அளவில் மாற்றங்கள் அதைவெளிப்படுத்தும் விதமாகவே இருக்கின்றன. 'அந்தக் காலம் நன்றாகத்தான் இருந்தது' என்று 'வட்ஸ்அப்பில்' படித்து ரசித்துவிட்டு, மீண்டும் அடுத்த நொடியிலேயே இந்தக்காலத்துக்கு மாறிவிடும் நம் மனதை 'டிஜிட்டல் மனது' என்றுதான் அழைக்க வேண்டும். ரோபோக்களை விஞ்ஞான பரிசோதனைக்கூடங்களில் மட்டுமல்ல, வீடுகளிலும் உருவாக்கி வருகிறோம் என்பது தான் இன்றைய தாத்தா பாட்டிகளுக்கும், பெற்றோர்களுக்கும் மனநல மருத்துவ உலகம் விடுக்கும் ஓர் எச்சரிக்கை.

> முன்பெல்லாம் குழந்தைகள் தாத்தா - பாட்டிகளுடன் நேரத்தைச் செலவழிக்கும் வாய்ப்பு இருந்தது. அவர்களும் குழந்தைகள் சளைக்காமல் கேட்கும் கேள்விகளுக்குத் தங்களுக்குத் தெரிந்தவரை அறிவுபூர்வமாகப் பதில் சொல்லிக்கொண்டிருப்பார்கள்.



# உப்பு நண்பனா, பகைவனா?

கட்டுரை

ஜனி

உணவின் சுவைக்கு அடிப்படையானவற்றில் உப்பும் ஒன்று. சோடியம் குளோரைட் எனும் இரசாயனப் பெயருடன் எமது வீட்டுச் சமையல் அறையில் நிரந்தர இடம்பிடித்திருக்கும் உப்பு நல்லதா? கெட்டதா? எனும் விவாதம் தொடர்ந்து நடந்துவருகிறது.

உப்பு என்றாலே அது நாம் அன்றாடம் உட்கொள்ளும் உணவுகளில் மட்டும் பயன்படுத்தப்படுகிறது என்றே புரிந்துகொள்கிறோம். முறுக்கு, தட்டை, 'சிப்ஸ்' போன்ற நொறுக்குத் தீனிகள் தொடங்கி சோடா, மென்பானங்கள், பிஸ்கட் ரொட்டி வரை பல தின்பண்டங்களிலும் உப்பைச் சேர்க்கிறார்கள்.

உப்பு அதிகமுள்ள உணவு செரிக்காது, மலத்தை இறுக்கிவிடும். உப்பு அதிகம் சேர்க்கப்பட்ட பண்டங்களால் தாகம் அதிகரிக்கும். அதனால் தண்ணீரை அதிகம் குடிப்போம்.



அந்த நீர் ஆவியாகிவிடாமல் உப்பு காக்கும். அதனால், இதயத்துக்குச் செல்லும் குருதியில்; நீரின் அளவு அதிகரித்து இதயத்தின் பணிச் சுமையை அதிகரிக்கும். குருதியில் அதிகமாகிவிட்ட உப்பைப்பிரிக்கும்வேலையைச் சிறுநீரகம் மேற்கொள்ளும்.

தொடர்ந்து உப்புப் பண்டங்களை அதிகம் சாப்பிட்டால் அதில் சிறிதளவு சிறு நீரகக் கல்லாகும். சிறு நீரகமும் நாள்படப் பழுதடையும். இறுதியில் தான் உப்பு பிரிக்கப் பட முடியாமல் குருதியில் யூரியா அதிகரிக்கும். அப்போது கை, கால், முகம், வயிறு வீங்கும். உடல் இப்படி 'உப்பு'வதால் இதை உப்பு வியாதி என்று அழைக்கிறார்கள். உப்பினால் ஒவ்வாமை, கொப்புளங்கள், மூக்கடைப்பு, மூக்கில் நீர் ஒழுகுதல் போன்றவை ஏற்படவும் வாய்ப்பு உண்டு. அதே சமயம், உப்பு முழுக்க முழுக்க வில்லனா? என்றால் இல்லவே இல்லை. உணவின் சுவையை நிர்ணயிப்பதுடன் எளிதில் சேமிக்கவும் உதவுகிறது. பசியைத் தூண்டுகிறது. பல பண்டங்களைப் பழுதடையாமல் பாதுகாப்பதுடன், குணப்படுத்தும் மருந்தாகவும் செயல்படுகிறது. எம்முடைய வியர்வை, கண்ணீர், சிறுநீர் மூன்றிலும் உப்பு இருக்கிறது.

உப்பு உடலில் ஏற்படும் வலிகளை நீக்கும் நிவாரணியாகவும் செயல்படும். தோலில் ஏற்படும் கொப்புளங்கள், கட்டிகளுக்கும், உலர்ந்த தோலாக இருந்தாலும் எண்ணெய் வடியும் தோலாக இருந்தாலும் வெந்நீரில் உப்பு சேர்த்துக் குளித்தால் நிவாரணம் கிடைக்கும். தொண்டையில் சளி கட்டிப் பேச முடியாமல் போகும் போது, உப்பு நீரில் வாய் கொப்பளிப்போம். மூக்கிலும் 'சைனஸ்' குழாய்களிலும் அடைப்பு ஏற்பட்டு தலைவலியும் ஒவ்வாமையும் ஏற்படும் போது, உப்பு நீர் விட்டு கண், மூக்கைச் சுத்தப்படுத்துவது, வேது பிடிப்பதும் உண்டு. முன்பெல்லாம் வெந்நீரில் சிறிதளவு உப்பைப் போட்டு அந்தத் தண்ணீரில்தான் குளிப்பார்கள். கண் நீர்ச்சத்து இன்றி உலர்ந்துவிட்டால் போட்டுக் கொள்ளும் களிம்பிலும் உப்புச் சேர்க்கப்படுகிறது. சரியான அளவில் உப்பைச் சேர்த்துக்கொண்டால் உப்பு நம் நண்பன்தான்; அளவில்லாமல் பயன்படுத்தி அதை வில்லனாக்குவது நாம்தான்!

நன்றி: த இந்து



# திருக்கார்த்திகைத் தீபம்

சிவஸ்ரீ. பூரண. தியாகராஜக்குருக்கள்

கார்த்திகை மாதம், கார்த்திகை நட்சத்திரத்தன்று முருகன் கோவில்களில் தீபங்கள் ஏற்றிச் சொக்கப்பானை கொழுத்தி வழிபடுவது வழக்கம். அடுத்த நாள் பௌர்ணமி தினத்தன்று ஆலயங்களிலும் வீடுகளிலும் தீபம் ஏற்றி வழிபடுவர். சிவபெருமான் சோதி வடிவாகத் தோன்றியதை நினைந்து அடியவர்கள் வழிபாடு இயற்றுவர். சிவராத்திரி அன்று பிரம்ம விஷ்ணுக்களின் அகந்தை நீக்கச் சோதி வடிவாகத் தோன்றிய இறைவனைப் பிரம்ம விஷ்ணுக்கள் தமக்கு என்றும் காட்டியருள வேண்டும் என்று வேண்டினர். அதற்கு இறைவன் திருக்கார்த்திகை நாளிலே இவ்வுருவினைக் காட்டியருளுவேன் என்று திருவாய் மலர்ந்தருளினார். அதனை நினைவு கூர்ந்தே கார்த்திகைத் தீபத் திருநாள் கொண்டாடப்படுகின்றது.

### விளக்கீட்டால் வீடு மலரும்

திருவண்ணாமலையில் மலையுச்சியிலே பெருந்தீபம் ஏற்றப்படுகின்றது. அது பல நாள்கள் எரியும் பெரும் சோதியாகப் பிரவாகித்து பல மைல்களுக்கு அப்பாலும் காட்சிதரும். பல ஊர்களிலுமுள்ள பல்லாயிரக்கணக்கான மக்கள் இதனைத் தரிசித்து மகிழ்வார்கள். "குன்றின் மேலிட்ட தீபம்" "மலை விளக்கு" என்ற சொற்றொடர்கள் நீண்ட காலம் இவ்வழக்கம் இருந்ததை வெளிக்காட்டி நிற்கின்றன. விளக்கீடும் இதன் பொழிப்பே. வீடுகளில் மாக்கோலம், வர்ணக் கோலம் இட்டு அவற்றின் மீது விளக்குகள், அகல்விளக்குகளை அறைகள், விறாந்தைகள் முதல் எல்லா இடங்களிலும் ஏற்றி வைத்து எங்கும் ஒளிதருவரு இதன் சிறப்பு. அது மட்டுமன்றிச் சிறுசிறு பந்தங்களைத் தயார் செய்து அவற்றை தேங்காய் எண்ணெய் அல்லது இலுப்பெண்ணையில் நனைத்து ஏற்றி வீட்டு வளவுகளில் சுற்றிவரப் பல இடங்களிலும் நாட்டி வைத்து ஒளிவெள்ளத்தை எங்கும் பாய்ச்சுவர். அத்துடன் வீட்டு வாசல்களில் வாழைக்குற்றியை நாட்டி அதன் மேல் தேங்காய்ப் பாதியை வைப்பர். அதனுள் திரிச்சீலை இட்டு, எண்ணை விட்டு நீண்ட நேரம் எரிய விடுவர். .அத்துடன் வீட்டு மதில்களில் பல இடங்களிலும் சிட்டி விளக்குகள் எரியும். அன்று வீடுகளும் வீட்டு வாசல்களும் ஜெக ஜோதியாக விளங்கும்.

### சொக்கப்பானை கொழுத்துவதன் தத்துவம்

முன்னொரு காலத்தில் தாரகா அரசனுடைய புதல்வர்களான வித்யுன்மாலி, தாரகாசூரன், மகாராஜன் என்ற மூன்று அரக்கர்களும் கடுமையான தவம் செய்து மூன்று நகரங்களைப் பெற்றனர். இவை மூன்றும் முறையே தங்கம், வெள்ளி, இரும்பால் ஆகியவை. இந்த மூன்று நகரங்களும் தனித்தனியே வெவ்வேறு இடங்களில் இருக்கவேண்டும். என்றும் ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை இந்த மூவரும் ஒரே ஒரு நிமிட நேரம் ஒன்று சேருவதென்றும், அந்த நேரத்திலேயே அவர்களுக்கு இறப்புச் சம்பவிக்கவேண்டும் என்றும் அவர்கள் வரம் பெற்றனர். அதுவும் பிறப்பும் இறப்பும் அற்ற ஒரு சிறந்த ஆண் மகனால், அதுவரை உலகில் காணக் கிடைக்காத தேர், குதிரை, சாரதி, வில், அம்பு ஆகிய வகைகளைக் கொண்டு போர் தொடுக்கும் போது தான் இந்த இறப்புச் சம்பவிக்க வேண்டும் எனவும், அவர்கள் வேண்டிக் கொண்டனர். இப்படிப்பட்ட ஒப்பற்ற வரம் பெற்ற அரக்கர்களை கைலாயத்தைத் தேராகவும் வேதங்களைக் குதிரையாகவும், பிரம்மாவைச் சாரதியாகவும், காயத்திரியைக் கடிவாளமாகவும் ஓங்காரத்தைச் சாட்டையாகவும் மேருமலையை வில்லாகவும், ஆதிசேடனை நாணாகவும், அச்சுதனை அம்பாகவும் கொண்டு அவர்கள் கூடிய ஒரு நிமிடத்தில் எரித்து அழித்தார் சிவபெருமான். இதனையே சிவன் திரிபுரம் எரித்த செய்கை என்றும் கூறுவர்.

இவ்வாறு நடந்த நாள் திருக்கார்த்திகை தினம் ஆதலால் அதன் பாவனையாகச் சொக்கப் பானை கொழுத்தப்படுகிறது. திருக்கோயிலுக்கெதிரில் பனை ஓலைகளால் கூண்டு கட்டி அதற்குத் தீயிடுவதே சொக்கப் பானை எரித்தல் எனப்படுகிறது. இத்தனை சிறப்புகள் பொருந்திய கார்த்திகைத் தீபத்திரு நாளிலே எமது இல்லங்களில் தீபங்கள் ஏற்றி ஆலய தரிசனம் செய்து இறை னருளால் சகல செ வங்களும் பெற்று ணமான, ஆனந்தமா வாழ்வை வாழ்வோமா



## மரண அறிவித்தல்



திருமதி
**மனோன்மணி சுப்பிரமணியக்குருக்கள்**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 26.10.1933 | 02.12.2017 |

பருத்தித்துறை, வியாபாரி மூலை, இன்பர்சிட்டி பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் கனடா ரொறென்ரோவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மனோன்மணி சுப்பிரமணியக்குருக்கள் 02.12.2017 சனிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நீலகண்டக்குருக்கள், காமாட்சி அம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சிதம்பரக்குருக்கள் செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் சுப்பிரமணியக்குருக்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சோமாஸ்கந்தக்குருக்கள், மதனகாமேஸ்வரி, இராஜேஸ்வரி மற்றும் கந்தசாமிக்குருக்கள் (வதிரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சிவானந்தராசா மற்றும் சச்சிதானந்தராசா(கனடா), தயானந்தர்ராசா(கனடா), ஜெயானந்தராசா(கனடா),அருளானந்தராசா((பிரான்ஸ்), ரவிச்சந்திரன்(கனடா), பாலச்சந்திரா (அயர்லாந்து) ஆகியோரின் அன்புத் தாயாரும் கமலாஜனி, சந்திரகலா(கனடா), பார்வதி(கனடா), மதி(பிரான்ஸ்), சாரு(கனடா), சுமதி(கனடா), கிருஷ்ணமூர்த்தி(அயர்லாந்து) ஆகியோரின் அன்பு மாமியாரும் அச்சுதன், வித்தகன், சகானா, அனூரின், அட்வான், ஜஸ்வரியா, சிம்ரன், விஜய், டாரின், டேவிட், லவிமனோ, திவாகரி மேனகா, நிருஷன், நிதர்ஷன், அபிநயன், அமிர்தன், அனுசன், மாதினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடா ரொறென்ரோவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**வியாபாரி மூலை,**
**பருத்தித்துறை.**

தகவல்:
**சி.சுப்பிரமணியக்குருக்கள் (கணவர்)**
**சி.அச்சுதன் (பேரன்)**

**கனடா: 00141626 77704/ 00141688 29052**
**021 226 2554**

"காளி துணை"

## திருமண சேவை

| பிறந்த ஆண்டு | விவரம் | எதிர்பார்ப்பு |
|---|---|---|
| 88, 89, 90, 91,94, 95, 97 | உள்நாட்டு பெண்கள் | வெளிநாட்டு மாப்பிள்ளை |
| 76, 84, 89, 92 | வெநாட்டு பெண்கள் | படித்த உள்நாட்டு மாப்பிள்ளை |
| 88,89,79,73,88,86, 85,90 | அரச உத்தியோகம் (Doct,Eng,teacher பெண்கள் | தகுதியான மணமகன் |
| 81,83, 87, 85, 89, 90, 79, 77 | வெளிநாட்டு மணமகன் | உள்நாட்டு அழகிய மணமகள் |
| 81, 83,85,88, 89,90, 91,79 | அரச உத்தியோகம் (Doct,Eng, to Acc,Teachen,Bank | தகுதியான மணமகள் |
| 74,79,87,85 | Divoice | பொருத்தமான மணமகள் |

077 604 0920/ 077 946 4287/ 077 518 7088 (13)

## திருமண சேவை

www.thaalee.com என்பது website இல் இயங்கும் ஒரு திருமண சேவை. இந்த website இல் பல்லாயிரக்கணக்கான Unmarried, Divorce. Widow, nullified போன்றவர்களுடைய படங்கள், ஜாதகங்கள் மற்றும் முழுமையான விவரங்கள் உண்டு. இதில் ஆண்கள், பெண்கள், உள்நாட்டவர்கள் மற்றும் வெளிநாட்டவர்களும் உண்டு. ஆகவே திருமணம் செய்ய விரும்புபவர்கள் எமது www.thaalee.com என்பதைப் பார்த்து நீங்கள் விரும்புபவர்களைத் தெரிவு செய்து கொள்ள முடியும். மேலும் நீங்களாகவே அதில் பதிவு செய்து கொள்ளவும் முடியும். நீங்கள் எங்கும் போகாமல் வீட்டில் இருந்து கொண்டு திருமணத்தை முடித்துக் கொள்ள முடியும்.

விவரங்களுக்கு - S.Sarma, Phone - 077 539 3728, Viber - 077 829 7351

## யாழ் நகரில் உடனடி வேலைவாய்ப்பு

நீங்கள் A/L பரீட்சை முடித்துவிட்டு உங்கள் சொந்த வருமானத்தில் உயர்கல்வியைத் தொடர ஆசையா?
பகுதி நேர வேலை செய்து மேலதிக வருமானம் உழைக்க ஆசையா?
18 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்குமான அதி உன்னதமான வேலைவாய்ப்பு.
வெளிநாட்டு பயணங்கள், கார், வீடு மற்றும் ஆடம்பர வாழ்க்கை வாழ வேண்டுமா?
உங்கள் வாழ்வை வளமாக்கி கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்
0767755920
IBSL உள்ளவர்களுக்கு
EPF . ETF உடன் நிரந்தர வேலைவாய்ப்பு
0775328536

## ஒரு எண்ணெய்! ஆரோக்கியமான பல நன்மைகள்!!!

- முடி உதிர்வு, பொடுகுத் தொல்லையா?
- கருமையான நீண்ட கூந்தல் வேண்டுமா?
- முகத்தில் கரும்புள்ளி, கருவளையமா?
- முகப்பருவா?
- தோல் சுருக்கமா?
- உதடு, குதிக்கால் வெடிப்பா?
- உடற்பருமன், Cholesterol Blood Sugar இதய நோய் பிரச்சினையா?

Royal

இன்றே பாவியுங்கள்!!!

"றோயல் ஓர்கானிக் வேர்ஜின் தேங்காய் எண்ணெய்"

- 100% Natural
- Cold Pressed
- No Refining
- No Bleaching

Re- Packed By: Royal Industry Colombo - 13

சந்தைப்படுத்துவோர்
சிவா நறுமணப் பூங்கா
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
021 222 2567

## மணப்பெண் தேவை

யாழ்ப்பாணம் இந்து. 1984 இல் பிறந்துள்ள. (உத்திரட்டாதி - Charted Accountant) மற்றும் (கார்த்திகை -Phd) மற்றும் (திருவோணம் -B.Sc Engineer) மற்றும் (அனுசம் - M.Sc) மற்றும் (ரேவதி - Acc) மற்றும் (திருவோணம் - Accountant) மற்றும் (மிருகச்சிடம் IT Engineer) ஆகிய ஏழு Australia மாப்பிள்ளைகளுக்கு பெண்கள் தேவை.

தாலி (thaalee) திருமணசேவை. 011 252 0619 011 252 3127

## மணப்பெண் தேவை

யாழ்ப்பாணம் இந்து, 1982 இல் பிறந்துள்ள. Divorce, (அத்தம் - Engineer - USA) மற்றும் (அச்சுவினி -Supervisor-Colombo) மற்றும் (அத்தம்-BA-uk) மற்றும் (மிருகசீரிடம் O/L-UK) மற்றும் (சுவாதி-Technician-Canada) ஆகிய ஐந்து மாப்பிள்ளைகளுக்கு பெண்கள் தேவை.

தாலி (thaalee.Com) திருமணசேவை. 011 252 0619 011 252 3127

## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் வரவு செலவுத் திட்டம் - 2018

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 168 ஆம் பிரிவிற்கிணங்க வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் 2018 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்பட்டு 2017.12.04 ஆம் திகதி தொடக்கம் 2017.12.11 ஆம் திகதி வரை பார்வைக்குப் வைக்கப்பட்டுள்ளது. இதனை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகத்திலும் சுன்னாகம், உடுவில், ஏழாலை ஆகிய உப அலுவலகங்கள் மற்றும் பொது நூலகங்களிலும் vsps.lk என்ற எமது இணையத்தளத்திலும் பார்வையிடலாம் என்பதனை அறியத்தருகின்றேன்.

**தி.சுதர்சன்,**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேச சபை,**
**சுன்னாகம்.**

# ஆரோக்கிய வாழ்வை நோக்கி...

கட்டுரை
உடுவிலூர் கலா



பெண்ணே பெண்ணே விழித்திடு
பொறுமையோடு சத்துணவு சமைத்திடு
வெதுப்பக உணவினை வெறுத்திடு
வெதும்பிச் சாவாய் உணர்ந்திடு
மென் பானங்களை மறந்திடு
மெல்லெனச் சாவாய் தெரிந்திடு
அறுசுவை உணவு உண்டு
ஆரோக்கியம் காப்பாய் மகிழ்ந்திரு...

இன்று பெண்களின் ஆரோக்கியம் காவு கொள்ளப் பட்டுவிட்டது. திரும்பும் இடங்களெங்கும் தொற்றும், தொற்றா நோய்களின் தாக்கம் பெண்களை வெகுவாகப் பாதிக்கின்றது. பெண்ணானவள் அறுசுவை உணவு சமைத்துக் குடும்பத்தினருடன் பகிர்ந்துண்டு மகிழ்ந்திருந்த காலம் வழக் கொழிந்து விட்டது. இறக்குமதி செய்யப்பட்ட நாகரிகங்களுக்கும், உணவுப் பழக்க வழக் கங்களுக்கும் அடிமையாகி மரபு சார்ந்த வாழ்வைப் புரட் டிப் போட்டுள்ளாள். இதன் விளைவு நோய்களின் தாக்கங் களுக்கு ஆட்பட்டு அல்லல் படுகின்றனர்.

**பழங்காலப் பெண்களைக் காட்டிலும் அதிக நோய்கள்**

முன்னர் பிரசவகால உபாதைகளையே பெண்கள் அனு பவித்திருந்தனர். இன்று நிலைவேறு. மார்பகப் புற்று நோய், கருப்பைப் புற்றுநோய், உயர் குருதி அழுத்தம், நீரிழிவு, எனப்பலவகைத்தொற்றாநோய்கள்பெண்களை பாதித்த வண்ணம் உள்ளன. இலங்கையில் ஐந்து இலட் சம் பெண்களுக்கு நீரிழிவு நோய் உள்ளதென சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள தகவல் அதிர்ச்சியைத் தருகின் றது. ஏனையோரைப் பராமரிக்கின்ற சத்துணவு வழங்கு கின்ற பெண்களுக்கே நீரிழிவு என்றால், என்ன செய்ய முடியும். பெண்களை ஏன் நீரிழிவு தாக்குகின்றது என்பது சிந்திக்க வேண்டிய ஒன்று.

முன்பெல்லாம் பெண்கள் அம்மி, ஆட்டுக்கல் போன்றவற் றில் அரைத்து, உரலில் இடித்து, ஆண்களுடன் இணைந்து, ஈடுகொடுத்து வயலில் வேலை செய்து உடலைக் கட்டுப் பாட்டில் வைத்திருந்தனர். இன்று நாகரிகத்தின் புன்னகை யில் மயங்கிய பெண்கள் தமது வாழ்வை முற்றாக மாற்றி யமைத்து விட்டனர். வேலைகளை இலகுவாகச் செய்யப் பல இயந்திரங்களின் உதவிகளை நாடு கின்றனர். காலையும் மாலையும் வெதுப்பக உணவுத் தயாரிப்புக்களோடு வீட்டு வாசல்களில் வண்டிகள் முகாந்தரமிடுகின்றன. இலகுவாக அவற்றை வாங்கி உண்டு தேநீரையும் குடித்துவிட்டு, தொலைக்காட்சித் தொடர்களுக்கா கக் காத்துக் கிடக்கிறார்கள். வெதுப்பக உணவுகள் முழுக்க முழுக்க மாச்சத்தினை மட்டுமே கொண் டுள்ளன. இவை உடலை நன்கு பருமனடையச் செய்கின்றன. அடிக்கடி அருந்தும் தேநீரால் சீனி யின் அளவு அதிகரித்துவிடும்.

**உடலுழைப்பு ஆரோக்கியம் தரும்**

உடலை வருத்தி வேலை செய்யாது விடில், வியர்வை வெளியேறுவதில்லை. உண்ணும் உணவுகள் சமிபாடடைவதில்லை. வீடுகளில் ஒரு சிறிய நிகழ்வாயினும் விருந்தக உணவுக ளுக்கே பெண்கள் முக்கியத்துவம் கொடுக்கின்ற னர். தொலைபேசி ஓடர்கள் மூலம் வீட்டுக்கே உணவுப்பொதிகள் வந்து சேர்கின்றன. பீசா, பேர்கர், றோல்ஸ், பிறைட் றைஸ் என ஆரோக்கி யத்துக்கு அப்பாற்பட்ட உணவுகளை விரும்பி உண்பதால் நீரிழிவு மிக விரைவாகப் பெண்களி டம் குடி கொள்கின்றது. அஜினோமோட்டோ, ஈஸ்ற் போன்ற சுவையூட்டிகளும் பொரித்த எண் ணெய்களும் பயன்படுத்தித் தயாரிக்கப்படும் இந்த வகை உணவுகளால் குடல் அரிப்புக்கள் மட்டுமல்ல, நிறை அதிகரிப்பும் ஏற்படுகின்றது.

நிறை அதிகரிப்பு ஏற்பட்டாலே உயர்குருதி அழுத் தம், நீரிழிவு என்பன தானாக வந்தடைந்து விடு கின்றன. இதனால் தான் இப்போது பெண்களுக்குக் கர்ப் பகால நீரிழிவுகள் அதிகளவில் ஏற்படுகின்றன. இவை பிரசவத்துக்குப் பின்னர் ஒரு சில மாதங்களில் காணாதும் போய்விடுகின்றன. சில தொடர்ந்து இன்சுலின் ஊசி மருந்து பாவிக்கும் நிலையையும் தோற்றுவிக்கின்றது. தற்போது பெண்களிடம் மாறியுள்ள உணவுப் பழக்கவழக் கங்களே இவை யாவற்றுக்கும் காரணம்.

**வீடுகளில் சமைப்பதை விடுத்து கடையுணவுகளை நாடும் போக்கு**

பெண்கள் வீடுகளில் சமைத்து உண்பது மிக மிகக் குறை வாக உள்ளது. வெதுப்பக உணவுகளுக்கு பெண்களிடம் பெரு மதிப்புண்டு. தரமற்ற உணவுகளை உண்பதால் பண விரயம் மாத்திரமல்ல நோய்களும் எமக்குச் சொந்த மாகிவிடும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்பதன் அர்த்தம் அப்போதுதான் தெரியவரும்.

உணவு விடயத்தில் பெண்கள் மிகவும் கவனமாகவும் தெளிவாகவும் இருக்கவேண்டும். சிற்றுண்டி சாலை களில், விடுதிகளில் உணவு உண்பதையும் நொறுக்குத் தீனிகள் உண்பதையும் முற்றாகத் தவிர்க்க வேண்டும். பணத்தைக் கொடுத்து நோயைக் கௌரவமாக வாங்கிக் கொண்டுவீடுசெல்கின்றோம்என்றஉண்மையைப்புரிந்து கொள்ள வேண்டும். நாம் நீண்ட காலம் உயிர் வாழ்வதா யின் ஆரோக்கியம் மிக முக்கியமானதாகும். ஆரோக்கி யம் என்பது மகிழ்ச்சியான சூழலில் சத்துணவுகளை உண்டு வாழ்வதே ஆகும்.





மனிதர்களும் சரி கால்நடைகளும் சரி உயிர் வாழ்வதற் கேற்ற பிரதேசங்களில் தாம் வாழ்வது அவைக்குக் கிடைத்த வரப்பிரசாதமே. எம் ஆரோக்கியத்துக்குத் தேவையான பழங்கள், காய் கறிகள், பச்சிலைகள் என் பன தாராளமாகவே கிடைக்கின்றன. வேலிகளில் படர்ந்து வளரும் மொசு மொசுக்கை, முடக் கொத்தானை, முசுட்டை, கொவ்வை மற்றும் தூதுவளை, முல்லை, துளசி, கறிவேப்பிலை, சண்டி, பொன்னாவரசு, தவசி முருங்கை, முருங்கை, வாதனாராணி முதலான பலவும் போதிய கனியச் சத்துக்கள், இரும்புச்சத்து, புரதம் என்ப வற்றைக் கொண்டுள்ளன. இவற்றைத் தற்காலப் பெண் கள் விரும்பிச் சாப்பிடுவதில்லை. காய்கறிகள் தட்டுப்பா டான காலங்களில் மாத்திரம் முருங்கை, சண்டியைச் சற் றுத் திரும்பிப் பார்ப்பார்கள்.

**இயற்கையில் தங்கியிருப்பதே ஆரோக்கியம்**

நமது அன்றாட உணவில் எந்த உணவைத் தயாரிப்பதா னாலும் கூடுதலான இலைக்கறியைப் பயன்படுத்திச் சமைக்கவேண்டும். தினசரி இலை வகை, பருப்பு வகை களை உண்ணவேண்டும். கடலுணவுகளையும், தானி யங்களையும் தாராளமாக உணவில் சேர்க்க வேண்டும். கோதுமைக்குப் பதிலாகக் குரக்கன், வரகு என்பவற்றைப் பயன்படுத்துவது நல்லது. மாச்சத்து அதிகம் உள்ளெடுக் கப்படுவது இதன் மூலம் தவிர்க்கப்படும். சீரகம், உள்ளி, மிளகு, இஞ்சி, கறுவா, ஏலம் போன்றவற்றையும் பயன்படுத்த வேண்டும்.

இட்லி, தோசை, இலைக்கஞ்சி, உழுத்தங்களி, வெங்கா யப்பிட்டுப் போன்ற உணவுகளைக் காலை உணவுக ளான உண்ணப்பழகுதல் வேண்டும். தயிர், மோர் போன் றவற்றையும் தவிர்க்காது சேர்த்துக்கொள்ளல் நல்லது. போத்தல்களில் அடைக்கப்பட்ட மென்பானங்களை அருந்த முற்படாமல், இளநீர், நெல்லுப்பொரி நீர், வடித்த கஞ்சி, மரக்கறிச் சாறு போன்றவற்றைத் தயாரித்து அருந் துவது நல்லது. இவை தாகம் தவிர்ப்பது மட்டுமல்ல உட லுக்கு வேண்டிய ஆரோக்கியத்தையும் கொடுக்கும்.

ஆக, பெண்களின் சத்துணவுகளையும், மன மகிழ்ச்சியை யும் நடைமுறையில் பின்பற்றுங்கள். நோய்களில் இருந்து விடுபடவும், நோய்கள் வராமல் தடுக் கவும் நல்ல பழக்க வழக்கங்களைப் பின்பற்றுங்கள். எமது நாட்டு மக்கள் தொகையில் அரைப் பங்கிலும் அதிக மானோர் பெண்களே. பெண்களின் ஆரோக்கியம் மிக முக்கியமானது. அதுமட்டுமல்ல இந்த அரைவாசிக் கும் அதிகமாகவிருக்கும் பெண்களி லேயே உணவுவிடயத்தில் மீதமுள்ள அனைவரும் தங்கியிருக்கின்றனர். மேற்சொன்ன உடனடி உணவுகள் மூலம் பெண்கள் தமக்கு மாத்திரம் பாதகத்தைத் தேடவில்லை. தம்மில் தங்கியிருக்கின்ற அனைவருக்கும் தீங்கிழைத்து விடுகின்றனர் என்ப தையும் கவனத்தில் கொள்ள வேண் டும். இனியாவது ஒவ்வொரு வீட்டுச் சமையலறைகளும் நாள் தவறாது செயற்படத் தொடங்கட்டும்.





# மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக இம்மானுவல் பெர்னான்டோ ஆண்டகை

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை



மன்னார் மறைமாவட்டத்தின் புதிய ஆயராக கொழும்பு உயர்மறை மாவட்ட தமிழ் துணைஆயர் கலாநிதி இம்மானுவல் பெர்னான்டோ ஆண்டகை பாப்பரசர் பிரான்சிஸால் கடந்த மாதம் 22ஆம் திகதி நியமிக்கப்பட்டார். ஆயர் இம்மானுவேல் பெர்னான்டோ ஆண்டகை பற்றியே இந்த ஆக்கம் பேசுகிறது.

உதயன் பத்திரிகையின் சூரியகாந்தி பகுதியில் கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 21ஆம் திகதி தமிழ் மறைமாவட்டங்களுக்கு வெளியே ஒரு தமிழ் ஆயர் என்ற தலைப்பில் ஒரு கட்டுரை வெளியானது. தற்போது அந்த ஆயர் தமிழ் மறை மாவட்டங்களுக்கு உள்ளே வந்துள்ளார்.

### ஆயரின் பணி ஓய்வும் புதிய ஆயர் நியமனமும்

மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை 2015ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ஆம் திகதி தனது 75 வயதை எட்டி போது, பணி ஓய்வை பாப்பரசருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தினார். அதன் பின்னர் அவர் சுகவீனமுற்றது துரதிஸ்ரவசமானது. அவர் உடல் தகுதியுடன் இருந்திருப்பின் இந்த நியமனம் வரை பதவியில் இருந்திருக்கலாம். தற்போது அவரின் இடத்தை இம்மானுவல் பெர்னான்டோ ஆண்டகை பிரதியீடு செய்துள்ளார்.

### கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்கு முதற் தடவையாக தமிழ் துணை ஆயர்

2011ஆம் ஆண்டு நவம்பர் 28ஆம் திகதி அன்றைய திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் தமிழ் துணை ஆயராக கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையை நியமித்தார். இலங்கை கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் கொழும்பு உயர் மறைமாவட்டத்திற்கு தமிழ் கத்தோலிக்க துணை ஆயர் ஒருவர் நியமிக்கப்பட்டது இதுவே முதற் தடவை ஆகும். இந்த நியமனத்தின் மூலம் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் தமிழ் துணை ஆயர் ஒருவர் இல்லாமற் போகிறார். அந்த வெற்றிடத்தை கொழும்பு உயர் மறைமாவட்ட பேராயர் மல்கம் கருதினால் றஞ்சித் ஆண்டகை விரைவில் நிரப்ப வேண்டுமென்றே அவருக்கு அழைப்பு விடுக்கிறோம். எப்போதும் அன்பும் அமைதியும் கலந்த ஆளுமைஎன்றும்புன்சிரிப்புதவழும்மலர்ந்த முகம் சிரித்தால்எப்போது அடுத்த சிரிப்பு வரும் என ஏங்கவைக்கும் சிரிப்பு அன்பை அள்ளிக்கொட்டும் அன்பான அணுகுமுறை யாரையும் புண்படுத்தாத இனியசுபாவம் கால நேர இட வேறுபாடின்றி எல்லேரையும் எந்நேரமும் ஏற்றுக் கொள்ளும் உயர்ந்த பண்பு அமைதியாக ஆர்ப்பாட்டம் இல்லாமல் அனைத்துப் பணிகளையும் ஆற்றும் மனப்பாங்கு இவை அனைத்தினதும் உருவம் ஆயர் கலாநிதி இம்மனுவேல் பெர்னான்டோ ஆண்டகை.

### ஆய்ரின் கல்வியும் பணியும்

யாழ். நகரில் இறைபக்தி, மிகுந்த விசுவாசம் கொண்ட சேவியர் பெர்னான்டோ ஞான சொருபி பெர்னான்டோ தம்பதியரின் எட்டாவது மகனாக 1948ஆம் ஆண்டில் பிறந்தார். இவரின் தந்தையாரின் பணி நிமித்தம் பல இடங்களுக்கும் இடம்பெயர வேண்டி இருந்தமையால் 1951ஆம் ஆண்டில் கிறான்பாஸ் பின்னர் 1955ஆம் ஆண்டில் கொட்டாஞ்சேனை என மாறி அங்கேயே நிரந்தரமாகக் குடியேறினர்.

ஆரம்பக்கல்வி கொட்டாஞ்சேனை புனித ஆசிர்வாதப்பர் கல்லூரி (1953-1964),சிறிய குருமடக்கல்வி: புனித அலோசியஸ் சிறிய குருமடம் (1965 - 1966) , மெய்யியல்; கல்வி: கண்டி அம்பிற்றிய தேசிய குருத்துவக் கல்லூரி (1966-1969), இறையில்கல்வி: உரோமை மறைபரப்புக் கல்லூரி (1969 -1972), இளங்கலைமானி: உரோமை ஊர்பானியா பல்கலைக்கழகம் (1972-1973) என கல்வியை முடித்து குருத்துவத்தை உரோமையில் திருத்தந்தை 6ஆம் சின்னப்பர் கையால் 19 நாடுகளைச் சேர்ந்த 38 குருக்களுடன் பெற்றார். (1973) முது கலைமானிப் பட்டம்: உரோமை (1974) எனப் பயிற்சிக்காலம் நிறைவுற்றது. உதவிப்பங்குத்தந்தை: தலுகம (1974 -1975) உதவிப் பங்குத்தந்தை: கன்வெல்ல (1975 - 1976) எனப்பணியாற்றிய பின்னர் பொதுவாகக் கிடைக்காத வரமாகத் தன்சொந்தப் பங்காகிய கொட்டாஞ்சேனைப் பங்கிலேயே பணியாற்றினார். அந்தக் காலப்பகுதியில் கொச்சிக்கடை புனித அந்தோனியார் ஆலயப் பொறுப்புக்குரு (1976 - 1878) ஆகவும் பணியாற்றினார். விரிவுரையாளர்: கண்டி அம்பிற்றிய தேசிய குருத்துவக் கல்லூரி (1978 1981) கலாநிதிப்பட்டகல்வி: வொஷிங்டன் பல்கலைக்கழகம் பங்குப்பணி: வொஷிங்ரன் மற்றும் நியூயோர்க் (1981 - 1987) விரிவுரையாளர்: கண்டி அம்பிற்றிய தேசிய குருத்துவக் கல்லூரி (1987 -1989) உபஅதிபர்: கண்டி அம்பிற்றிய தேசிய குருத்துவக் கல்லூரி; (1989-1991) கண்டி அம்பிற்றிய தேசிய குருத்துவக் கல்லூரி அதிபர்ப்பணியை மூன்றாவது மறைமாவட்டக் குருவாகப் பொறுப்பேற்றார். (1991-1998) பங்குப்பணி: நியூயோர்க் றொக்வில் சென்ரர் மறைமாவட்டம் (1998 1999) ஆய்வு நிலையைப் பொறுப்பாளர்: கொழும்பு தாய்மறைமாவட்டம் (1999-2001) மறைக்கோட்ட முதல்வர்: பொலவலான மறைக்கோட்டம் பங்குத்தந்தை: நீர்கொழும்பு தில்லந்துவ பங்கு (2001-2002) மறைக்கோட்ட முதல்வர்: மொறட்டுவ பங்குத்தந்தை: மொறட்டுவ புனித செபஸ்தியார் ஆலயம்(2002-2009) எனப் பணி தொடர்ந்தது.




### மறைபணிகள்

2004இல் இருந்து மறைக் கல்வி குடும்ப அப்போஸ்தலிக்க பணிக்கான ஆயரின் பிரதி முதல்வராகவும் 2006 இல் இருந்து தெற்குப் பிராந்திய (மொறட்டுவ களுத்துறை மறைக்கோட்டம்) ஆயரின் பிரதி முதல்வராகவும் பணியாற்றியுள்ளார். 2009ஆம் ஆண்டில் களுத்துறை தகாம் செவன குருடத்தில் வதிவிடக்குருவாகவும் ஆன்மிகக்குருவாகவும் இருந்து நாகரீக வரலரற்றுத்துறை விரிவுரையாளராகப் பணியாற்றியுள்ளார். 2010ஆம் ஆண்டில் மாறிஸ் சகோதரர்கள் களுத்துறை திருச்சிலுவைக் கல்லூரியை கொழும்பு தாய் மறைமாவட்டத்திற்குக் கையளித்த போது அதன் இடைக்கால அதிபராகப் பணியாற்றியுள்ளார். 2010ஆம் ஆண்டில் கொழும்பு தாய் மறைமாவட்ட ஆயர் இல்லத்தில் தங்கி இருந்து தமிழ் மக்களின் ஆன்மிகப் பணிகளை நிறைவேற்றும் ஆயரின் பிரதி முதல்வராகப் பணியாற்றியுள்ளார். தமிழ் இறையில் கல்வியகம் அக்குலைனஸ் கல்லூரி இறையியல் பிரிவு சிங்கள் தேவ தர்ம நிகேந்தனய ஆகிய கல்லூரிகளில் விரிவுரை யாளராகப் பணியாற்றிய போது 2011ஆம் ஆண்டில் துணை ஆயர்ப்பணி இவரைத் தேடிவந்தது. சிறுவனாக மகிழ்வோடு பூசைக்கு உதவ வைத்த கொட்டாஞ்சேனைப் பேராலயம் இளைஞனாக மதிப்போடு திருப்பலி ஒப்புக்கொடுக்க வைத்த கொட்டாஞ்சேனைப் பேராலயம் இப்போது ஆயராக மாட்சிமையோடு அமரவைத்த கொட்டாஞ்சேனைப் பேராலயம் தன்மைந்தனை தனக்கே இன்னும் சொந்தமாக்கியுள்ளது

### யாழ்ப்பாணம் வரும்போதெல்லாம் சொந்தவீட்டிற்கு வருகிறோம் என்ற எண்ணம்

துணை ஆயராக திருநிலைப்படுத்தப்பட்ட பின்னர் யாழ். நகருக்கு வருகை தந்த ஆயர் கலாநிதி இம்மனுவேல் பெர்னான்டோ ஆண்டகை "யாழ்ப்பாணம் வரும் போதெல்லாம் சொந்த வீட்டிற்கு வருகிறோம் என்ற எண்ணமே எனக்கு வரும்" என்று பெருமையோடு சொன்ன அவர் " யாழ். மறைமாவட்டத்தில் பணியாற்றி இறந்து போன எனது சகோதரர் ஜோ பெர்னான்டோ அடிகளார் இங்கேயே அடக்கம் செய்யப்பட்டுள்ளார்" என்று உரிமையோடும் சொன்னார். ஆயர் மேதகு கலாநிதி இம்மனுவல் பெர்னான்டோ ஆண்டகை கண்டி அம்பிற்றிய தேசிய குருத்துவக் கல்லூரி அதிபராகப் பணியாற்றியபோது உரோமை ஊர்பானிய பல்கலைக்கழக இறையில் இளங்கலைமானிப் பட்டப்படிப்பை அங்கு யாழ். மறைமாவட்டத்தைச் இராஜேந்திரம் ஸ்ராலின் அடிகளாரும் நானும்; மன்னார் மறை மாவட்டத்தைச் டெஸ்மன் குலாஸ் அடிகளாருடனும் மேற்கொண்ட அனுபவம் மறக்கப்படமுடியாதது. கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர்ப்பணியோடு குரு முதல்வர் பணியையும் ஆற்றிவந்த இவர் கொழும்பு தாய்மறைமாவட்ட துறவிகளின் ஆன்மிகத் தேவைகளைக் கவனித்து வந்தார். 2016ஆம் ஆண்டு முதல் நீர்கொழும்பு பிரதேசத்திற்குப் பொறுப்பான ஆயராகப் பணியாற்றினார்.

### எட்டுப் பிள்ளைகளில் நால்வர் குருத்துவம்

'இம்மனுவல்' என்றால் 'கடவுள் நம்மோடு' என்பது பொருள். இதனை ஆயர் குடும்பத்து எட்டுப் பிள்ளைகளில் நான்கு பேர் அர்ப்பண வாழ்வைத் தெரிந்து நிரூபித்துள்ளார்கள். இவரின் மூத்த சகோதரர் அமரர் ஜோ. பெர்னான்டோ அடிகளார் (1935- 1980) யாழ். மறைமாவட்டக் குருவாகப்பணியாற்றி 1980 ஆம் ஆண்டு நோய் காரணமாக மறைந்தார். அமரர் ஜோ. பெர்னான்டோ அடிகளாரைத் தொடர்ந்து அருட்சகோதரி டிலெக்ரா (அ.கா) அருட்சதோரி ஜோயெல்லா (அ.கா) இருவரும் அப்போஸ்தலிக்க கார்மேல் சபைக் கன்னியராகப் பணியாற்றுகின்றனர்.

### வளர்க மன்னார் மறைமாவட்டம் வாழ்க புதிய ஆயர்

இலங்கையில் உள்ள 12 கத்தோலிக்க மறைமாவட்டங்களில் மன்னார் மறை மாவட்டம் ஒப்பீட்டளவில் அதிக கத்தோலிக்க மக்களைக் கொண்ட ஒரு மறைமாவட்டமாகும். 43 பங்குகளையும் 73 மறைமாவட்டக் குருக்களையும் ஏனைய துறவற சபைகள் உட்பட 106 குருக்களையும் கொண்டதாக மன்னார் மறைமாவட்டம் இன்று விளங்குகிறது. போர்த்துக்கேயர் காலத்தில் வேரூன்றிய கத்தோலிக்க சமயத்தை பாதுகாப்பதற்காக 700இக்கும் மேற்பட்ட கத்தோலிக்க மக்கள் குருதிய சிந்திய மண் மன்னார் மண். மரியன்னையின் உலகைப்பிரசித்தி பெற்ற யாத்திரைத் தலங்களில் ஒன்றாக எண்ணப்பட வேண்டிய யாத்திரைத்தலம் மன்னார் மறைமாவட்டத்தின் இதயமாகக் கருதப்படும் மருதமடு அன்னையின் யாத்திரைத்தலம் என்பதை திருத்தந்தை பிரான்சிஸ்தம் இலங்கைக்கான வருகையின் போது தம் பாதம் பதித்து உலகிற்கு காட்டினார்.

மன்னார் மறைமாவட்ட புதிய ஆயர் கண்டி அம்பிற்றிய தேசிய குருத்துவக் கல்லூரியில் பேராசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றிய காலத்தில் இவரின் நெறிப்படுத்தலினும் கல்வி அறிவிப்பிலும் உருவாக்கப்பட்ட பல குருக்கள் இன்று மன்னார் மறைமாவட்டத்தில் சீரோடும் சிறப்போடும் பணியாற்றுகின்றனர். மன்னார் மறைமாவட்டத்தை இன்னும் வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்ல ஆயரையும் குருக்களையும் இறைமக்களையும் வாழ்த்துகின்றோம். ■

> “ மாவட்டங்களில் மன்னார் மறை மாவட்டம் ஒப்பீட்டளவில் அதிக கத்தோலிக்க மக்களைக் கொண்ட ஒரு மறைமாவட்டமாகும். 43 பங்குகளையும் 73 மறைமாவட்டக் குருக்களையும் ஏனைய துறவற சபைகள் உட்பட 106 குருக்களையும் கொண்டதாக மன்னார் மறைமாவட்டம் இன்று விளங்குகிறது. போர்த்துக்கேயர் காலத்தில் வேரூன்றிய கத்தோலிக்க சமயத்தை பாதுகாப்பதற்காக 700இக்கும் மேற்பட்ட கத்தோலிக்க மக்கள் குருதிய சிந்திய மண் மன்னார் மண். மரியன்னையின் உலகப்பிரசித்தி பெற்ற யாத்திரைத் தலங்களில் ஒன்றாக எண்ணப்பட வேண்டிய யாத்திரைத்தலம் மன்னார் மறை மாவட்டத்தின் இதயமாகக் கருதப்படும் மருதமடு அன்னையின் யாத்திரைத்தலம் என்பதை திருத்தந்தை பிரான்சிஸ் தம் இலங்கைக்கான வருகையின் போது தம் பாதம் பதித்து உலகிற்கு காட்டினார். ”

## வரன் தேடுவோம் வாழ்வில் மாற்றத்தை காண வாருங்கள்

2017 மார்கழி 03 ஞாயிறு மட்டும் பதிவுகள் இலவசம் பதிவு செய்ய தேசிய அடையாள அட்டை. ஜாதகக்குறிப்பின் பிரதி. புகைப்படம் என்பவற்றை வழங்கி பதிய முடியும்.

**நேரம் :- காலை 9.00 - மாலை 4.00 வரை**

**நேரில் வாருங்கள் மாற்றத்தை காணுங்கள்.**

**கௌசிகா திருமண சேவை**
169, பிரதான வீதி, நவாலி கிழக்கு, மானிப்பாய்.
(ஆனைக்கோட்டை மூத்தநயினார் கோயிலிலிருந்து 300 மீ அண்மையில்)
(அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்ட நிறுவனம்.)
077 885 5476

## Obituary Notice

**A.LIYANADO ADAMS**
*(Student, Angel International School)*



Birth: 27.06.2000
Death: 29.11.2017

We express our Heartfelt condolences to the family and friends.

Management, Principal
Staff and Students - Angel International School, Manipay.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**முத்துத்தம்பி மகாதேவன்**

திதி - பூரணை

ஆண்டு இரண்டு கழிந்தது ஐயா இன்று
ஆனாலும் உங்கள் நினைவுகள் அழியவில்லை
அருமையான உமது திருமுகத்தை மீண்டும்
அன்புடன் காண்பதற்கு தவிக்கின்றோம்.

196, காரைநகர் வீதி, யாழ்ப்பாணம். மகன்.

## மரண அறிவித்தல்



**திருமதி சிதம்பரம் கணபதிப்பிள்ளை**

சுழிபுரம் மேற்கு, சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிதம்பரம் கணபதிப்பிள்ளை கடந்த (01.12.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - நாசகம் தம்பதியரின் அன்பு மகளும் சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - கண்ணாத்தை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வடிவேல், இராமநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கருணானந்தன், சண்முகநாதன் (யசி வர்த்தக நிலையம், யாழ்ப்பாணம்), செல்வராணி (உபதபாலதிபர் - சுழிபுரம் மேற்கு), ரதிகுமாரி, பிறேமலதா (கொழும்பு), பாபு (பாபு களஞ்சியம், சுழிபுரம் மேற்கு) ஆகியோரின் பாசமிகு தாயும் சிவப்பிரகாசம், புஸ்பகலா, ஞானமலர், மகேஸ்வரி ஆகியோரின் சிறிய தாயாரும் செல்வராணி (ஓய்வுபெற்ற ஆசிரியை), பரமேஸ்வரி, பாலநாதன் (ஓய்வுநிலை - வடமாகாண தொழிற்துறை திணைக்களம்), பாலசிங்கம், கிருஸ்ணமூர்த்தி (கொழும்பு), தேவந்தினி (பிரதேசசெயலர் - தென்மராட்சி) ஆகியோரின் அன்புமாமியும் மயூரன் (மேல்நீதிமன்றம், மன்னார்), சுஜீபா (கனடா), மகேந்திரன், கிசோர், யசிந்தா (செலான் வங்கி, யாழ்ப்பாணம்), முத்துக்குமரன், சிந்துஜா (செலான் வங்கி, மானிப்பாய்), தனுஜா, திவ்வியா (லண்டன்), திவிசியா (மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்), கிருசா, கீர்த்தனா, பிருந்தன், காவியன், தயாளினி, தவனேசன் (கனடா), தர்சினி, காந்தரூபன் (மின் பொறியியலாளர்), சஞ்சுதன் (செலான் வங்கி, சங்கானை), குகதாசன் (லண்டன்), நிதர்சன் (மாவட்ட தீதிவான் நீதிமன்றம், மல்லாகம்), ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஜெனுத்திறி, ஹர்சா, ஹருணி, ஷாரணி, கர்சின், சகீஸ், கவீன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2017) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

தகவல்: குடும்பத்தினர்.
0212250178

## வாடகைத் தாய் தேவை

30 வயதுக்குக் குறைவான கருணையுள்ளம் கொண்ட பெண் ஒருவர் IVF மூலம் செய்வதற்கு வாடகைத் தாயாகத் தேவை. சன்மானம் உண்டு. இரகசியம் பேணப்படும்.
077 906 1406

## ஆசிரியர்/ அலுவலக உதவியாளர் தேவை

- திருநெல்வேலி "ஸ்மார்ட் கிட்ஸ்" க்கு ஆங்கில ஆசிரியர் தேவை. (முன்னனுபவம் அவசியம்)
- அலுவலக உதவியாளர் (பெண்) தேவை. கணினி அறிவு விரும்பத்தக்கது.

- 077 386 7458

## வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை

11kg மேற்பட்ட பொதிகளுக்கு 1kg க்கான கட்டணம்
UK – 550/-, FRANCE – 700/-, GERMANY – 650/-, SWISS – 750/-, CANADA – 950/-
மற்ற நாடுகளுக்கும் விசேட கட்டணம் உண்டு.
சகல நாடுகளுக்குமான விசா விண்ணப்ப ஏற்பாடுகள் நிபுணத்துவம் வாய்ந்தவர்களுடாக செய்து கொடுக்கப்படும்

**திருமுருகன் கொம் நெற் (பிறைவெட்) லிமிடெட்**
- 216, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். கிளிநொச்சி
- 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, மன்னார்.
- 18, பிரதான வீதி, நெல்லியடி. 0777554528

(8994)

DHL aramex SKYNET

## தொடர்புகொள்ளவும்

ஆவரங்கால் புத்தூரைப் பிறப்பிடமாகக்கொண்ட ஆனைக்கோட்டை காக்கைத்தீவு (சேவல் கட்டு) வசித்த அம்பலம் பத்மராணி (மகளின் பெயர் உஷா) எங்கிருந்தாலும் எங்களுடன் தொடர்புகொள்ளவும். தேடுபவர் சகோதரன் அம்பலம் ஸ்ரீரங்கநாதன். இவரைப்பற்றிய விபரங்கள் அறிந்தவர் இருப்பின் தொடர்புகொள்ளவும்.

**தொடர்பு: நீதன் ஸ்ரீரங்கநாதன்**
**0041799321272**

## 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



உயிர்ப்பு 15.01.1944
சங்கமம் 10.11.2001

**அமரர் கந்தையா பன்னிருகரம்**
(முன்னாள் உரிமையாளர் - நியூ கௌரி மிதிவண்டி வாணிபம் - நெல்லியடி)
திதி : 03.12.2017

*ஊர் போற்ற வாழ்ந்தீர்கள்*
*உறவுகள் மகிழ்ந்திட நடந்தீர்கள்*
*குடும்பம் உயர்ந்திட உழைத்தீர்கள்*
*கண்ணீரில் நனையவிட்டு சென்றீர்கள்*

சாந்திபவனம்
கொற்றாவத்தை, கரவெட்டி.
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**திருமதி மகேஸ்வரி நாராயணன்**



யாழ்ப்பாணம் இல 79, றக்கா றோட், சுண்டுக்குளியை வசிப்பிடமாக கொண்ட திருமதி மகேஸ்வரி நாராயணன் (01.12.2017) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாராயணின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இரத்தினம் மற்றும் அன்னம்மா காலஞ்சென்ற சின்னத்துரை மற்றும் நேசமலர், சித்திரவேல், தேவராசா, கணேஸ், சந்திரன் ஆகியோரின் அன்புச்சகோதரியும் கௌஸ்துவமணி (பெறாமகன், ஓய்வுபெற்ற கணக்காளர்), ஸ்ரீ (லண்டன்), ருக்மணி ஆகியோரின் அன்புத்தாயாரும் அஸ்வத்தம்மா, பஞ்சலிங்கம் (கிராம உத்தியோகத்தர், J/101 நீராவியடி பிரதேச செயலகம், நல்லூர்), சுமதி (லண்டன்) ஆகியோரின் அன்புமாமியும் ராகுல் (லண்டன்), ரகுராம் (லண்டன்), நிவேதிகா ஆகியோரின் அன்புப்பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதுவுடல் தகனக்கிரியைக்காக சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

021 221 5158
தகவல்: குடும்பத்தினர்.

## கணபதி ஹோமம்

சாவகச்சேரி, டிசெ. 3
மீசாலை வடக்கு தட்டான்குளம் திருநீலகண்டப் பிள்ளையார் ஆலய திருக்கார்த்திகைப் பூரணை தின மஹா கணபதி ஹோமம் இன்று காலை 8 மணி தொடக்கம் இடம்பெறும். நாளை விநாயகர் விரதம் ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்பட்டது. (4-9)

## பரிசில் வழங்கல்

யாழ்ப்பாணம், டிசெ. 3
பன்னாட்டு மாற்றுத்திறனாளிகள் தினத்தை முன்னிட்டு கருவி மாற்றுத்திறனாளிகள் சமூக வள நிலையம் நடத்திய போட்டி முடிவுகளுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று இடம்பெறும். நல்லூர் வடக்கு சட்டநாதர் வீதியிலுள்ள இளங்கலைஞர் மன்றத்தில் முற்பகல் 9.30 மணிக்கு இது இடம்பெறும். (4)

## விற்பனைக்குண்டு

நல்ல நிலையில் உள்ள **யப்பான்** Panasonic குளிர் சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு.
**தொடர்பு . 077 978 9752**

## வேலை வாய்ப்பு

கொக்குவில் சந்தியில் இயங்கும் CD விற்பனை நிலையத்துக்கு ஆண்/பெண் விற்பனையாளர் தேவை.
077 433 7343

## தேவை

பூநகரியிலுள்ள வயதான நடக்கக்கூடிய தம்பதியினரைப் பொறுமையாகப் பார்க்கக்கூடிய சமையலும் தெரிந்த பெண் தேவை. திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.
**தொடர்பு - 077 990 2068**

## வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள எமது கால்நடை உற்பத்தியை விற்பனை செய்ய ஆண் வேலை ஆள் தேவை. Light Vichele (லைற் வேக்கில்) லைசென்ஸ் உள்ளவர்கள் மட்டும்.
**தொடர்பு . 077 8511265**

## விற்பனைக்கு

உயர் இன மறி ஆடுகள் மற்றும் UK இருந்து கொண்டு வரப்பட்ட Jigsaw Sanders, சிறிய கமராக்கள், Voice recorders, இறைச்சி அரைக்கும் இயந்திரம், Heater என்பன விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு . 076 615 1837**

## மணமகள் தேவை

மீனாட்சி சுந்தரரேஸ்வரர் திருமணசேவை கொழும்பைத் தலைமையகமாகவும் யாழ்ப்பாணம் வெளிநாடுகளில் தொடர்புகளையும் கொண்டது. யாழ். இந்து வெள்ளாளர் 1986 ஆஸ்திரேலியா மிருகஷீரிடம் 1 ஆம் பாதம் இலக்கணத்தில் செவ்வாய்க் கிரகபாவம் 70 அழகிய மணமகளை எதிர்பார்க்கின்றோம்.
011 236 4533, 077 631 3991
57, ஸ்ரீபோதிருக்காராம வீதி, வெள்ளவத்தை.

## வருட இறுதி விற்றுத் தீர்த்தல்

அனைத்து தளபாடங்களும்
**நம்பமுடியாத விலைக்கழிவு**
**மங்களா காட்சியறை**
மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.
No, 536, K.K.S. Road, Jaffna
T.P. : 077 728 6069, 021 222 8367

## IPS

இலவச ஆங்கில, கணினி வகுப்புக்கள்
பிரிவு VIII
- ★ DIPLOMA IN SPOKEN ENGLISH
- ★ DIPLOMA IN INFORMATION TECHNOLOGY
- ★ காலம்: 3M ★ பெறுமதிமிக்க சான்றிதழ்

ஆரம்பம்: 9,10 - 12 - 2017

IPS Ramanathan Road, Thirunelvely.
Hotline : 076 685 2529

## Luxury Apartment வாடகைக்கு

நாள், கிழமை, மாத அடிப்படையில்
கொழும்பு 3, 4, 6, மற்றும் தெஹிவளையில்



0773 540 632 / 0774 440 586
0776 332 580 / 0779 919 388
011 2363991

L/Lion

# காவலூரில் ஆடுகளைத் திருடி காரில் கடத்திய ஒருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 3

ஊர்காவற்றுறையில் காரில் ஆடுகளைத் திருடி பொலிஸாரைக் கண்டு தப்பியோடியவர்களில் அராலியைச் சேர்ந்த ஒருவரைக் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் அராலி வடக்கைச் சேர்ந்த அஸாத் மொகமட் தாரிக் என்றழைக்கப்படும் நபரே கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

2 வாரங்களுக்கு முன்னர் தென்னிலங்கையைச் சேர்ந்தவர்கள் சொகுசு காரில் சென்று 8 ஆடுகளைத் திருடி காருக்குள் கட்டிப்போட்டுக் கொண்டு சென்றனர். அதனைக் கண்ட கிராமத்தவர்கள் ஊர்காவற்றைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

அதன்படி பொலிஸார் நடவடிக்கையில் இறங்கி குறித்த காரைப் பின்தொடர்ந்து சென்றபோது திருடர்கள் காரைக் கைவிட்டுத் தப்பி ஓடிவிட்டனர். காரை மீட்ட பொலிஸார் அதற்குள்ளிருந்து ஆடுகளை மீட்டிருந்தனர்.

அது தொடர்பில் விசாரணை மேற்கொண்ட பொலிஸார் ஆடுகளைத் திருடிய குற்றச்சாட்டில் அவரைக் கைது செய்தனர். அவர் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4-8)

# கூட்டுறவுப் பெரியார் வீரசிங்கத்தின் 53ஆவது நினைவு நிகழ்வு

யாழ்ப்பாணம், டிசெ. 3

கூட்டுறவுப் பெரியார் வி.வீரசிங்கத்தின் 53ஆவது நினைவுதின நிகழ்வு கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் 5ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மு.ப 10 மணிக்கு இடம்பெறும்.

யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபைத் தலைவர் தி. சுந்தரலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை கூட்டுறவு அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் கலந்துகொள்வார் என்று தெரிவிக்கப்பட்டது. (4)

# சிறப்பு வழக்குகளை விசாரிக்க 3 நீதிமன்றங்கள் ஜனவரியில்

## நீதி அமைச்சர் தலதா அத்துகோரல தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 3

சிறப்பு வழக்குகளை துரிதமாக விசாரணைசெய்யவென 3 நீதிபதிகள் கொண்டதாக 3 நீதிமன்றங்கள் அமைக்கப்படவுள்ளன. எதிர்வரும் ஜனவரி மாதம் தொடக்கம் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நீதிமன்ற மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு விவகார அமைச்சர் தலதா அத்துகோரல தெரிவித்தார்.

மாத்தளையில் 400 மில்லியன் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள புதிய நீதிமன்ற கட்டடத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும்போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

மகளிர் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பாக 19 ஆயிரம் முறைப்பாட்டு ஆவணங்கள் சட்டமா அதிபர் காரியாலயத்தில் கிடப்பில் உள்ளன. அவற்றை விசாரிப்பதற்குத் தனியான பிரிவொன்றை ஆரம்பிக்கவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் நீதி அமைச்சின் செயலாளர் பத்மசிறி ஜயமான்ன, மேல் நீதிமன்ற நீதியரசர் சரோஜினி குசலா வீர்வர்தன, நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சனி அலுவிகார,



விவசாய ராஜாங்க அமைச்சர் வசந்த அலுவிகார உள்ளிட்ட தரப்பினர் கலந்து கொண்டனர். (4)

### ஜி.சி.ஈ. சாதாரண தர மாணவர்கள்

# பரீட்சை அனுமதிப்பத்திர பிரச்சினையை 1911 என்ற இலக்கத்துக்கு அறிவிக்கலாம்

கொழும்பு, டிசெ. 3

ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் தொடர்பில் பிரச்சினைகள் ஏதாவது ஏற்பட்டால் அவை தொடர்பில் அறிவிப்பதற்காக 1911 என்ற தொலைபேசி இலக்கம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகள் திணைக்களம் இந்த இலக்கத்தை அறிவித்துள்ளது.

அதன்படி 1911 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி முறைப்பாடுகளைத் தெரிவிக்க முடியும். பாடசாலை பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் பாடசாலை அதிபருக்கும், தனியாருக்கான அனுமதிப் பத்திரங்கள் பரீட்சார்த்திகளின் முகவரிக்கும் அனுப்பப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் பி. சனத் பூஜித நேற்றுத் தெரிவித்தார்.

4 லட்சத்து 29 ஆயிரத்து 493 பாடசாலைப் பரீட்சார்த்திகளும், 2 லட்சத்து 59 ஆயிரத்து 80 தனியார் பரீட்சார்த்திகளும் இந்த முறை சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர்.

இதன்பிரகாரம் 6 லட்சத்து 88 ஆயிரத்து 573 பேர் இந்தமுறை சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ளனர். ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை எதிர்வரும் 12ஆம் திகதி தொடக்கம் 21ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. (4)

## சுரேஷ்...

கடந்த மாதம் 12ஆம் திகதி யாழ்ப்பாணம் பொது நூலகத்தில் நடைபெற்ற தமிழ் மக்கள் பேரவையின் கூட்டத்தின் பின்னர், செய்தியாளர்களை ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரனும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில் எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் இரு கட்சிகளும் ஒன்றிணைந்து சிவில் அமைப்புக்களையும் இணைத்துப் போட்டியிடவுள்ளதாக அறிவித்தனர். இந்தப் புதிய கூட்டுக்கு தமிழ் மக்கள் பேரவை ஆதரவு வழங்கும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் அந்தப் பேரவையின் இணைத் தலைவர்களான முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் வசந்தராஜா ஆகியோர் அதற்கு பகிரங்கமாக எதிர்ப்பு வெளியிட்டிருந்தனர்.

இருப்பினும், ஈ.பி.ஆர்.எல்.எவ்., அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கூட்டுக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன. பொதுச் சின்னத்தில் போட்டியிடுவதற்கு இருகட்சிகளும் இணங்கியிருந்தன.

இதற்கிடையே ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இந்தியாவுக்கு அவசரமாகச் சென்று வந்த பின்னர், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்திலேயே போட்டியிடவேண்டும் என்பதை எந்தவொரு விட்டுக்கொடுப்புமின்றி வலியுறுத்தி வந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் அதற்கு உடன்பட மறுத்து விட்டது. வேண்டுமானால் தமது கட்சியின் ஈருருளி (சைக்கிள்) சின்னத்தில் போட்டியிடலாம் என்றும் இல்லாவிடின் ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் சின்னத்தில் போட்டியிடலாம் என்றும் தெரிவித்துள்ளது.

ஈ.பி.ஆர்.எல்.எவ். சின்னத்தில் போட்டியிடுவதற்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் விரும்பவில்லை என்பதுடன், தமிழ் அரசுக் கட்சியின் ஒழுக்காற்று நடவடிக்கை உட்படுத்தப்பட்ட சிலரும் அதனை விரும்பவில்லை. இதேவேளை, காங்கிரஸின் சின்னத்தில் போட்டியிடுவதை ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் முக்கிய மையக் குழு உறுப்பினர்கள் விரும்பவில்லை.

இந்த நெருக்கடியான நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழுவும் இந்தக் கூட்டுக்கு பொதுச் சின்னத்தை வழங்க முடியாது என்று தெரிவித்துவிட்டது.

சின்னச் சிக்கலால், இரு கட்சிகளின் கூட்டும் உடைந்து பிரிந்துள்ளது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தமது கட்சியின் கொள்கையைக் கைவிடமுடியாது என்றும் அதனால், ஆனந்தசங்கரியைச் செயலராகக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியில் இணைய முடியாது எனவும் தெட்டத் தெளிவாகத் தெரிவித்துவிட்டது.

ஆனாலும், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து போட்டியிடுவது உறுதியாகியுள்ளது. இந்த இரண்டு கட்சிகளின் தலைவர்களும், வடக்கு மாகாண சபையின் அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், மன்னார் மாவட்டத்தில் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்த வி.எஸ். சிவகரன் ஆகியோர் கிளிநொச்சியில் நேற்றுக் கலந்துரையாடல் நடத்தியுள்ளனர். விரைவில் இந்தக் கூட்டு இடையேயான ஒப்பந்தம் கைச்சாத்தாகக் கூடும் என்று தெரியவருகின்றது. (5,101)

## 50 ஆயிரம்...

பந்தம் ஒன்றுக்கு மேற்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு வழங்க தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க அமைச்சு தீர்மானித்துள்ளதாகவும் அறிய முடிகின்றது.

தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க அமைச்சினால் வடக்கு - கிழக்கில் 50 ஆயிரம் கல் வீடுகள் நிர்மாணிக்கப்பட வுள்ளன. இந்த வீடுகளை நிர்மாணிப் பதற்கான பணத்தை ஒப்பந்தங்களைப் பொறுப்பெடுக்கும் நிறுவ னங்களே கொண்டு வரவும் வேண்டும். வீடுகளை நிர்மாணிப்பதற் கான கேள்வி கோரல் அமைச்சினால் ஒக்ரோபர் மாதம் வெளியிடப்பட்டிருந்தது. சீனா மற்றும் இந்தியாவைச் சேர்ந்த நிறுவனங்கள் உள்ளிட்ட 42 நிறுவனங்கள் கேள்வி கோரல் விண்ணப்பப் படிவங்களை பிணைத் தொகையைச் செலுத்திப் பெற்றுக் கொண்டிருந்தன.

கேள்வி கோரல் கடந்த நவம்பர் மாதம் 13ஆம் திகதி திறக்கப்படும் என்று முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. இருப்பினும் அன்றைய தினம் கேள்வி கோரல் திறக்கப்படவில்லை. கால நீடிப்பு வழங்கப்பட்டது. கேள்வி கோரலில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட சில நிபந்தனைகளில் தளர்வும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்த நிலையில் நாளை திங்கட் கிழமை கேள்வி கோரல் ஒப்பந்தத்தை திறக்க தேசிய ஒருமைப்பாடு நல்லிணக்க அமைச்சு தீர்மானித்துள்ளது. மேலும் இந்த ஒப்பந்தத்தை ஒரே ஒப்பந்தகாரருக்கு வழங்காமல், பல ஒப்பந்தகார்களுக்கு வழங்குவது தொடர்பிலும் அமைச்சு ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (5)

## உயிரிழப்பு...

694 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன. 25 ஆயிரத்து 117 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன. 66 நலன்புரி நிலையங்களில் ஆயிரத்து 421 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 435 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று இடர்முகாமைத்துவ மைய நிலையம் தெரிவித்துள்ளது. (5)

## மீலாத்...

யாழ்ப்பாணம் ஒஸ்மானியாக் கல்லூரியில் இந்தத் தேசிய நிகழ்வு இடம்பெறவுள்ளது. அதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன. ஏற்பாடுகளுக்கென முஸ்லிம் விவகார அமைச்சு 14 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளது. யாழ்ப்பாண மாவட்டச் செயலர் பாடசாலைச் சீரமைப்புக்கென 4 மில்லியன் ரூபாவும், மைதான மின்விளக்குகள் சீரமைப்புக்கென 1.1 மில்லியன் ரூபாவும் ஒதுக்கியுள்ளார். வடக்கு மாகாண சபை உறுப்பினர் அஸ்மின் 3 மில்லியன் ரூபா ஒதுக்கியுள்ளார் என்று மீலாத் விழா வழிநடத்தல் குழுவின் பொறுப்பாளர் எம்.எம். ஜான்சிங் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், முஸ்லிம் அமைச்சர்கள் உள்ளிட்ட அமைச்சர்களும், மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் வடக்கு மாகாண ஆளுநர், வடக்கு மாகாண முதலமைச்சர் உள்ளிட்ட பலரும் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (4,23)

## யாழில்...

னார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

வடக்கு மாகாணத்தில் வன்னிப் பிராந்தியத்திலுள்ள மாவட்டங்களின் பங்கீடுகள் தொடர்பில் இணக்கப்பாடு காணப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டம் தொடர்பில் மாத்திரமே இன்னும் பேச்சு முன்னெடுக்க வேண்டியுள்ளது. மற்றொரு பங்காளிக் கட்சியான ரெலோ, தமிழ் அரசுக் கட்சியுடன் பேசி இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாக அறியமுடிகின்றது.

நாம், யாழ்ப்பாண மாவட்டத்தில் மூன்று உள்ளூராட்சி மன்றங்களில் தவிசாளர் பதவியைக் கோரவுள்ளோம். மானிப்பாய், சங்கானை, வலி.தெற்கு ஆகிய உள்ளூராட்சி மன்றங்களின் தவிசாளர் பதவியையே பெரும்பாலும் கோருவோம். இருப்பினும் சிலவேளைகளில் இந்தச் சபைகளில் மாற்றம் வரலாம். ஆனால் நாம் கோரும் எண்ணிக்கையில் மாற்றம் வராது - என்றார். (5,101)

## தேர்தல்...

2011ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் கூடிய விருப்பு வாக்குகளைப் பெறுபவர்கள் தவிசாளர்களாக நியமிக்கப்படுவர் என்று தேர்தலுக்கு முன்னரே அறிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது வட்டாரம், விகிதாசாரம் என்று இரண்டும் கலந்த கலப்பு முறையிலேயே தேர்தல் நடைபெறவுள்ளது. இதனால் கடந்த தடவையைப் போன்று தவிசாளரை நியமிக்க முடியாத நிலமை ஏற்பட்டுள்ளது.

தேர்தல்முடிந்த பின்னரே, ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தவிசாளர்களின் பெயர்களை வெளியிடுவது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளதாக அறிய முடிகின்றது. (5)

## கிளிநொச்சியில்...

யாழ்ப்பாணம், டிசெ. 3

கிளிநொச்சி மாவட்டத்தில் நேற்று மாலை சுமார் 3 மணி நேரம் கடும் மழை பொழிந்தது. 75 மில்லி மீற்றருக்கும் அதிகமானதாக மழைவீழ்ச்சி பதிவானது. கனகாம்பிகைக் குளம் வான்பாயத் தொடங்கியுள்ளது என்று மாவட்ட நீர்ப்பாசனப் பொறியியலாளர் சுதாகரன் தெரிவித்தார்.

மழை காரணாக வீதிகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. பொதுமக்கள் நெருக்கடியை எதிர்கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

"கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த வருடத்தில் கிடைத்த மிக அதிக மழை வீழ்ச்சி இது. இதனால் குளங்களுக்குத் தண்ணீர் வரத்து அதிகரித்துள்ளது. கனகாம்பிகைக் குளம் அதன் கொள்ளவை விஞ்சி வான்பாய்கின்றது. அதே நேரம் 12 அடி கொள்ளளவுடைய பிரமந்தனாறுக் குளம் 11.2 அடியை எட்டிவிட்டது. அதேபோன்று 8.9 அடி கொள்ளளவுடைய குடமுருட்டிக் குளம் 7.8 அடியைத் தொட்டுவிட்டது.

இதேபோன்று ஏனைய குளங்களுக்கும் தண்ணீர் வேகமாக வந்துகொண்டிருக்கிறது. சுமார் 10 அடி அளவுடைய கரியாலை நாகபடுவான் குளத்தில் மட்டும் தற்போது 2.6 அடிக்கு தண்ணீர் நிரம்பியுள்ளது" என்று பொறியியலாளர் தெரிவித்தார். (4-101)

# விராட் கோக்லி மீண்டும் அசத்தலான சதம்

இலங்கைக்கு எதிராக நேற்று ஆரம்பமான டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணியின் தலைவர் கோக்லி, ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் முரளி விஜய் இருவரும் சதம் விளாசினர். இதையடுத்து முதல் நாளிலேயே மிகவும் வலுப்பெற்றுள்ளது இந்திய அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது இந்திய அணி. ஆரம்ப வீரர்களாக முரளி விஜய் மற்றும் தவான். 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் தவான். புஜாராவையும் 23 ஓட்டங்களுடன் வீழ்த்தினார் கமகே. நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்திக் கொண்டிருந்த முரளி விஜய்யுடன் இணைந்தார் கோக்லி. ஆரம்பம் முதல் கோக்லி அடித்தாடினார். ஒருநாள் ஆட்டங்களின் பாணியில் அவரது ஆட்டம் இருந்தது.

இருவரும் அரைச்சதம் கடந்தனர். 52 பந்துகளில் கோக்லியின் அரைச்சதம் பதிவானது. சதம் கடந்தார் முரளி விஜய். கோக்லியும் சதம் கடந்தார். இணைப்பாட்டம் நீண்டு நிலைபெற்றது. இணைப்பாட்டமாக 283 ஓட்டங்கள் பகிரப்பட்ட பின்னர் 155 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் முரளி விஜய். ரகானே ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார். நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 371 ஓட்டங்களைப் பெற்றுள்ளது இந்திய அணி. கோக்லி 156 ஓட்டங்களுடன் களத்தில் உள்ளார். (ம)




## கோக்லி 5,000

பன்னாட்டு டெஸ்ட் அரங்கில் 5 ஆயிரம் ஓட்டங்களை எட்டினார் இந்திய அணியின் தலைவர் கோக்லி.

இலங்கை -இந்திய அணிகளுக்கு இடையிலான மூன்றாவதும் இறுதியானதுமான டெஸ்ட் ஆட்டம் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்றைய முதல் நாள் ஆட்டத்தின் போது கோக்லி 25 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் பன்னாட்டு டெஸ்ட் அரங்கில் 5 ஆயிரம் ஓட்டங்கள் என்ற மைல் கல்லைத் தொட்டார்.

5 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த 11ஆவது இந்திய வீரராக கோக்லி தன்னை அடையாளப்படுத்தினார். விரைவாக 5 ஆயிரம் ஓட்டங்களைக் கடந்த வரிசையில் 4ஆவது இடத்தில் உள்ளார் கோக்லி. கவாஸ்கர் 95 இன்னிங்ஸிலும், சேவாக் 99 இன்னிங்ஸிலும், சச்சின் 103 இன்னிங்ஸிலும் கடந்து முதல் மூன்று இடங்களிலும் உள்ளனர். (ம)




## கண்ணீர் அஞ்சலி



அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவு சங்கப்பணியாளர் **திருமதி அ.சந்திரகலா** அவர்களின் அன்புத் தாயார்

### தேவி இரத்தினம்

அவர்களின் மறைவால் துயரடைந்திருக்கும் அன்னரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கூட்டுறவாளர் வீதி, அளவெட்டி.**

**அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்க ஊழியர் நலன்புரிச்சங்கம்.**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி சின்னத்தங்கம் விஸ்வநாதன்



கொக்கன் கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னத்தங்கம் விஸ்வநாதன் 01.12.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - சேதுப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னாச்சிப் பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற கந்தையா விஸ்வநாதனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை, கதிரேசம்பிள்ளை, சின்னத்தம்பி, பார்வதிப்பிள்ளை, கிருஷ்ணராசா ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஷ்பகாந்தி, காலஞ்சென்ற சாரதாதேவி மற்றும் சரஸ்வதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், மேகலா, காலஞ்சென்ற மேகரண் மற்றும் கருணாகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், பாலசிங்கம் , பார்த்தீபன் ஆகியோரின் அன்பு மாமியும், யாகவி, லக்ஷன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (04.12.2017) திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**இ.சரஸ்வதி (ராணி)**

**0770785658**



### திருமதி முத்துலட்சுமி தியாகராசா

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி முத்துலட்சுமி தியாகராசா 02.12.2017 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா - தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான குமாரு - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மருமகளும் தியாகராசாவின் அன்பு மனைவியும் தாரணி(அபிவிருத்தி உத்தியோகத்தர், வலயக்கல்வி அலுவலகம் -வலிகாமம்), தர்சினி(கொழும்பு), தர்மினி(ஆசிரியர் - யா/இணுவில் மத்திய கல்லூரி), தர்மிளா(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மணிமாறன்(மாறன் வீடியோ - இணுவில்), கண்ணதாசன்(ANNA INTERNATIONAL Pvt Ltd, Colombo), பிரதீபன் (விநாயகர் களஞ்சியம் - கொக்குவில்), கமலராஜீவ்(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பாமிலன், மதுமிதா, இலக்கியா, பிரணவன், ராகவி, ஜஸ்மிகா, ஜஸ்வின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இணுவில் மேற்கு, இணுவில்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சாத்தன் சுப்பிரமணியம்



வாழ்வில் எமக்காக யாவையும்
அர்ப்பணித்து வாழ்வாங்கு
வாழவைத்த அன்புத் தெய்வமே!
வருடங்கள் நான்கு ஓடி
மறைந்தாலும் எங்கள் உயிர்
உள்ள வரை நாங்கள் உங்களை
மறவோம் உங்கள் ஆத்மா
சாந்தியடைய இறைவனை
பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்.

**கைதடி தெற்கு, கைதடி.**

மலர்வு 1955.09.15 — உதிர்வு 2013.12.03

## மரண அறிவித்தல்

### இராமு குமாரசாமி

(முன்னாள் அரச மரக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர்)



கோப்பாய் மத்தி பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த இராமு குமாரசாமி 01.12.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமு - சின்னப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கம்மா தம்பதியரின் மருமகனும்,சற்குணதேவியின் அன்புக் கணவரும், சதீஸ் சந்திரன் (தாதிய உத்தியோகத்தர் - பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை), கிருஸ்ணபவன் (ஊழியர் பிராந்திய சுகாதாரப்பணிமனை - வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கேஜிந்தி, லிகிர்தா ஆகியோரின் மாமனும், லோகீஜன், பவிஷனா, பிரனிசா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கந்தன்காடு இந்து மயானத்துக்கு தகனக்கிரிகைக்காக எடுத்துச்செல்லப்படும். இ ந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கோப்பாய் மத்தி.**

தகவல்: **குடும்பத்தினர்.**

077 691 3279/077 991 5977

## 31 ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

தோற்றம் 02 . 04 . 1953



மறைவு 04 . 11 . 2017

### திருமதி சரசரத்தினம் (கிளிரீச்சர்) புலேந்திரலிங்கம்

(ஓய்வு பெற்ற கணித ஆசிரியரும், உப அதிபரும்)

கடந்த 04.11.2017 இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (04.12.2017) திங்கட்கிழமை காலை 5.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற்று அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக் கரையில் கரைக்கப்படும் தொடர்ந்து அன்றைய தினம் வீட்டுக்கிருத்தியம் நண்பகல் 12.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தயவு கூர்ந்து இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.

**கம்பர் மலை, வல்வெட்டித்துறை.**

**குடும்பத்தினர்.**


# வடமராட்சி கல்வி வலய வர்ண இரவு நிகழ்வுகள்

கரணவாய், டிசெ. 3
வடமராட்சி கல்வி வலயத்தால் நடத்தப்பட்ட வர்ண இரவு நிகழ்வில் 300 மேற்பட்ட மாகாணமட்ட, தேசியமட்டச் சாதனையாளர்கள் நேற்றுமுன்தினம் மதிப்புறுத்தப்பட்டனர்.
வடமராட்சி கல்வி வலயம் நடத்திய 8ஆவது வர்ண இரவு நிகழ்வு நேற்றுமுன்தினம் நெல்லியடி மத்திய கல்லூரி கலையரங்கில் இடம்பெற்றது.
மாகாணமட்ட தடகளப் போட்டியிலும் பெருவிளையாட்டுக்களிலும் முதல் மூன்று இடங்களைப்பெற்ற வீர வீராங்கனைகள் மதிப்புறுத்தப்பட்டனர். தேசிய மட்டப் போட்டிகளில் 16 வயதுப்பிரிவு ஈட்டி எறிதலில் வெண்கலப்பதக்கம் வென்ற ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.மிதுன்ராஜ், 18 வயது தட்டெறிதலில் வெண்கலப்பதக்கம் வென்ற அதே கல்லூரியைச் சேர்ந்த ரி. அபிசாந், 20 வயதுப்பிரிவு தட்டெறிதலில் வெள்ளிப்பதக்கம் பெற்ற எஸ்.பிரகாஸ்ராஜ், 16 வயதுப் பிரிவு தட்டெறிதலில் வெள்ளிப்பதக்கம் பெற்ற இமையாணன் அதக வித்தியாலயத்தைச் சேர்ந்த மு.திவான்சயன் மற்றும் 14 வயதுப் பிரிவினருக்கான நீளம் பாய்தலில் தங்கம் வென்ற உடுப்பிட்டி அ.மிசன் கல்லூரியைச் சேர்ந்த எஸ்.செந்தீஸ், தேசிய மட்டப் பெருவிளையாட்டுக்களில் பளுதூக்கலில் வெண்கலப்பதக்கம் பெற்ற நெல்லியடி மத்திய கல்லூரியைச் சேர்ந்த பி.நிதுக்ஷா, வெள்ளிப்பதக்கம் பெற்ற பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த சி.சுவர்ணசீலி, குத்துச் சண்டையில் வெள்ளிப்பதக்கம் பெற்ற ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த பி.விஸ்ணு ஆகியோரும் கடற்கரை கரப்பந்தில் வெண்கலம் வென்ற தொண்டைமனாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயமும், 20 வயதுப்பிரிவு பெண்களுக்கான கபடியில் தங்கம் வென்ற நெல்லியடி மத்திய கல்லூனி அணியினரும் மதிப்புறுத்தப்பட்டனர். வீரர், வீராங்கனைகளின் பயிற்சியாளர்களும் மதிப்புறுத்தப்பட்டனர்.
வலயக் கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன், சிறப்பு விருந்தினராக மேலதிக மாகாணக்கல்விப்பணிப்பாளர் எஸ்.பிறேமகாந்தன், மதிப்புறு விருந்தினராக வெஜிலான்ட் ஏற்றுமதி நிறுவன முகாமைத்துப் பணிப்பாளர் ரி.ஐங்கரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-108)





# நியூசிலாந்தின் ஆதிக்கம் மிகையாக மேலோங்கல்



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தில், நியூசிலாந்து அணி மிகையாக ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்துள்ளது.
இந்த இரண்டு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் வெலிங்டனில் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் 134 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. அதிகபட்சமாக பவல் 42 ஓட்டங்களையும், பிரீத்வைட் 24 ஓட்டங்களையும், டவ்ரிச் 18 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் வாக்நெர் 7 இலக்குகளையும், போல்ட் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.
நியூசிலாந்துக்கு ஆரம்ப வீரர்களாக ராவல் மற்றும் லாதம். இலக்குச் சரிவில்லாமல் 50 ஓட்டங்களைத் தொட்டது இணைப்பாட்டம். 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் லாதம். அணித்தலைவர் வில்லியம்சன் ஓர் ஓட்டத்துடன் பவிலியன் திரும்பினார். நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 85 ஓட்டங்களைப் பெற்றிருந்தது நியூசிலாந்து. ராவல் 29 ஓட்டங்களுடனும், ரெய்லர் 12 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காக நேற்றுக் களமிறங்கினர். 42 ஓட்டங்களுடன் ராவல் ஆட்டமிழந்தார். ரெய்லர், நிக்கொல்ஸ் இருவரும் அரைச்சதம் கடந்தனர். 93 ஓட்டங்களுடன் ரெய்லரை வீழ்த்தினார் றோச். நிக்கொல்ஸ் 67 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். கிரான்ட்கோம் மத்திய வரிசையில் சதம் கடந்தார். அவர் 105 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க நாள் முடிவில் நியூ சிலாந்து அணி 9 இலக்குகளை இழந்து 447 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. (ம)

## உலகக்கிண்ண கால்பந்துத் தொடரின் அணிகள் அறிவிப்பு

ரஷ்யாவில் அடுத்த வருடம் நடைபெறவுள்ள கால்பந்தாட்ட உலகக்கிண்ணத் தொடரில் கலந்துகொள்ளவுள்ள அணிகளும், அந்த அணிகளின் பிரிவுகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. இதன்படி எட்டு பிரிவுகளில் தலா 4 அணிகள் வீதம் மொத்தமாக 32 அணிகள் தொடரில் விளையாடவுள்ளன.
பிரிவு 'ஏ': ரஷ்யா, உருகுவே, எகிப்து, சவூதி அரேபியா
பிரிவு 'பி': போர்ச்சுகல், ஸ்பெய்ன், ஈரான், மொராக்கோ
பிரிவு 'சி': பிரான்ஸ், பெரு, டென்மார்க், ஆஸ்திரேலியா
பிரிவு 'டி': ஆர்ஜென்ரீனா, குரோசியா, ஐஸ்லாந்து, நைஜீரியா
பிரிவு 'இ': பிரேசில், சுவிட்சர்லாந்து, கோஸ்டா ரிக்கா, சேர்பியா
பிரிவு 'எப்': ஜேர்மனி, மெக்சிகோ, சுவீடன், தென் கொரியா
பிரிவு 'ஜி': பெல்ஜியம், இங்கிலாந்து, துனிசியா, பனாமா
பிரிவு 'எச்': போலந்து, கொலம்பியா, செனகல், ஜப்பான். (ம)

FIFA WORLD CUP
RUSSIA 2018



## வருகிறார் ராமோஸ்

காயம் காரணமாக கடந்த இரண்டு வாரங்களாக ஓய்வில் இருந்துவந்த ரியல் மட்ரிட் அணியின் தலைவர் ராமோஸ், காயத்தில் இருந்து மீண்டு தற்போது மீண்டும் களமிறங்கவுள்ளார்.
கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஆட்டமொன்றில் பந்தை கடத்திச் சென்றபோது எதிரணி வீரருடன் மோதுண்டு மூக்கில் காயமடைந்தார் ராமோஸ். அதன் பின்னர் சுமார் இரண்டு வாரங்கள் ஓய்வில் இருந்த அவர் தற்போது அணியுடன் மீண்டும் இணைந்துள்ளார். (ம)

## பேல் விலகல்

காயம் காரணமாக ரியல் மட்ரிட் அணியில் இருந்து விலகினார் முன்னணி வீரர் பேல்.
ஸ்பானியக் கால்பந்தாட்டக் கழகங்களில் முக்கியமானது ரியல் மட்ரிட். இந்த அணியில் முன்னணி வீரராக பேல் உள்ளார். காயம் காரணமாக கடந்த சில நாள்களாக அவதிப்பட்டு வந்த இவர் தற்போது அணியில் இருந்து விலகியுள்ளார். ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடரில் மட்ரிட் அடுத்தடுத்து சில ஆட்டங்களை எதிர்கொள்ளவுள்ள நிலையில் பேலின் விலகல் அந்த அணிக்குப் பின்னடைவு என்று கருதப்படுகிறது. (ம)



## டீ,கோப்பி மெசின்




தமிழில் தொடர்பு கொள்ள
077 391 8870
WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitya,Colombo - 03



**Beard Styles for Men**
லண்டனில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட தாடி வளருவதற்கான இயற்கை எண்ணெய் விற்பனைக்கு உள்ளது
Beard Oil_Original UK
077 4581078 / 070 3305500

**College of IT Computer Education**
**"Your success is your hardwork"**
விசேட ஆங்கில வகுப்புக்கள் ஆரம்பம்
- School Syllabus (From Grade 1 - Grade 12)
- Kids Vacation Programe (Grade 1-5)
- IELTS Traning
- Diploma in English
- O/L & A/L English Literature
- HND in English Literature

10.12.2017 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்.
For More Details
Kaali Kovil Road, Kondavil- West, Kondavil.
(Next to Niru tution centre)
T.P: 076 639 9009

**ஹோட்டல், கேட்டரிங் உரிமையாளர்களே கவலை வேண்டாம் !** உங்கள் வேலைகளை விரைவாக செய்திட பல மெசின்கள்




தமிழில் தொடர்பு கொள்ள 077 391 8870 WINRICH INTERNATIONAL(PVT)LTD
No.18,Ground Floor,Lucky Plaza,St.Anthony's Mawatha,Kollupitya,Colombo - 03.


# ஆஸ்திரேலிய அணி நிதானமான ஆரம்பம்





ஆஷஸ் தொடரில் நேற்று ஆரம்பமான இரண்டாவது ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி மிகவும் நிதானமான ஆரம்பம் கண்டது.

பகலிரவு டெஸ்ட் ஆட்டமாக அடிலெய்டில் இந்த ஆட்டம் நடைபெற்று வருகிறது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. ஆஸ்திரேலியாவின் ஆரம்ப வீரர்களாக பாங்கிராப்ட் மற்றும் வோர்ணர். 10 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் பாங்கிராப்ட். 47 ஓட்டங்களுடன் வோர்ணரை வீழ்த்தினார் வோக்ஸ்.

கவாயா, சிமித் இருவரும் சிறந்த இணைப்பாட்டத்தை அமைத்தனர். இணைப்பாட்டமாக 53 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் ஆட்டமிழந்தார் கவாயா. 40 ஓட்டங்களுடன் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார் சிமித். ஹான்ட்கொம், மார்ஷ் இருவரும் நிலைத்தனர். நாள் முடிவில் 4 இலக்குகளை இழந்து 209 ஓட்டங்களைப் பெற்றுள்ளது ஆஸ்திரேலியா.

ஹான்ட்ஸ்கொம் 36 ஓட்டங்களுடனும், மார்ஷ் 20 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். (ம)

## டில்ருவான் 100 இலக்குகள்

பன்னாட்டு டெஸ்ட் அரங்கில் 100 இலக்குகளை வீழ்த்தினார் இலங்கை அணியின் சுழல்பந்து வீச்சாளர் டில்ருவான் பெரேரா. இந்தியாவுக்கு எதிராக நேற்று ஆரம்பமான டெஸ்ட் ஆட்டத்தில், தவானை வீழ்த்தியதன் மூலமே தனது 100ஆவது இலக்கை எட்டினார் டில்ருவான் பெரேரா. (ம)


**அச்சகத்துக்கு ஆள்கள் தேவை**
461, K.K.S வீதியில் அமைந்துள்ள அச்சக நிறுவனத்துக்கு ஆள்கள் தேவை. முன் அனுபவமுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு - 077 165 9845

**வேலைவாய்ப்பு**
யாழ்ப்பாணம் நியூமைதிலி ஜுவல்லர்ஸில்
உடனடி வேலைவாய்ப்பு.(ஆண்/பெண்) இருபாலாரும் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை
குறிப்பு: தங்கி நின்று வேலைசெய்யக் கூடிய ஆண்களும் தேவை.
(சகல வசதிகளும் செய்து தரப்படும்)
ஆர்வமுள்ளவர்கள் எமது ஜுவலரஸுக்கு நேரில் வரவும் இன்று (03.12.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 - பிற்பகல் 2.30 வரை
நியூ மைதிலி ஜுவலர்ஸ்
இல.38-40, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**நியூ பிறைற் கல்வி நிலையம்**
(இல 95, பிரதான வீதி, யாழ்ப்பாணம்)
**புதிய கல்வியாண்டு - 2018**
தரம் 06 முதல் O/L வரை
தமிழ் மொழி மூல, ஆங்கில மொழி மூலமான வகுப்புக்கள் ஆரம்பம்
**2017. 12.10 ஞாயிற்றுக்கிழமை**
தரம் 09 - 11 காலை 10.00 மணி
தரம் 06 - 08 மாலை 03.00 மணி
**2017 இல் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு விசேட சலுகைகள் வழங்கப்படும்.**
(குறிப்பு - லிகிதர் (பெண்) தேவை A/L படித்தவர்கள் விரும்பததக்கது.
தொடர்புகளுக்கு - 077 2247 781

**தகவல் தொழில்நுட்ப டிப்ளோமா**
**கொழும்பு பல்கலைக்கழகம்**
க.பொ.த சா/த சித்தியடைந்தோர் யாவரும் விண்ணப்பிக்கமுடியும்.
உ/த 2017 தோற்றியோரும் விண்ணப்பிக்கலாம். வேலை தேடுவோர் பதவி உயர்வுக்கு விணைப்பிப்போர் அனைவர்க்கும் ஏற்றது.
விரிவுரைகள் வார, வாரஇறுதி ஞாயிறு மட்டும் என் மூன்று பிரிவுகளாக நடைபெறும். புலமைப்பரிசில் மேலதிக விபரங்களிற்கு
Type DIT<Name> & send to 772395895
MCS யாழ் பல்கலைக்கழகம் அருகில்
Winner of Best Performances Award

**முகாமைத்துவ பயிற்சி மற்றும் வேலைவாய்ப்புக்கள்**
யாழ். நகரில் இயங்கிவரும் Everest Company யானது தனது நான்காவது புதிய கிளை நிறுவனத்தை ஆரம்பிப்பதற்காக அனைத்து பதவி வெற்றிடங்களையும் நிரப்பவுள்ளது.


| | |
|---|---|
| Grade 10 - O/L → | Sales Reps, Supervisor<br>Sales Clerk |
| Grade O/L - A/L → | Assistant Manager<br>Administrator |
| A/L, Diploma - Degree → | Sales Executive<br>Sales Manager |

வெளிமாவட்டங்களில் இருந்து வருபவர்களுக்கு தங்குமிடம் ஒழுங்கு செய்து தரப்படும். 10 000 - 35 000 வரையிலான சம்பளம் பெற்றுக் கொள்ள முடியும்.
தொடர்பு - 077 517 9034, 077 227 2681, 076 332 5032


## மரண அறிவித்தல்

# சிங்காரவேலு யோகநாதன்

**(உரிமையாளர் - Ogesta, முன்னாள் உரிமையாளர் - மூர்த்தி உணவகம்)**



வடலியடைப்பைப் பிறப்பிடமாகவும் கில்னர் லேன், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சிங்காரவேலு, யோகநாதன் (யோகண்ண) கடந்த (01.12.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிங்காரவேலு - காமாட்சி தம்பதியரின் அன்பு மகனும் முருகையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் இராஜராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் ரஜீகனின் அன்புத் தந்தையும் ஜெயமணி, நாகேஸ்வரி, நவநீதரட்ணம் (ஜேர்மன்), காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் மற்றும் ஆனந்தராசா (கனடா), காலஞ்சென்றகலாதேவி ஆகியோரின் அன்புச்சகோதரனும் தங்கவேல் பாலகிருஷ்ணன், காலஞ்சென்ற பரமசிவம் மற்றும் விஜயவனிதா, ஜெயந்தி (கனடா), காளிதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் கிருபாகரன், நகுலேஸ்வரன், மகேஸ்வரன், கெங்காதரன் (ஜேர்மன்), விஜயலஷ்சுமி, பரந்தாமன் (கனடா), அனந்தலஷ்சுமி, இராசலஷ்சுமி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் விமலராணி, புஸ்பவதி, தேவிகாராணி (ஜேர்மன்), காலஞ்சென்ற சிவானந்தன் தனபாலினி (கனடா), மனோகரன் (கனடா) ஆகியோரின் மைத்துனரும் யோகேந்திரா, கஜேந்திரா, ஜெனனி, ரஞ்சித், மிதிலா, சதீஷன், பிரசாத், காயத்திரி, கஸ்தூரி, கார்த்திகன், சுபாங்கி, அனுராதா, உமாசுதன், பிரதாபன், துவாரகன், மாயவன், பிரசன்னா, பைரவி ஆகியோரின் மாமனும் சிறிலதன், வினோஜா, மேனகா, கார்த்திகேயன், துஷ்யந்தி, அமலன் ஆகியோரின் சித்தப்பாவும் விசாகன், முகிசன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று மு.ப. 9.00 மணிக்கு பூதவுடல்தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப் படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**185/1, கில்னர் லேன்,**
**யாழ்ப்பாணம். 0212216742**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 03.12.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.